

# மகாபாரத மாண்புகள்

# மகாபாரத மாண்புகள்

## (THE GREATNESS OF MAHABARATHA)


ஆசிரியர்:

வித்துவான் M. நாராயணவேலுப்பிள்ளை

22, 6வது தெரு, பக்தவச்சலம் நகர்,
பழவந்தாங்கல், சென்னை—600 114

முதல் பதிப்பு : மே, 1994
உரிமை © : ஆசிரியருக்கே
அச்சிட்ட பிரதிகள் : 1000

விலை : ரூ. 40-00



திருமலை திருப்பதி தேவஸ்தானத்தாரின் பொருள் உதவியைக் கொண்டு இந்நூல் அச்சிடப்பட்டது.

அச்சிட்டோர் : கோகிலை ஸ்ரீ பிரிண்டர்ஸ்
34, பொன்னுசாமி வைத்தியார் தெரு,
வரதராஜப் பேட்டை, சென்னை-94

# முன்னுரை

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருட்களையும் நாலல்லது மகாபாரதம். இதனை வியாச முனிவர் தேவ மொழியாகிய வடமொழியில் ஒரு லட்சத்து இருபதினாயிரம் சுலோகங்களாக அருளிச் செய்தார். அதன் சாரத்தை வில்லிபுத்தூர் ஆழ்வார் வில்லி பாரதம் என தேனினும் இனிய செந்தமிழில் செய்யுட் காவியமாக இயற்றினார்.

இதில் மக்களின் உள்ளங்களைக் கவரும் பல கதைகளும் கர்மம், யோகம், ஞானம் ஆகிய வேதாந்தமும் இல்லறநுட்பங் களும், சகோதர வாஞ்சையும், தாயாதி பகையும், அரசியல் நுட்பங்களும், அரசப் பண்புகளும் குடியோம்பலும், அறவாழ் வும், வீடு பேற்றிற்குரிய சிறந்த வழியும் கூறப்பட்டுள்ளன. இஃதோர் ஒப்பற்ற காவியமாகும். வியாச பாரதத்தின் செம்பாகமான சாரம் முழுவதும் கொண்டுள்ளதாக வில்லி பாரதம் திகழ்கிறது. இதிலுள்ள விருத்தப் பாடல்கள் 4371.

இந்நூலில் வருணனைகள், அணிவகைகள், சொல் நயங்கள் பலவுள்ளன. மூல நூலை அடியொற்றி இக்காவியத்தை எளிய இனிய நடையில் பருவம் வாரியாக விவரித்துள்ளேன்.

வட இந்தியாவில் கங்கை நதிப்பாயும் பிரதேசத்தில் குரு நாடு இருந்தது. அதன் தலைநகரம் அஸ்தினாபுரம். அதைத் தலை நகராகக் கொண்டு சந்திர வம்சத்து மன்னர்கள் ஆண்டு வந்தனர். அதன் விரிவை நூலில் காணலாம்.

இந்நூலின் மாண்புகள் பத்து பருவங்களிலும், தத்துவக் கோட்பாடுகளிலும் (முதல் அனுபந்தம்), கிளைக் கதைகளிலும் (இரண்டாம் அனுபந்தம்) இலைமறை காய் போல விரவியுள்ளன. வாசகர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.

M. நாராயண வேலுப்பிள்ளை

காஞ்சிபுரம். ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியர்

# பொருளடக்கம்


| எண் | தலைப்பு |
|---|---|
| | அணிந்துரை |
| | நூல் வரலாறும் நூல் ஆசிரியர் வரலாறும் |
| 1. | ஆதி பருவம் |
| 2. | சபா பருவம் |
| 3. | ஆரணிய பருவம் |
| 4. | விராட பருவம் |
| 5. | உத்தி யோக பருவம் |
| 6. | பீஷ்ம பருவம் |
| 7. | துரோண பருவம் |
| 8. | கர்ண பருவம் |
| 9. | சல்லிய பருவம் |
| 10. | சௌப்திக பருவம் |

அனுபந்தம் I தத்துவக் கோட்பாடுகள்

1. பகவத் கீதை
2. பீஷ்மர் உபதேசம்
3. இதிகாசங்கள்

அனுபந்தம் II கிளைக் கதைகள்

1. அஷ்டவக்கிரன்
2. உதங்கர்

# அணிந்துரை

பைந்தமிழ்ப் பாமணி

கவிஞர்: திரு. முத்து. இராமமூர்த்தி M.A.,B.Sc., B.T., காஞ்சி கம்பன் கழகச் செயலாளர் அவர்கள் வழங்கிய அணிந்துரை.

உலகில் உள்ள நாடுகள் பலவற்றுள்ளும் ஆன்மீகம் தழைத்து விளங்கும் நாடாக நமது பாரதம் திகழ்கிறது. பாரத நாட்டை,

ஞானத்திலே பரமோனத்திலே—உயர்
மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர் நாடு

என்று போற்றுகிறார், தேசிய கவிசுப்பிரமணிய பாரதியார்.

உலகம் போற்றும் உயரிய ஆன்மீகச் சிந்தனைகளைத் தன்னகத்தே கொண்டு ஒப்பற்ற அறநெறிக் கருவூலங்களாக விளங்குபவை இராமாயணம், மகாபாரதம் என்னும் இரண்டு இதிகாசங்களாகும்.

அவை இந்து மதத்தின் தத்துவ ஊற்றுக் கண்கள்! தனிமனிதனும் சமுதாயமும் உலகமும் கைக் கொள்ள வேண்டிய சித்தாந்த ஒளி விரிக்கும் ஞானக் கலங்கரைகள்! காலத்தால் அழியாத கருத்துப் புதையல்கள்! மனிதன் கடைத் தேற்றம் பெற ஏற்றிச் செல்லும் ஞானத் தேர்கள்! பல மொழிகளிலும் எழுதப் பெற்று சாகாவரம் கொண்ட

சாகவதப் பட்டயங்கள். பலருடைய வாழ்க்கைக் கோணலை நிமிர்த்தி நேராக்கிய அறவேலிகள். பாரத நாட்டின் பெருமையினைப் பறைசாற்றி வான்புகழ் கொண்ட வரலாற்றுப் பெட்டகங்கள்.

நீடாழி உலகத்து மறைநாலொடு
ஐந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன்
மாபாரதம் சொன்ன

நிலையினை வில்லிபுத்தூர் ஆழ்வார் போற்றுவதைப் போல ஐந்தாவது வேதம் என்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் படும் அறஓவியங்கள். வாழ்வியல் காவியங்கள்.

காவியக் கதையோட்டத்தின் மூலமும் பாத்திரப்படைப் பின் வாயிலாகவும் இடையிடையே சொல்லப்பட்டு வலியுறுத் தப்படுகின்ற சிந்தனைகளின் வழியாகவும் மக்களுக்கு இதிகாசங்கள் உணர்த்துகின்றவாழ்வியல் நெறிகள் பலப்பல! ஞான விளக்கங்கள் எண்ணரியன.

பிதாமகர் பீஷ்மர், அறநெறி போற்றும் தருமர், வீர அருச்சுனன், ஞான சகாதேவன், தான கர்ணன், விவேக விதுரன், சூத்ரதாரி கண்ணன் முதலிய பாத்திரங்கள் அனைத்தும் இன்றைய சமுதாயத்திற்கும் தேவைப்படும் பண்புகளின் தொகுப்பு வடிவங்கள். துரியோதனன், துச்சாதனன், சகுனி போன்ற பாத்திரங்களும் தீய குணங் களின் நிழற்படங்களே. காந்தாரி, குந்தி, பாஞ்சாலி ஆகிய பெண்மணிகள் இன்றைய பெண்களுக்கு வலியுறுத்தும் வாழ்வியல் நெறிகள் எண்ணரியன.

ஆதி பருவத்தில் சொல்லப்படும் முன்னோர்களின் வரலாறுகளால் அறியப்படும் நெறிகள் ஆயிர ஆயிரங்கள்!

பஞ்ச பாண்டவர்கள் வரலாற்றால் பகரப்படும் பண்பான வாழ்வியல் அறங்கள் பலப்பல.

மகாபாரதத்தில் இடையிடையே வருகின்ற கிளைக் கதைகள் ஒவ்வொன்றும் நீதி நெறிகள் பலவற்றை நெஞ்சத்தில் விதைப்பதைக் காண்கிறோம். பகவான் கண்ணனுடைய அவதார வைபவம் மகாபாரதத்தில்பெரிதும் பேசப்படுகிறது.

மகாபாரதம்,

''மன்னு மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும் என்னும் ஆசையால் யானும் ஈது இயம்புதற்கு இசைந்தேன்''

என்கிறார் வில்லிபுத்தூரார்.

குருக்ஷேத்திரத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் பார்த்தசாரதியாய் விஜயனுக்கு உபதேசம் செய்த ஸ்ரீமத் பகவத்கீதை உலகம் போற்றும் ஒப்பற்ற ஞானநூல். திபெனட்டு அத்தியாயங்களும்பாரினை உயர்த்த பகவானார் பகரப்பட்ட பரங்கான வேதப் பிழிவு! ஞானிகளுக்கே வழி காட்டி கடைத்தேற்றும் ஞான விளக்கம்.

பீஷ்மர் உபதேசமும் பெரிதாய் போற்றப்படும் பெரும் ஞானத் தெறிப்பு.

மகாபாரதம் பலருடைய வாழ்க்கையின் போக்கை மாற்றி நெறிப்படுத்தி இருக்கிறது. வில்லிபுத்தூராரின் வரலாற்றில், அவரது தந்தை வீரராகவாச்சாரியார் மறைந்த பின் சொத்துப் பிரிவினை காரணமாக, சகோதரர்களிடையே பிணக்கு ஏற்படுகிறது. வழக்கு மன்னனிடம் செல்லுகிறது.

மன்னன் வில்லிபுத்தூராரை மகாபாரதத்தைத் தமிழ்க் காவியமாகத் தருமாறு கோருகிறான். மகாபாரதத்தைத் தமிழில் பாடிய வில்லிபுத்தூராரின் மனம் மாறிவிடுகிறது.

தாயபாகம் கோரி முன்பு மன்னனிடம் கொடுத்திருந்த வழக்கைத் திரும்பப் பெறுகிறார். இங்ஙனம் கூறப்படும் வரலாறே மகாபாரதத்தின் மாண்பினைத் தெற்றெனக் காட்டுகிறது அல்லவா?

துகில் உரிதலின் போது பாஞ்சாலி கண்ணனைத் துதித்த நிலை கண்ணன் பாஞ்சாலிக்கு அருள் செய்த தகைமை ஆகியவை சரணாகதி தத்துவத்தைத் தரணிக்கு விளக்கும் நிகழ்ச்சிகளாக விளங்குகின்றன.

குருக்ஷேத்திர களத்தில் கௌரவர்கள், பாண்டவர்களுடன் நிகழ்த்திய போர், போரைப் பற்றியும், போர் செய்யும் முறைகளைப் பற்றிய நுணுக்கமான செய்திகளையும், யுத்த தருமங்களையும் விளக்கி நிற்கிறது.

மகாபாரதத்தில் கண்ணனுடைய ஒவ்வொரு செயலும் அவனுடைய லீலாவினோதங்களை விளக்குவதோடு பார்த்த சாரதியாய் படியிறங்கிப் பணி செய்த அவனுடைய எளிமைத் தன்மையையும் (சௌலப்பியம்) அடியார்களைக் காத்து அருள் செய்யும் அற்புதத்தையும் அகிலத்தோர் அறிந்து.

''பஞ்சவர்க்குத் தூது நடந்தானை ஏத்தாத
நாவென்ன நாவே''

என்று போற்றி வணங்கும் வண்ணம் உள்ளது.

இங்ஙனம் மகா பாரதத்தின் மாண்புகள் எழுதுதற்கரிய நிலையிலேயே விரிந்து நிற்கின்றன. அம்மாண்புகளை அறிந்து கொண்ட மனிதர்கள் வையத்தில் வாழ்வாங்கு வாழும் வழி கண்டவர்கள்.

ஐந்தாம் வேதமான மகாபாரதத்தின் மாண்புகளை விரித்துச் சொல்லும் நோக்குடன் 'இலக்கிய ரத்னா' வித்துவான். திரு. எம். நாராயணவேலுப்பிள்ளை அவர்கள் ''மகா பாரத மாண்புகள்'' என்ற இந்நூலைப் படைத்துள்

ளார். சொல்ல வந்த செய்திகளைத் தீந்தமிழில் மிக எளிமையான நடையில் பாமரர்களும் புரிந்து கொண்டு, பாராட்டும் வகையில் எழுதக்கூடிய தனித்திறமை கொண்ட வர் இந்நூலாசிரியர்.

அவர் தமிழ் இலக்கியம் தொடர்பான நூல்கள் மட்டும் இன்றி சமயம், அறிவியல், பயண இயல், நடைமுறை வாழ்வியல் எனப்பலதுறைகளிலும் 130 க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி பாருக்குப் பயன்படத் தந்திருக்கிறார் என்ற உண்மையே அவருடைய பலதுறைப் புலமையினையும் எழுத்துத்திறமையினையும் நமக்குப் புலப்படுத்துகின்றது.

'மகா பாரத மாண்புகள்' என்ற இந்த நூலில் அவர் மகாபாரதத்தின் கதையினைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சிறப்பும், கிளைக்கதைகளைக் கூறி அவைகள் வலியுறுத்தும் நீதிகளை விளக்கும் திறனும், மகாபாரதத்தின் மாண்புகளை மக்களுக்கு உணர்த்தும் மாட்சிமையும், செந்தமிழில் எழுதப்பட்டுள்ள சீரிய நடையும் இந்நூலைக் கற்பாரைப் பெரிதும் கவரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இதுபோல் இன்னும் பலநூல்களை எழுதி இவ்வாசிரியர் தமிழுக்கும், தமிழ் கூறும் நல் உலகிற்கும் தொண்டு செய்ய அருள் செய்யுமாறு,

அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்.

கோதை இல்லம் —முத்து. இராமமூர்த்தி
21, திருவேங்கடம் நகர் 19-9-93
சின்ன காஞ்சிபுரம்.

# நூல் ஆசிரியர் வரலாறும்
# நூல் வரலாறும்

காப்பு

நீடாழி உலகத்து மறை நாலொ(டு)
ஐந்தென்று நிலை நிற்கவே
வாடாத தவ வாய்மை முனிராசன்
மாபார தஞ்சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக
அங்கூர்எ ழுத்தாணிதன்
கோடாக எழுதும்பி ரானைப்
பணிந்தன்பு கூர்வாம்அரோ

—வில்லிபாரதம்

பெரிய கடலால் சூழப்பட்ட இந்த உலகத்தில் வேதங்கள் நான்கோடு ஐந்தென்று நிலை பெற்றிருக்குமாறு தவமும் வாய்மையும் நிறைந்த வேதவியாசர் மகாபாரதத்தைப் பாடியபோது, மேருமலையை ஏடாகவும் தமது அழகிய தந்தத்தை எழுதுகோலாகவும் கொண்டு எழுதிய விநாயகப் பெருமானைப் பணிந்து போற்றுவோமாக.

தமிழ்த் தாய் வாழ்த்து

பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்து
இருப்பிலே யிருந்து வைகை
ஏட்டிலே தவழ்ந்த பேதை

நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்தோர் ஏனம்
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளருகின்றாள்.

பொதிகை மலையில் பிறந்து பாண்டியனுடைய ஆட்சிச் சிறப்பில்கிடந்து, சங்கப் பலகையில் இருந்து வைகை யாற்றில் ஞானசம்பந்தர் சமணர்களோடு புனல்வாதம் செய்தபோது ஆற்றுவெள்ளத்தில் விட்ட ஏடு எதிர்த்துச் சென்று கரையேறி, அனல் வாதத்தில் கருகிப்போகாமல் நிலைத்து நின்று, கற்றவர்களின் நினைவில் நடந்து வராக அவதாரத்தில் கடலில் இருந்து வெளியே எடுக்கப்பட்ட பூமாதேவியின் மடியில் வளர்கின்ற இந்தத் தமிழ்ப்பாவை பாரதக் கதையைச் சொல்ல அருள்புரிவாளாக என்று வில்லிபுத்தூராரின் குமாரர் வரந்தருவார் பாயிரத்துள் பாடியுள்ளார்.

தற் சிறப்புப் பாயிரம்

முன்னு மாமறை முனிவரும்
தேவரும் பிறரும்
பன்னு மாமொழிப் பாரதப்
பெருமையும் பாரேன்
மன்னு மாதவன் சரிதமும்
இடையிடை வழங்கும்
என்னும் ஆசையால் யானும்ஈ(து)
இயம்புதற்(கு) இசைந்தேன்.

—தற்சிறப்புப் பாயிரம்—8

நினைந்து ஓதும் தேவவித்தகரான முனிவர்களும் தேவர்களும் மற்றையோரும் ஆராயும் பெருமை பொருந்திய

நூலென்று பாரதத்தைப் புகழ்வதையும் நான் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. நிலையான பெருமை பொருந்திய கண்ணபிரானுடைய சரித்திரமும் இடையிடையே வழங்குகிறது என்னும் ஆசையினால் யானும் மாபாரதம் என்னும் இந்நூலைப் பாடுதற்கு இசைந்தேன்.

## பாரதம்

சந்திர குலத்தினனான துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் மகனாய்த் தோன்றிய பரதன் என்பானது வம்சத்தைப் பற்றிய நூல் பாரதம். பரதவம்சத்தில் தோன்றியவர் பாரதர் ஆகின்றனர். பஞ்சபாண்டவரும் துரியோதனாதியரும் அவ்வம்சத்தினர் ஆதலால் அவர்களது சரித்திரத்தை உணர்த்தும் நூல் பாரதம் என்று பெயர் பெற்றது.

இம்மைக்கும் மறுமைக்கும் ஆன உறுதிப்பொருட்களை இது கூறுவதாலும், பகவத்கீதை என்ற சிறந்த நூலைத் தன் அகத்தே கொண்டிருப்பதாலும் வேதங்கள் நான்கினோடு ஐந்தாவதாகும் சிறப்பினதாகிறது. இச்சிறப்பு பற்றியே அறிந்தோர் நூலின் மேம்பாடு தோன்ற மகாபாரதம் என்று அழைத்தனர்.

இராமாயணமும் மகாபாரதமும் இரண்டு இதிகாச நூல்கள். இவை இரண்டும் வற்றாத ஜீவநதிகளைப்போல இந்து மதத்தின் சிறந்த கருத்துக்களை மக்களிடையே பரப்பி வருகின்றன. உபதேச பரம்பரையில் வழங்கிவந்த பழைய சரித்திரத்தை உறுதிப்பயன் அளிக்கவல்ல பல கிளைக் கதைகளோடு விரித்துக்கூறுவது இதிகாசம். உலகத் தோற்றம், ஒடுக்கம், முனிவர் அரசர் மரபு, அன்னவர் சரித்திரங்கள் மனுவந்திரம் முதலியவற்றைக் கூறுவது இதிகாசம் எனப்படும். இதிகாசங்கள் வேதக் கருத்தை எல்லோரும் அறியும்படி விளக்கிக்கூறும்.

இந்தப் பாரதத்தில் என்ன இருக்கிறது? பொறுமை என்பதற்கு வடிவமாகத் தர்மபுத்திரர் இருக்கிறார். சத்திய மான பிரதிக்ஞை என்பதற்குப் பீஷ்மர் இருக்கிறார். தானத்திற்குக் கர்ணன், கண்ணியத்திற்கு அருச்சுனன், பாரதக் கதைகளைக் கேட்கும்போது இப்படிப்பட்ட உத்தம மான ஆத்மாக்களின் ஞாபகம் வருகிறது. படித்தவர் படிக்காதவர் எல்லாருக்கும் அடிக்கடி அந்தக் கதைகள் காதில் விழுந்து கொண்டிருந்தால், நம்மால் அந்த உத்தம பாத்திரங்களைப்போல நடக்க முடியாமற் போனாலும் இதுதான் நாம் இருக்க வேண்டிய உண்மையான முறை என்ற நினைவு அடிக்கடி வரும். இதற்கே பலனுண்டு. இதனால்தான் இந்தக் கதைகளைக் கேட்டுவந்த அந்தக் காலங்களில் உயர்ந்த தர்மமும் நீதியும் நாட்டில் இருந்து வந்தன.

தர்மம், நீதி இரண்டும் சேர்ந்துதான் பண்பு உண்டா கின்றது. அந்தப் பண்பாட்டை மாற்றுவதற்கும் குலைப்ப தற்கும் இப்போது எத்தனையோ ஏற்பாடுகள் வந்திருக் கின்றன. இந்த நிலையில் நம்முடைய சத்தியமும் நீதியும் தர்மமும் மக்களுடைய மனதில் நின்று காப்பாற்றவேண்டும். அதற்கு மகாபாரதம் உபகாரமாக இருக்கும் என்பது என் அபிப்பிராயம். ஆகவே இப்பெரு நூலில் வரும் சிறந்த அம்சங்களை இந்நூலில் தொகுத்துக் கூறியுள்ளேன். அக்கால பழக்க வழக்கங்களுள் சில இக்காலத்திற்கு ஏலாதனவாக உள்ளன என்று தற்போதுள்ள தலைமுறை யினர் கருதக்கூடும். அவை அந்த யுகதர்மத்தின் பாற்படும் என அறிக.

## நூல் வரலாறு

மகாபாரதத்தை வேதவியாசர் தேவமொழியாகிய வடமொழியில் ஒரு லட்சத்து இருபதினாயிரம் சுலோகங் களாக அருளிச் செய்தார். அதன் சாரத்தை வில்லிபுத்தூர்

ஆழ்வார் வில்லிபாரதம் எனத் தேனினும் இனிய செந்தமிழில் செய்யுட் காவியமாக இயற்றினார்.

வியாசபாரதம் 18 பருவங்களைக் கொண்டது. வில்லி புத்தூரார் அவற்றுள் முதல் 10 பருவங்களை மாத்திரம் அடியிற் கண்டவாறு பாடியுள்ளார்.

| எண் | பருவம் | பாடல் எண் | சருக்கங்கள் |
|---|---|---|---|
| 1 | ஆதிபருவம் | 820 | 8 |
| 2 | சபா பருவம் | 437 | 2 |
| 3 | ஆரணிய பருவம் | 722 | 8 |
| 4 | விராட பருவம் | 326 | 5 |
| 5 | உத்தியோக பருவம் | 396 | 8 |
| 6 | வீட்டும பருவம் | 377 | 10 |
| 7 | துரோண பருவம் | 663 | 5 |
| 8 | கன்ன பருவம் | 360 | 2 |
| 9 | சல்லிய பருவம் | 204 | 1 |
| 10 | சௌப்திக பருவம் | 46— | — |
| | மொத்தம் | 4351 | 49 |

பருவம்—பெரும் பிரிவு; சருக்கம்—சிறுபிரிவு

இதில் மக்களின் உள்ளங்களைக் கவரும் பல கதைகளும் கர்மம், யோகம், ஞானம் ஆகிய வேதாந்தமும், இல்லற நுட்பங்களும் சகோதர வாஞ்சையும் தாயாதி பகையும், அரசியல் நுட்பங்களும், அரசப்பண்புகளும், குடியோம்பலும், அறவாழ்வும் வீடு பேற்றிற்குரிய சிறந்த வழியும் கூறப்பட்டுள்ளன. இஃதோர் ஒப்பற்ற காவியம்.

இந்நூலில் வருணனைகள், அணிவகைகள், சொல் நயங்கள் பல உள்ளன. மூலநூலை அடியொற்றி இக்காவியத்தை எளிய இனிய நடையில் எழுதியுள்ளேன்.

இந்நூலில் வடமொழிச் சொற்கள் அதிகமாய்க் கலந்துள்ளன. பாரதம் முழுவதிலும் ஒருவித சந்த இன்பம் நிறைந்திருக்கக் காணலாம். இது சொல்லணிகளும் பொருளணிகளும் நிறைந்து படிப்போரை உணர்ச்சி வலைக்கு உட்படுத்தி மகிழ்விக்கின்றது.

## நூல் ஆசிரியர்

இதன் ஆசிரியர் வில்லிபுத்தூர் ஆழ்வார். இவர் திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் வீரராகவாச்சாரியார் என்பவருக்கு மைந்தராய்ப் பிறந்தார். வில்லிபுத்தூரில் பிறந்த பெரியாழ்வார் மேல்கொண்ட பக்தியினால் இவர் தந்தையார் இவருக்கு இப்பெயர் இட்டசர் என அறியலாம். இவரது சமயம் வைணவம். எனினும் சிவபெருமானைச் சிறந்த நாயன்மார்போலப் பல இடங்களில் பாடியுள்ளார்.

வக்கபாகை என்னும் நகரத்தில் அரசாண்ட கொங்கர் குல வரபதியாட் கொண்டான் என்ற குறுநில மன்னன் வேண்டிக் கொண்டதற்கிணங்க இப்பாரதத்தை இயற்றினார். இந்நூலுக்கு இவரது குமாரர் வரந்தருவார் 24 பாடல்களால் ஒரு சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார். வில்லிபுத்தூரார் காலம் கி.பி. 14 ஆம் நூற்றாண்டு.

''குறும்பி அளவாக் காதைக்குடைந்து தோண்டி, எட்டின மட்டு அறுப்பதற்கோ வில்லியில்லை'' என்னும் தொடரால்

இவர் பிறபுலவர்களின் பாடல்களில் குற்றம் கண்டபோது கடிந்து திருத்தக்கூடியவர் என அறிகிறோம்.

அருணகிரி நாதரோடு இவர் வாதம் நிகழ்த்தித்தோல்வி யுற்றதாக வழங்கும் செய்திகள் அனைத்தும் கற்பனைக் கதைகளேயன்றி வரலாற்று நிகழ்ச்சிகள் அல்ல எனத் திரு. சதாசிவம் பண்டாரத்தார் அவர்கள் மறுத்துரைக்கின்றார்.

# 1. ஆதிபருவம்

முதல் பருவமான ஆதிபருவம் எட்டு சருக்கங்களைக் கொண்டது.

## 1. குருகுலச் சருக்கம்

சந்திரனை ஆதியாகக் கொண்ட குலத்தில் பிறந்தோர் சந்திர வம்சத்தினர் ஆவர். சந்திரன் மகன் புதன். அவன் இளை என்பவளை மணந்தான். அவளுக்குப் புரூரவன் பிறந்தான். அவன் புகழ் பெற்ற அரசனாக விளங்கினான். ஒரு சமயம் அசுரர்கள் ஊர்வசி என்னும் தேவமாதினை அபகரித்துச் சென்றனர். புரூரவச் சக்கரவர்த்தி அசுரரோடு போராடி வென்று, அவளை மீட்டுக் கொணர்ந்தான். அவளோடு இன்பம் அனுபவித்தான். அவள் வயிற்றில் ஆயு பிறந்தான்.

வேள்வியிலும் கேள்வியிலும் சிறந்த ஆயு மன்னனுக்கு நகுஷன் பிறந்தான். புகழாலும் பலத்தாலும் நகுஷன் இந்திர பதவியைப் பெற்றான். அகம்பாவத்தாலும் காம தாபத்தாலும் அகத்திய முனிவரால் பாம்பாகச் சாபம் பெற்று பூமியில் விழுந்தான். இந்த நகுஷன் மகன்தான் யயாதி. இவனுக்குப் பூரு என்பவன் பிறந்தான். தந்தை யயாதிக்குச் சாபத்தால் நேர்ந்த கிழப் பருவத்தைத் தான் வாங்கிக் கொண்டு தன் இளமைப் பருவத்தைத் தந்தைக்குக் கொடுத்துச் சிறப்பும் அரசும் பெற்றுயர்ந்தான் பூரு.

பின்னர் இக்குலத்தில் பரதன் என்ற மன்னன் பிறந்து சிறந்து விளங்கினான். இப்பரதனைப் பற்றியே இக்குலத்திற்குப் பரத குலம் என்னும் பெயரும், இக்கண்டத்திற்குப்

பரத கண்டம் என்னும் பெயரும் விளங்கின. இம்மன்னன் பரத சாஸ்திரத்திலும் இசை நூலிலும் சிறந்து விளங்கினான். இதற்குச் சந்திர குலமெனறும் குருகுல மென்றும் பெயர்கள் வழங்கலாயின. இக்குலத்தில் பின்னர் பிறந்த அஸ்தி என்பவனால் அஸ்தினாபுரம் என்னும் நகரம் ஏற்படுத்தப்பட்டது.

## சந்தனு

இக்குலத்தில் சந்தனு என்னும் அரசன் பிறந்து உலகை ஆண்டு வந்தான். ஒரு நாள் இவன் கங்கையாற்றுக்குச் சென்றபோது அழகிய மங்கையைக் கண்டான். அவள் தான் பெற்ற சாபத்தைப் பூவுலகில் கழிக்க வந்த கங்கையாவாள். அவள் பெற்ற சாபத்தின் வரலாறு வருமாறு:

ஒரு முறை கங்கை பிரம்மதேவன் சபைக்குப் போயிருந்தாள். தேவர்களை அவள் வணங்கும்போது வாயு பகவானது செயலால் பெருங்காற்று வீசியது. அவளது ஆடைகள் விலகின. சபையோர் வெட்கித் தலைகுனிந்தனர். வருண தேவன் மட்டும் அவளது அழகினைக் கண்டு மகிழ்ந்தான். இதைக்கண்ட பிரம்மதேவன், ''நீவிர் இருவரும் புவியிடை பிறந்து இன்பம் நுகர்ந்து பின்னர் வருக'' என்று கூறி விடுத்தார். வழியில் வசிட்டரால் திருட்டுக்குற்றம் சாட்டப் பெற்ற அஷ்டவசுக்களைப் பார்த்தனர். முதலில் சொன்ன இருவர் இங்கு நாம் காணும் வருணனாகிய சந்தனுவும், கங்கையாகிய மங்கையும், பின்னர் சொன்ன இந்த அஷ்ட வசுக்கள் இவர்கள் வயிற்றில் பிறக்கப் போகும் பிள்ளைகள். திருட்டுக் குற்றத்தைச் செய்தவன் பூமியில் பிறந்து இன்ப மற்று பன்னாள் வாழப் போகும் பீஷ்மன். மற்றவர்கள் பூமியில் பிறந்து செயல் புரிவதன் முன்னால் இறக்கப் போகிறவர்கள்.

கங்கை சொன்ன நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டு சந்தனு மன்னன் அவளை மனைவியாக ஏற்று, அரண்மனைக்கு அழைத்து வந்தான். அவளோடு சில காலம் வாழ்ந்தான். ஒன்றன்பின் ஒன்றாகப் பிறந்த ஏழு குழந்தைகளையும் கங்கையில் வீசி எறிந்தாள். எட்டாவது குழந்தையை அவ்வாறு செய்யவில்லை. குழந்தையுடன் மறைந்து போனாள்.

## காங்கேயன் என்னும் பீஷ்மன்

பல வருஷங்கள் கடந்தன. ஒரு நாள் சந்தனு கங்கைக் கரைக்கு வந்தான். கங்கை அவன் முன் தோன்றினாள். மைந்தனைக் கொடுத்து, ''அரசே! இவன் தான் உன் மைந்தன். தேவவிரதன் என்பது இவன் பெயர். கல்வியும் ஒழுக்கமும் நிரம்பப் பெற்றவன். நீர் பெரும் பாக்கியத்தைப் பெற்றவராவீர். இவனை ஏற்றுக் கொண்டு நலத்தோடு வாழ்வீராக'' என்று கூறி மறைந்தாள்.

மைந்தனை வாரியணைத்துக் கொண்டு தேரேறி அரண்மனைக்கு வந்து சேர்ந்தான் சந்தனு. பல ஆண்டுகள் மன்னனும் மைந்தனும் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் சந்தனு மன்னன் யமுனை என்னும் காளிந்தி நதிக் கரைக்கு வேட்டையாடச் சென்றான். பரிமள கந்தி என்னும் பருவ மங்கையைக் கண்ணுற்றான். அவளை மணக்க விரும்பினான். அவளது வளர்ப்புத் தந்தையான செம்படவத் தலைவன் விதித்த நிபந்தனை கடுமையாக இருந்ததால் ஒன்றும் செய்ய இயலாமல் அரண்மனை திரும்பினான்.

தந்தையின் வருத்தத்தைத் தனயன் அறிந்தான். சாரதி மூலம் கேட்டறிந்த நிபந்தனைகளுக்குத் தான் கட்டுப்படுவதாகக் கூறி நதிக்கரைக்குச் சென்றான் தேவவிரதன். செம்படவத் தலைவனை நோக்கி, ''நீ எனக்குப் பாட்டன், எனக்குத் தாய் கங்கையல்லள்; நின் மகளே! இன்று உன்

மகளை என் தந்தைக்கு மணம் செய்து கொடுப்பின் நீ வேண்டுவது யாது? இந்தப் பூவுலக ஆட்சியை நான் விரும்பவில்லை. உன் மகள் வயிற்றில் பிறக்கும் என் தம்பிகளே ஆளட்டும். மகளை மன்னனுக்கு மணம் செய்து கொடுத்தருள்'' என்று சொல்லி யாவரையும் தேவரையும் பார்த்து, ''தேவர் அறிய, மூவர் அறிய, யாவரும் அறிய நான் எனது தந்தையின் விவாகத்தின் பொருட்டு என் விவாகத்தை வெறுத்துள்ளேன்'' என்று பீஷ்மன் கூவி நின்றான்.

இப்படிப் பெருந்தியாகியாகி, பீஷ்மம் கூறி நின்ற காங்கேயனைக் கண்ட அனைவரும் வியந்து, பூ மழை பொழிந்து, பீஷ்மன் என்னும் சிறப்புப் பெயரும் அளித்து வாழ்த்தினார்கள்.

அப்போது சந்தனு மகாராஜன் தன் மகனை மார்புறத் தழுவி, ''முன் ஒரு காலத்தில் தன் தந்தையாகிய யயாதி மன்னனுக்குத் தனது இளமையைக் கொடுத்துப்புகழ் எய்திய நற்குல மன்னனாகிய பூருவும் உனக்குச் சமானமாக மாட்டான். மக்கள் தந்தையர்க்கு உதவும் உதவியைக் காட்டிலும் நூறு மடங்கு எனக்கு நீ உதவியிருக்கிறாய்; உனக்கு வரம் தருகிறேன். இதனைப் பெற்றுக் கொள். அதாவது நீ உன் மனதினால் துறக்கம் வேண்டும் என எண்ணினால் அல்லாது உன் உயிர் மேல் முந்துறக் காலன் வந்தணுகான்''. என்று முடிவிலா ஒரு வரம் அளித்துப் போற்றினார். யாவரும் மகிழ்ந்து மன்னனையும் மைந்தனையும் வாழ்த்தினர்.

## மணவினை

அதன் பின்னர் சந்தனு மன்னனுக்கும், பரிமளகந்திக்கும் முறைப்படி திருமணம் நடைபெற்றது. அவள் செம்படவனால் வளர்க்கப்பட்ட போதிலும் அவள் ஓர் அரசகுமாரி

தான் என்று அவனுடைய பூர்வவரலாற்றை அந்த வளர்ப்புத் தத்தை விளக்கினான். திருமணத்தம்பதிகள் பலநாள் மகிழ்ந்து வாழ்ந்தனர். அவர்களுக்குச் சித்திராங்கதன், விசித்திர வீரியன் என்ற இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். அழகும் வயதும் வளரக் கல்வியிலும் சிறந்துவிளங்கினார்கள். சந்தனு காலமானபின் சித்திராங்கதன் அரச பதவியை ஏற்றுக் கொண்டான். பீஷ்மர் அவனுக்கு உதவியாக இருந்தார்.

சில நாள் கழித்து, 'எங்கள் பெயரை இம்மானுடன் தரிப்பதா?' என்னும் கோபத்தினால் ஒரு கந்தருவன் இரவில் வந்து சித்திராங்கதனைக் கொன்றுவிட்டான். அதன் பின்னர் விசித்திர வீரியன் ஆட்சிக்கு வந்தான். அச்சமயத்தில் காசி மன்னனுடைய மூன்று பெண்களுக்கும் சுயம்வரம் நடை பெற்றது. மன்னர்கள் எல்லோரும் வந்து சபையில் அமர்ந்தனர். பீஷ்மரும் சென்றிருந்தார். பெண்கள் அரசவைக்கு வந்தவுடன் பீஷ்மர் அம்மூவரையும் தனது தேரிலேற்றிச் சேனையும் தானும் தம்பி விசித்திரவீரியனும் புறப்பட்டார்கள். எதிர்த்து நின்ற மன்னரைப் புறங்காட்டி ஓடச் செய்தார் பீஷ்மர்.

அம்பை, ''சாலுவன் மேல் என் மனம் பற்றியுள்ளது'' என்றாள். 'வீரராகிய எமக்கு மற்றொருவனைப் பற்றிய மங்கையைக் கொள்வது இயற்கையல்ல' என்று சொல்லிப் பீஷ்மர் அம்பையைச் சாலுவன் பால் அனுப்பி விட்டார்.

''பகைவர் கவர்ந்த பாவையை மெய்தொடல் எமக்கு உரியதன்று'' என்று சாலுவன் மறுத்துவிட்டான். மறுபடியும் அம்பை பீஷ்மரிடம் வந்து மீண்டும் மணம் வேண்டி நின்றனள். பீஷ்மர் அவளுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளவில்லை. பின்னர் இவள் தவஞ் செய்து ஆண் உருவாகி (சிகண்டியாகி) குருக்ஷேத்திர பூமியில் பீஷ்மரைக் கொல்ல இவள் காரணமாயிருந்தாள் என்பதைப் பின்னர் படிப்போம்.

அம்பிகை, அம்பாலிகை என்ற இருவரையும் விசித்திர வீரியனுக்குத் திருமணம் செய்து வைத்தார் பீஷ்மர். விசித்திர வீரியன் இருமங்கையருடன் பலகாலம் இல்லறம் புரிந்து, அரசாண்டிருந்து, நோய்க்கு அரசெனும் பெரு நோயால் காலன் வாய்ப்பட்டு நீங்கினான்.

☆

# 2. சம்பவச் சருக்கம்

கதா நாயகர்களான பாண்டவர்கள் மற்றும் கௌரவர்களின் பிறப்பையும் வளர்ச்சியையும் பற்றிக் கூறும் சருக்கம் இது.

இறந்து போன விசித்திரவீரியனுக்குச் செய்ய வேண்டிய கிரியைகள் யாவும் செய்து முடிந்த பின்னர் இந்தச்சந்திர வம்சம் இதனோடு முடிந்து போவதோ என்று பீஷ்மன் மயங்கியிருந்தபோது அன்னையாகிய பரிமளகந்தி தன் பூர்வ ஆசிரம மைந்தனாகிய வியாச மாமுனிவரை நினைத்தாள். அவரும் அங்கு வந்து தோன்றினார். அவருடைய அருளினால் அம்பிகைக்குத் திருதராஷ்டிரனும், அம்பாலிகைக்குப் பாண்டுவும் தோன்றினர். திருதராஷ்டிரன் குருடனாயும், பாண்டு வெண்ணிறமாயும் பிறந்துவிட்டபடியால் அம்பிகையின் தோழியின் மூலம் விதுரன் தோன்றினான். எனினும் விதுரன் அறிவிலும் ஆசாரத்திலும் மேம்பாடு அடைந்து வளர்ந்து வந்தான்.

மூவரும் சிறப்பாக வளர்ந்து வருவாராயினர். அவர்கள் கல்வி, கேள்வி, போர்த்திறன் ஆகியவற்றில் சிறப்படையுமாறு பீஷ்மர் கவனித்து வந்தார். ஒரு நல்ல நாளில் நகரத்

தார் முன்னிலையில் பீஷ்மர் திருதராஷ்டிரனுக்கு முடிசூட்டினார். பாண்டுவைச் சேனைத் தலைவனாகவும், விதுரனை மந்திரியாகவும் அமைத்தார். தான்அரசியலை முன்னிருந்து நடத்தி வந்தார்.

## திருமணங்கள்

திருதராஷ்டிரன் குருடனாயினும் காந்தாரி அவனை மணக்கச் சம்மதித்தாள். அதன்படி அவர்கள் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. மன்னனும் மங்கையும் மகிழ்ந்து இனிதிருந்தனர். அதேபோல் பாண்டுவுக்கும் குந்தி தேவிக்கும் திருமணம் நடந்தது. மன்னன் பாண்டுவின் அறிவையும் ஆற்றலையும் அமைதியையும் கண்டு களித்த மத்திர ராஜன் தனது புதல்வி மாத்ரியையும் இரண்டாம் மனைவியாகப் பாண்டுவுக்குத் திருமணம் செய்து வைத்தான். விதுரர் மணம் செய்து கொள்ளவில்லை. திருமணத்திற்கு முன் குந்தி தேவியின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சியொன்றை வாசகர்கள் கவனத்திற்குக் கீழே தருகிறோம்.

## கர்ணன் பிறப்பு

இளம் வயதில் குந்தி தேவி கன்னிமாடத்தில் இருந்த போது துர்வாச முனிவர் வந்து சேர்ந்தார். அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்தமையால் அவர் மனமகிழ்ந்து குந்திதேவிக்கு ஒரு மந்திரத்தை உபதேசித்தார்.

''இம்மறையினை மனனம் செய்து தேவரில் யார்யாரை நீ நினைப்பாயோ அவரவர் உன் முன் தோன்றித் தம்மை யொப்பதோர் மகவையும் உனக்களித்து ஏகுவர்!'' எனச் சொல்லி ஆசீர்வதித்துச் சென்றார்.

ஒரு நாள் குந்தி சூரியதேவனை நினைத்தனள். மந்திர வலிமையினால் சூரிய தேவன் அவள் முன் தோன்றினான். நங்கை நாணி ஒதுங்கினாள். செய்வதறியாது நடுங்கினாள். அவர்கள் சேர்க்கையால் கர்ணன் பிறந்தான். அக்குழந்

தையை அழகிய பெட்டியொன்றில் கிடத்தி யாரும் அறியாதபடி கங்கை நதியில் விட்டுவிட்டாள். கங்கையில் மிதந்து வந்த பெட்டியைச் சூதநாயகன் என்னும் தேரோட்டி எடுத்துச் சென்று தன் மனைவி ராதையிடம் கொடுத்தான். அவர்கள் அக்குழந்தையைப் போற்றி வளர்த்து வந்தனர்.

இங்ஙனம் அழகும் ஆற்றலும் அறிவும் மேம்படக் கர்ணன் வளர்ந்து பருவ காலத்தில் பரசுராமன்பால் படைக் கலப் பயிற்சிகளையும் கற்றுத் தேர்ந்தான். கர்ணன் குந்தியின் மகன் என்பது அவனுக்கும் தெரியாது. இதுதான் கர்ணனது பிறப்பின் ரகசியம்.

### பாண்டவர்கள் கௌரவர்கள் பிறப்பு

ஒருமுறை பாண்டு மன்னன் காட்டில் வேட்டையாடச் சென்றான். ''மனைவிகளோடு உடலுறவு கொண்டால் இறந்து போவாய்'' என்று இந்தமன் என்ற முனிவன் பாண்டுவுக்குச் சாபங் கொடுத்து விட்டான். எதிர்பாராமல் விதி வசத்தால் சாபம் பெற்ற பாண்டு மன்னன் அரச வாழ்வைத் துறந்து காட்டில் மனைவியரோடு வானப்பிரஸ்த நிலையில் தவத்தை மேற்கொண்டான். ஒருநாள் குந்தி தேவியை நோக்கி, ''வியாச பகவான் அருளைப் பெற்றுக் காந்தாரி கருவுற்றிருக்கிறாள். ஆகவே நீ பெற்றிருக்கும் மந்திரசக்தியைக் கொண்டு நமக்குப் புத்திர பாக்கியம் உண்டாகுமாறு செய்வாயாக! என்றான் பாண்டுமன்னன்.

குந்திதேவி தருமராஜன் மூலம் தர்மபுத்திரரைப் பெற்றெடுத்தாள். குந்திதேவிக்கு ஆண் குழந்தை பிறந்து விட்டது என்று கேள்விப்பட்டதும் காந்தாரி கோபங் கொண்டு தன் நீண்டநாள் கர்ப்பத்தைச் சிதைத்தாள். வியாசமுனிவர் தோன்றிச் சிதைவை நூறு புதல்வர்களாகப் பிறக்குமாறு மாற்றினார். எஞ்சியிருந்த சதைக்கூற்றை ஒரு பெண்ணாக்கினார். நூற்றுவரில் முதல் மகன் தான் துரியோதனன். அவன் பீமனுக்கு ஒருநாள் மூத்தவன்.

காந்தாரிக்கு நூறு புதல்வர்கள் பிறந்துள்ளனர் என்று கேள்விப்பட்டவுடன் பாண்டு குந்தியை நோக்கி, ''நூற்று வரை எதிர்த்து நிற்க நம் தருமன் ஒருவனால் ஆகாது. பலமுள்ள மைந்தர்கள் நமக்குத் தேவை!'' என்றான். வாயுதேவன் அருளால் பீமசேனனைப் பெற்றாள் குந்தி தேவி. இவன் அனுமனைப் போல பலமுடையவனாகக் காணப்பட்டான்.

பின்னர் குந்தி தேவி தேவேந்திரன் அருளால் அர்ச்சுன னைப் பெற்றெடுத்தாள். இவன் அழகும், அறிவும், ஆற்ற லும் பெற்றிருந்தான். குந்தி பெற்ற பேற்றை இரண்டாம் மனைவியாகிய மாத்ரியும் பெறலாமே என்ற எண்ணத்தைப் பாண்டு குந்தியிடம் தெரிவித்தான். குந்தி தேவி மந்திரத்தை மாத்ரி தேவிக்குக் கற்பித்தாள். அவள் மந்திரத்தை ஜபித்த மாத்திரத்தில் அஸ்வினி தேவர்கள் இருவர் அவள் முன் தோன்றினர். அவர்கள் அருளால் மாத்ரி தேவி நகுலனை யும் சகாதேவனையும் பெற்றெடுத்தாள்.

இங்ஙனம் பாண்டு மன்னன் தேவகுமாரர்கள் ஐவரைப் பெற்று மகிழ்ந்திருந்தான். மக்கள் ஐவரும் வனத்தில் வளர்ந்து வரலாயினர். பருவம் வந்தபோது க்ஷவரம் செய்தல், பூணூல் அணிதல், வித்தை பயிலல் ஆகியவற்றி லும் சிறந்து விளங்கினர்.

முனிவன் சாபத்தை மறந்து ஒரு நாள் பாண்டு மன்னன் மாத்ரி தேவியுடன் உடல் உறவு கொண்ட போது மாண் டான். முறைப்படி ஈமச்சடங்குகள் நடைபெற்றன. மாத்ரி தேவி உடன் கட்டை ஏறினாள். அதன் பின்னர் வேதியர்கள் குந்தி தேவியையும் மைந்தர் ஐவரையும் அஸ்தினாபுரம் அழைத்துச் சென்றனர். திருதராஷ்டிரன் இவர்களை வரவேற்று அரண்மனையில் வாழ வகை செய்தான். நூற்று வரும், ஐவரும் பொய்கையில் பிறந்த குமுத மலர்களும், தாமரை மலர்களும் ஒப்ப விளங்கியிருந்தனர்.

பாண்டுவின் மறைவைக் குறித்து வருந்திய குந்தி யோசனும், கிருஷ்ணனும், பலராமனும் துக்கம் விசாரிக்க

அஸ்தினாபுரம் வந்தனர். குந்திதேவி குந்தி போசன் என்ற யாதவ குல மன்னனால் சுவீகாரம் எடுத்துக் கொள்ளப் பட்டவள். அவர்கள் குந்தி தேவிக்கும் மைந்தர்களுக்கும் ஆறுதல் கூறினார்கள். பீஷ்மரும் விதுரரும் விருந்தினரை நன்கு உபசரித்துப் பரிசுகள் வழங்கி வழியனுப்பினர்.

ஃ ஃ ஃ

# 3. வாரணாவதச் சருக்கம்

பாண்டவர்களைத் துரியோதனாதியர் வாரணாவதம் என்ற ஊருக்குச் செல்லுமாறு செய்ததையும், பாண்டவர் அடைந்த அவ்வூரில் நடந்தவற்றையும் கூறும் சருக்கம்.

பாண்டவரும் கௌரவரும் அரண்மனையில் ஒன்றாய் வாழ்ந்து வந்தனரேனும் பொறாமையும் பகையும் இயற்கையாகவே வளரலாயின. சூதன் மகன் கர்ணன் துரியோதனனுக்கு நண்பனாயினான். காந்தாரிக்கு உறவினனான சகுனியும் துரியோதனனுக்குத் துர்மந்திரிபோல வந்து சேர்ந்தான். இவ்விருவரும் துரியோதனன் மனதில் பகையை வளர்த்து வரலாயினர். தர்ம புத்திரன் நற்குண நற்செய்கைகள் நிரம்பியவனாக வளர்ந்தான்.

தம்பிமார்களும் அவன் ஏவல்வழி ஒழுகி வந்தனர். வீமன் மீது துரியோதனனுக்குப் பகை ஏற்பட்டது. தீங்கு செய்து பாண்டவர்களை அழிப்பதே நோக்கமாகக் கொண்டான் துரியோதனன். ஒருநாள் இரவு விருந்து வைத்தார்கள். அதில் வீமனுக்கு விஷம் கலந்து உணவு பரிமாறப் பட்டது. அதை அவன் வயிறாரவுண்டு, பெரும் தூக்கத்தில்

ஈடுபட்டான். அவனைக் கயிற்றால் கட்டிக் கங்கை யோரத்தி லிருந்த மடுவில் போட்டு விட்டனர். பிறகு விஷம் நீங்கிக் கயிறுகளை அறுத்தெறிந்து எழுந்தான் வீமன்.

மற்றொரு நாள் நீரிடைக் கூரிய ஈட்டிகளை நிறுத்தி, விளையாடுவோம் என்று வீமனை அழைத்து வந்தனர். சூழ்ச்சியையறிந்த வீமன் பக்குவமாக விலகிச் சென்று, கரையேறிச் சூழ்ச்சியை அம்பலப்படுத்தினான். இவ்வாறு பல இன்னல்களிலிருந்தும் தப்பினான் பீமன்.

## படைக்கலப் பயிற்சி

பீஷ்மரும் விதுரரும் படைக்கலப் பயிற்சியில் வல்லு நரான கிருபாச்சாரியாரைத் தேடி அழைத்து வரச் செய்து அரசிளங்குமரர் நூற்று ஐவரையும் அவரிடம் கல்வியும் படைக்கலமும் பயிற்சிபெறச் செய்தனர். ஆசிரியர் வேற்றுமை கருதாமல் அவர்களுக்குப் படைக்கலக் கல்வி அளித்து வந்தார். எனினும் பாண்டவர்கள் எல்லா வித்தை களிலும் மேம்பட்டு நின்றனர்.

அதன் பின்னர் துரோணர் ஆசிரியராக வந்து சேர்ந் தார். மாணவர்கள் அவரிடம் பயின்றனர். அவர் இங்கு வருவதற்குமுன் நடந்த நிகழ்ச்சி ஒன்று இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. பாஞ்சால இளவரசன் யாக சேனனும் துரோணரும் ஒரு சாலை மாணாக்கர்கள். அவர் கள் கல்வி பயின்ற காலத்தில் அரசிளங்குமரன் துரோண ரிடம் ''என் தந்தை இறந்து நான் அரசினை ஏற்றுக் கொண்டவுடன் என் அரசில் பாதி கொடுத்து உன்னை ஆதரிப்பேன்; கைவிடமாட்டேன்'' என்று உறுதி கூறி னான்.

கல்வி பயின்ற பின்னர் இருவரும் பிரிந்து சென்றனர். பல ஆண்டுகள் கழித்து யாகசேனன் மன்னன் ஆனான். துரோணர் ஒரு பசு வேண்டி அவனிடம் சென்றனர். அரசன் அவரது முகத்தைக் கண்டும் அவர் குரலைக் கேட்டும்

உணர்ச்சி காட்டாதவனாகி, ''நீர் யார்?'' என்றான். இவருடைய பூர்வ வரலாற்றைக் கூறிய பின்பும், ''மன்னன் யான்; முனிவன் நீ; எனக்கும் உனக்கும் நட்பென்பது எப்படி கூடும்? இது பொய்'' என்று ஏசி நகை செய்தான்.

துரோணர் உடனே அந்தத் துருபதனைப் பார்த்து, ''சொன்ன வார்த்தையில் நீ சோர்ந்துள்ளாய்; ஆனால் நான் சோர மாட்டேன். நீ முன்னம் புகன்றபடியே உன் புவியில் பாதியும் கொள்வேன்; மற்றும் நேரும் சமரில் உன்னைத் தேரிற்கட்டிக் கவர்வேன். இது மெய், பின்னர்க் கண்டிடு வாய்!'' என்று சொல்லி அங்கிருந்து அகன்றுதான் அஸ்தினாபுரம் வந்து சேர்ந்தார். யாகசேனனின் மற்றொரு பெயர் துருபதன்.

துரோணர் செய்து விட்டு வந்த சபதத்தைப் பீஷ்மரும் விதுரரும் கேட்டு, ''துரோணரே! தாங்கள் இந்த அரசிளங் குமரர்க்குப் போர்த்திறம் கற்பித்து, இவரைத் துணையாகக் கொண்டு உங்கள் சபதத்தையும் முடித்துக் கொள்ள நாங்கள் சம்மதிக்கிறோம்!'' என்று அனுமதியும் அளித்தனர். அங்ஙனமே அவர் மாணாக்கர்களையும் அரச மரியாதைக் கேற்ற வரிசைகளையும் பெற்று அகமகிழ்ந்திருந்தார்.

## வில்வித்தை

நூற்று ஐவருக்கும் அவர் படைக்கலப் பயிற்சி அளித்து வந்தார். எனினும் அர்ச்சுனன் வில்வித்தையில் சிறந்து விளங்கினான். எனவே ஆசிரியர்க்கு அவன் மீது பிரியம் அதிகரித்தது. ஏகலைவன் என்னும் வேடன் துரோணரை மானசீகமாக வணங்கி வில்வித்தையில் சிறந்துவிளங்கினான். அவன் குரு தட்சிணையாகத் தனது வலது கைப்பெரு விரலைக் கொடுத்தான். ஆகவே 'வில்லுக்கு விஜயன்' என்ற புகழ் பெற்றான் அர்ச்சுனன். தனஞ்செயன் வில்லாற்றலில் சிறந்து விளங்கினான்.

## பயிற்சித் திறம் காட்டல்

குருகுலக் குமரர்களது பயிற்சித் திறத்தைக் காட்டு வதற்கென்று ஒரு நாள் சோதனை நாளாகக் குறித்து அதனை விதுரருக்கும் பீஷ்மருக்கும் துரோணர் தெரிவித் தார். அதைப் பறையறைவித்து நகரெங்கும் தெரிவிக்கச் செய்தார்கள். குறிப்பிட்ட நாளில் அரங்கில் அனைவரும் வந்து குழுமினர். கடவுட்பூசை நடந்தது.

மாணவர்கள் ஆசிரியரை வணங்கித் தத்தம் திறமை களைக் காட்டினர். சபையோரை மகிழ்வித்தனர். கரகோஷம் எழுந்தது. ஆயுதப் பயிற்சி, யானையேற்றம், குதிரை யேற்றம், ஆகியவற்றைப் பயின்று காட்டினர். ஆசிரியரை அனைவரும் புகழ்ந்தனர். அதன் பின்னர் ஒத்த திறவோர் திறங்காணும் நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று.

வீமனும் துரியோதனனும் போர் மலைந்தனர். மற்போரில் ஈடுபட்டனர். அடுத்த நிகழ்ச்சியாக வில்விஜயன் அஸ்திரவித்தைகளைக் காட்டி அனைவரையும் மகிழ்வித் தான். உடனே கர்ணன் அவைக்கு வந்தான். அர்ச்சுனனைப் போல இவனும் அஸ்திரவித்தைகளைக் காட்டினான். அர்ச்சுனனை அறைகூவிப் போருக்கு அழைத்தான். பார்த்தன் சீறி எழுந்தான்.

''ஒரு சூதன் மைந்தன் மேதினிக்கெல்லாம் நாதன் மைந்தனோடு பொருதற்கியலுமோ?'' என்று கிருபாச்சாரி யார் வினவினார். இதைக் கேட்ட துரியோதனன் கொதித் தெழுந்து ''ஒருவரது உயர்வு தாழ்வைப் பிறப்பினால் மதித் திடல் நியாயமன்று; செய்தொழிலால், கல்வித்திறமையால், வீரச்செயலால் மதித்தல் வேண்டும்'' என்று கூறித் தாழ்ந்த சூதன் மகனென்று தள்ளி வைத்த இழிவு நீங்கத் தன்னோடு அழைத்துச் சேர்த்துக்கொண்டான். அவனுக்கு அங்கதேச ஆதிபத்தியத்தை அருளிவேந்தெல்லாம் வியக்க, முடியும் சூட்டித்தானிருந்த சிம்மாசனத்திற்குச் சமமான ஆசனத் தைக்கொடுத்தான். தானும் அவனும் சோதரரென உறவு கொண்டாடினான்.

எழுசீர் சந்த விருத்தம்

70. என்று நல்ல வுரையெ டுத்தி யம்பி யேனை
இழிவினோ (டு)
ஒன்றி நின்ற ஆட கத்தை ஓட வைக்கு மாறுபோல்
அன்று சூதன் மதலை தன்னை அங்கரா சனாக்கினான்
மின்த யங்கு முடிக வித்து வேந்தெ லாம்வி யக்கவே.

—வில்லி பாரதம்

குறிப்பு:— மற்ற (செம்பு வெள்ளி போன்ற) இழிந்த உலோகங்களோடு கலந்து நின்ற பொன்னைத் (தீயிலிட்டு) சுத்தப்படுத்தும் தன்மைபோல் (ஆடகம்-பொன்) அன்று கர்ணனைச் சுயோதனன் அங்க தேசாதிபதியாக்கினான்.

வில்லிபுத்தூர் ஆழ்வார் பாடலின் மிடுக்கைக் காணுங்கள். நிகழ்ச்சிகள் எவ்வளவு வேகமாய் நடந்தன என்பதைக் காட்டுகின்றார். சபை கலைந்து யாவரும் ஏகினர். அன்று முதல் கர்ணனும் துரியோதனனும் குலவி நின்றார்கள்.

யாகசேனனைத் தேரிற் கட்டுதல்

துரோணர் குருதட்சிணையாகச் சேனைகளைத் திரட்டிக் கொண்டு துருபதன் நாட்டின் மீது படையெடுக்கச் செய்தார். பாஞ்சால மன்னனுக்கு அதற்குள் செய்தி எட்டிவிட்டது. யாகசேனன் நடுங்கினான். குருகுலசேனை வந்து நகரை வளைத்துக் கொண்டது. வாயிலைத் திறந்து போருக்கு ஆயத்தமானான், பாஞ்சாலன். போர் மூண்டது. கௌரவ வீரர்கள் பின்னடைந்து தம்மூரை நாடி ஓட ஆரம்பித்தார்கள்.

தனஞ்செயன், ''அஞ்சாதீர்கள்! முந்துங்கள், முந்துங்கள்'' என்று வீர முழக்கஞ் செய்து போர் புரிந்தான். யாகசேனனோடு நேருக்கு நேர் நின்று போரிட்டான். யாகசேனன், நாண் அறுந்து, வில்லொடிந்து, சாரதியும் போய், குதிரைகளும் வீழ்ந்த தேரில் ஒற்றையாக நாணித் தலை

குனிந்து நின்றான். உடனே அர்ச்சுனன் விரைந்து சென்று, அம்மன்னனை தேர்க்காலிற் கட்டி ஆசிரியர் முன்கொண்டு வந்து நிறுத்தினான். துருபதன் எழுந்து வெட்கித் தலை குனிந்தான்.

துரோணர் பாஞ்சாலனை நோக்கி, ''இன்று உன் நாடு என் நாடாயிற்று. உன் அரசு முற்றும் என் வசம் ஆயிற்று. நீ முன்பு சொன்னபடி பாதி நாடு என் நாடாயிற்று. பாதி நாட்டை நான் இன்று உனக்கு அளிக்கிறேன். நீ போக லாம்,'' என்று கூறிச் சொன்ன சபதத்தை முடித்துக் காட்டினார்.

யாகசேனன் வேள்வி செய்தல்

பாஞ்சாலன் வருத்தத்துடன் ஊர்போய்ச் சேர்ந்தான். பற்குனனை மணக்கப் பெண்மகள் ஒருத்தியும், முனிவனைக் கொல்ல முரண் மகன் ஒருத்தனும் தனக்கு வேண்டுமெனத் தன் மனத்தில் எண்ணினான். அதனை விரைவில் பெறுவ தற்கு வேள்வி செய்வதென விரும்பினான். தக்காரைத் தேட லானான். உபயாசன், யாசன் என்னும் இருவரும் இசைந் தார்கள். தீர்க்கரையில் வேள்விச் சாலை அமைக்கப்பட்டது. சாமக்கிரியைகள் வந்து சேர்ந்தன. வேதியர்கள் வந்து குழுமினர். ஓராண்டு விடாமல் யாகஞ் செய்தனர். ஓமத் தழலில் மகவருள் ஆகுதியை உபயாசன் வழங்கினான்.

ஓமத் தழலினின்றும் கிரீடமும் வாகுவலயங்களும் குண்ட லங்களும் அணிந்து கொண்டு பேரழகுடைய ஒரு குமாரன் கையில் வில்லும், மெய்யில் வைரக் கவசமும் பூண்டு தேரின் மீது தோன்றினான். மன்னனும் மாதவரும் ஆச்சரியப் பட்டனர். மங்கள வாத்தியங்கள் ஒலித்தன. மறுமுறையும் ஆகுதியை வழங்கினர்.

அறுசீர் விருத்தம்

90. பின்னும் கடவுள் உபயாசன்
பெருந்தீப் புறத்துச் சுருவையினால்
மன்னுங் கடலார் அமுதென்ன
வழங்குஞ் சுருதி அவிதலத்தால்

மின்னுங் கொடியும் நிகர்மருங்குல்
வேய்த் தோள் முல்லை வெண்முறுவல்
பொன்னும் பிறந்தாள் கோகனகப்
பூமீ தெழுந்த பொன்போல்வாள்
—வில்லி பாரதம்

குறிப்பு:— கோகனப்பூ—தாமரைப்பூ. கருவை—கரண்டி.

இலட்சுமி போன்ற அழகிய பெண் அவிநலத்தால் ஓமாக்கினியினின்று தோன்றினாள். அப்போது ஆகாயத்தி லிருந்து, ''அன்று அரக்கர் குலத்தைத் தொலைவிக்க மண் மேல் ஒருத்தி தோன்றிச் சீதையெனப் பெயர் பெற்றுத் திகழ்ந்தாள். இந்தப் பாஞ்சாலி துஷ்ட அரசர் குலம் தொலைக்க இந்த வேள்வித் தீயில் தோன்றினாள்!'' என்று அசரீரி எழுந்தது.

யாக சேனன் விரும்பிய படியே ஆணும் பெண்ணும் அழகாகப் பிறந்தனர். வேதியர்க்கும் யாகத்தில் பங்கு கொண்டவர்க்கும் சன்மானங்கள் வழங்கினான். எல்லாரை யும் வழியனுப்பினான். குழந்தைகளுக்குத் திருஷ்டத்யும்னன், திரௌபதி என்று பெயரிட்டனர். கலைகள் பலவும் பயின்று சீரும் சிறப்புமாய் வளரலாயினர். திருஷ்டத்யும்னன் தாம் கொல்லப் போகும் துரோணரிடம் விற்கலையும் வேதக்கலை யும் பயின்றான்.

## தருமனுக்கு முடிசூட்டுதல்

திருதராஷ்டிரன் பீஷ்மரையும் விதுரரையும் கலந்து ஆலோசித்துத் தருமனுக்கு முடிசூட்டத் தீர்மானித்தான். அஸ்தினாபுரம் விழாக் கோலம் பூண்டது. மங்கள வாத்தி யங்கள் முழங்கின. தருமபுத்திரனுக்கு இளவரசுப்பட்டம் சூட்டினான். தானமும் தருமமும் ஓங்குமாறு தருமபுத்திரன் ஆட்சி புரிந்து வந்தான்.

மக்கள் தருமனைப் புகழ்வதைக் கண்டு துரியோதனன் மனம் புழுங்கினான்; கொதித்தெழுந்தான். தந்தையை

வணங்கி, ''பாண்டவரோடு கலந்து ஒரு போதும் வாழேன்; நாளையே எங்களைப் பிரித்து வாழச் செய்யும் வழியைத் தேடுங்கள்; பகைமையை முற்றவிட்டு வேடிக்கைப் பார்த்திருத்தல் வேண்டா; சொன்னேன்; சொன்னேன்; மும்முறையும் சொன்னேன்!'' என்று கோபத்தோடு கூறிமறைந்தான்.

திருதராஷ்டிரன் விதுரரையும் பீஷ்மரையும் அழைத்து ஆலோசித்தான். அவ்விருவரும், ''இருதிறத்தாரும் பிரிந்து இருத்தலே நன்று. துரியன் முதலியோர் திருந்தப்போவதில்லை. கூடியிருப்பின் கொடுமையை செய்வர். ஆதலால் அதுவே காரியம்'' என்று கூறினர்.

## வாரணாவத நகரம்

துரியோதனன் தந்தையைத் தன்வயமாக்கிப் புரோசனன் என்னும் மந்திரியை அழைக்கச் செய்தான். வாரணாவதம் என்னும் நகரத்தில் அழகிய அரண்மனை ஒன்றைக் கட்டி அதில் பாண்டவர்களைக் குடியேற்ற ஏற்பாடு செய்தான்.

திருதராஷ்டிரன் தருமனை அழைத்து, ''துரியோதனன் துஷ்டபுத்தி உடையோன் ஆதலால் உங்களுடன் கூடிவாழ இயைந்திலன்; நீங்கள் ஆட்சிக்கொரு கேடும் வந்துறாதபடி வாரணாவதத்தில் அமைக்கப் பெற்ற அரண்மனையில் தனியிருந்து புரோசனனை மந்திரியாகக் கொண்டு இனிது வாழ்ந்திருங்கள்!'' எனப் போதித்துப் பாண்டவர்களை அங்குக் குடியேற்றி விட்டான்.

''தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'' எனும் பெருவழக்கைச் சிரமேற்கொண்டு அவர்கள் வாரணாவதத்தில் தாயாருடன் குடியேறினார்கள். சிவபெருமானை வணங்கி, அனைவரும் போற்றுமாறு ஆட்சி செய்து வந்தனர். அம்மாளிகை அரக்கினால் ஆகியதென்றும் மேற்பூச்சிலும் அலங்காரத்திலும் அரண்மனை யாக்கப்பட்டிருக்கிறதென்றும், ரகசியமாக அம்மாளிகைக்குத் தீயிட்டுப் பாண்டவரைக்

கொல்வதற்காக இச்சூழ்ச்சியைத் துரியோதனன் செய்திருக்கிறான் என்றும் விதுரர் தெரிந்து கொண்டார்.

விதுரர் இதை வெளியாருக்குத் தெரியப்படுத்தாமல் மனத்துள் வைத்துத் தருமன் ஆதியோர் சமயத்தில் தப்பிப் போகும் படியாகத் தனி வழியும் தூணும் அமைத்திடச் செய்தார். பாண்டவர்கள் புரோசனனைப்பற்றி எச்சரிக்கையாகவே இருந்தனர். குறிக்கப்பட்டிருந்த அந்நாளில் பீமசேனன் தூணினை விலக்கி வழிபோவதறிந்து உடன் பிறந்தோரையும் தாயையும் பாதுகாப்பாய் வெளியேற்றித் தான் வெளியேறும்போது அவ்அரக்கு மாளிகைக்குத்தீயிட்டு வெளியேறினான். மாளிகை தீப்பற்றிஎரிந்தது. புரோசனன் வேடர்கள் ஐவர், அவர்களுடைய தாய் ஆகிய எழுவரும் எரிந்து போயினர். இச்செய்தி அஸ்தினாபுரத்திற்கு எட்டியது. குந்தியும் மைந்தரும் மாண்டனர் என்று அனைவரும் கலங்கினர். 'பகைவர் அழிந்தனர்; இனி நமக்குக் கவலையில்லை' எனத்துரியோதனன் மகிழ்ந்தான்.

விதுரர்க்கு இந்த ரகசியம் தெரியும். எனினும் அவர் யாரிடமும் இதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கவில்லை. பீஷ்மரும் துரோணரும், 'பாண்டவர் மடிந்து போயினரே' என வருந்தினர்.

பாண்டவர்கள் மாண்டு போயினர் எனப் பிரகடனப் படுத்தி, துரியோதனன் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான்.

□ □ □

# 4. வேத்திரகீயச் சருக்கம்

*வேத்திரகீயம் என்னும் இடத்தில் நிகழ்ந்தனவற்றைக் கூறும்சருக்கம் இது.*

*அரக்கு மாளிகையிலிருந்து தப்பிய பாண்டவரும் குந்தியும் இடிம்ப வனத்தை அடைந்ததும், வீமன் இடிம்பன் என்ற அரக்கனைக் கொன்று, அவன் தங்கையான இடிம்பியை மணந்து கொண்டதும், இடிம்பி கடோத்கசன் என்ற மகனைப் பெற்றதும், வியாசரை அவர்கள் கண்டதும், பிறகு அவர்கள் அந்தண வேடங்கொண்டு வேத்திரகீயத்தை அடைந்ததும், அங்கே மக்களுக்கு இன்னல் இழைத்து வந்த பகன் என்ற அசுரனை வீமன் கொன்றதும் இச்சருக்கத்தில் அடங்கிய விஷயங்கள்.*

அரக்கு மாளிகையிலிருந்து தப்பிக் குகை வழியாக நடந்து பாண்டவரும் குந்தியும் பொழுது விடியும் தருவாயில் ஒரு காட்டிற்குப் போய்ச் சேர்ந்தனர். சற்று நேரம் தூங்கினர். வீமன் எழுந்து அந்தப் பெருங்காட்டைச் சுற்றிப் பார்த்தான். ஓர் அரக்கியைச் சந்தித்தான். மயங்கி நின்ற வீமனிடத்தில் அவள் நெருங்கி வந்து நாணத்தோடு நின்றாள். இருவரும் அளவளாவினர். "என் அண்ணன் வருமுன்னர் என்னை ஏற்றுக் கொள்வீர்!" என்று இறைஞ்சினாள் அந்த இளநங்கை. வீமன் மறுமொழி கூறாது சற்று மயங்கி நின்றான்.

இதை மறைந்து நின்று கேட்டுக் கொண்டிருந்த இடிம்பன் என்ற அரக்கன் கடுங்கோபங்கொண்டு வீமனோடு மலைந்தான். இரு பெருமலையென இருவரும் மோதினர். சப்தங்கேட்டு தாயும் தனையரும் விழித்தெழுந்து அங்கு ஓடி வந்தனர், இடிம்பன் மாண்டான்.

இடிம்பி இவர்களைக் கண்டதும் மானிட உருவந்தாங்கி, இளநங்கையாகக் காட்சியளித்தாள். நங்கை, அண்ணன் சரீரத்தைப் பற்றிக் கருதாமல் வீமனைப் பின் தொடர்ந்தாள். குந்தி தேவியை வணங்கி நின்றாள். குந்தி வீமனைப் பார்த்து, ''குழந்தாய்! உன் மேல் காதல் கொண்டுள்ள இவளை ஏற்றுக் கொள்! என்று சொல்லி இருவரையும் இசைவித்தாள். காதலர் இருவரும் நாணிக் கரங்கள் பற்றிக் காடு சேர்ந்தனர்.

## வியாசர் வருகை

பாண்டவர்களும் குந்தியும், 'இவ்வனத்தில் தங்கிப் பின் எங்குப் போவது?, என்ன செய்வது?' என்று தயங்கிக் கொண்டிருந்தபோது அவ்வனத்திற்கு வேத வியாசர் வந்து சேர்ந்தார். அவர் பாதங்களில் விழுந்து வணங்கினர். ''தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனது போலத் தப்பிப் பிழைத்தீர்கள். நீங்கள் மாண்டு போனதாகத் துஷ்டர்கள் களிக்கிறார்கள். நீங்கள் கலங்க வேண்டா. இது அரக்கர் மிகுந்த வனம், நாளை இதைவிட்டு, வேதியர் உருவந்தாங்கி வேத்திரகீய நகரம் சேருங்கள். அங்குப் பலநாள் தங்கியிருங்கள்; அதன்பின்னர் நீங்கள் மங்களம் பெறுவீர்கள்'' என்று ஆசி கூறி வேதவியாசர் அகன்றார்.

## கடோற்கசன் பிறப்பு

அன்று அங்குத் தங்கியிருந்து மறுநாள் 'இடிம்பியுடன் சாலிகோத்திர வனம் போய்ச் சேர்ந்தார்கள். அங்கு வேள்விப் புகையையும் வேத கோஷத்தையும் கண்டனர். மறையவர் சிலரோடு உறைந்து நியமங்கள் கற்றனர். வீமனும் இடிம்பியும் காமக்களியாட்டங்களில் மூழ்கினர். வேட்கை மிஞ்ச விழைந்திருந்தனர். நங்கை இடிம்பியும் நல்ல வேளையில் கடோற்கசன் என்னும் காளையை ஈன்றெடுத்தாள்.

கடோற்கசன், தந்தை தாயாரை வணங்கி நின்றான். "நீங்கள் நினைத்த போது வந்து ஆணை செய்வேன். இறைவர்களே! இனி எனக்கும் என் தாய்க்கும் விடை கொடுங்கள். எங்கள் வனம் காக்க நாங்கள் செல்ல வேண் டும்!" என்று விடைபெற்றுத் தாயும் தனயனும் சென்றனர். பின்னர் பாண்டவர்கள் வேதியர் உருவம் தாங்கி வேத்திர கீய நகரம் சென்றனர்.

## வேத்திரகீய நகரம்

தாயும் மக்களும் நெடு வழி நடந்து, காடு மலைகளை யும் கடந்து, வேதியர் வாழும் நகரமாகிய வேத்திரகீயம் போய்ச் சேர்ந்தார்கள். வேதபாடசாலைகள், கோயில்கள், குளங்கள் நிறைந்தது அந்நகரம். ஆறும் வயல்களும், அவை களைத் தாண்டி காடும் மலையும் இருந்தன. வேதியர் உருவில் சென்ற பாண்டவர்களை அவ்வூர் வேதியர்கள் வரவேற்று உபசரித்தார்கள். ஒவ்வோர் அகத்தில் ஒவ்வொரு நாள் வைத்துக் கொள்ள ஏற்பாடாயிற்று. அவர்கள் தங்கி வாசம் செய்ய ஒரு வேதியர் இல்லம் அளித்து ஆதரித்தார். அவர்கள் அங்கு வசதியாய் வாழ்ந்து வந்தனர்.

## பகாசுரன் வதை

ஒரு நாள் அவர்கள் குடியிருந்த வீட்டு அம்மையார் மனங்கலங்கியிருந்தார். விசாரித்த போது அவர் சொன்ன வரலாறு வருமாறு—

"இந்த நகரத்தில் பகன் என்னும் அரக்கன் ஒருவன் இருக்கிறான். அவன் இந்நகர்க்கு அடிக்கடி வந்து ஆடு மாடுகளையும் மனிதர்களையும் கொன்று தின்றான். ஒரு நாள் நகர மக்கள் கூட்டம் கூடி ஓர் ஏற்பாட்டைச் செய் துள்ளனர். அதன்படி நாங்கள் நாள்தோறும் முறை வைத்து ஒரு வண்டி நிறையச் சாப்பாடும் ஆளும் அனுப்பி வருகிறோம். இன்று எங்கள் வீட்டு 'முறை!' என்று அழுதாள்.

இதைக் கேட்டு, குந்திதேவி, ''தாயே! தாங்கள் இது பற்றிக் கவலையுற வேண்டா. இன்றோடு அந்த அரக்கன் ஒழிவான். நான் எனது இரண்டாவது மகனை அனுப்பு கிறேன். சமையல் செய்யுங்கள்!'' என்று ஆறுதல் கூறினார். ஊரில் பலபேர் இதை நம்பவே இல்லை. வீமன் வண்டி யோடு சென்றான். ஏகச் சக்கர நகரின் அருகில் சென்று வண்டியை நிறுத்தினான். வீமன் சாப்பிட ஆரம்பித்தான். அறுசுவை உண்டியை வயிறார உண்டான். அதற்குள் பகன் அங்கு ஓடி வந்தான். நேரமாகி விட்டது என்று கோபாவேசத்துடன் வீமன் மீது பாய்ந்தான். இருவரும் சம பலம் உடையவர்கள். கை கலந்தார்கள். ஒருவரையொருவர் தூக்கிப் போட்டார்கள்; குதித்தார்கள்; இடித்தார்கள்; கட்டிப் புரண்டார்கள், வீமன் பகனைக் கீழே தள்ளி நெஞ்சையிறுக்கி உயிரை வாங்கினான்.

நகரத்தார் ஓடி வந்து வேடிக்கை பார்த்தார்கள், வீமனைப் போற்றிப் புகழ்ந்தார்கள். வீமன் ஆற்றில் நீராடி னர் திரும்பினான். தக்க உபசாரங்களையும் உபகாரங்களை யும் பெற்று ஐவரும் தாயும் வாழ்ந்து வந்தனர்.

ஃ ஃ ஃ

# 5. திரௌபதி மாலையிட்ட சருக்கம்

திரௌபதி அருச்சுனனுக்கு மாலையிட்ட செய்தியைக் கூறும் சருக்கம் என்பது பொருள். தனது வில் ஆற்றலால் விசயன் உரிமையாக்கிக் கொண்ட திரௌபதியை அன்னை சொற்படி ஐவரும் மணந்து கொண்ட வரலாற்றை இச்சருக் கம் கூறும்.

## பாஞ்சால நகரம் புகுதல்

பாஞ்சால மன்னனாகிய துருபதன், 'பாண்டு மைந்தர்கள் அரக்கு மாளிகையில் மாண்டு போனார்கள்' என்று கேள்விப்பட்டு வருந்தினான். என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தான். ''பாண்டவர்கள் உரமுடையவர்கள்; இறந்து போகவில்லை, எங்கோ மறைந்து வாழ்கிறார்கள்; நீ திரௌபதிக்குச் சுயம்வரம் நடத்த எல்லா நாட்டிற்கும் ஓலையனுப்பு; அவர்கள் மறுபடியும் வருவர்,'' என்று ஆசாரியர் கூறினார். அதன்படியே துருபதன் எல்லா நாட்டிற்கும் சுயம்வர ஓலை அனுப்பினான். அதைக்கண்ட அரசிளங்குமரர்கள் பாஞ்சால நகரத்திற்கு வந்து சேர்ந்தனர்.

சுயம்வரச் செய்தி வேத்திரகீயத்திற்கும் எட்டியது; வேதியர் பலர் விழாக் காணப் புறப்பட்டனர். அவர்களுடன் பாண்டு மைந்தர்களும் தாயுடன் புறப்பட்டனர்.

பாதசாரிகளாகவே பல் நெடுங்காதங்கள் நடந்தார்கள். வியாசமுனிவரை வழியில் சந்தித்தனர். ''முன்னரே புறப்பட்டது நல்லதாயிற்று. உங்களுடைய கேண்மையைப் பெறுவதற்காகவே துருபதன் சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்துள்ளான். வெற்றி உங்களுக்குத்தான் கிடைக்கப் போகின்றது. விரைந்து செல்லுங்கள். நாளையே முகூர்த்த நாள். வேஷத்தை மாற்றாதீர்கள்'' என்று முனிவர் கூறிச் சென்றார்.

சூரியன் உதயமாவதற்குள் பாண்டவர்கள் பாஞ்சால நகரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். வழியில் பல நற்சகுனங்களைக்கண்டார்கள். நகரம் விழாக்கோலம் கொண்டிருந்தது மங்கல வாத்தியங்கள் முழங்கின. மண்டபங்களிலும் மாளிகைகளிலும் கட்டப்பட்டிருக்கும் துகிற்கொடிகள், ''திரௌபதிக்கு மணநாள் இன்றுதான்; ஆகையினால் எல்லோரும் வாருங்கள்!'' என்று அழைப்பது போலிருந்தது.

ஐவரும் தாயும் வீதிகள் தோறும் காட்சிகளைக் கண்ணுற்றுக் கடந்து சென்று சிங்கம் பசுவின் தோல் போர்த்திச் செல்வதுபோல், தங்கள் மாறுவேடத்துடன் ஒரு குயவனது வீட்டை அடைந்தார்கள். அம்மனையகத்தில் தாயை இருக்க வைத்துத் தங்கட்குத் துணையாய் வந்த வேதியரோடு கூடிச் சுயம்வரத்திற்காக வந்துள்ள வேந்தர்கள் காத்திருக்கும் மண்டபத்தைச் சேர்ந்தார்கள்.

## சுயம்வர மண்டபம்

திரௌபதியைத் தாதிகள் அலங்காரம் செய்து சுயம்வர மண்டபத்திற்கு அழைத்து வந்தார்கள். திரௌபதி அவையோரைக் கவனித்தாள். நங்கைக்கு மூத்தவனாகிய திருஷ்டத்யும்னன் வேந்தர்களை நோக்கி, ''மன்னர் மைந்தர்காள்! இதுவில்; இவைபாணங்கள்; அதோ மேலே விரைந்து சுழலும் வேகத்தையுடைய சக்கரத்தின் மத்தியில் நிலையில்லாமல் சுழன்று கொண்டிருக்கும் மீனாகிய லட்சியம் அது; அந்த லட்சியத்தின் நெஞ்சிற்படும்படியாக எவர் கணை எய்வரோ அவர்க்கே எனது நங்கை திரௌபதி உரியவள் ஆவாள்!'' என்று சொல்லி உட்கார்ந்தான்.

இதைக் கேட்ட வேந்தரிற் பலர் திடுக்கிட்டனர், சிலர் நாணித் தலைகுனிந்தனர். 'முயன்று பார்ப்போம்' என்று சிலர் எண்ணினர்.

அச்சமயம் தாதியர்கள் திரௌபதியை மன்னர் அவைக்கு நேரே அழைத்து வந்து, வந்துள்ள அரசரது பேரும் ஊரும் புகல்வாராயினர். இது மன்னரது சுயம்வர மரபாகும்.

''இங்ஙனம் பதினெண் புவிக்கும் பதியாய எல்லா அரசரும் நின் பொருட்டால் இங்கு வந்தெய்தி இருக்கின்றார்கள். இவருள் யார் அந்த மச்சேந்திரத்தைப் பேதிக்கும் படியாகக் கணை ஏவுவரோ அம்மன்னர்க்கே உன் கை

மாலையைச் சூட்டி மணப்பாய்'' என்று சொன்னாள் தோழி.

சிலர் சிலையருகில் சென்று திரும்பினர்; சிலையைப் புரட்டிப் பார்த்தார் சிலர்; தூக்கிப் பார்த்தார் சிலர்; நிறுத்தி நாணை ஏற்ற மாட்டாமல் விழுந்தார் சிலர். சல்லியன், சராசந்தன், நீலன், துரியோதனன், கர்ணன் முதலியோரும் முயன்றனர்; தோற்றனர். அவையில் சற்றுநேரம் அமைதி நிலவியது.

அப்போது, கோபமும் வீரமும் பொங்கத் தாங்க மாட்டாமல் வேதியர் கூட்டத்தின் நடுவிலிருந்து ஒருவீரன் எழுந்து ''மன்னர் மரபிற் பிறந்து, மண் ஆளும் அவர்க்கு அல்லாமல், மறையவர் குலத்து வந்தவரும் எடுத்து இலக்கு வீழ்த்தால் மங்கை மாலை சூட்டுவாளோ?'' என்று கேட்டான்.

திருஷ்டத்யும்னன், ''ஏன் அவ்வீரன் அந்தக் குலத்துக்கு அணி திலகமன்றோ? ஆகலாம்!'' என்று சொன்னான். உடனே அவ்வீரன் நெடுவில்லைக் கையிலேந்தி விரைவில் நாணைப் பூட்டினான். அம்பு விரைந்து சென்று மச்சேந்திரத்தைப் பேதித்தது. இலக்கும் வீழ்ந்தது. உடனே நங்கையும் உலகுக்கு ஒரு வீரனாகிய அவ்வேதியச் சிறுவன் கழுத்தில் தன்கையில் வைத்திருந்த மாலையைச் சூட்டினாள்.

துரியோதனன் தோள் தட்டி ஆர்ப்பரித்தான். தம்பியரும் ஆரவாரம் செய்தனர். சகுனியும் கர்ணனும் சார்ந்தெழுந்தனர். சிசுபாலனும் சராசந்தனும் சேர்ந்து வந்தனர். ''ஒரு பார்ப்பான் க்ஷத்திரியன் மகளைக் கொண்டு போவதா? நாங்கள் விடோம்'' என்று வம்புக்கு நின்றார்கள்.

அப்போது வேதியர் உருவில் இருந்த அருச்சுனன், கன்னியைப் பார்த்திருக்கச் சோதரரிடம் சொல்லிவிட்டு, வெகுண்டு நின்று, சிலையை வளைத்து, மன்னரெதிர் வந்து நின்றான். வீமனும், வந்து துணை நின்றான்.

எதிர்த்து நின்ற மன்னரை இருவரும் சாடினர். ''இவரென்ன இறுதிக் காலத்து ருத்திரரோ இங்கு வந்தார்? ஏதேது, நம்மால் இனிப் பொருதல் ஆகாது!'' என்று பலரும் ஓடினர். ''இவர்கள் வேதியர் அல்லர்; வீம அர்ச்சுனர்களே!'' என்று பேசிக் கொண்டனர். கண்ணபிரான் மன்னர்களை விலக்கி வீம அர்ச்சுனர்களைச் சமாதானப் படுத்தினார்.

ஐவருங் கன்னியோடு அன்னையிருந்த குலாலனது இல்லஞ் சேர்ந்தனர். ''அன்னையே! இன்று பெற்றனம் ஓர் ஐயம். என் செய்வது இதனை?'' என்றனர். உள்ளிருந்த அன்னை செய்தி என்ன என்று கேட்டுணராமல், ''தேவர் தெள்ளமுதென்ன மக்காள்! நீங்கள் ஐவிரும் அதனைச் சேர இருந்து அருந்துங்கள்!'' என்றாள். பின்னர் வெளியே வந்து செய்தியறிந்து ஏங்கிக் கலங்கினாள்.

ஐவரும் தமது அன்னையை வணங்கி, ''கலங்க வேண்டா; நின்சொல் வேதமாகும்!'' என்று அமைந்தனர். குந்திதேவி மங்கையை வரவேற்று மகிழ்ந்தாள். பாஞ்சால மன்னன் ஒற்றர் மூலம் நடந்ததை அறிந்தான். மறுநாள் அவர்களை அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்.

''விஜயனுக்கே திரௌபதி உரியள்'' என்று யாகசேனன் கூறத் தருமன், ''இப்பெண்ணை நாங்கள் ஐவரும் மணப்போம்'' என்றான். மன்னன் கலங்கி நின்றான். 'ஒரு பெண்ணை ஐவர் மணத்தல் ஒழுங்காமோ? ஒருப்படேன்'' என்றான். வேதவியாசர் அங்குதோன்றி விளக்கங் கூறினார்.

## திரௌபதியின் பூர்வ வரலாறு

''துருபதனே! கேளாய் யாகத் தீயினின்றும் தோன்றிய இப்பெண் முற்பிறப்பில் 'நளாயினி' என்னும் பெயருடையாள். தவத்திற் சிறந்த மௌத்கல்யர் என்னும் முனிவரை மணந்து கொண்டாள். அவளுடைய கற்பையும் அன்பையும்

சோதிக்க வேண்டி மூப்பும் தொழுநோயும் உடையவராய் அவளைத் துன்புறுத்தி வந்தார். கணவனை கண்கண்ட தெய்வமாய் அவள் ஒழுகிப் பணிவிடைகள் செய்து வந்தாள்.

மௌத்கல்யர், இவளது அன்பையும் கற்பையும் கண்டு களித்து, பழைய விகார உருவை நீக்கி, மன்மதன் போன்று காளை உருக் கொண்டு, "பெண்ணே! உனக்கு அருந்ததியும் ஒப்பாகாள். நீ நினைத்த போகத்தை நின் மனம் களித்திட நுகர்வோம்!" என்று சொல்லி இன்பக் கடலில் மூழ்கினார். இருவரும் வெவ்வேறு உருவம் தாங்கி இன்பம் நுகர்ந்தனர். இந்திர சேனையாக இவள் உருவெடுத்த போது முனிவர் தவஞ் செய்யப் போய்விட்டார்.

இந்திர சேனை சிவபெருமானை நோக்கித் தவம் இருந்தாள். இறைவன் அவள் முன் தோன்றி, எண்ணம் யாதென்று வினவினர். "கணவன் வேண்டும்" என்று ஐந்து முறை கேட்டாள். அவரும் 'அவ்வாறே ஆகுக' என்று வரம் அருளிச் சென்றார். வழியில் இந்திரர் ஐவரைச் சந்தித்து, "இந்திர சேனையின் மறுபிறப்பில் நீங்கள் ஐவரும் அவளுக்குக் கணவராகக் கடவீர்!" என்று பணித்தார். அந்த ஐவரும் இப்போது பாண்டவர்களாக வந்துள்ளனர். அந்த இந்திர சேனைதான் திரௌபதி. ஆகையினால் அவள் விருப்பப்படியே ஐவருக்கும் உரியவள் ஆவாள்!" என்று விளக்கமாகக் கூறினார் வேதவியாசர்.

### திருமணம்

மன்னன் மயக்கந்தீர்த்தான். மங்கையும் தெளிவடைந்தாள். நல்ல முகூர்த்தத்தில் வேத விதிப்படி தருமனுக்கும் திரௌபதிக்கும் திருமணம் நடந்தது. இவ்வாறே மற்றை நான்கு நாட்களிலும் நால்வருக்கும் திருமணம் நடைபெற்றது.

பாண்டு மைந்தர் வெளிப்பட்டு மங்கையைக் கைப்பிடித்தனர். துருபதனும் அவர்களுக்கு ஆதரவு தந்துள்ளான்

என்று பொறாமை கொண்டு கௌரவர்கள் பாஞ்சால நாட்டின் மீது படையெடுத்தனர். திருஷ்டத்தும்மனும் பாண்டவர்களும் சேர்ந்து அவர்களைத் தோற்றோடச் செய்தனர்.

திருதராஷ்டிரன் பீஷ்மரையும் விதுரரையும் பாஞ்சால நகருக்கு அனுப்பிப் பாண்டவரையும் திரௌபதியையும் அழைத்து வரச் செய்தான். அஸ்தினாபுரத்தில் பாண்டவர்கள் முன்போல் வாழ்ந்து வரலாயினர்.

# 6. இந்திரப் பிரஸ்த சருக்கம்

பாண்டவர்கள் இந்திரப் பிரஸ்தம் என்னுமோர் நகரை அமைத்துக் கொண்டு, அங்கே அவர்கள் வாழ்ந்து வந்த வரலாற்றைக் கூறும் பகுதியாகும் இது.

### தருமன் முடிசூடல்

திருதராஷ்டிரன் பீஷ்மரையும் விதுரரையும் கலந்து ஆலோசித்து, தரும புத்திரனுக்கு முடிசூட்ட எண்ணினான். நகரத்தை அலங்கரித்தார்கள். குறித்த நாளில் மங்கல வாத்தியங்கள் முழங்க, தருமனையும் திரௌபதியையும் மங்கள நீரால் அபிஷேகம் செய்து தொல் மரபோர் சூடிய மணி மகுடத்தைச் சூட்டினர். வேதியர் ஆசி கூறினர். விண்ணவர் மலர் மாரிபொழிந்தனர். பாவையர் பல்லாண்டு கூறினர். பாண்டவர் நகர்வலம் வந்தனர். பெரியோரை வணங்கி ஆசிபெற்றனர். தருமபுத்திரன் ஆட்சி நடத்தினான்.

### இந்திரப் பிரஸ்த மாநகரம்

இவ்வாறு ஆட்சி செய்து வருங்கால், பாண்டவர்கள் தமக்கென்று தனிநகரம் அமைத்துக் கொண்டு அங்குச்

சென்று வாழ்வதே நலமெனக் கருதினர். காண்டவப் பிரத்தம் என்னும் இடம் காடாக இருந்தது. இந்திரன் தேவ தச்சனாகிய விஸ்வகர்மாவை நினைத்தான். அவனும் அவ்வாறே வந்து தோன்றினான். கண்ணபிரான் குறிப்பின் படி அங்கு அழகான நகரம் ஒன்றைச் சமைத்தான். மண்டபங்களும், பொய்கையும், குளங்களும், அறச்சாலைகளும், ஆலயங்களும் நிறைந்த நகரமாய் அது காட்சி அளித்தது. சுற்று மதில்களும் அகழிகளும் பொலிந்தன. வயல்களும், சோலைகளும் செறிந்தன. அனைவரும் கண்டு அதிசயித்தனர். பாண்டவரும் திரௌபதியும் மாபெருஞ்சேனையுடன் ஒரு சுப தினத்தில் இந்திர பிரஸ்தத்தில் குடியேறினர். இந்திரன் தயவால் நிர்மாணிக்கப்பட்ட நகரமாகையால் இது இப்பெயர் பெற்றது. விசுவகர்மாவுக்குப் பரிசுகள் அளித்தனர். தர்மராசன் அந்நகரில் நல்லரசாட்சி நடத்தி வந்தான்.

★

# 7. அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம்

அருச்சுனன் தீர்த்த யாத்திரை சென்ற செய்தியையும் யாத்திரையின் கண் நிகழ்ந்த வரலாற்றையும் கூறும் பகுதி இது.

### நாரதர் வருகை

தருமன் அவைக்கு ஒருநாள் நாரத முனிவர் எழுந்தருளினார். ஆசனம் அளித்து உபசரித்தனர். குந்தி தேவியும் திரௌபதியும் வந்து வணங்கினர்.

''நீங்கள் ஐவரும் விதியில் வேட்ட திரௌபதியின் மீது அன்புடையவரேனும் இடையில் கலகம் நேராதவாறு ஒரு நியமம் கொண்டு வாழ்தல் வேண்டும். திரௌபதியை நீங்கள் ஓராண்டுக்கு ஒருவராக வகித்துச் சுகித்திருத்தல் வேண்டும். இவ்வாறு மேவி ஒருவருடன் வாழுங்கால் மற்றவர் பார்த்திடல் கூடாது. பார்த்திடின் ஓராண்டுக்காலம் தீர்த்த யாத்திரை செய்து விட்டு வரவேண்டும். இதனால் ஒற்றுமைக்குப் பங்கம் நேராது. இதனை விதியெனக் கொண்டு வாழுங்கள்'' என்று பணித்துச் சென்றார் நாரத முனிவர்.

இவ்வாறு ஒழுகி வரும் நாளில் நேர்ந்த செய்தி ஒன்றைக் கூறுவோம்.

## அருச்சுனன் தீர்த்த யாத்திரை

ஒருநாள் அந்தணர் ஒருவர் கதறிக் கொண்டு வாயிலில் வந்து நின்றார். ''இறையே! வில் வேடுவர் பலர் வந்து என் பசுக்களைக் கவர்ந்து சென்றனர்'' என்றார். காண்டீபன் அவரை நோக்கி, ஆவன செய்கிறேன்' என்று ஆறுதல் கூறி அனுப்பினான். காண்டீப வில்லை எடுக்க அரண்மனைக்குச் சென்றான். அங்குத் தருமனும் திரௌபதியும் இருக்கக் கண்டான். கொண்ட கொள்கைக்குப் பங்கம் நேர்ந்ததே என்று வருந்தினனாகி வில்லை எடுத்துச் சென்றுவேடுவரைத் தாக்கினான். பசு நிரைகளை மீட்டு அந்தணனிடம் ஒப்படைத்தான். நகரத்திற்குத் திரும்பி வந்து தமையனை வணங்கி நியமப்படி தீர்த்த யாத்திரை செய்யப் புறப்பட்டான்.

## உலூபி திருமணம்

அருச்சுனன் அரச உடைகளைக் களைந்து வேதியர் வேடம் பூண்டு, யாத்திரைக்குப் புறப்பட்டான். கங்கையில் நீராடினான். பாதாள மங்கையர் சிலர் அங்கு நீராடிக் கொண்டிருந்தனர். அக்கூட்டத்தினுள் உலூபியைக் கண்டான். அவளுடைய அழகிலும் ஆற்றலிலும் ஈடுபட்டவனாய்

அவளைத் தொடர்ந்து பிலத்தினுள் சென்றான். தன்பால் அநுராகம் மிகுந்த அவளை மணந்து கூடி அங்குச் சிலகாலம் வாழ்ந்திருந்தான். அவளுடன் இன்பம் நுகர்ந்தான். அவர்களுக்கு அரவான் பிறந்தான். நல்லரவான் என்று போற்றப்பட்டான். மனைவியையும் மகனையும் அங்கேயே இருக்கச் செய்து, தனஞ்சயன் தீர்த்த யாத்திரையைத் தொடர்ந்தான். அரவான் 32 லட்சணங்களும் பொருந்தியவன்.

காடும் மலையும் கடந்து, வேதியருடன் கூடித் தென் திசையில் யாத்திரை செய்தான். வழியிலுள்ள புண்ணிய நதிகளில் நீராடினான். திருவேங்கடம் சார்ந்து ஏழுமலையானை வணங்கிச் சிலநாள் அங்குதங்கி இருந்தான். பின்னர் காஞ்சியம்பதிக்கு வந்து காமாட்சியம்மை சமேத ஏகாம்பர நாதனை வணங்கினான். திருவருணை, திருக்கோவலூர், திருவதிகை வீரட்டானம், திருவகீந்திரபுரம் முதலிய பதிகளை வணங்கிக் கொண்டே பொன்னம்பலம் வந்து சேர்ந்தான். அதன்பின்னர் திருவரங்க நாதனைத் தரிசித்து விட்டு மதுரைக்கு வந்தான்.

## சித்திராங்கதை திருமணம்

நான்மாடக் கூடலில் அர்ச்சுனன் வேதியருடன் சென்று பாண்டிய மன்னனைத் தரிசித்தான். அரசன் அவர்களை வரவேற்று ஆசனமளித்து உபசரித்தான். நந்தவனத்துச் சாலையில் இவர்கள் தங்கியிருக்க வசதி செய்து தந்தான். ஒரு நாள் பாண்டியன் மகள் சித்திராங்கதை அந்த நந்த வனத்திற்குத் தாதியருடன் விளையாட வந்தாள். பேரழகுடன் கூடிய அக்கன்னியைக் காண்டீபன் கண்டான். மனத்தடங்கா மையல் கொண்டான்.

அரசிளங் கன்னி மலர் கொய்து கொண்டு குன்றின் மீது ஏறி நின்றாள். வேதிய உருவத்தை மாற்றி, வேந்தன் உருவில் அங்குச் சென்றான் வில் விஜயன். தம்பியும் நங்கையும் சந்தித்தனர். சேடியர் வேறொரு பக்கம் சென்றனர்.

தனித்து நின்ற நங்கையை அணுகினான் பார்த்தன். காதலர்கள் தம்மைத் தாம் உணராமல் முன்னாள் பழகினவர் போலத் தழுவிக் கொண்டனர். ஆங்கோர் வீடு அதனுள் சென்று இன்பந் துய்த்தனர். பிரிந்து சென்றனர். சேடியர் ரகசியத்தைப் பெற்ற தாய்க்கு அறிவித்தனர். மன்னன் பாண்டியனுக்கும் செய்தி எட்டிற்று. அரசன் இது தவப் பயனால் நேர்ந்தது என்று மகிழ்ந்தான்.

மறுநாள் அரசன் அர்ச்சுனனை அரியாசனத்திருத்தி, ''அஞ்சவேண்டா; நான் பயந்த நங்கை சித்திராங்கதை நினக்கே உரியாள். நீங்கள் இருவரும் மணந்து மகிழலாம். இவள் வயிற்றிற் பிறக்கும் குழந்தையை எங்களிடமே விட்டுச் செல்க. எங்கள் சந்ததி வளரட்டும்'' என்றான். பற்குணன் மனம் பூரித்து வதுவை நாளை எதிர் நோக்கி யிருந்தான். மண ஓலை எழுதி யனுப்பப்பட்டது. நல்ல நாளில் வாத்தியங்கள் முழங்க மறையொலி சிறக்க, வேதியர் ஆசிகூற, பாவையர் பல்லாண்டிசைக்க சித்திராங்கதைக்கும் வில் விஜயனுக்கும் மணவிழா இனிது நடைபெற்றது.

அன்றுமுதல் பலநாள் அண்ணலும் அழகியும் கலந்து உவகை கூர்ந்தார். நெடும் போகம் பயின்ற பின்னர் பார்த்தனைப் போலவே பப்புருவாகனன் பிறந்தான். மன்னன் பேரன் பிறந்ததை முன்னிட்டுத் தான தருமங்கள் செய்தான், ''நின்னால் என் மரபு விளங்கிற்று!'' என்று மருகனைப் பாராட்டினான். அனைவரிடமும் விடைபெற்று அருச்சுனன் தீர்த்த யாத்திரையைத் தொடர்ந்தான்.

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளைத்தரிசித்துக் கொண்டு ஸ்ரீஇராம சேதுவை அடைந்தான். அங்கு நீராடி வடமேற்கு நோக்கிச் சென்றான். பொதிய மலை, பரசுராமக்ஷேத்திரம், மேலைக் கடல் ஓரமுள்ள தீர்த்தங்கள், கோகர்ணம் இவை களைத் தரிசித்துக் கொண்டே துவாரகை போய்ச் சேர்ந் தான்.

## கபட சந்நியாசி

விஜயன் வேதியரை விட்டுப் பிரிந்தான். காஷாயத் தரித்து, முக்கோல் ஏந்தி, கபட சந்நியாசி வேடங் கொண் டான். துவாரகைக்கு அணித்தாயுள்ள ரைவதம் என்னும் மலைச் சாரலில் ஓர் ஆலமரச் சோலையில் தங்கியிருந்தான். மேகங்கள் இடித்து மழைபெய்தது. ''நான் கருதி வந்த காரியமோ வசுதேவர் மகள் சுபத்திரையைக் குறித்தது. குடும்பத் தலைவன் பலராமன் என் கருத்துக்கு இசைய மாட்டான். சுபத்திரையோ எனக்கு ஒத்த காதலுடையவள். இதனை முடிக்கும் ஆற்றல் கண்ணபிரானுக்குத்தான் உண்டு. ஆகையால் இதுவிஷயமாக அவரைத் தான் கலந்து பேசவேண்டும்'' என்று எண்ணினான் காண்டீபன்.

அடியார்க்கு உதவும் ஆபத்பாந்தவன் அவன் முன் தோன்றினார். தான் வந்த காரியத்தைத் தெரிவித்தான் தனஞ்சயன். கவனிப்பதாகச் சொல்லிக் கண்ணன் சென் றார். மறுநாட்காலை துவாரகை வாசிகள் அனைவரும் இந்திர விழாவை முன்னிட்டு அங்கு வந்து குழுமினர். பலராமரும் வந்து சேர்ந்தார். சுபத்திரை வாராதிருப் பாளோ? வந்திருந்தாள்.

கபட சந்நியாசியைக் கண்ணுற்றனர். ''இவர் யாரோ பெரிய மகான்!'' என்று போற்றி அவரை வலம் வந்து, நமஸ்கரித்து, வாழ்த்துப் பெற்றனர். காண்டீபன் சுபத் திரையைக் கண்டு, மையல் மிகக் கொண்டு, மனம் பதைத் தான். கபட நாடகரான கண்ணபிரான் சுபத்திரையை அழைத்து, ''பெண்ணே இத்தவ முனிவர்க்கு நான்கு மாதங் கள் தகுந்தபடி பணிகள் செய்து வந்தால் நீ நினைத்துள்ள நின் கணவனை விரைவில் அடைவாய்!'' என்று அவளுக்குப் பணித்தார்.

## சுபத்திரை திருமணம்

சுபத்திரை முனிவருடன் துவாரகைசென்று, அவருக்குப் பணிவிடை செய்து வந்தாள். பல நாட்கள் கடந்தன. ஒரு

நான் சேடியருடன் சுபத்திரை முனிவருடன் பேசிக் கொண் டிருந்தாள்.

சுபத்திரை : சுவாமி, தங்களுடைய நகரம் யாதோ?

முனிவர் : பெண்ணமுதே! எங்கள் நகரம் இந்திரப் பிரஸ்தம்.

சுபத்திரை : அப்படியா?பாண்டவர்கள்சௌக்கியமோ?

முனிவர் : சௌக்கியந்தான். எல்லாரையும் பற்றி வினவிய நீ விஜயன் பெயரைக் கேட்கக் காணோமே! காரணமென்ன?

தோழிகள் : சுவாமி! எங்கள் நாயகி அந்தப் பற்குணரையே பிராண நாயகராக வரித் துள்ளாள். ஆகையால் அவரை மறைத் தனள் போலும்.

குறிப்பு: சுபத்திரை, விஜயன் தவிர மற்ற நால் வரைக் கேட்டனள் என்று கொள்க.

முனிவர் : அவர் இங்குதான் உள்ளார்.

தோழி : அவர் தீர்த்த யாத்திரைக் கன்றோ சென்றுள்ளார்?

முனிவர் : தீர்த்த யாத்திரை முடிந்து உங்கள் எதிரில் அன்றோ அவர் இருக்கின்றார்.

இதைக் கேட்டதும் சுபத்திரை நாணித் தலை குனிந் தாள். உடல் புளகாங்கிதம் கொண்டது. அவள் உளக் குறிப்பை அறிந்தான் போன்று கரம் பற்றினான். குறிப் பறிந்து சேடியர் அங்கிருந்து அகன்றனர். தேவகியிடம் இச்செய்தியைக் கூறினர். இதை எவரும் அறியாவண்ணம் முன்கூட்டியே விழாக் கொண்டாட வெளியே செல்லுமாறு செய்திருந்தார் கண்ணபிரான்.

அன்றிரவே காதலர் இருவரும் திருமணம் கொண்டனர். இந்திரன், கண்ணபிரான் ஆகியோர் மனைவியரோடு காட்சி

பணித்தனர். வேதியர் வேத விதிப்படி திருமணத்தை நடத்தி வைத்தனர். பொழுது புலர்வதன் முன் சுபத்திரை ரதஞ் செலுத்த, அருச்சுனன் சுய உருவுடன் ரதத்திலேறி இந்திரப் பிரஸ்தம் நோக்கிச் சென்றான். எதிர்த்த காவலரைவென்று கொண்டே சென்றான்.

செய்தியறிந்த பலராமர் வெகுண்டெழுந்தார். "இனிக் கொதித்தும் குதித்தும் பயனில்லை!" என்று பரந்தாமன் பலராமரை அடங்கியிருக்கச் செய்தார். பின்னர் இருவரும் இந்திர பிரஸ்தம் சென்று உபசாரம் சொல்லி அனைவரும் களிக்க, சீர் வரிசைகள் கொடுத்து ஊர் திரும்பினார்கள்.

பாண்டவர்கள் சில ஆண்டுகள் நன்கு அரசியலை நடத்தி வந்தார்கள். விஜயனுக்குச் சுபத்திரையின் வயிற்றில் அபிமன்யு பிறந்தான். திரௌபதியின் வயிற்றில் பாண்டவர்கள் ஐவருக்கும் ஐந்து குமாரர்கள் பிறந்தனர். உப பாண்டவர்கள் என அழைக்கப்பட்டனர். இங்ஙனம் பாண்டவர்கள் தனம், தானியம், குலம், குணம், அதிகாரம், மனைவி, மக்கள், இடம், பொருள், ஏவல், கல்வி, கேள்வி, அறிவு, ஆற்றல் என்று சொல்லக் கூடிய உலக போகங்கள் அனைத்தையும் பெற்றுச் சிறந்து விளங்கினர்.

# 8. காண்டவ தகனச் சருக்கம்

கிருஷ்ணார்ச்சுனர்களின் துணை கொண்டு தீக்கடவுள் காண்டவம் என்னும் வனத்தை எரித்தழித்த செய்தியை கூறும் பகுதி இது.

## வசந்த காலம்

வசந்த காலம் வந்தது. தென்றற் காற்று வீசியது. வண்டுகள் ரீங்காரம் செய்தன. குயில்கள் கூவின, பொய்கை களில் அல்லியும் தாமரையும் பூத்தன. ஜீவராசிகள் அனைத்தும் ஆணும் பெண்ணும் கூடிக் களித்தன. இந்திரப் பிரஸ்தத்தில் அர்ச்சுனன் தமது காமக்கிழத்திகளுடனும், கண்ணபிரான் தமது காமக் கிழத்திகளுடனும் கலந்து வந்து பூஞ்சோலைகளில் வந்து தங்கி, நீர்விளையாட்டுகளில் ஈடுபட்டனர்.

## அக்கினி பகவான் தோற்றம்

முதுவேனிற் காலம் வந்தது. கோடையில் எங்கும் நீர் வற்றியது. அதன் பின்னர் கார்காலம் வந்தது. கிருஷ்ண அர்ச்சுனர்கள் முன் ஒரு நாள் அக்கினி பகவான் வேதியர் உருக்கொண்டு வந்து சேர்ந்தான். வாவென்று அழைத்து ஆசனத்தில் இருத்தினர். ''எனக்கு மிக்க பசியாய் இருக் கின்றது. வயிறார உண்டு, களை தீர அன்னம் இடுவீர் களா நீங்கள்?'' என்று அந்தணன் கேட்டான். ''அப்படியே தருகிறோம். எத்தகைய போஜனம் வேண்டும்? சொல்லுங் கள்'' என்று கேட்டார்கள்.

அக்கினி பகவான், ''வீர வள்ளல்களே! நான் அக்கினி; என் பசி தீர இக்காண்டவ வனம் வேண்டும்; வனம் தீப்பற்றி எரியும் போது இந்திரன் மழை பொழியச் செய்வான். அதற்கு நீங்கள் காவல் செய்ய வேண்டும்!'' என்றான்.

''அவ்வாறே பெறுக'' என்றான் அருச்சுனன்.

அக்கினி தேவன் மகிழ்ந்து அர்ச்சுனனுக்கு அம்பு அறாத் தூணி, வில், ரதம், குதிரைகள் ஆகியவற்றைக் கண்ணனது அருளினால் ஈந்தான். அந்தத் தேர் அனுமக் கொடியுடன் பொலிந்திருந்தது. பாகன் செலுத்த அந்த ரதத்தின் மீதேறிக் காண்டீபத்தைக் கையிலெடுத்து, கவசம் அணிந்து,

மிக உற்சாகத்துடன் வில்லில் நாணேற்றி எண் திசாமுகம் செவிடு படும் படியாக வில் நாணினைத் தெறித்துப் போருக்கு அமைந்து நின்றான்.

### வனம் பற்றி எரிந்தது

அக்கினி பகவான் மிக மகிழ்ந்து தனது ஏழு நாவினையும் திறந்து காண்டவ வனத்தைத் தகிக்கலுற்றான். அவ்வாறு கொழுந்து விட்டு எரிவது வடவாமுகாக்கினி போலவும், யுகமுடிவில் எழுவது போலவும் தோன்றியது. அருச்சுனனை வாழ்த்தியது. வாயு பகவானும் உதவினான். இந்திரனுக்குச் சொந்தமான அந்த வனம், அவனுக்கு நந்தவனம் போன்றது. பச்சை மரங்களும் சாம்பலாயின. மிருகங்களும் போக்கிடங் காணாமல் தீக்கு இரையாயின. அதனுள் இருந்த எல்லா ஜீவராசிகளும் சாம்பலாயின.

### இந்திரன் சீற்றம்

இந்திரன் இதைக் கண்ணுற்றான். மேகங்களை ஏவிப் பெரு மழை பெய்யச் செய்தான். சப்த மேகங்களும் இடித்து முழங்கின. மழையைத் தடுக்க அருச்சுனன் பாணப் பிரயோகம் செய்து சரக் கூடம் கட்டினான். இந்திரன் வெகுண்டெழுந்தான். தட்சன் மகன் தப்பிப் பிழைத்தான். அருச்சுனனுக்குப் பகைவனாகிய கர்ணனிடம் போய்ச் சேர்ந்தான். இதுதான் நாகாஸ்திரம் எனப்படும்.

தனயனுடன் போர் செய்ய மாட்டாமல் இந்திரன் இளைத்திருந்தபோது கடவுளர் அவனை நோக்கி, "உனது நண்பன் தட்சகன் தப்பியோடிவிட்டான். குருகுலம் போய்ச் சேர்ந்தான். அவன் மகனும் உன்னால் பிழைத்தனன். மானுடர் இருவரும் நரனும் நாராயணனும் ஆவார்கள். இவர்களை நாம் வெல்லுதல் அரிது. இனி நாமும் தப்பி ஓடுதலே இனிது" என்றனர்.

விஜயனது வில் வலி கண்டு வானவரும் முனிவரும் வாழ்த்திச் சென்றனர். அக்கினி, ''என் பசி தீர்ந்தது'' என்று வாழ்த்திச் சென்றான். நகர மக்கள் கிருஷ்ணனை யும் கிரீடியையும் எதிர்கொண்டு அழைத்துச் சென்றனர்.

★

# 2. சபா பருவம்

சபை சம்பந்தமான பருவம் என்பது பொருள். அதாவது கிருஷ்ணார்ச்சுனரது அருளால் காண்டவ வனத் தீயினின்று தப்பிப் பிழைத்த மயன் பாண்டவர்க்கென்று இந்திரப் பிரஸ்தத்தில் அமைத்த சபா மண்டபத்திலும் பின்னர் துரியோதனன் அஸ்தினாபுரியில் இயற்றிய சபா மண்டபத்திலும் நிகழ்ந்தனவற்றைக் கூறும் பருவம் என்பது பொருள். இப்பருவம் இராயசூயச் சருக்கம், சூதுபோர்ச் சருக்கம் என்ற இரு சருக்கங்களைக் கொண்டது.

## 1. இராயசூயச் சருக்கம்

பித்ரு லோக வாசியான பாண்டு மன்னனின் விருப்பத்தை நாரதர் மூலம் அறிந்த தருமன், இராய சூயத்தைச் செய்து, தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றி யதைக் கூறும் சருக்கம் இது. உலகத்திலுள்ள அரசர் களை வென்று அவர்களிடமிருந்து திறையாகப் பெற்ற பொருளைக் கொண்டு செய்யப்படும் வேள்வியாகும் இது.

## மாமணி மண்டபம் இயற்றல்

காண்டவ வனம் பற்றி எரிந்த போது தப்பிய மயன் என்னும் தச்சன் கிருஷ்ணார்ச்சுனர்களிடம் வந்து, "உங்களால் உயிர் பிழைத்தேன். அதற்குக் கைம்மாறாக ஒரு மாமணி மண்டபம் இயற்றித் தர விரும்புகிறேன்" என்றான். அதன்படி அவன் கோரிய பொருள்களைச் சேகரம் செய்து கொடுத்தனர். நல்ல நாளில் மண்டபம் இயற்றிச் சுதர்மை என்னும் இந்திரன் சபை மண்டபத்திலும் மேலாகச் சமைத்தான் மயன்.

இது தவிர வீமனுக்குத் தண்டம் ஒன்றும், அர்ச்சுனனுக்குத் தேவதத்தமென்னும் சங்கம் ஒன்றும் மயன் பரிசாகச் செய்து தந்தான். ஒரு நல்ல நாளில் பாண்டவர்கள் கண்ணபிரானோடு அம்மண்டபத்தில் குடியேறினர்.

## யாக ஏற்பாடுகள்

ஒரு நாள் தருமபுத்திரர் சபைக்கு நாரத முனிவர் வந்தார். அனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்தனர். ஆசனம் அளித்து உபசரித்தனர். நாரத முனிவர், "தர்மபுத்திரா! இராயசூய யாகம் செய்யுமாறு தூண்ட வேண்டுமென உன் பிதா பாண்டு மன்னன் என்னிடம் சொல்லியிருந்தார். அதனைத் தெரிவிக்கத் தான் இங்கு வந்தேன்" என்று கூறி விடைபெற்றார்.

இராயசூய யாகம் என்றால் எல்லா மன்னர்களையும் வென்று அவர்கள் தரும் பரிசுப் பொருள்களைக் கொண்டு அந்த யாகத்தைச் செய்ய வேண்டும். ஜராசந்தனை முதலில் வெல்ல வேண்டும் என்று வீமன், அருச்சுனன், கண்ணபிரான் ஆகிய மூவரும் புறப்பட்டு மகத தேசத்துக்குச் சென்றார்கள். கிரிவிரஜம் என்பது அவனது தலைநகர்.

மூவரும் முனிவர் வேடம் தாங்கிச் சென்று காவலர்களிடம் தமது வரவைத் தெரிவித்தனர்.

## ஜராசந்தன் போர்

காவலர்கள் மன்னனிடம் சென்று முனிவர்கள் வந்திருப்பதை அறிவித்தனர். மன்னன் அவர்களை வரவேற்று ஆசனமளித்து உபசரித்தான். அவர்கள் ஆசி கூறினர். அவர்களுடைய தோற்றத்தைக் கண்டு ஐயுற்றவனாய், "நீங்கள் முனிவரல்லீர்! நீங்கள் யார்? எதற்காக வந்தீர்கள்?" என்று ஜராசந்தன் வினவினான்.

கண்ணபிரான் அவனைப் பார்த்து, "நான் யதுகுலத்து மாதவன். இவன் பீமன். இவன் பார்த்தன்; உன்னோடு அமர் குறித்து வந்துள்ளோம்" என்றார். தோள் வலியனாகிய ஜராசந்தன் பெருஞ்சிரிப்பு செய்து, "போர் புரிவோம்; ஆனால் என்னிடம் நீ புறமுதுகிட்டு ஓடியவன். உன்னோடு போர் செய்ய யான் விரும்பவில்லை. இந்த விஜயன் சிறுவன். ஆதலால் வீமன் என்னோடு போர் புரியட்டும்!" என மறுமொழி தந்தான். வீமன் ஆர்த்தெழுந்தான். உடனே ஜராசந்தன் மந்திரியையும் சுற்றத்தாரையும் அழைத்து, தன் மைந்தனுக்கு அவர் முன்னிலையில் முடி சூட்டி அரசியலை அவனிடம் ஒப்புவித்து விட்டுப் போருக்கு ஆயத்தமானான்,

இருவரும் இரண்டு மதயானைகள் போல் மோதி மிதித்துப் பற்றி இழுத்து, வாரி எறிந்து, எழுந்து தாக்கினார்கள். அனைவரும் நடுங்கினர். நீண்ட நேரம் பொருதனர். தளர்ச்சியுற்றனர். முடிவில் வீமன் ஜராசந்தனைப் பற்றி இருகூறாகக் கிழித்தெறிந்தான். பிளவுபட்ட இரண்டு கூறுகளும் ஒன்றாகச் சேர்ந்தன. மாறிப்போடுமாறு மாயவன் குறிப்பால் உணர்த்தினார். வீமன் அவ்வாறே செய்தான். அழிந்தான் ஜராசந்தன். அனைவரும் வீமனைப் புகழ்ந்தார்கள்.

ஜராசந்தன் நரமேதம் நடத்துவதற்காகச் சிறையில் அடைத்து வைத்திருந்த மன்னர்களை விடுவித்தார்கள். அரசாட்சியை ஜராசந்தன் மகனுக்கே அளித்துவிட்டு மூவரும் இந்திரப் பிரஸ்தம் வந்து சேர்ந்தனர். தர்மராஜன் பெரிதும் மகிழ்ந்தார்.

## நால்வரும் திக்விஜயம் செய்தல்

யாகம் செய்வதற்கு வேண்டிய பொருட்கள் வந்து குவிந்துவிட்டன. எனினும் ஆங்காங்குள்ள மன்னர்களை வென்று வரவேண்டிய பணி இருந்தது. பீமசேனன் கிழக்குத்திசைக்கும், வடதிசைக்கு விஜயனும், மேலைத் திசைக்கு நகுலனும், தென்திசைக்குச் சகாதேவனும் படையுடன் சென்றனர். நால்வரும் ஆங்காங்கு எதிர்ப்பட்ட மன்னர்களை வென்று ஜய ஸ்தம்பங்களை நாட்டி, குவித்த நிதியுடன் தன்னகர் திரும்பினர். யானைகளும், தேர்களும் குதிரைகளும், உயர்ந்த மணிக்குவைகளும், பசும்பொன் மலைகளும் வந்து சேர்ந்தன.

## இராஜசூய யாகம்

முனிவர்களுக்கும் மன்னர்களுக்கும் ஓலை விடுத்தனர் நாரதர் கண்ணபிரானை அழைத்து வந்தார். அவரை மங்கள வாத்தியங்களோடு வரவேற்றார்கள். துரியோதனாதியரும் மற்ற மன்னர்களும் வந்து சேர்ந்தனர். வேதியர்கள் யாகசாலையில் குழுமினர். யாக காரியங்களைச் செய்ய, தருமபுத்திரரையும் திரௌபதியையும் மங்கள கோலஞ் செய்தனர். தம்பியர் நால்வரும் வந்திருந்தவர்களை வரவேற்று உபசரித்தனர்.

தருமபுத்திரரும் திரௌபதியும் சபையோரை வணங்கி யாகஞ் செய்ய ஆரம்பித்தனர். ஓமம் வளர்த்தனர். மந்திர தந்திரங்களையும் ஏழு நாட்கள் செய்தனர். ஆகுதிகளில் இமையவர்களுக்கெல்லாம் அவியுணவு அருளினர். அக்கினி

பகவானை மும்முறை வலம் வந்து முடியுற வணங்கினர். திறைப்பொருளாக வந்தவற்றைத் தான தருமம் செய்தனர். நாரதர் முதலானோர் வாழ்த்துக் கூறினர். புலவோர் மங்களம் பாடினர். முனிவர்களுக்கெல்லாம் சோடச உபசாரம் செய்தனர்.

## முதல் தாம்பூலம்

தருமபுத்திரர் பிதாமகராகிய பீஷ்மரை வணங்கி ''அரசர்களுள் முதல் பூசை பெறுவதற்குத் தக்கவர் யார்? இதனை நன்கு கலந்து ஆலோசித்துச் சொல்ல வேண்டுகிறேன்'' என்று வணங்கி நின்றார். பீஷ்மர் இப்பொறுப்பை வேதவியாசரிடம் ஒப்புவித்தார். வேதவியாசர் தருமராஜனைப் பார்த்து, ''அரசே! மேகத்தைப் போல மேனியும், குளிர்ச்சியும், கருணையும், சம்பாவனையும், கடமையும் உடைய கண்ணபிரானே மன்னர்களுள் அக்ரபூஜைக்கு உரியவராவார்; ஆதலால் அவருக்கே நீ செய்திடலாம் என்று சொன்னார்.

## சிசுபால வதம்

சபையிலிருந்த யாவரும் வேதவியாசர் சொன்னதே ஒத்ததாகும் என்று ஒப்புக்கொண்டார்கள். ஆனால் சிசுபாலன் என்னும் சேதி மன்னன் மாத்திரம் மனம் வெந்து, உடல் கருகி, கண் சிவந்து எழுந்து சொன்னான்:

## கலித்துறை

114 பூபாலர் அவையத்து முற்பூசை
பெறுவார்பு னங்கானில்வாழ்
கோபா ரோஎன்று உருத்தங்கு
அதிர்த்துக் கொதித்தோதினான்

காபாலி முனியாத வெங்காமன்
நிகரான கவின்எய்தியேழ்
தீபால் அடங்காத புகழ்வீர
கயமன்ன சிசுபாலனே.

—வில்லிபாரதம்

சிவபெருமானால் முனிந்து எரிக்கப்படாத விரும்பப் படுகின்ற மன்மதனுக்கு நிகரான அழகினை எய்தி, ஏழு தீவுகளைத் தன்னிடத்தே கொண்ட பூமண்டலம் அன்றி, வேறான தேவர் உலகங்களிலும் பரவி நிற்கும் புகழை உடையவனான, வீரத்தில் சிறந்த யானையை ஒத்த சிசு பாலன் அரசர்கள் கூடியுள்ள அவையில் அக்ரபூசை (முதல் மரியாதை) பெறும் தகுதியுடையவர் நகரத்திற்குப் புறம்பான காட்டில் வசிக்கும், பசு மேய்க்கும் இடையரோ என்று முனிந்தும், அதிர்ச்சி உண்டாகுமாறு கூச்சலிட்டும், மனம் கொதித்தும் கூறினான்.

கண்ணன் சந்திர குலத்தில் பிறந்தவனாயினும் ஆயர் பாடியில் யசோதை மகனாய் வளர்ந்தது பற்றிக் கோபாலன் என்று இகழப்பட்டான்.

''வெகு நன்றாயிருக்கிறது. சூரிய, சந்திர, அக்கினி குலங்களில் வந்த அரசர்கள் பலர் சூழ்ந்திருக்கும் இச்சபை யில் பெரியோர்கள் பலர் விஜயம் செய்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விட்டு ஓர் இடையனை அக்ர பூஜைக்கு உரியாரென்று நன்றாகப் பகர்ந்தீர், பெருமைக்கு உரிய வர்கள் இடையர்கள் தாமோ?

பிறந்த நாள் தொடங்கி, மாறு வேடங்களும் வஞ்சனை யும், களவும், பெண்களின் மயக்குமாகிய பற்பல மாயங்கள் செய்து அரசர்க்குரிய ஆண்மை, வீரம், ஓர்ப்பு, நிறை, ஊடைப்பிடிப்பு என்னும் இவற்றில் ஒன்றினும் அமையாத ஓர் இடையனை அக்ர பூஜைக்கு உரியன் என்று இவர் எங்ஙனம் மொழிந்தார்?

அவன் பிறந்த பிறப்பில் பெருமையா? ஒருத்திக்கு மகனாகப் பிறந்து, ஒருத்தி வீட்டில் பிள்ளையாக வளர்ந்தது பெருமையா? கோபாலர்களுடன் மாடு மேய்த்தது பெருமையா? கோபிகளைக் கட்டிப் புரண்டது பெருமையா? மதுரையை விட்டுத் துவாரகையில் ஒளிந்து கொண்டது பெருமையா? இவனது தந்தையும் தாயும் சிறைப்பட்டவர்கள். இவனோ சிறையிற் பிறந்தவன். இவன் இந்திர ஜாலம் மகேந்திர ஜாலங்களில் வல்லவன்,'' இவ்வாறு பல சொல்லி ஏசினான் சிசுபாலன்.

இவ்வாறு சிசுபாலன் சொன்னதைக் கேட்டுக் கண்ணபிரான் போர் குறித்துத் தேர் மீது ஏறி வில்லில் நாண் தெறித்து நின்று கர்ஜித்தார். சிசுபாலனும் போருக்கு அமைந்து நின்றான். இரு தரப்புச் சேனை வீரரும் முட்டினார்கள். இது தேவாசுர யுத்தம் போன்றிருந்தது. நீண்ட நேரம் போரிட்டனர். முடிவில் சிசு பாலனைக் கொல்வது கருதிக் கண்ணபிரான் சக்கராயுதத்தை அவன் மேல் ஏவிவிட்டார். அது உடனே சென்று அவனது சிரத்தைக் கொய்து, எறி கடற்புகுந்து நீராடிக் கண்ணன் திருக்கையில் வந்து பொருந்தியது.

சிசுபாலனுடைய முடி அறுபட்டவுடனே அவ்வுடலினின்றும் ஜோதி ஒன்று கிளம்பிக் கண்ணனது திருவடி பணிந்து வானில் சென்றது. ''சிசுபாலனும் தந்த வக்கிரனும் முன்பு துவார பாலகர்களாய் இருந்தவர்கள். இப்போது சாப விமோசனம் பெற்று நற்கதியடைந்தார்கள்'' என்று வேத வியாசர் விளக்கம் கூறினார்.

முடிவில் கண்ணபிரானை அக்ர பூஜைக்கு உரியவராக யாவரும் மதித்துப் பூஜித்தார்கள். அரசர்கட்கும் முறையே பூசனைகள் நடந்தேறின. அருமறை முனிவர்கள் ஆசி கூறினர். யாகம் நிறைவேறி யாகப் பிரசாதம் யாவருக்கும் அளிக்கப்பட்டது. மறையவர் பரிசுகள் பெற்றனர்.

மன்னர்கள் பாண்டவரை வியந்து போற்றினர். பாண்டு மைந்தர் பாரோர் போற்ற நல்லரசாட்சி செய்து வரலாயினர்.

★

# 2. சூதுபோர்ச் சருக்கம்

பாண்டவர் தலைவனான தருமபுத்திரர் துரியோதனன் மாமனான சகுனியுடன் சூதாடியதைக் கூறும் சருக்கம். போரே போல் இச்சூதிலும் வெற்றி தோல்விகள் உளவாதல் பற்றிச் சூதாட்டப் போர் எனப்பட்டது.

## துரியன் மனம் மாறுதல்

இராஜசூய யாகம் முடிந்தவுடன் துரியோதனாதியர் தம் பரிவாரங்களுடன் அஸ்தினாபுரம் வந்து சேர்ந்தனர். பாண்டவர்கள் செய்த பெரிய யாகத்தைப் பற்றியும் அதனால் அவர்கள் பெற்ற பேரும் புகழைப் பற்றியும் துரியோதனன் பொறாமை கொண்டான். யாகம் முடிந்து மண்டபத்தைச் சுற்றிப்பார்த்தபோது, துரியோதனன் இரண்டொரு இடத்தில் தடுமாறினான். ஓரிடத்தில் பளிங்குக்கல் நீர் போலத் தோன்றியது. மற்றோர் இடத்தில் நீர் இருப்பதே அவனுக்குத் தெரியவில்லை. அவனது தடுமாற்றத்தைக் கண்டு வீமசேனனும் திரௌபதியும் எள்ளி நகையாடியதைக் குறித்தும் துரியோதனன் மனங் குறுகினான். கர்ணன், துச்சாதனன், சகுனி ஆகியோர் துரியோதனனைத் தூண்டினர். அவன் மனத்தில்

வேதனையும் ஆத்திரமும் குடிகொண்டன. பழி தீர்க்க வேண்டுமென எண்ணங்கொண்டான்.

''இப்போதே போருக்குப் புறப்படுவோம்'' என்று துரியோதனன் அட்டகாசம் செய்தான். சகுனி கபடமாகச் சிரித்து, 'பீமனும் அர்ச்சுனனும் உள்ளவரை தர்மபுத்திரனை வெல்ல இயலாது. நீ சொல்வது வீண் வார்த்தை. நான் சொல்வதைக் கேள். அவர்களை வெல்ல வேண்டுமாயின் சூது கொண்டு சாதிப்பதே கருமம்' என்றான். துரியோத னனுக்கு நெஞ்சமும் நாவும் குளிர்ந்தன. பெருமகிழ்ச்சி கொண்டு, ''உமது கைச்சூதால் அவர்களை வெல்வதற்குத் தக்கதோர் யோசனை சொல்லவேண்டும்'' என்றான்.

''அரசே! நாளையே நல்ல சிற்பிகளைக் கொண்டு ஓர் அழகிய மண்டபம் அமைத்தல் வேண்டும். மண்டபம் காண வரவேண்டுமென்று அவர்களை அழைத்து வந்து, விருந்து செய்து, விளையாட்டாகச் சூதாடும்படி தருமனை யீர்த்து என்னிடம் விட்டு விட்டால் பின்னர், அவர்களது அரசும் வாழ்வும் செல்வமும் எல்லாம் நின்னதேயாகும்படி செய்கிறேன்!'' என்று சகுனி சூழ்ந்துரைத்தான். இதனைக் கேட்டுத் துரியோதனனும் தம்பியரும் உடல் பூரித்தனர்.

விதுரர் இவைகளைக் கேட்டு மனம் நொந்தார். ''சூது மூலம் அரசைக் கவருதல் பாவச் செயல்,'' என்றார். துரியோதனன் வெகுண்டுரைத்தான். ''உமக்கு அன்ன வஸ்திரம் இங்கே; ஆசையும் பாசமும் அங்கே!'' என்று பலவாறு இழித்துரைத்தான். அவர் கோபத்துடன் தன் அரண்மனைக்குச் சென்றார்.

### புதிய மண்டபம் காணல்

சிற்ப நூலில் தேர்ச்சியடைந்த தபதிகள் பலர் வந்தனர். நூல் முறைப்படி அழகிய மண்டபம் இயற்றினர்.

சித்திரத் தூண்களும், மணிகள் பதித்த உத்திரங்களும், முத்துச்சரங்களும் வைத்துச் சிறக்கச் செய்தார்கள். சித்திரங்கள் சுவர்களை அலங்கரித்தன. நாயகக் கோயிலாக அதனை அழகுறச் சமைத்து நகரத்தார் அறியச் சாற்றினான். நகர மக்கள் பெருந்திரளாக வந்து கண்டு வியந்தனர்.

## பாண்டவருக்குத் தூது அனுப்புதல்

துரியோதனன் தந்தையிடம் சென்று, ''பிதாவே! தக்க சிற்பிகளைக் கொண்டு பொன்னும் மணியும் இழைத்துப் புதியதோர் அரச மண்டபம் இயற்றி இருக்கின்றோம். அதிற் கிரகப் பிரவேசம் செய்ய வேண்டும். இந்திரப் பிரஸ்தத்திற்குச் சொல்லியனுப்பித் தருமனாதியரையும் வரும்படி செய்தல் வேண்டும்'' என்று சொன்னான்.

மகன் சொன்ன வார்த்தையைக் கேட்டதும் திருதராஷ்டிரன், ''குழந்தாய்! தக்க யோசனை செய்தீர்கள். நான் விதுரனை அனுப்பி அவர்களை அழைத்து வரச் செய்கிறேன்'' என்று சொல்லி அனுப்பினான். விதுரரை அழைத்து, ''தம்பி! விதுரா! நீ இந்திரப் பிரஸ்தம் சென்று புதியதாக இயற்றியுள்ள மண்டபத்தைக் கண்ணுற்று, விருந்துண்டு போகும்படி ஐவர்க்கும் நான் சொன்னதாகச் சொல்லி அழைத்து வரவேண்டும்'' என்றான். ஓலையும் எழுதிக் கொடுத்தனுப்பினான். விதுரர் மறுவார்த்தை சொல்ல இயலாமல் மலைகளும் காடுகளும் கடந்து இந்திர பிரஸ்தம் போய்ச் சேர்ந்தார்.

## விதுரரும் பாண்டவரும்

அந்நகரின் அழகைக் கண்டு பிரமித்தார். பாண்டவர்களின் பெருமைகண்டு மனம் பூரித்தார். அரசியலை வியந்தார். கொமைுரசுட ஒலியும் அன்னமிடும் பேரொலியும்

மண முழக்கமும் இசை ஒலிகளும் நிறைந்திருத்தலைக் கண்டு ஆனந்தித்து அரண்மனை புகுந்தார்.

தருமர் தம் இளைஞரோடு சென்று எதிர் கொண்டழைத்துப் பொன்னாசனத்தில் இருத்தி, பேரன்போடு சோடச உபசாரங்களைச் செய்தார். போற்றி மகிழ்ந்தார்.

விருந்துண்டு, தானும் மைந்தரும் தனித்திருந்தபோது, விதுரர் கூறலானார்: ''பெரிய மன்னன் ஓலை கொடுத்து உங்களை அழைத்து வரச் சொன்னார். இச்செயல் சூது நிரம்பியது. துரியோதனன் தன் மாமன் சகுனியைக் கொண்டு மாயச் சூதாடி உங்கள் அரசைக் கவர நினைத்துள்ளான். இதற்கும் எனக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. நான் எவ்வளவோ புத்திமதி கூறியும் அவன் செவி சாய்க்கவில்லை. இந்த ஓலையைப் பாருங்கள்,'' என்று அவர்களிடம் ஓலையைக் கொடுத்தார்.

ஓலையைப் படித்துப் பார்த்த தருமர், ''சூதாட்டத்தினால் ஆண்மை, வலிமை, சேனை, குருகௌரவம், செல்வம், பெருமை, ஆசாரம், புகழ், கல்வி, ஒளி இவையெல்லாம் ஒருசேர அழிந்து போகும். நான் என்ன செய்வேன்? எல்லாம் விதிப்படி நடக்கும்!'' என்றார்.

பீமன் கொதித்தெழுந்தான். துரியோதனாதியர் செய்த கொடுமைகளையெல்லாம் விவரித்தான். ''இனி நமக்கு அவருடன் உறவும் நட்பும் வேண்டா!'' என்றான். விஜயன், ''நாம் அவருடன் மருவி வாழ்தல் கூடாது. அக்கொடியவன் அருகே செல்வது ஏன்? நாம் போகக் கூடாது!'' என்றான். நகுல சகாதேவர்கள், ''அங்கு செல்லுதல் தகாத காரியமாகும்!'' என்றார்கள்.

தருமபுத்திரர் சொல்ல ஆரம்பித்தார். ''துணைவர்களே! இன்று நீங்கள் சொன்னது நல்வார்த்தையாயினும் நமது மூத்த தகப்பன் இட்ட கட்டளையை எப்படி மறுத்துரைக்க முடியும்? வருவது எதுவாயினும் வருக! விதி வலிது.

நாளையே நாம் அஸ்தினாபுரிக்குப் புறப்படுவோம். பறை சாற்றச் செய்யுங்கள்'' என்றார்.

## அஸ்தினாபுரிக்குப் புறப்படுதல்

மறுநாள் பாண்டவர்கள் சேனைகளோடு அஸ்தினாபுரம் நோக்கிப் புறப்பட்டார்கள். திரௌபதி சிவிகையில் ஏறித் தருமன் அருகே சாயை போலச் சென்று கொண்டிருந்தாள். தீச்சகுனங்கள் தோன்றின. ஆங்காங்கு வழியிலுள்ள சோலைகளில் தங்கிச் சென்றனர். பேரிகைகள் பேரொலி செய்யத் தெருக்கள் வழியே கடந்து ராஜவீதி வழியாகப் போய்த் தமது பெரிய தந்தை வாழ் அரண்மனையை எய்தினார்கள்.

## அளவளாவுதல்

பாண்டவர்கள் பெரிய தந்தையை வணங்கினார்கள். அவர் பாண்டவர்களுக்கும் திரௌபதிக்கும் ஆசி கூறினார். தர்ம புத்திரரை நோக்கி, ''நீ நேர்மையாக ஆட்சி செய்வதைப் பற்றியும் இராஜசூய யாகத்தைச் சிறப்புடன் நடத்தி முடித்ததைப் பற்றியும் கேள்விப்பட்டேன். மகிழ்ச்சியடைந்தேன். நீங்கள் நல்வாழ்வு பெறக்கடவீர்கள்'' என்று வாழ்த்தினான்.

பின்னர் அவர்கள் பீஷ்மரிடம் சென்றார்கள். துரோணரை வணங்கினார்கள். திரௌபதியைக் காந்தாரியிடம் இருக்குமாறு செய்து விதுரர் மாளிகையில் வந்து தங்கினார்கள். திரௌபதியும் அன்று மாலை அங்கு வந்து சேர்ந்தாள். எல்லோரும் அன்று இரவு அங்குத் தங்கியிருந்தார்கள்.

## சூதுபோர்

துரியோதனாதியர் புதிய மண்டபத்தில் வந்து சேர்ந்தனர். சபை கூடியது. அழைப்பின் பேரில் பாண்டவர்களும் வந்து சேர்ந்தனர். திரௌபதிகாந்தாரியின் அந்தப் புரதிற்குச் சென்றாள்.

சகுனி தர்மபுத்திரரை நோக்கிக் கூறலுற்றான். ''தர்மராஜனே இந்த அழகிய மண்டபத்தை இயற்றியதன் நோக்கம் என்னவெனில் மன்னவர்கள் நெடுங்காலங்களில் இங்கு அமர்ந்து இன்பமாகப் பொழுது போக்க வேண்டுமென்பதேயாகும். அமுதமன்ன பெருவிருந்துக்கு ஏற்பாடாகியிருக்கின்றது. அது தயாராகி வர இன்னும் சிறிது நேரமாகும். அதுவரையில் நாம் சூது விளையாடிச் சிறிது நேரம் உல்லாசமாய் இருப்போம். இது மன்னர்க்குத் தக்கதோர் விளையாட்டும்தானே'' என்றான்.

தருமபுத்திரர் சகுனியைப் பார்த்து, ''சூதுபோர் கூடாதென்று நீதி நூல்கள் எல்லாம்போதிக்கின்றனவே; மன்னவர் சூதாடப் புகுந்தால் அரசாட்சியில் கவனம் செல்லாது. முன்னொரு காலத்தில் நளன் என்னும் மன்னன் சூதாட்டத்தில் மனத்தைச் செலுத்தி அரசிழந்த செய்தி கேட்டிலீரோ? அன்றியும் இது தீயது என்று நூல்கள் பேசி இருக்கின்றன. மாமனோடு சூதாடிப் பொருள் தோற்க வேண்டுமா? உமக்கு வேண்டுவதென்ன? அதைச் சொன்னால் இப்போதே அளிக்கின்றேன்'' என்று சொன்னார்.

சகுனி தருமனைப் பார்த்து, ''இது தப்பில்லாத விளையாட்டுத்தான். உருட்டுவதில் சாமர்த்தியமே யல்லாமல் வஞ்சனை யொன்றும் இதில் இல்லை. வேண்டுமாயின் ஆடலாம். இல்லையெனில் வேண்டா, பந்தயம் வைக்க வேண்டிய பொருள்களுக்கு லோபம் செய்து கூடாது என்கிறீரோ என்று எண்ணுகிறேன். இந்த ஆட்டத்தில் வெற்றியும் தோல்வியும் நம்மில் ஒப்பாக இருக்கட்டும்'' என்று சொன்னான்.

துரியோதனன், ''உன்னை வென்றால் ஒட்டம் யாவும் நீ கொடுத்திடல் வேண்டும், மாமனை நீ வென்றிடில் பந்தயம் யாவும் நான்கொடுக்கிறேன்'' என்று சொன்னார்.

தருமன் எழுந்து போய், சூதாடுவதற்கென்று போடப் பட்டுள்ள ஆசனத்தில் உட்கார்ந்தார். இருவருக்கும் எதிரில் பலகையையும் சூதாடு கருவிகளையும் கொண்டு வந்து வைத்தார்கள். தர்ம புத்திரர் பணையமாகத் தனது கழுத்தில் அணிந்திருந்த முத்தாரத்தை வைத்தாடத்தொடங் கினார்.

உடனே துரியோதனன் தன் மாமனுக்காகத் தானும் பணயம் வைத்தான். இருவரும் கவற்றை ஆடலானார் கள். சகுனிக்கே வெற்றி கிடைத்தது. தருமன் மேலும் விருப்பங்கொண்டு சூதினை விடாமல் ஆடினான். இதுவே சூதாட்டத்தின் மயக்கம் என்பது. வெற்றி கிடைத்தால் பொருளாசையால் மேலும் ஆடச்செய்யும். தோல்வியடைந் தாலும் கோபத்தாலும் மானத்தாலும் ஆடச் செய்யும். ஆதலால் தருமர் மானம் பொங்க ஆட ஆரம்பித்தார்.

மயன் கொடுத்த தேரையும் பணயம் வைத்தார். தோல்வியே கிடைத்தது. மேலும் யானை, குதிரை, ஊர் முதலியவற்றைத் தோற்ற பின்பும் ஆட்டத்தை நிறுத்த மனம் இன்றித் தருமர் ஆடலானார். படைகளையும் தம்பியர்க்கு உரியவற்றையும் போக மாதர்களையும் பணய மாக வைத்துத் தோற்றார்.

இதோடு தருமர் நிறுத்தினார் இல்லை. தனக்குத் தாயபாகமாகக் கிடைத்த அந்தத் தேசத்தைத் தோற் றிழந்தும், தான் அரசாளுகிற அரசுரிமையைத் தோற்று இழந்தும், உரிமையுள்ள தமது இந்திரப் பிரஸ்த நகரத்தைத் தோற்றிழந்தும் அந்தச் சூதாட்டத்தில் தனது மனம் ஆசை விடாமல் தொடர, யாவற்றையும் இழந்து, தம்பிமாரோடு தன்னையும் இழந்து நின்றார்.

பகவானை மும்முறை வலம் வந்து முடியுற வணங்கினர். திறைப்பொருளாக வந்தவற்றைத் தான தருமம் செய்தனர். நாரதர் முதலானோர் வாழ்த்துக் கூறினர். புலவோர் மங்களம் பாடினர். முனிவர்களுக்கெல்லாம் சோடச உபசாரம் செய்தனர்.

## முதல் தாம்பூலம்

தருமபுத்திரர் பிதாமகராகிய பீஷ்மரை வணங்கி "அரசர்களுள் முதல் பூசை பெறுவதற்குத் தக்கவர் யார்? இதனை நன்கு கலந்து ஆலோசித்துச் சொல்ல வேண்டுகிறேன்" என்று வணங்கி நின்றார். பீஷ்மர் இப்பொறுப்பை வேதவியாசரிடம் ஒப்புவித்தார். வேதவியாசர் தருமராஜனைப் பார்த்து, "அரசே! மேகத்தைப் போல மேனியும், குளிர்ச்சியும், கருணையும், சம்பாவனையும், கடமையும் உடைய கண்ணபிரானே மன்னர்களுள் அக்ரபூஜைக்கு உரியவராவார்; ஆதலால் அவருக்கே நீ செய்திடலாம் என்று சொன்னார்.

## சிசுபால வதம்

சபையிலிருந்த யாவரும் வேதவியாசர் சொன்னதே ஒத்ததாகும் என்று ஒப்புக்கொண்டார்கள். ஆனால் சிசுபாலன் என்னும் சேதி மன்னன் மாத்திரம் மனம் வெந்து, உடல் கருகி, கண் சிவந்து எழுந்து சொன்னான்:

### கலித்துறை

114 பூபாலர் அவையத்து முற்பூசை
பெறுவார்பு னக்கானில்வாழ்
கோபா ரோஎன்று உருத்தங்கு
அதிர்த்துக் கொதித்தோதினான்

காபாலி முனியாத வெங்காமன்
நிகரான கவின்எய்தி யேழ்
தீபால் அடங்காத புகழ்வீர
சுயமன்ன சிசுபாலனே.

—வில்லிபாரதம்

சிவபெருமானால் முனிந்து எரிக்கப்படாத விரும்பப் படுகின்ற மன்மதனுக்கு நிகரான அழகினை எய்தி, ஏழு தீவுகளைத் தன்னிடத்தே கொண்ட பூமண்டலம் அன்றி, வேறான தேவர் உலகங்களிலும் பரவி நிற்கும் புகழை உடையவனான, வீரத்தில் சிறந்த யானையை ஒத்த சிசு பாலன் அரசர்கள் கூடியுள்ள அவையில் அக்ரபூசை (முதல் மரியாதை) பெறும் தகுதியுடையவர் நகரத்திற்குப் புறம்பான காட்டில் வசிக்கும், பசு மேய்க்கும் இடையரோ என்று முனிந்தும், அதிர்ச்சி உண்டாகுமாறு கூச்சலிட்டும், மனம் கொதித்தும் கூறினான்.

கண்ணன் சந்திர குலத்தில் பிறந்தவனாயினும் ஆயர் பாடியில் யசோதை மகனாய் வளர்ந்தது பற்றிக் கோபாலன் என்று இகழப்பட்டான்.

''வெகு நன்றாயிருக்கிறது. சூரிய, சந்திர, அக்கினி குலங்களில் வந்த அரசர்கள் பலர் சூழ்ந்திருக்கும் இச்சபை யில் பெரியோர்கள் பலர் விஜயம் செய்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விட்டு ஓர் இடையனை அக்ர பூஜைக்கு உரியாரென்று நன்றாகப் பகர்ந்தீர், பெருமைக்கு உரிய வர்கள் இடையர்கள் தாமோ?

பிறந்த நாள் தொடங்கி, மாறு வேடங்களும் வஞ்சனை யும், களவும், பெண்களின் மயக்குமாகிய பற்பல மாயங்கள் செய்து அரசர்க்குரிய ஆண்மை, வீரம், ஒர்ப்பு, நிறை, ஊடைப்பிடிப்பு என்னும் இவற்றில் ஒன்றினும் அமையாத ஓர் இடையனை அக்ர பூஜைக்கு உரியன் என்று இவர் எங்ஙனம் மொழிந்தார்?

அவன் பிறந்த பிறப்பில் பெருமையா? ஒருத்திக்கு மகனாகப் பிறந்து, ஒருத்தி வீட்டில் பிள்ளையாக வளர்ந்தது பெருமையா? கோபாலர்களுடன் மாடு மேய்த்தது பெருமையா? கோபிகளைக் கட்டிப் புரண்டது பெருமையா? மதுரையை விட்டுத் துவாரகையில் ஒளிந்து கொண்டது பெருமையா? இவனது தந்தையும் தாயும் சிறைப்பட்டவர் கள். இவனோ சிறையிற் பிறந்தவன். இவன் இந்திர ஜாலம் மகேந்திர ஜாலங்களில் வல்லவன்,'' இவ்வாறு பல சொல்லி ஏசினான் சிசுபாலன்.

இவ்வாறு சிசுபாலன் சொன்னதைக் கேட்டுக் கண்ண பிரான் போர் குறித்துத் தேர் மீது ஏறி வில்லில் நாண் தெறித்து நின்று கர்ஜித்தார். சிசுபாலனும் போருக்கு அமைந்து நின்றான். இரு தரப்புச் சேனை வீரரும் முட்டினார்கள். இது தேவாசுர யுத்தம் போன்றிருந்தது. நீண்ட நேரம் போரிட்டனர். முடிவில் சிசு பாலனைக் கொல்வது கருதிக் கண்ணபிரான் சக்கரா யுதத்தை அவன் மேல் ஏவிவிட்டார். அது உடனே சென்று அவனது சிரத்தைக் கொய்து, எறி கடற்புகுந்து நீராடிக் கண்ணன் திருக்கையில் வந்து பொருந்தியது.

சிசுபாலனுடைய முடி அறுபட்டவுடனே அவ்வுடலினின் றும் ஜோதி ஒன்று கிளம்பிக் கண்ணனது திருவடி பணிந்து வானில் சென்றது. ''சிசுபாலனும் தந்த வக்கிரனும் முன்பு துவார பாலகர்களாய் இருந்தவர்கள். இப்போது சாப விமோசனம் பெற்று நற்கதியடைந்தார்கள்'' என்று வேத வியாசர் விளக்கம் கூறினார்.

முடிவில் கண்ணபிரானை அக்ர பூஜைக்கு உரியவராக யாவரும் மதித்துப் பூஜித்தார்கள். அரசர்கட்கும் முறையே பூசனைகள் நடந்தேறின. அருமறை முனிவர்கள் ஆசி கூறினர். யாகம் நிறைவேறி யாகப் பிரசாதம் யாவருக்கும் அளிக்கப்பட்டது. மறையவர் பரிசுகள் பெற்றனர்.

மன்னர்கள் பாண்டவரை வியந்து போற்றினர். பாண்டு மைந்தர் பாரோர் போற்ற நல்லரசாட்சி செய்து வரலாயினர்.

★

# 2. சூதுபோர்ச் சருக்கம்

பாண்டவர் தலைவனான தருமபுத்திரர் துரியோதனன் மாமனான சகுனியுடன் சூதாடியதைக் கூறும் சருக்கம். போரே போல் இச்சூதிலும் வெற்றி தோல்விகள் உளவாதல் பற்றிச் சூதாட்டப் போர் எனப்பட்டது.

### துரியன் மனம் மாறுதல்

இராஜசூய யாகம் முடிந்தவுடன் துரியோதனாதியர் தம் பரிவாரங்களுடன் அஸ்தினாபுரம் வந்து சேர்ந்தனர். பாண்டவர்கள் செய்த பெரிய யாகத்தைப் பற்றியும் அதனால் அவர்கள் பெற்ற பேரும் புகழைப் பற்றியும் துரியோதனன் பொறாமை கொண்டான். யாகம் முடிந்து மண்டபத்தைச் சுற்றிப்பார்த்தபோது, துரியோதனன் இரண்டொரு இடத்தில் தடுமாறினான். ஓரிடத்தில் பளிங்குக்கல் நீர் போலத் தோன்றியது. மற்றோர் இடத்தில் நீர் இருப்பதே அவனுக்குத் தெரியவில்லை. அவனது தடுமாற்றத்தைக் கண்டு வீமசேனனும் திரௌபதியும் எள்ளி நகையாடியதைக் குறித்தும் துரியோதனன் மனங் குறுகினான். கர்ணன், துச்சாதனன், சகுனி ஆகியோர் துரியோதனனைத் தூண்டினர். அவன் மனத்தில்

வேதனையும் ஆத்திரமும் குடிகொண்டன. பழி தீர்க்க வேண்டுமென எண்ணங்கொண்டான்.

''இப்போதே போருக்குப் புறப்படுவோம்'' என்று துரியோதனன் அட்டகாசம் செய்தான். சகுனி கபடமாகச் சிரித்து, 'பீமனும் அர்ச்சுனனும் உள்ளவரை தர்மபுத்திரனை வெல்ல இயலாது. நீ சொல்வது வீண் வார்த்தை. நான் சொல்வதைக் கேள். அவர்களை வெல்ல வேண்டுமாயின் சூது கொண்டு சாதிப்பதே கருமம்' என்றான். துரியோதனனுக்கு நெஞ்சமும் நாவும் குளிர்ந்தன. பெருமகிழ்ச்சி கொண்டு, ''உமது கைச்சூதால் அவர்களை வெல்வதற்குத் தக்கதோர் யோசனை சொல்லவேண்டும்'' என்றான்.

''அரசே! நாளையே நல்ல சிற்பிகளைக் கொண்டு ஓர் அழகிய மண்டபம் அமைத்தல் வேண்டும். மண்டபம் காண வரவேண்டுமென்று அவர்களை அழைத்து வந்து, விருந்து செய்து, விளையாட்டாகச் சூதாடும்படி தருமனை யீர்த்து என்னிடம் விட்டு விட்டால் பின்னர், அவர்களது அரசும் வாழ்வும் செல்வமும் எல்லாம் நின்னதேயாகும்படி செய்கிறேன்!'' என்று சகுனி சூழ்ந்துரைத்தான். இதனைக் கேட்டுத் துரியோதனனும் தம்பியரும் உடல் பூரித்தனர்.

விதுரர் இவைகளைக் கேட்டு மனம் நொந்தார். ''சூது மூலம் அரசைக் கவருதல் பாவச் செயல்,'' என்றார். துரியோதனன் வெகுண்டுரைத்தான். ''உமக்கு அன்ன வஸ்திரம் இங்கே; ஆசையும் பாசமும் அங்கே!'' என்று பலவாறு இழித்துரைத்தான். அவர் கோபத்துடன் தன் அரண்மனைக்குச் சென்றார்.

## புதிய மண்டபம் காணல்

சிற்ப நூலில் தேர்ச்சியடைந்த தபதிகள் பலர் வந்தனர். நூல் முறைப்படி அழகிய மண்டபம் இயற்றினர்.

சித்திரத் தூண்களும், மணிகள் பதித்த உத்திரங்களும், முத்துச்சரங்களும் வைத்துச் சிறக்கச் செய்தார்கள். சித்தி ரங்கள் சுவர்களை அலங்கரித்தன. நாயகக் கோயிலாக அதனை அழகுறச் சமைத்து நகரத்தார் அறியச் சாற்றி னான். நகர மக்கள் பெருந்திரளாக வந்து கண்டு வியந் தனர்.

## பாண்டவருக்குத் தூது அனுப்புதல்

துரியோதனன் தந்தையிடம் சென்று, ''பிதாவே! தக்க சிற்பிகளைக் கொண்டு பொன்னும் மணியும் இழைத் துப் புதியதோர் அரச மண்டபம் இயற்றி இருக்கின்றோம். அதிற் கிரகப் பிரவேசம் செய்ய வேண்டும். இந்திரப் பிரஸ் தத்திற்குச் சொல்லியனுப்பித் தருமனாதியரையும் வரும்படி செய்தல் வேண்டும்'' என்று சொன்னான்.

மகன் சொன்ன வார்த்தையைக் கேட்டதும் திருதராஷ் டிரன், ''குழந்தாய்! தக்க யோசனை செய்தீர்கள். நான் விதுரனை அனுப்பி அவர்களை அழைத்து வரச் செய் கிறேன்'' என்று சொல்லி அனுப்பினான். விதுரரை அழைத்து, ''தம்பி! விதுரா! நீ இந்திரப் பிரஸ்தம் சென்று புதியதாக இயற்றியுள்ள மண்டபத்தைக் கண்ணுற்று, விருந்துண்டு போகும்படி ஐவர்க்கும் நான் சொன்னதாகச் சொல்லி அழைத்து வரவேண்டும்'' என்றான். ஓலையும் எழுதிக் கொடுத்தனுப்பினான். விதுரர் மறுவார்த்தை சொல்ல இயலாமல் மலைகளும் காடுகளும் கடந்து இந்திர பிரஸ்தம் போய்ச் சேர்ந்தார்.

## விதுரரும் பாண்டவரும்

அந்நகரின் அழகைக் கண்டு பிரமித்தார். பாண்டவர் களின் பெருமைகண்டு மனம் பூரித்தார். அரசியலை வியந் தார். கொம்முரசுட ஒலியும் அன்னமிடும் பேரொலியும்

மண முழக்கமும் இசை ஒலிகளும் நிறைந்திருத்தலைக் கண்டு ஆனந்தித்து அரண்மனை புகுந்தார்.

தருமர் தம் இளைஞரோடு சென்று எதிர் கொண்டழைத்துப் பொன்னாசனத்தில் இருத்தி, பேரன்போடு சோடச உபசாரங்களைச் செய்தார். போற்றி மகிழ்ந்தார்.

விருந்துண்டு, தானும் மைந்தரும் தனித்திருந்தபோது, விதுரர் கூறலானார்: ''பெரிய மன்னன் ஓலை கொடுத்து உங்களை அழைத்து வரச் சொன்னார். இச்செயல் சூது நிரம்பியது. துரியோதனன் தன் மாமன் சகுனியைக் கொண்டு மாயச் சூதாடி உங்கள் அரசைக் கவர நினைத்துள்ளான், இதற்கும் எனக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. நான் எவ்வளவோ புத்திமதி கூறியும் அவன் செவி சாய்க்கவில்லை. இந்த ஓலையைப் பாருங்கள்,'' என்று அவர்களிடம் ஓலையைக் கொடுத்தார்.

ஓலையைப் படித்துப் பார்த்த தருமர், ''சூதாட்டத்தினால் ஆண்மை, வலிமை, சேனை, குருகௌரவம், செல்வம், பெருமை, ஆசாரம், புகழ், கல்வி, ஒளி இவையெல்லாம் ஒருசேர அழிந்து போகும். நான் என்ன செய்வேன்? எல்லாம் விதிப்படி நடக்கும்!'' என்றார்.

பீமன் கொதித்தெழுந்தான். துரியோதனாதியர் செய்த கொடுமைகளையெல்லாம் விவரித்தான். ''இனி நமக்கு அவருடன் உறவும் நட்பும் வேண்டா!'' என்றான். விஜயன், ''நாம் அவருடன் மருவி வாழ்தல் கூடாது. அக்கொடியவன் அருகே செல்வது ஏன்? நாம் போகக் கூடாது!'' என்றான். நகுல சகாதேவர்கள், ''அங்கு செல்லுதல் தகாத காரியமாகும்!'' என்றார்கள்.

தருமபுத்திரர் சொல்ல ஆரம்பித்தார். ''துணைவர்களே! இன்று நீங்கள் சொன்னது நல்வார்த்தையாயினும் நமது மூத்த தகப்பன் இட்ட கட்டளையை எப்படி மறுத்துரைக்க முடியும்? வருவது எதுவாயினும் வருக! விதி வலிது.

நாளையே நாம் அஸ்தினாபுரிக்குப் புறப்படுவோம். பறை சாற்றச் செய்யுங்கள்'' என்றார்.

## அஸ்தினாபுரிக்குப் புறப்படுதல்

மறுநாள் பாண்டவர்கள் சேனைகளோடு அஸ்தினாபுரம் நோக்கிப் புறப்பட்டார்கள். திரௌபதி சிவிகையில் ஏறித் தருமன் அருகே சாயை போலச் சென்று கொண்டிருந்தாள். நீச்சகுனங்கள் தோன்றின. ஆங்காங்கு வழியிலுள்ள சோலைகளில் தங்கிச் சென்றனர். பேரிகைகள் பேரொலி செய்யத் தெருக்கள் வழியே கடந்து ராஜவீதி வழியாகப் போய்த் தமது பெரிய தந்தை வாழ் அரண்மனையை எய்தினார்கள்.

## அளவளாவுதல்

பாண்டவர்கள் பெரிய தந்தையை வணங்கினார்கள். அவர் பாண்டவர்களுக்கும் திரௌபதிக்கும் ஆசி கூறினார். தர்ம புத்திரரை நோக்கி, ''நீ நேர்மையாக ஆட்சி செய்வதைப் பற்றியும் இராஜசூய யாகத்தைச் சிறப்புடன் நடத்தி முடித்ததைப் பற்றியும் கேள்விப்பட்டேன். மகிழ்ச்சியடைந்தேன். நீங்கள் நல்வாழ்வு பெறக்கடவீர்கள்'' என்று வாழ்த்தினான்.

பின்னர் அவர்கள் பீஷ்மரிடம் சென்றார்கள். துரோணரை வணங்கினார்கள். திரௌபதியைக் காந்தாரியிடம் இருக்குமாறு செய்து விதுரர் மாளிகையில் வந்து தங்கினார்கள். திரௌபதியும் அன்று மாலை அங்கு வந்து சேர்ந்தாள். எல்லோரும் அன்று இரவு அங்குத் தங்கியிருந்தார்கள்.

## சூதுபோர்

துரியோதனாதியர் புதிய மண்டபத்தில் வந்து சேர்ந்தனர். சபை கூடியது. அழைப்பின் பேரில் பாண்டவர்களும் வந்து சேர்ந்தனர். திரௌபதிகாந்தாரியின் அந்தப்புரதிற்குச் சென்றாள்.

சகுனி தர்மபுத்திரரை நோக்கிக் கூறலுற்றான். "தர்மராஜனே இந்த அழகிய மண்டபத்தை இயற்றியதன் நோக்கம் என்னவெனில் மன்னவர்கள் நெடுங்காலங்களில் இங்கு அமர்ந்து இன்பமாகப் பொழுது போக்க வேண்டு மென்பதேயாகும். அமுதமன்ன பெருவிருந்துக்கு ஏற்பாடாகியிருக்கின்றது. அது தயாராகி வர இன்னும் சிறிது நேரமாகும். அதுவரையில் நாம் சூது விளையாடிச் சிறிது நேரம் உல்லாசமாய் இருப்போம். இது மன்னர்க்குத் தக்கதோர் விளையாட்டும்தானே" என்றான்.

தருமபுத்திரர் சகுனியைப் பார்த்து, "சூதுபோர் கூடாதென்று நீதி நூல்கள் எல்லாம்போதிக்கின்றனவே; மன்னவர் சூதாடப் புகுந்தால் அரசாட்சியில் கவனம் செல்லாது. முன்னொரு காலத்தில் நளன் என்னும் மன்னன் சூதாட்டத்தில் மனத்தைச் செலுத்தி அரசிழந்த செய்தி கேட்டிலீரோ? அன்றியும் இது தீயது என்று நூல்கள் பேசி இருக்கின்றன. மாமனோடு சூதாடிப் பொருள் தோற்க வேண்டுமா? உமக்கு வேண்டுவதென்ன? அதைச் சொன்னால் இப்போதே அளிக்கின்றேன்" என்று சொன்னார்.

சகுனி தருமனைப் பார்த்து, "இது தப்பில்லாத விளையாட்டுத்தான். உருட்டுவதில் சாமர்த்தியமே யல்லாமல் வஞ்சனை யொன்றும் இதில் இல்லை. வேண்டுமாயின் ஆடலாம். இல்லையெனில் வேண்டா, பந்தயம் வைக்க வேண்டிய பொருள்களுக்கு லோபம் செய்து கூடாது என்கிறீரோ என்று எண்ணுகிறேன். இந்த ஆட்டத்தில் வெற்றியும் தோல்வியும் நம்மில் ஒப்பாக இருக்கட்டும்" என்று சொன்னான்.

துரியோதனன், ''உன்னை வென்றால் ஒட்டம் யாவும் நீ கொடுத்திடல் வேண்டும், மாமனை நீ வென்றிடில் பந்தயம் யாவும் நான்கொடுக்கிறேன்'' என்று சொன்னார்.

தருமன் எழுந்து போய், சூதாடுவதற்கென்று போடப் பட்டுள்ள ஆசனத்தில் உட்கார்ந்தார். இருவருக்கும் எதிரில் பலகையையும் சூதாடு கருவிகளையும் கொண்டு வந்து வைத்தார்கள். தர்ம புத்திரர் பணையமாகத் தனது கழுத்தில் அணிந்திருந்த முத்தாரத்தை வைத்தாடத்தொடங் கினார்.

உடனே துரியோதனன் தன் மாமனுக்காகத் தானும் பணயம் வைத்தான். இருவரும் கவற்றை ஆடலானார் கள். சகுனிக்கே வெற்றி கிடைத்தது. தருமன் மேலும் விருப்பங்கொண்டு சூதினை விடாமல் ஆடினான். இதுவே சூதாட்டத்தின் மயக்கம் என்பது. வெற்றி கிடைத்தால் பொருளாசையால் மேலும் ஆடச்செய்யும். தோல்வியடைந் தாலும் கோபத்தாலும் மானத்தாலும் ஆடச் செய்யும். ஆதலால் தருமர் மானம் பொங்க ஆட ஆரம்பித்தார்.

மயன் கொடுத்த தேரையும் பணயம் வைத்தார். தோல்வியே கிடைத்தது. மேலும் யானை, குதிரை, ஊர் முதலியவற்றைத் தோற்ற பின்பும் ஆட்டத்தை நிறுத்த மனம் இன்றித் தருமர் ஆடலானார். படைகளையும் தம்பியர்க்கு உரியவற்றையும் போக மாதர்களையும் பணய மாக வைத்துத் தோற்றார்.

இதோடு தருமர் நிறுத்தினார் இல்லை. தனக்குத் தாயபாகமாகக் கிடைத்த அந்தத் தேசத்தைத் தோற் றிழந்தும், தான் அரசாளுகிற அரசுரிமையைத் தோற்று இழந்தும், உரிமையுள்ள தமது இந்திரப் பிரஸ்த நகரத்தைத் தோற்றிழந்தும் அந்தச் சூதாட்டத்தில் தனது மனம் ஆசை விடாமல் தொடர, யாவற்றையும் இழந்து, தம்பிமாரோடு தன்னையும் இழந்து நின்றார்.

## திரௌபதியைப் பந்தயம் வைத்தல்

சகுனி தருமரை நோக்கி, ''உங்களை முறையாகவே ஜெயித்து விட்டதனால், ஐந்து பேரும் எங்களுக்கு அடிமைகளாய் விட்டீர்கள், யாக பத்தினியாகிய திரௌபதியைப் பந்தயமாக வைத்து நீ இன்னமும் ஆடுவாயாக'' என்று கூறினான்.

பாண்டவரிடத்து அன்பு கொண்டு இப்பொழுது நேரும் அக்கிரமச் செய்கையை விலக்க வேண்டுமென்று விதுரன் திருதராஷ்டிரனை நோக்கி ''அவர்களிடத்து அன்பில்லாவிடினும் நீதி முறைமையையாவது பார்க்க வேண்டாமா? நீதி முறை தவறாது நடக்க வேண்டிய உன்னாலேயே இதற்சன்ளாகவே இவ்வகைப் பெருந்தீங்குகள் உண்டாகுமானால் பல கற்பகாலம் கழிய வேண்டிய இவ்வுலகில் இனி என்னஎன்ன தீங்குதான் உண்டாக மாட்டாது'' எனத் திருதராஷ்டிரனது கொடுமையை அவனுக்கு எடுத்துக் காட்டினான்.

பாண்டவருக்கு எதிரியாகிய சகுனி, இப்போது இந்தப் பந்தயம் விழவேண்டுமென்று சொல்லி பாச்சிகையை உருட்டி ஆடியபோது அவன் கருதியபடியே உருண்டு தவறாமல் விழுந்தது. தரும புத்திரன் தனக்கு உரிமையுள்ள அரசாட்சியையும் செல்வ வாழ்க்கையையும் மேற்சொன்னவாறு இழந்து விட்டான். அந்த நிலையிலும் தரும புத்திரன் சிறிதும் மனங்கலங்காதிருந்தான். இதனால் எல்லாம் வினைப்பயன் என்றே கருதி சுக துக்கங்களை ஒரு நிகராகப் பாவிப்பவன் தரும புத்திரன் என்பதாம்.

துரியோதனன் விதுரன் சொன்னதைக் கேட்டுச் சினங்கொண்டு தன் தேரோட்டி பிரதிகாமியை அழைத்து, ''இந்த விதுரர் என்னிடம் பொறாமை கொண்டவர். பாண்டவர்களைக் கண்டு பயந்தவர். உனக்கு அவ்வாறான பயம் இல்லையே! நீ போய்த் திரௌபதியை உடனே கூட்டிவா'' என்றான்.

## திரௌபதியின் துயரம்

அரசன் கட்டளைப்படி தேரோட்டி பிரதிகாமி திரௌபதியிடம் சென்றான். ''தாயே. தருமபுத்திரர் சூதாட்ட மயக்கத்தில் விழுந்து உன்னை வைத்துத் தோற்றுவிட்டார். துரியோதனன் அரண்மனையில் வேலை செய்வதற்காக உன்னை அழைத்து வரச்சொன்னார்கள்'' என்றான்.

இராஜசூயயாகம் செய்து சக்கரவர்த்தியாக முடிசூடியவருடைய பட்டத்து அரசியான திரௌபதி எதிர்பாராத இந்த சொல்லைக் கேட்டுத்திகைத்துப்போனாள்.பிரதிகாமி! என்ன சொன்னாய்? எந்த அரசன் தன் மனைவியைச் சூதாட்டத்தில் பந்தயம் வைப்பான்? பந்தயம் வைக்க வேறு பொருள் இல்லையா? என்றாள்.

''ஆம் தாயே! வேறு பொருள் இல்லாமையால்தான் உன்னை வைத்து ஆடினார்.'' என்று கூறி, தருமன் தன்னுடைய அரசு, தம்பியர் மனைவி இவர்களைச் சூதாடி இழந்த விவரங்களைச் சொன்னான். தேரோட்டி சொன்ன செய்தி திடுக்கிடும் படியாய் இருந்தது. எனினும் திரௌபதி கோபத்துடன், ' தேரோட்டியே! திரும்பிப்போ. போய்ச் சூதாடியவர்களைக் கேள். நீர் முதலில் உம்மைத் தோற்றீரா அல்லது மனைவியைத் தோற்றீரா என்று கேள். சபையோர் முன்னிலையில் கேள். விடை பெற்றுக் கொண்டுவா. அதன் பின்னர் அழைத்துப் போகலாம்'' என்றாள்.

தேரோட்டி அவ்வாறே சென்று, சபையில் இருந்த தருமரைப் பார்த்து, திரௌபதி சொன்னபடி கேட்டான். தருமர் மௌனமாய் இருந்தார். துரியோதனன் கோபங் கொண்டு தம்பி துச்சாதனனைப் பார்த்து. ''இந்தத் தேரோட்டி பயங்கொள்ளி. நீ போய் இழுத்துவா'' என்று கட்டளையிட்டான்.

துச்சாதனன் விரைந்து சென்றான். திரௌபதியைப் பார்த்து, ''உடனே புறப்படு, வீணில் தாமதம் செய்யாதே.

நீ ஜெயிக்கமாட்டாய். சபைக்கு வா''என்று சொன்னதோடு நில்லாமல் அவளைப்பிடித்து இழுக்கப்போனான். பாஞ்சாலி துயரம் தாங்காமல் கதறினாள். அந்தப்புரத்திற்கு ஓடினாள். துச்சாதனன் அவளைப் பலாத்காரமாக இழுத்துக் கொண்டு வந்தான்.

திரௌபதி சபையோரை நோக்கி, ''பெரியோர்களே! தருமபுத்திரன் தன்னைத் தோற்றபின்பு என்னைத் தோற்றாரோ? என்னைத் தோற்றபின்பு தன்னைத் தோற்றாரோ? இதைப் பற்றித் தாங்கள் உண்மை கூறுங்கள். தர்மபுத்திரன் முறைப்படி தன்னைத் தோற்பதற்கு முன்னமே என்னைத் தோற்றிருப்பின் என்னை அடிமையாகக் கொள்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. தரும புத்திரர் தன்னைத் தோற்றபிறகு ஐவர்க்கும் பொதுவாகிய என்னைத் தோற்றிருப்பின் அடிமையாகிய தான் என்னைப் பந்தயம் வைத்து இழப்பதற்கு உரிமையில்லாதவராவார். அப்போது என்னை அடிமையாக்கச் சிறிதும் முறைமையில்லை'' எனக் கூறினாள்.

## விகர்ணன் நீதி கூறுதல்

துரியோதனனின் தம்பிமாருள் ஒருவனும் நீதிகளை நன்கு உணர்ந்தவனுமான விகர்ணன் சபையிலிருந்த அரசர்களை விளித்து, ''நீங்கள் திரௌபதியின் முறையீட்டிற்கு ஆராய்ந்து மறுமொழி சொல்லுங்கள்'' என்று பலமுறை கூறினான். அரசர்கள் வாளா இருக்க விகர்ணன் மீண்டும் ''நீங்கள் நீதி கூறினாலும் சரி. கூறாதிருந்தாலும் சரி, என் மனத்தில் தோன்றும் நியாயத்தை யான் கூறுவேன்.

''வஞ்சகர்களால் தூண்டப்பட்டு சூதாட்டத்தில் விருப்பங் கொண்டு, அறநெறியைக் கடந்த தருமன் தன்னைத் தோற்றபிறகு சகுனியின் தூண்டுதலால் பாண்டவர் ஐவர்க்கும் உரியவளான திரௌபதியைப் பந்தயம் வைத்து இழந்தான். இவை எல்லாவற்றையும் ஆராய்ந்து

பார்க்கும்பொழுது திரௌபதி வெல்லப்படாதவள் என்றே எனக்குத் தோன்றுகிறது'' என்று நீதி கூறினான்.

### கர்ணன் கூற்று

அந்தச் சமயத்தில் கர்ணன் எழுந்து, 'விகர்ணா சபையில் பெரியவர்கள் இருக்கச் சிறு பையனான நீ எழுந்து யுக்தி வாதம் செய்கிறாய். நீ அறியாமையால் அவசரப்பட்டு பிறந்த வீட்டுக்கே துரோகம் செய்கிறாய்'' என்றான். பின்னர் துச்சாதனனைப் பார்த்து,''பொருட்களை எல்லாம் இவர்கள் இழந்துவிட்டபடியால் இவர்களுடைய மேலாடைகளையும், இவளுடைய மேலாடையையும் பறித்து உடனே சகுனியிடம் தருவாயாக'' என்றான்.

துச்சாதனன் தமது ஆடையைக் கவர வருவதைக் கண்ட பாண்டவர்கள் தாமாகவே தமது மேலாடைகளைக் களைந்து கொடுத்தனர். (அக்கால வழக்கப்படி அடிமைகள் மேலாடை அணிவதில்லை என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.)

துச்சாதனன் தனது துகிலை உரியத் தொடங்கியபோது தன்னைப் பாதுகாக்க வேண்டிய கணவர் ஒருவர்க்கு ஐவராயிருந்தும், மாற்றார்க்கு அடிமைப்பட்டு துணைபுரிய வலியற்று வாளாகிடப்பதைக்கண்டு திரௌபதி, ஆடையைத் தன்னிரு கைகளால் இறுகப்பிடித்துக்கொண்டு, திருமகள் கொழுநனும், கருணைக் கடலும், அகதிகட்கு அருள்புரிபவனும், ஆபத்பந்துவுமான ஸ்ரீகிருஷ்ணனது திருவடித் தாமரைகளிடத்துத் தன் கருத்தைச் செலுத்தித் துதிக்க ஆரம்பித்தாள்.

ஆறாகி இருதடங்கண் அஞ்சனவெம்
புனல்சோர அளகஞ் சோர
வேறான துகில்தனகந்த கைசோர
மெய்சோர வேறோர் சொல்லும்

கூறாமல் கோவிந்தா கோவிந்தா
என்றரற்றிக் குளிர்ந்து நாவில்
ஊறாத அமிழ்தூற உடல்புளகித்து
உள்ளமெலாம் உருகி னாளே.

—சூதுபோர் சருக்கம் 247
வில்லிபாரதம்

துச்சாதனன் துகிலுரியத் தொடங்கியபோது திரௌபதி தனக்கு நேரும் மானபங்கத்தைச் சிந்தித்து மையைக் கரைத்துக்கொண்டு, கண்ணீர் ஆறாய் பெருகவும், துச்சாதனன் பிடித்து இழுத்து வந்த போது அவிழ்ந்த கூந்தல் அவ்வாறே விரிந்து புரளவும், அவன் வலிய அவிழ்த்த ஆடையைத் தன்னால் ஆனவரையும் தகைத்துப் பார்த்தும் முடியாமல் தளர்ந்து, அச்செயல் ஒழிந்து தலை மேல் கை குவியவும், தன்வசந்தப்பிப் பரவசமாய் தத்துவஞானம் உதிக்கப்பெற்றவளாதலின் பர்த்தாக்களாவது பிறதெய்வங்களாவது உதவுவார்கள் என்ற நம்பிக்கை இழந்து, பெரிய ஆபத்துக் காலத்தில் உதவுபவன் திருமாலே என்று துணிந்து, அப்பெருமானது திருநாமமாகிய 'கோவிந்தா' என்பதைப் பலதரங் கூவிவிளித்து, அவ்வாறு அவன் நாமத்தை உச்சரிக்கும் போது மெய்ப்பாட்டினால் உடம்பு குளிரப்பெற்று, நாவில் அமிர்தம் ஊற, பக்தியின் மேலீட்டினால் உடல்புளகமுற மனம்நெக்கு உருகுவாளாயினாள்.

(இக்காட்சியே இக்காவியத்தின் உச்சகட்டமாகும்.)

## இறைவன் அருள் பாலித்தல்

பரம் பொருளான திருமாலின் அவதாரமாகிய கண்ணபிரான் எங்கும் உளன் ஆதலால், திரௌபதி வருந்தித் தன்னை அழைத்தபோது, அதைச் செவியுட் கொண்டு துவாரகையில் இருந்தபடியே அவள் மனத்தில் வந்து எழுந்தருளி அருள் புரிந்தார். ஸ்ரீகிருஷ்ண பகவானது

திருவருளினால் திரௌபதிக்கு மானபங்கம் உண்டாகாமல் பலநிறமான ஆடைகள் மேல் மேல் வளர முடிவில் துச்சாதனன் சலித்து நின்றான்.

துரோணர் திருதராஷ்டிரன் கட்டளையை விவரித்துச் சொன்னார். ''நீங்கள் ஐந்து பேரும் திரௌபதியோடு நாட்டை விட்டுப் புறப்பட்டு, காட்டைச் சேர்ந்து, அவ்விடத்தில் பன்னிரண்டு வருஷகாலம் வசிப்பீர்களாக. பின்பு நாட்டில் ஒருவருக்கும் தெரியாமல் ஒரு வருஷகாலம் வசிப்பீர்களாக. இவ்வாறு பதின்மூன்று வருஷமும் கழிந்தபிறகு உங்களுடைய அரசையும் செல்வாக்கையும் பெற்றுக் கொள்வீர்களாக என்பதாம்.''

## தருமன் மறுபடியும் சூதாடுதல்

திரௌபதி சொல்ல, தருமபுத்திரன் பக்தியோடு திருமாலைக் குறித்து நமஸ்கரித்து திருமாலினது பன்னிரு நாமங்களையும் எடுத்துத் துதித்து, பாச்சிகையை எடுத்தான். அப்போது சகுனி, ''பந்தயம் யாது'' என்றான். தருமன், ''நான் இதுவரையிலும் செய்துள்ள எல்லாப் புண்ணியங்களும்'' என்றான். ''நான் ஜயித்தால் நாங்கள் அடிமையிலிருந்து நீங்கினவர்களாவோம்; நீ சயித்தால் துரியோதனன் எனது புண்ணியமெல்லாம் பெறக் கடவன்'' என்பதாம்.

திருமாலின் பன்னிரு நாமங்களாவன:

| | |
|---|---|
| 1. கேசவன் | 7. திரிவிக்கிரமன் |
| 2. நாராயணன் | 8. வாமனன் |
| 3. மாதவன் | 9. ஸ்ரீதரன் |
| 4. கோவிந்தன் | 10. ரிஷிகேசன் |
| 5. விஷ்ணு | 11. பத்மநாபன் |
| 6. மதுசூதனன் | 12. தாமோதரன் |

என்பன.

தருமபுத்திரன் உருட்டியாடிய பாச்சிகையானது திருமாலினது திருவருளினால் மாயஞ்செய்த சகுனியினது இஷ்டப்படி உருண்டு விழாமல், தருமனது விருப்பப்படியே விழுந்தது. தருமன் குறிப்பிட்ட யாவையும் சயித்தான். கடவுள் அருளை முன்னிட்டு ஒரு காரியம் செய்பவர் வெற்றி பெறுவர் என்பது இதனாற்பெறப்படும். பாண்டவரும் திரௌபதியும் அடிமைத்தளையிலிருந்து விடுபட்டனர்.

## சபதம்

1. "இந்தத் துரியோதனன் திரௌபதியைத் தொடை மீது வந்திரு என்றான். அவனை மன்னர்கள் முன்னே யுத்தத்தில் தொடையைப் பிளந்து உயிர் மாய்ப்பேன். துச்சாதனனையும் கொல்வேன். அவர்கள் இரத்தத்தைக் குடிப்பேன். உலகீர் இதைக் காண்பீர்கள்" என்று வீமன் சபதம் செய்தான்.

2. "இந்தப் பாதகக் கர்ணனைப் போரில் மடிப்பேன். காண்டீபத்தின் மேல் ஆணை! ஏ! பூதலமே காண்பாய்" என்று அருச்சுனன் சபதம் செய்தான்.

3. தேவி திரௌபதி சொல்வாள்—ஓம்
தேவி பராசக்தி ஆணை உரைத்தேன்
பாவி துச்சாதனன் செந்நீர்—அந்தப்
பாழ்த் துரியோதனன் ஆக்கை இரத்தம்
மேவி இரண்டும் கலத்து—குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல் முடிப் பேன்யான்—இது
செய்யுமுன்னே முடியேன் என்றுரைத்தாள்.

—பாஞ்சாலி சபதம் 307
பாரதியார்.

"துச்சாதனன் இரத்தத்தையும் துரியோதனன் இரத்தத்தையும் கலந்து என் கூந்தலில் பூசிக் குளிப்பேன். அதன்

பிறகுதான் இந்தக் கூந்தலை வாரி முடிப்பேன். அதுவரை இந்தக் 'கூந்தலை முடிக்கப் போவதில்லை'' என்று திரௌபதி சபதம் செய்தாள்.

''இதற்குச் சாட்சியாகத் தேவர்கள் ஓம் என்று அங்கீகரித்தனர். வானம் உறுமிற்று. பூமி அதிர்ந்தது. சுழல் காற்று வீசியது. ஐம்பூதங்கள் தருமனுக்கே நாடு உரியது என்று சாட்சி உரைத்தன'' என்று பாரதியார் பாஞ்சாலி சபதத்தை முடிக்கின்றார்.

## முடிவுரை

யானை முதலிய வாகனங்களின் மீது ஊர்ந்து செல்லும் தரும புத்திரன் இப்போது கால்களால் நடந்து சென்றான். இதற்கு முன் நடந்து செல்லும் பயிற்சியில்லாமையால் பாதங்கள் சென்னிற மடைந்தன. தரும புத்திரன் இவ்வுலக இன்பங்களை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. சமமாக மதிப்பவன். தம்பிமாரும் மனைவியும் பின்தொடர தருமன் அஸ்தினாபுரத்தை விட்டு காடு நோக்கிச் சென்றான்.

ஃ ஃ ஃ

# 3. ஆரணிய பருவம்

பாண்டவரது வனவாசத்தில் நிகழ்ந்த செய்திகளைக் கூறும் பாகம் ஆதல்பற்றி, இது ஆரணிய பருவம் எனப் பட்டது. இப்பருவம் எட்டுச் சருக்கங்களைக் கொண்டது.

## 1. அருச்சுனன் தவநிலைச் சருக்கம்

அருச்சுனன் சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்து பாசுபத அஸ்திரத்தைப் பெற்ற வரலாறு இதில் கூறப்படும்.

## காமியவனம்

அஸ்தினா புரத்தை விட்டுப் பாண்டவர்களும் பாஞ்சாலி யும் காமியவனம் வந்து சேர்ந்தனர். அருவிகளும், சுனை களும், வனவிலங்குகளும் பொருந்திய அடர்ந்தகாடு அது. அங்கு முன்பிருந்த முனிவர்களுடன் அவர்கள் சேர்ந்து வாழலாயினர்.

துருபதன், விராடன், கண்ணபிரான் முதலிய மன்னர் களும் நண்பர்களும் வந்து நடந்த அக்கிரமச் செயல்களைப் பற்றி விசாரித்தனர். ஆறுதல் கூறினர். அப்போது வேத வியாசர் அங்கு வந்தார். அவரை ஆசனத்திருத்தி வணங்கி நின்றனர். ''வீரர்களே! நடந்து கழிந்து போனவற்றைப் பற்றி வருந்திப் பயனில்லை. எல்லாம் விதியின் செயலே யாகும். முன்பு நளமகாராஜனும் இவ்வாறு சூதாடி நாடு நகரங்களை இழந்து துன்புற்றான்.

''இந்தத் துஷ்டர்களை வென்று என்றும் மீளாச் செல்வத்தைப் பெறுவதற்கு உங்கட்கு இன்னும் பலமும் படைகளும் வேண்டும். சிவபிரானிடம் பாசுபதாஸ்திரம் பெற்று வருதல் வேண்டும். அந்த அஸ்திரத்தைக் கையில் கொண்டுள்ளார்க்கு எந்தப் போரிலும் தோல்வி என்பதே இல்லை. ஆகவே அர்ச்சுனனைத் தவத்துக்கு அனுப்பிச் சிவபிரானைத் தரிசித்து அந்தச் சிறப்புடைய பாசுபதாஸ்தி ரத்தைப் பெற்று வருமாறு செய்யுங்கள். காலந்தாழ்த்தா தீர்கள்'' என்று வேதவியாசர் கூறிச்சென்றார்.

## அருச்சுனன் தவ நிலை

வில்விஜயன் நால்வரிடமும் நங்கையிடமும் அனுமதி பெற்றுப் புறப்பட்டான். இயக்கர்கள் வழிகாட்டினர். நெடு வனம் சேர்ந்தான். மரவுரியும் சடைமுடியும் தரித்துக் கையில் வில்லும் தோளில் அம்பறாத் தூணியும் சுமந்து,

இமயத்தின் சாரலை அடைந்தான். வணங்கிப் போற்றினான். தவசிகளை வணங்கி ஆசி பெற்றான். வனவிலங்குகள். முழக்கம் செய்தன. கைலை மலையைத் தரிசித்து நின்றான்.

''இதுவே நானிருந்து நற்றவஞ் செய்யும் இடமாகும்'' என்று துணிவு கொண்டான். சமநிலையான இடத்தில் வில்லையும் தூணியையும் கீழே வைத்து விட்டுப் பெருந்தவம் செய்ய உறுதி கொண்டான். உடம்பெல்லாம் விபூதி பூசி, ஒரு காலில் நின்று, அப்படி நின்ற காலின் தொடையின் மேல் மற்றொரு காலை யூன்றி அழுத்திக் கொண்டு, வேறொன்றையும் கருதாமல் மனத்தை அடக்கிக் கொண்டு, ஐந்தெழுத்தைத் தியானித்தான்.

இப்படிப் பல காலம் தன்னை மறந்து உறுதியுடன் தவம் செய்தான். ஏகாக்கிரகச் சித்தத்துடன் இருந்தான். வெயில், மழை, பனி இவற்றை இவன் பொருட்படுத்த வில்லை. பகீரதன் செய்த தவம் போல இருந்தது இவன் தவம், இந்திரனால் செய்யப்பட்ட பல சோதனைகளையும் வென்றான்.

''பாண்டவர்களுள் நடுப்பிறந்தோனாகிய பார்த்தன் நமது கைலையின் அருகே வந்து கடுந்தவம் இயற்றுகின்றான். நம்மைத் தாரணை செய்து பாசுபத அஸ்திரத்தை விரும்பி வந்திருக்கிறான். இச்செயல் தங்களுக்குத் தெரியாதா? பக்தனும் பரிசுத்தனுமாகிய அவனை இன்னுமா பரீட்சித்தல் வேண்டும்? சென்று உதவ வேண்டாமா?'' என்று பார்வதி தேவியார் தமது நாயகரிடம் முறையிட்டார்.

## மூகாசுர வதம்

''அவசரப்படாதே! கருணையுண்டு. காலமும் வந்துள்ளது. துரியோதனனால் ஏவப்பெற்றுச் சூழ்ச்சி கொண்டு பார்த்தனை அழிப்பதற்காக இம்மலையில் பன்றி

உருவுடன் மூகாசுரன் திரிந்து கொண்டிருக்கிறான். இவ்விரண்டும் ஒருசேரப்பூர்த்தியாகும் காலம் நெருங்கியுள்ளது. இதோ புறப்படுவோம். பார்த்தனைச் சோதிப்பதற்காக வேடன் உருவைக் கொள்ளப் போகிறோம். நீயும் வேட்டுவச்சி உருவைக் கொள்ளக் கடவாய். நாம் இருவரும் சென்று வருவோம்'' என்றார் இறைவன். அவ்வாறே இருவரும் வேட்டுவ உருக்கொண்டனர்.

தேவன் குறிப்பறிந்த நந்தி பகவான் கணங்களும் தாமும் வேட்டுவ கணங்களாக மாறி நின்றனர். யாவரும் ஒரு கணத்தில் அருச்சுனன் தவமிருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தனர். பன்றி உருவில் இருந்த மூகாசுரன் வில்விஜயனைத்தாக்க ஆரம்பித்தான். உடனே அருச்சுனன் அதன்மீது பாணப்பிரயோகம் செய்தான். அதே சமயத்தில் வேட்டுவனாரும் ஓர் அம்பைப் பாய்ச்சினார். ஒரே சமயத்தில் இருவரது பாணங்களும் பன்றியின் உடலில் உருவியோடின பன்றி மாண்டது.

## சிவார்ச்சுனர் போர்

சிவகணங்கள் பன்றியைச் சூழ்ந்து கொண்டன. பன்றி எனக்குச் சேரவேண்டுமென்று வேட்டுவர் உரிமை கொண்டாடினர். விஜயன் வேடனைப் பார்த்து, ''ஏ, வேடா! நான் தவசி, எனக்கு இது தேவையில்லை. அவ்வாறின்றி உன் வேட்டுவக் குறும்போடு நின்று வழக்குப் பேசுவாய் ஆனால் உன்தலை சிதறும் படியாகக் கணையேவி உன்னையும் கொன்றிடுவேன்'' என்று வீரம் பேசினான். இருவருக்கும் இடையே பேச்சு வளர்ந்தது.

''ஆண்மை உடையை யாகில் தவத்தினை விடுத்து' என்னோடு போர் செய்யப் புறப்படு; நீயும் நானும் வில்வலியும், வேல் வலியும், வாள் வலியும் காட்டிப்போர் செய்வோம்'' என்றார் வேட்டுவ உருவில் வந்துள்ள சிவபெருமானார்.

தனஞ்சயன் வெகுண்டு வில் வளைத்துக்கணை தொடுத்தான். அதனை வேடன் தனது கணையால் தடுத்தான். மேலும் பல கணைகளைப் பற்றுனன் மீது பொழிந்தான். அருச்சுனனும் உருத்து நின்று அவைகளை வீழ்த்தினான். கடும்போர் நடந்தது. வேடன் காண்டீபனது நாணை அறுத்தெறிந்தான். கிரீடி வெகுண்டெழுந்து வேடனது தலையில் தனது வில்லால் ஓங்கியடித்தான். உதிரம் பெருகிற்று, வேடன் மூர்ச்சித்தான். விஜயன் அடித்த அடி எல்லா ஜீவராசிகளின் மீதும் பட்டது.

வேடன் மூர்ச்சை தெளிந்து மற்போரில் ஈடுபட்டான். ஒருவரை ஒருவர் தாக்கினர். வீசி எறிந்தனர். கட்டிப் புரண்டனர். வேடன் விஜயனை விண்ணுற வீசி எறிந்தான். பார்த்தன் வீர்ச்சித்துக் கீழே விழுந்தான். அவன் முதுகிலுள்ள மச்ச ரேகையைப் பார்வதி தேவியார் கண்டு அதிசயித்தார்.

சிவபெருமான் ரிடபாரூடராய்த் தேவர்கள் புடைசூழ அவனுக்குக் காட்சியளித்தார். மங்கைபங்கரைக் கண்டதும் பார்த்தன் தரையில் விழுந்து வணங்கினான். தோத்திரம் செய்தான். ''அமரர்தலைவ! தேவ தேவனே! வில்லால் அடித்ததையும் ஏசியதையும் மன்னித்து அருளுவீராக!'' என்று வேண்டி நின்றான்.

இறைவன் அவனை மார்போடு அணைத்து என் அருமை பக்தனே! மூகாசுரனிடமிருந்து உன்னைக் காப்பாற்றவே வேடர் உருவில் வந்தேன். உன் தவத்தைக்கண்டு மகிழ்ந்தேன். நீ வேண்டி வந்தது என்ன?'' என்றார்.

''தேவாதி தேவனே! பகைவரை அழித்து, எங்கள் அரசினை மீட்டுக்கொள்ளும் பொருட்டுத் தங்களிடம் பாசுபத அஸ்திரத்தை விரும்பி இத்தவத்தை மேற்கொண்டேன். அருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தான். பகவான் மகிழ்ந்து வில்லும், அம்பறாத்தூணியும் பாசுபதாஸ்திரமும்

கொடுத்து மந்திரங்களையும் உபதேசித்தார். ஆசீர்வதித்து இறைவனும் இறைவியும் மறைந்தருளினர்.

## இந்திர லோகம் சென்றது

சிவபெருமான் தனது கணங்களுடன் மறைந்தவுடன் தேவர்கள் சூழத்தேவேந்திரன் அங்குத் தோன்றினான். மலர் மாரி பொழிந்தான். பார்த்தன் தந்தையை வணங்கினான். இந்திரன் தனையனைத்தேரில் ஏற்றிக் கொண்டு தன்னுலகிற்குச் சென்றான். சுதர்மை என்னும் தேவ சபையில் அமைந்த மண்டபத்திற்குச் சென்றனர்.

அருச்சுனன் இந்திராணியை வணங்கினான். நீ மண்ணவர் செல்வத்தையும் விண்ணவர் செல்வத்தையும் பெற்று மகிழ்வாய் என்று இந்திராணி ஆசீர்வதித்தாள். தேவகானம் முழங்கியது. பார்த்தன் இந்திர சபையில் அமர்ந்து நாடகக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தான், ''மைந்த! இந்நாடகம் மிகப் புதிதானது. உனக்கென்றே நடிக்கப் பெற்றது. உளம் களியத்தக்கது!'' என்று இந்திரன் உபசரித்தான். அருச்சுனன் அழகிய மண்டபம் ஒன்றிற்குப் பணிப் பெண்களுடன் அனுப்பப் பெற்றான்.

## ஊர்வசியும் விஜயனும்

பற்குணன் நல்லிருந்துண்டு, அம்மாளிகையில் தனித்திருந்தான். இளைப் பாறினான். அவ்வமயம் பார்த்திபனின் பேரழகில் ஈடுபட்ட ஊர்வசி அவன் மீது காதல் கொண்டாள் களப கஸ்தூரிகள் அணிந்து. அலங்கார நீலவுடை உடுத்து, ரத்னாபரணங்கள் அணிந்து, நீல மலர்சூடி, நயத்துடன் வந்து சேர்ந்தாள். வந்திருப்பவள் ஊர்வசி என்பதை விஜயன் அறிந்து அவளைச் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தான். எழுந்து நின்று ''தாயே! இங்கு வந்தது என் கருதி? நான் ஏதாவது தவறு செய்தேனா? பொறுத்தருள வேண்டும்!'' என்று பணிவுடன் மொழிந்தான்.

தான் வந்த காரியம் தடைப்பட்டதை அறிந்து ஊர்வசி கோபங் கொண்டவளாகக் கண் சிவந்து, ''பேதாய்! உன்னை நோக்கி இளநங்கை ஒருத்தி வந்தாள் என்றால், அவளது காமவேட்கை அறிந்து அவளைத் திருப்திப்படுத்த வேண்டாமா? என் விருப்பத்தைப் பூர்த்தி செய். என்னைத் தாய்முறை கொண்டு நிந்தனை செய்தால் நீ கொண்ட தவப்பயனையெல்லாம் வெந்தொழியும்படி செய்வேன். பொது மகளிர்க்கு— தேவமாதர்க்கு— தந்தையென்றும், மைந்தர் என்றும் உறவு பார்த்திடல் வழக்காறல்ல" என்று கூறி அருகணைந்தாள்.

விஜயன், ''தாயே! தந்தையாகிய இந்திரன் விரும்பும் தையலே! தேவ மாதே! நீங்கள் கூறுவது சரியல்ல. நான் துணியேன். என் தவம் சிதறினும் என் நலம் ஒழியினும் அதர்மகாரியத்தில் தலையிட மாட்டேன்!'' என்று கூறி இறைஞ்சினான்.

ஊர்வசி உடனே, ''நீ இக்கணம் முதலே ஆடவர் பெருமையும் உருவமும் அழிந்து நிற்கக் கடவாய்!'' என்று சபித்தாள். உடனே அருச்சுனனுக்குப் பேடி உருவம் வந்துற்றது.

(ஆண் பெண்ணுருவம் பெற்றால் பேடி என்றும், பெண் ஆணுருவம் பெற்றால் சிகண்டி என்றும் பெயர். பாரதத்தில் அருச்சுனன் பேடியானான். அம்பை சிகண்டியானாள்)

ஊர்வசி பதை பதைத்து அங்கிருந்து சென்றாள். விஜயன் தன் உருவங்கண்டு நொந்து வருந்தினான்.

மறுநாட் காலை சுதர்மை என்னும் பேரவை கூடியது. வேத ஒலியும் வாத்திய முழக்கமும் ஓங்கின. நடன மாதரும் இசை வல்லுநரும் வந்து சேர்ந்தனர். இந்திரன் தன் மைந்தனைக் காணாமல் திகைத்தான். ஒரு கந்தர்வனை அழைத்து வரச்செய்தான். சென்றவன் திரும்பி வந்து விஜயனது உரு மாற்றத்தை நடுக்கத்துடன் கூறினான். இந்திரன் கண்

கலங்கித் தேவருடன் அங்கு சென்றான். மைந்தனைக் கண்டு "அஞ்சாதே! இது நீங்கும் வழிசெய்கிறேன்" என்று தைரியம் சொன்னான்.

அனைவரும் ஊர்வசியின் அரண்மனைக்குச் சென்றனர். அவள் நடுங்கி நின்றாள். "ஊர்வசி நீ கொடுத்த சாபத்தை அவன் வேண்டும் போது வந்து 'ஓராண்டு அளவும் இருந்து கழியுமாறு மாற்றி அருள்புரிவாய்" என்று வேண்டினார்கள். அவளும் சாபத்தை மாற்றி அமைத்தாள். பேடி உருவம் நீங்கியது. முன்னைய உருவம் வந்தது. அருச்சுனன் ஒளி பெற்று விளங்கினான். சுதர்மைக்குச் சென்று ஆடல் பாடல்களைக் கண்டு களித்தான்.

## 2. நிவாத கவசர் காலகேயர் வதைச் சருக்கம்

நிவாத கவசர்— காலகேயர் என்ற அசுரர்களை அருச்சுனன் வதைத்ததைக் கூறும் பகுதி இது. நிவாத கவசர் என்பவர் கடல் இடையேயுள்ள தோயமாபுரம் என்னும் நகரத்தில் வசிப்பவர். காலகேயர் என்பவர் ஆகாயத்திலுள்ள இரணியபுரம் என்ற நகரத்தில் வசிப்பவர். இவர்கள் பிரம்மாதி தேவர்களைக் குறித்துக் கடுந்தவம் செய்து அளவிறந்த வரங்களைப் பெற்றவர்கள். வரபலத்திலும் புஜபலத்திலும் தமக்கு நேராவார் எவரும் இலர் என்று செருக்குற்று இந்திராதி தேவர்களுக்கு இடையறா இன்னல்களை இழைத்து வந்தனர். இந்திரனின் வேண்டுகோளுக்கு இசைந்த விஜயன் அந்த அசுரர்களை வதைத்த வரலாற்றைக்கூறும் பகுதி இது.

### அருச்சுனன் முடிசூடல்

இந்திரன் அருச்சுனனுக்குச் சமஆசனம் கொடுத்துச் சபையில் நடைபெறும் ஆடல்பாடல்களைக் கண்டும் கேட்டும் களித்திருக்கச் செய்தான். தேவர்களை நோக்கி, "தேவர்களே! தமக்குப் பகைவர்களாகிய நிவாத கவசர் காலகேயர்

களை இந்த விஜயன் அழிக்கும் திறன்வாய்ந்தவன். சிவபெருமானிடம் பாசுபத அஸ்திரம் பெற்றுள்ளான்'' என்று பலவாறு புகழ்ந்து பேசி, அவனைத் தேவ உலகத்திற்கு இளவரசு ஆக்குவதற்கு அவர்களுடைய சம்மதத்தையும் பெற்றுக்கொண்டான் இந்திரன்.

அதேபோன்று இந்திரன் அருச்சுனனுக்கு அபிஷேகம் செய்து, மலர் மாலை சூட்டிப் பிரமன் தனக்கு அளித்த கிரீடத்தையும் புனைவித்துக் 'கிரீடி' என்னும் நாமத்தையும் சூட்டினான். ஆடையாபரணங்கள், வலிய ஆயுதங்கள் ஆகியவற்றைக் கொடுத்து, பொன்னாசனத்தில் இருத்தித் தூய அமுதினை அவனுக்கு அளித்து, உடன் உண்டு தேவர் தம் இளவரசன் என்னும் பட்டமும் சூட்டினான்.

இந்திராணி அப்போது ஐயுற்று, ''ஒரு பூலோக மன்னன் இப்பொன்னுலகுக்கு வந்து உங்களோடு ஒருபொற் கலத்தில் அமுதினை உடன் இருந்து உண்ணல் தகுதியாகுமோ?'' என்று கேட்டாள். இந்திரன் நகைத்து ''பேதைப் பெண் அரசே! இவனை யாரென நினைத்துச் சொல்லினை? இவன் விஷ்ணுவுக்கு மைத்துனன். எனக்கு மைந்தன்; சிவபெருமானிடம் பாசுபதாஸ்திரம் பெற்றவன்; இத்தகையவனை மானுடன் என்று இகழலாமோ?'' என்றான்.

பின்னர் இந்திரன், ''மைந்த! உன் ஒருவனால் ஆகக் கூடிய வேலை ஒன்றை உன்னிடம் ஒப்படைக்கிறேன். நிவாத கவசர் என்பவர்கள் இத்தேவர் உலகத்தையும் என்னையும் அடிக்கடி துன்புறுத்துகிறார்கள். அவர்களுடைய உபத்திரவம் பொறுக்க முடியவில்லை. பாதாள உலகம் சென்று, அவர்களை அழித்து அவரால் உண்டாகும் தீங்குகளிலிருந்து தேவரை விடுவிக்குமாறு வேண்டுகிறேன்'' என்றான்.

## போர் குறித்துப் புறப்படல்

பார்த்தன் மனம் பூரித்து, ''இக்கணமே செல்லு கிறேன். அத்துஷ்டர் இருக்குமிடத்தைக் காட்டினால் போதும்'' என்றான். தேவர்கோன், போர்க்கு உரிய குதிரைகள் பூட்டப்பட்ட ரதத்தையும் அதனைச் செலுத்தும் சாரதியாகிய மாதலியையும் கொடுத்தருளி, ''ஜெயம் பெற்று மீள்க'' என்று ஆசி கூறி அனுப்பினான். வில் விஜயன் போர்க்கோலம் பூண்டு தேர் ஏறினான். தேர் சென்றது. சித்திரசேனன் வழி காட்டினான்.

தேவர்கள் முதலில் ஐயுற்றனர். அர்ச்சுனனது போராற் றலையும் அவன் உருவத்தையும் கண்ட பிறகு ஐயம் நீங்கி வாழ்த்துக்கூறி அனுப்பினர். வாழ்த்தொலிகள் மிக்கொலித் தன. பாதலம் சென்றனர். விஜயன் பகைவர் நடுங்கும்படி வில்லில் நாணொலி எழுப்பினான். அது எங்கும் ஒலித்தது. விஜயன் சித்திரசேனனைத் தூதாக அனுப்பினான்,

சித்திரசேனன் சென்று, ''வில்விஜயன் தேவர்கட்கு வெற்றி தரும் பொருட்டுத் தமியனாகவே உம்மோடு போர் புரிய வந்திருக்கிறான். அவனோடு எதிர்த்துப் போர் செய்யக்கூடுமாயின் உமது சேனையுடன் வாருங்கள். இல்லெனில் பாதம் பணியுங்கள், என்று எதிரிகளாகிய உங்கட்குச் சொல்லி வர அனுப்பினான். இதோ உங்கள் நகரக் கோபுர வாயிலில் நிற்கின்றான்'' என்று சொன் னான்.

## போர் புரிதல்

பகைவர்கள் 'நன்று' எனக் கூறிக் கோபாவேசம் கொண்டு வெளிவந்தார்கள். அருச்சுனனைச் சூழ்ந்து போரிட்டார்கள். அருச்சுனன் சவ்விய சாசி இடக்கையாலும் அம்பு எய்யக் கூடியவன். ஆகவே இரண்டு கைகளாலும்

மாறிமாறி அம்பு எய்தான். அசுரர்கள் மிகவும் வெகுண்டு உக்கிரமாகப் போர் செய்யத் தொடங்கினர். அர்ச்சுனன் பிரம்மாஸ்திரத்தைத் தொடுத்தான். அது பலமாக உருக் கொண்டு அசுரப் படையை அழித்தது.

அடுத்த படை வந்தது. முன்னவரினும் மும்மடங்கு வலியும் வேகமும் கோபமும் கொண்டவர் இவர். நரனைச் சூழ்ந்து கொண்டனர். விஜயன் ரதத்தைத் தீடீரென்று ஆகாயத்தில் எழுப்பச் சொன்னான். அவ்வாறே ரதம் மேலே சென்றது. அவர்களுடைய அம்புகள் எதிர்ப்புறம் நின்று கொண்டிருந்த அவர்களுடைய இனத்தவரையே தாக்கின.

பார்த்தன் ஆகாயத்தில் இருந்த படியே நாராயண அஸ்திரத்தைக் கையில் எடுத்துப் பூஜை செய்து மந்திரங் களை உச்சரித்து விட்டான். அது பல கோடியாக உருக் கொண்டு அசுரரைத் தாக்கியது. அவர்கள் சாய்ந்து மாண்ட னர்.*

பின்னர் வந்தவர்களை மாருத அஸ்திரத்தால் அழித் தான். ''ஒருகோடி அவுணரும் ஒழிந்தனர்'' என்று மகிழ்ந் திருந்த போது செத்தவர்கள் உயிர் பெற்றெழுந்து பொர ஆரம்பித்தார்கள். அருச்சுனன் திகைத்து நின்றான். தெய்வக் கணையாகிய பாசுபத அஸ்திரத்தை ஏவி, எவரும் எழுந்திருக்காதபடி செய்தான். முக்கோடியரும் முடிவெய்தி னர். நகரம் பாழ்பட்டது ரத்த ஆறும், நிணச்சேறும், பிணக் குவியலும் மண்ணில் நிறைந்தன. விண்ணில் பருந்துகள் பறந்த வண்ணம் இருந்தன.

விஜயன் கோலாகலத்துடன் தேரைப் பொன்னகருக்குச் செலுத்தச் சொன்னான். அமராபதிக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

## காலகேயர் வதம்

வந்து கொண்டிருந்த போது வழியில் மற்றோர் நகரம் தோன்றியது. மாதலி அந்நகரில் வாழும் கால கேயரைப் பற்றிச் சொல்லலானான். ''தநுஜ குலமாதரில் காலகை என்பாள் பெற்ற முப்பதினாயிரம் அசுரர்கள் பிரமனது தவ வலிமையினால் பல்லாற்றானும் சிறந்து அழியாது இந் நகரில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் உயிரோடு இருக்கும் வரை தேவர்கட்கு நல்வாழ்வு இல்லை'' என்று சொன்னான்.

இதைக் கேட்ட இந்திர குமாரன், ''தேவர் துயர் தீர்ப்பேன்'' என்று கையில் வில் எடுத்தான். அந்நகரின் மீது தேரைச் செலுத்தச் செய்தான். அசுரரிடம் சித்திர சேனனைத் தூது அனுப்பினான். அவன் சென்று அர்ச்சுன னது பிரதாபத்தையும் நிவாத கவசர் வதத்தையும் சொல்லி, ''போர் புரிவீராயின் வெளிசிற் புறப்படுங்கள்'' என்று சொன்னான்.

அவர்கள் யுத்த சன்னத்தராகி விஜயனுக்கு எதிரே நின்றார்கள். அவரது வலிமையையும் அழியாத கவசத்தை யும் தெரிந்து, நாராயண அஸ்திரத்தைப் பிரயோகம் செய்தான். அது முப்பதினாயிரம் கணைகளாக உருவெடுத் துக் கொண்டு விரைந்து சென்று, அவர்களது மெய்க்கவசங்களை அறுத்துக் கீழே தள்ளியது. அவர்களது மேனி ஒளியிலும் முப்புரி நூலிலும் வைத்த சிந்தையனாகி மூர்ச்சித்தான். சிறிது நேரத்தில் அவையாவும் பொய்த் தோற்றம் என்று அறிந்து உக்கிரமாகப் பொருதான்.

முடிவில் பரமன் அஸ்திரங் கொண்டே அவரை ஒழித்துக் காலனுக்கு விருந்தளித்தான். அசுரப் பூண்டுகளை வேரொடு களைந்து, தெய்வப் பயிர்க்குச் சுக வாழ்வாகிய நன்னீர் பாய்ச்சினான். மாதலி மனங்கொண்ட மட்டும் வாழ்த்தி னான். சித்திரசேனன் குதித்தாடினான். தேரை அமரர்

பதிக்குத் திருப்பினார்கள். சித்திரசேனன் முதலில் சென்று வில்விஜயனது வெற்றிமேம்பாட்டையும் நல்வரவையும் கூறினான். தேவர்கள் எதிர் கொண்டு வந்து வரவேற்றார்கள். பற்குணன் தந்தையின் பாதங்களில் விழுந்து வணங்கினான். இந்திரன் மகிழ்ந்து மைந்தனைக் கட்டித் தழுவினான். ஐராவதத்தின் மீது ஏற்றித் தேவநகரை வலம் வந்து, உபசரித்து, அமுதளித்துச் சிம்மாசனத்தில் அமர்த்தினான். மாதலி வெற்றியைக் குறித்து வியந்து பேசினான்.

பின்னர் அருச்சுனன் அனைவரிடமும் பிரியா விடை பெற்றுப் புறப்பட்டான். இதற்கு முன்னரே இந்திரன் ரோமச முனிவர் மூலம் பாண்டவர்களுக்குப் பார்த்தனது வரவை அறிவித்தான்.

★

# 3. புஷ்ப யாத்திரைச் சருக்கம்

புஷ்பத்தின் பொருட்டு வீமன் பிரயாணம் செய்ததைக் கூறும் பகுதி இது.

### ரோமச முனிவர் வரவு

இந்திரனால் அனுப்பப் பெற்ற ரோமச முனிவர் பாண்டவர்கள் இருக்குமிடம் வந்து சேர்ந்தார். பாண்டவரும் பாஞ்சாலியும் அவரை வணங்கி ஆசி பெற்றனர். விஜயனது வெற்றிப் பிரதாபங்களை முனிவர் கூறியதைக் கேட்டு மகிழ்ந்தார்கள். விஜயனை எதிர்கொண்டழைப்பதற்காக இதுவரை தங்கியிருந்த காமிய வனத்தை விட்டுப் புறப்பட்டு, வழியிலுள்ள தீர்த்தங்களில் நீராடிக் காந்தர்ப்பம்

என்னும் மலை அடிவாரத்தில் சாலை அமைத்து அங்கு தங்கியிருந்தார்கள்.

## திரௌபதி மலர்கண்டு மயங்கல்

ஒருநாள் திரௌபதி பொன் தாமரை மலர் ஒன்றைக் கண்டாள். அதை வீமனிடம் எடுத்து வந்தாள். அம்மலர் எங்கிருப்பினும் கொணர்ந்து தருமாறு வேண்டினாள். வீமன் ரோமச முனிவரிடம் அம்மலரைப்பற்றிய விவரங்களைக் கேட்டபோது அவர் கூறியதாவது: ''இது குபேரனது நந்தவனத்து மலராகத் தோன்றுகிறது. இதனைப் பெற்று வருதல் அரிது. அதற்குக் காவல் மிகுதி!'' என்றார்.

## வீமன் மலர் கொண்டுவரப் புறப்படுதல்

தமையனிடம் தகவல் சொல்லாமல் வில்லும் கதையும் அம்பறாத் தூணியும் கொண்டு வீமன் புறப்பட்டான். ''கவலைப்படாதே; மலர் எங்கிருப்பினும் கொண்டு வருகிறேன்'' என்று திரௌபதிக்கு ஆறுதல் கூறிச் சென்றான். வழியில் எதிர்ப்பட்டவர்களைத் தாக்கிச் சென்றான்.

## அஞ்சநேயர் சந்திப்பு

ஆஞ்சநேயர் தவங்கலைந்து விழித்துப்பார்த்தார். வீமன் அவரைப்பார்த்தான். அவர் அவனைத் தடுத்து நிறுத்தி, ''எவரும் வரமுடியாத இவ்வனத்திடை வந்து இப்பேரழிவைச் செய்த நீ யார்?'' என்று அதட்டினார். ''நீ யார்?'' என்று திருப்பிக்கேட்டான் வீமன். ''வலியுண்டானால் இந்த வாலினைக் கடந்து போ, பார்ப்போம்'' என்று வாலினைப் பெருகவிட்டு நின்றார் அனுமார்.

அவரை அனுமான் என்று அறிந்து துதித்து, வீமன் தான் வந்த காரியத்தை விளக்கிச் சொன்னான். ''அம்மலர் குபேரனது அளகாபுரியில் அவனது நீராடு பொய்கையின்

கரையில் தருக்கள் நிறைந்த சோலையில் இருக்கின்றது. அதனை உரிமையுடன் கொணர்தல் தேவர்க்கும் முடியாத காரியம். நீ சென்று வெகு சமர்த்துடன் பெற்று வருவாயாக!'' என்று ஆசிகூறி வழி காட்டினார்.

விசுவரூபத்தையும் காட்டியருளினார். வீமன் அக மகிழ்ந்து வணங்கிக் கைகுவித்து நின்றான். பின்னர் வீமன் வழி நடந்து சென்றான்.

## பங்கஜாசுரனோடு போர்

வழியில் பேருருக் கொண்ட இவ்வரக்கனை வீமன் கண்டான். இருவரும் போர் புரிந்தனர். அவனை மாய்த்து வீமன் மேற் கொண்டு சென்றான். தெய்வ நிதிகள் ஓங்கி யிருக்கும் அழகிய அளகாபுரியைக் கண்டான். உடல் பூரித்தான். அனுமன் சொன்ன மலர்ப் பொய்கையைக் கண்டான் அச்சோலையைக் காக்கும் அரக்கர் பலர் வீமனைச் சூழ்ந்து கொண்டார்கள். மனக்கிளர்ச்சியோடு போருக்கு ஆயத்தமானான்.

## சோலைக் காவலரோடு போர்

போர் மூண்டது. எதிர்த்தவர் மாய்ந்தனர். தப்பியோடியவர்கள் இயக்கர் நாயகனிடம் சென்று சொன்னார்கள். அவர் சமாதான முறையில் ''நீ வேண்டுவது யாது?'' என்று வினவினான். ''அதோ அந்த மலரைக் கொய்து போக வந்தேன் என்றான் வீமன். அந்த இயக்கர் நாயகன் மலரைப்பறித்துக் கொடுத்தான்; விடையும் கொடுத்தான். திரும்பிச் சென்று குபேரனுக்கு உணர்த்தினான்.

## கடோற்கசன் வருகை

தருமபுத்திரன் தன்னிடம் கூறாமல் வீமன் புறப்பட்டுச் சென்றது பற்றி மனம் நொந்தார். அவனுக்கு என்ன

நேருமோ என்று பயந்து கடோற்கசனை நினைத்தார். அவன் தேரோடும் படையோடும் வந்து நின்றான். ''நாம் உடனே யட்சலோகம் செல்ல வேண்டும்'' என்று பணித்தார். அவரைத் தேரில் ஏற்றிக் கொண்டு வீமன் அமர்ந்திருந்த பொய்கைக் கரைக்கு வந்தான். தந்தையை வணங்கினான்.

மலரைக் காட்டினான் வீமன். ''என்னைக் கேட்காமல் ஆபத்து மிகுந்த அழகேசன் சோலைக்கு வந்தது அழகு ஆகாது'' என்று தருமர் கடிந்துரைத்தார். பின்னர் மூவரும் தேரேறித் தம்பியரும் தையலும் இருக்குமிடம் திரும்பினர். ரோமச முனிவரிடம் வீமன் தான் சென்று வந்த வரலாற்றைக் கூறினான். பாஞ்சாலியிடம் மலரைக் கொடுத்து மகிழ்வித்தான்.

## 4. சடாசுரன் வதைச் சருக்கம்

சடாசுரன் என்னும் அரக்கன் அக்காட்டில் முனிவர்களுக்கு இன்னல் விளைவித்து வந்தான். ஒருநாள் பாண்டவர்கள் வெளியே சென்றிருந்த போது பாஞ்சாலி தனித்திருந்தாள். அவ்வரக்கன் ஒரு வேதிய உருவங்கொண்டு வந்து வேத மந்திரங்களை ஓதினான். அவனுக்குப் பிட்சை போட திரௌபதி வெளியே வந்தாள். அவன் உடனே திரௌபதியை வாரி எடுத்துத் தோள்மேல் தூக்கிக் கொண்டு ஓடினான்.

இதை மோசமென்று தெரிந்து கொண்டு, திரௌபதி ஓவென்று அலறினாள். பதிகளை அழைத்தாள். நகுல

சகாதேவர்கள் ஓடி வந்து தடுத்தனர். அரக்கன் திரௌபதியைக் கீழே இறக்கிவிட்டு, அவர்களோடு மோதினான். வேதியர் உருவம் மாறி அரக்கனானான்; பயமுறுத்தினான். கடுமையாகப் போரிட்டான். அப்போது அங்கு வீமன் வந்து சேர்ந்தான். தம்பியரை விலக்கிவிட்டு அரக்கனோடு மல் யுத்தம் செய்தான். ஆகாயத்தில் வீசி எறிந்தான். அரக்கன் மாண்டொழிந்தான்.

பின்னர் பாண்டவர்கள் ரோமச முனிவருடன் நாராயண ஆசிரமம் அடைந்தார்கள். இவ்வாறு வனத்தில் ஒன்பது ஆண்டுகள் கழிந்தன.

□

# 5. மணிமான் வதைச் சருக்கம்

மணிமான் என்ற விஞ்சயனை வீமன் வதைத்ததைக் கூறும் பகுதியாகும் இது. அவன் குபேரனது படைத் தலைவர்களுள் சிறந்த ஒருவன்,

ஒருநாள் திரௌபதி முனிபத்தினிகளுடன் சேர்ந்து நதியில் புதுநீர் ஆடச் சென்றாள். புதிய தாமரை மலர் ஒன்று அதில் மிதந்து வந்தது. அம்மலரினைக் கண்டு அதிசயித்தாள். அதை ஆசிரமத்திற்கு எடுத்து வந்தாள்.

### மறுபடியும் வீமன் அளகாபுரி செல்லுதல்

திரௌபதி வீமனைநோக்கி, ''இம்மலரைப்பாருங்கள்'' என்று காட்டினாள். ஆற்றில் மிதந்து வந்ததையும் சொன்

னாள். "இந்த மலர் எங்கிருப்பினும் கொண்டு வந்து தருகி றேன் வருந்தாதே" என்று வீமன் ஆறுதல் கூறினான்.

மலர் மிதந்து வந்த நதியின் கரையோரமாகவே புறப் பட்டுச் சென்றான். ரத்னகிரியைக் கடந்து, இரண்டாம் முறையாகக் குபேரனது அளகாபுரிக்கே போய்ச் சேர்ந்தான் வீமன். சங்கு கொண்டு பேரொலி செய்தான். வாயிற் காவலர்கள் நடுநடுங்கி வீமன் இருக்குமிடம் வந்து சேர்ந்த னர். அவர்களுள் ஒருவன் சேனாதிபதியான மணி மானிடம் சென்று சேதியைச் சொன்னான்.

## மணிமான் வதம்

குபேரனது சேனாபதித் தலைவனாகிய மணிமான் வீமனைப் பற்றி முன்னமே கேள்விப்பட்டிருந்தமையால் கடுங்கோபங் கொண்டு, "நல்ல வேளையாக அந்த மானுடன் நம்மிடம் அகப்பட்டுக் கொண்டான்!" என்னும் களிப்புடன் தனக்குரிய சேனைகளுடன் வீமன் எதிர் வந்து நின்றான்.

வீமன் பாணப்பிரயோகம் செய்தான். இயக்கர் படை அழிவதைக் கண்ட சாலேந்திரன் என்பான் வீமனைப் பார்த்து, "குபேரனது அழகாபுரிக்கு அஞ்சாது வந்து, இகொடுந் தீவினை புரியும் நீயார்?" என்றான். "என் பெயர் வீமன்; முன்பொரு முறை இங்கு வந்து பொன் தாமரை மலரை எடுத்துச் சென்றேன். இப்போது இம் மலரை நாடி வந்திருக்கிறேன்" என்றான்.

சேனாபதி வீரம் பேசினான். மறுபடியும் உக்கிரமாகப் போர் செய்ய ஆரம்பித்தான். விற்போர்க்கு ஆற்றாது மற்போர் செய்யலானான். வீமன் தன் கைத்தண்டினால் சாலேந்திரனையும் வந்தவர்களையும் துமித்தான். சென்ற

வர்கள் திரும்பி வராமையால் மணிமான் வீமன் முன் வந்து நின்றான்.

மணிமான் மாயப்போர் செய்தான். வீமசேனன் எதிரியின், திறத்தை அறிந்து கொண்டான். விற்போர், வாட்போர், வேற்போர் என்னும் பலவகை போர்களிலும் வெற்றி தோல்வி இல்லாமல் பொருதனர். மணிமான் செய்த மாயப் போரை வீமன் திருமால் அருளிய தெய்வப் படை கொண்டு விலக்கிக்கொண்டான். வீமசேனன் பிரம்மாஸ்திரத்தை ஏவினான். அது மணிமானையும் அவனது படைகளையும் அடியோடு அழித்தது.

## தருமநந்தனன் அளகாபுரி வருதல்

தருமபுத்திரர் வீமன் திரும்பாமை கண்டு மிகவருந்தினார். "நாம் சென்று வீமனை அழைத்துவருதல் நல்லது!" என்று ரோமச முனிவர் கூறினார். முன்போலவே கடோத்கசன் துணை கொண்டு குபேரனது நகருக்குச்சென்றார்கள். மணிமானை வீமன் கொன்றது குபேரனது பகையை வளர்க்குமே என்று தருமர் வருந்தினார்.

மணிமான் மாண்டது கண்டு குபேரன் போருக்கு எழுந்தான். குபேரன் மகன் ருத்ரசேனன் தந்தையைத் தடுத்து நிறுத்தினான். பாண்டவர்களது வெற்றிப் பிரதாபங்களை எடுத்துரைத்தான். "நாம் அவர்களோடு சமாதானம் செய்து கொள்ளுதலே சாலச் சிறந்தது" என்றான். எனினும் குபேரன் கோபந்தணியானாகி யுத்தசன்னத்தின் ஆனான்.

அதுகண்ட தருமபுத்திரர் குபேரன் முன் வணங்கி, "அறியாமல் என் தம்பி செய்தது பெரிய குற்றமாயினும் பொறுத்திடல் வேண்டும்" என்று மன்றாடினார். குபேரன் கோபந்தணிந்து தருமபுத்திரரை மார்போடு அணைத்துச் சமாதானம் கூறினான். நல்லாசனம் அளித்து உபசாரங்கள் செய்தான்.

''நேற்று அமராபுரிக்குச் சென்றிருந்தேன். அங்கு நினது தம்பி விஜயன் இந்திரனோடும் எங்களோடும் சம ஆசனத்திருந்து உபசரிக்கப்பட்டான். அதனையும் பார்த்து வந்தேன். இன்று உங்களையும் தரிசித்தேன். விஜயன் நாளை உங்களிடம் வந்து சேர்வான். நீங்கள் பகைவரை வென்று கீர்த்தியுடன் வாழ்வீர்களாக!'' என்று வாழ்த்தினான் குபேரன்.

கடோற்கஜனது தேரிலேறித் தபோவனம் வந்து சேர்ந்தார்கள். அப்போது இந்திர லோகத்திலிருந்து விஜயன் வந்து சேர்ந்தான். அவனை நால்வரும் தக்க மரியாதை செய்து வரவேற்றனர். ரோமச முனிவரும் நல்லாசிகூறினார். பாண்டவரும் பாஞ்சாலியும் அவ்வனத்தில் நித்திய கர்மங்களைச் செவ்வனே செய்து வாழ்ந்து வரலாயினர்.

*

# 6. துருவாச முனிச் சருக்கம்

துருவாச முனிவரது வருகையைப்பற்றிக் கூறும் பகுதியாகும் இது. பாண்டவர்க்குத் தீங்கு இழைத்தலையே கருமமாகக் கொண்ட துரியாதனன் வேண்டிக் கொண்டதற்கு இசைந்து துருவாச முனிவன் பாண்டவர்களிடம் பிட்சை கொள்ள வந்து, கிருஷ்ணனது அனுக்கிரகத்தால் அறுசுவை உண்டது போன்ற திருப்தியடைந்து, தான் இங்கே வர நேர்ந்த காரணத்தைக்கூறி, முனிவன் மீண்டதைக் கூறும் பகுதி இது.

துருவாச முனிவர் கோபமுடையவர். சாபங் கொடுத்து விடுவார். துரியோதனனது ஏவலால் ஒரு சமயம் வனவாசந்

செய்யும் பாண்டவர்களிடம் வந்தார். அவருடன் முனிவர் சிலரும் வந்திருந்தனர். முனி சிரேஷ்டரைப் பாண்டவர்கள் வணங்கி உபசரித்தனர், ''மதியம் பகல் உணவுக்கு வருகிறோம்'' என்று கூறி நீராட நதிக்குச் சென்றார் முனிவர்.

அனைவர்க்கும் அறுசுவை உண்டி அளிப்பதெப்படி? என்று பாண்டவர்கள் திகைத்தார்கள்; கருணாமூர்த்தியாகிய கண்ணனைத் தியானித்தார்கள். அவ்வாறே கண்ணனும் வந்து சேர்ந்தார். அவரை வணங்கி நிலைமையைக் கூறினர். அவர்களிடம் இருந்த அட்சய பாத்திரத்தை எடுத்து வரச் செய்தார். எடுக்க எடுக்க அன்னமளிக்கும் தெய்வீகப் பாத்திரம் அது. அதில் ஒரு பருக்கை இருந்தது. அதை அவர் எடுத்து உண்டார்.

நீராடி அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு ஆசிரமத்திற்குத் திரும்பும் நிலையிலிருந்த முனிவருக்கும் அவரது சீடர்களுக்கும் அறுசுவை விருந்து உண்டது போன்ற திருப்தி ஏற்பட்டது. ஆசிரமத்துக்கு வந்து, ''உண்டோம், உண்டோம், கண்ணனைக் கண்டோம்'' என்று இறைவனை வணங்கினர். ''அன்பர்களே! உங்களுக்கு ஒரு குறைவும் நேராது; கவலைப்படாதீர்கள்!'' என்று ஆசி கூறிச் சென்றனர்.

□

# 7. பழம் பொருந்து சருக்கம்

விஜயனால் வீழ்த்தப்பட்ட பழம் மறுபடியும் மரத்தில் சென்று பொருந்தியதைப் பற்றிய வரலாறு இது. அமித்திர

தரும தேவதை: "இன்றுடன் காடுறை வாழ்க்கை பன்னிரண்டும் நிறைவேறின. இனி மறைந்துறை வாழ்க்கை ஓராண்டு உண்டு. பகைவர் கண்ணுறா வண்ணம் இருந்து வாழ்ந்து பின்னர் அரசு பெற்று நீடு வாழக் கடவீர்!" என்று சொல்லி மறைந்தது.

பாண்டவர்கள் பாஞ்சாலி இருந்த இடத்திற்கு வந்து நடந்தவற்றைக் கூறினர். "பன்னிரண்டும் கழித்து விட்டோம். இனி மறைந்துறையும் ஓராண்டு கழித்திட உறுதி வேண்டும். பகைவர் பார்ப்பரேல் பின்னும் வனவாசம் வந்து கூடும். ஆதலால் மறைந்துறை காலத்து ஒவ்வொருவரும் வெகு கவனத்துடன் இருதல் வேண்டும். பதறக் கூடாது; சிதறக் கூடாது. கவனமாய்ப் பொழுது போக்க வேண்டும்!" என்று துணிந்தார்கள்.

□

# 4. விராட பருவம்

விராடனது சம்பந்தம் கொண்ட பருவம். அதாவது விராட நாட்டு அரசனது நகரில் பாண்டவர்கள் அக்ஞாத வாசம் செய்ததைக் (மறைந்து வாழ்ந்ததை) கூறும் பருவம். இது ஐந்து சருக்கங்களைக் கொண்டது.

## 1. நாடு கரந்துறைச் சருக்கம்

பாண்டவர்கள் விராடனது நகரில் உருமாறினவர்களாய் அரசனைச் சார்ந்து ஓராண்டைக் கழித்ததைக் கூறும் பகுதியாகும் இது.

## உருமாறிச் செல்லுதல்

தருமபுத்திரர் தம்முடன் இருந்த முனிவர்களைப் பார்த்து, ''எங்களது பன்னிரண்டாண்டு வனவாசம் முடிவுற்றது. நாங்கள் அறுவரும் இனி ஓராண்டு எவர் கண்களுக்கும் தோன்றாமல் மறைந்து வாழவேண்டும். இதுவரை எங்களோடு கூடியிருந்தீர்கள். இனி அவரவர் தத்தமது இருப்பிடம் சென்று வாழ்தலே தகுதி. எங்கள் அஞ்ஞாத வாசத்திலும் உடனுறைந்து வாழ்வது முடியாத காரியம்'' என்று பணிவுடன் கூறி அவர்களை வழியனுப்பினார்.

பாண்டவரும் பாஞ்சாலியும், 'எங்கேபோய் வசிப்பது?' என்பது பற்றி ஆலோசித்தனர். அருச்சுனன் ''விராட நாடு (மச்சநாடு) சென்று வாழ்தலே சாலச்சிறந்தது'' என்றான். யாவரும் அதை அங்கீகரித்தனர். மலைகளையும் வனங்களையும் கடந்து சென்றார்கள். விராட நகரத்து எல்லைக்கு வந்து சேர்ந்தனர். மயானத்திலிருந்த வன்னி மரப்பொந்தில் தங்கள் ஆயுதங்களை ஒன்று சேர்த்துக்கட்டி மறைத்து வைத்தார்கள். ஆயுதங்களை யாரும் அறியாவண்ணம் மந்திரங்களை ஜெபித்தனர். மாறு வேடம் புனைந்து கொண்டனர்.

தர்மபுத்திரர் தவமுனிவர் வேடந்தாங்கினார். கங்கு பட்டர் என்ற பெயரை வைத்துக்கொண்டார். விராடனது பேரவைக்குச் சென்று அரசனுக்கு ஆசிகூறினார். ''யாரையா நீர்? எங்கிருந்து வருகின்றீர்?' என மன்னன் வினாவினான். ''நான் பாண்டு மைந்தர் தருமபுத்திரர் அவையில் அவருடன் இருந்தேன். அவர் எங்களைவிட்டு மறைந்து வாழ்கின்றார். அவர் திரும்பி வரும் வரையில் தங்கள் அவையில் பணியாற்ற வந்துள்ளேன். ஏற்றருள வேண்டுகிறேன்'' என்றார். அவருடைய பண்பையும் இனிய

வார்த்தைகளையும் கண்டு அரச சபையில் ஒருவராக ஏற்றுக் கொண்டான் விராடமன்னன்.

மறுநாள் வீமசேனன் பலாயனன் என்னும் பேர் பூண்டு மடப்பள்ளியில் வந்து சேர்ந்தான்.

அதற்கு அடுத்த நாள் வில்விஜயன் ஊர்வசியளித்த பேடி உருவத்தை மேற்கொண்டான். அந்தப்புரத்தில் இளவரசிக்கு நாட்டியம் பயிற்றும் வேலையில் அமர்ந்தான். பிருகந்நளை என்ற பெயரை வைத்துக் கொண்டான்.

நான்காம் நாள் நகுலன் குதிரைப்பாகனாக வேடம் தாங்கித் தாமக்கிரந்தி என்னும் பெயருடன் குதிரை லாயத்தில் வேலைக்கமர்ந்தான்.

ஐந்தாம் நாள் சகாதேவன் மாடுமேய்க்கும் கோபாலனாக வேடம் எடுத்துக்கொண்டான். தந்திரீபாலன் என்னும் பெயருடன் பசு மந்தையில் இடம் பெற்றான்.

அதற்கு அடுத்த நாள் பாஞ்சாலி பணிப்பெண் உருவுடன் அந்தப்புரம் சேர்ந்தாள். விரத சாரணி என்னும் பெயருடன் அரசமாதேவியின் அந்தரங்கத் தோழியானாள். இவ்வாறு அறுவரும் விராடமன்னனுடைய அரண்மனையில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு வேலைகளைச் செய்து வரலாயினர். இவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று எவருக்கும் தெரியாது.

□

## 2. மற்போர்ச் சருக்கம்

வேற்று நாட்டினின்று வந்த மகாமல்லன் ஒருவன் விராடநகர் வந்து, மற்போரில் தன்னினும் மிக்கவர் இல்லை

யென்று செருக்கியிருந்தான். அவனுடன் வீமன் போர் செய்து வென்றதைக்கூறும் பகுதியாகும் இது.

ஒரு நாள் விராட மன்னன் அவைக்கு ''வலிய மற்போருக்கு ஒருவன் யானே'' என்னும் விருதுடன் வாசவன் என்னும் பெயருடையவன் வந்தான். ''தன்னோடு மற்போர் புரியும் மல்லர்கள் உளரானால் நாளை அரசசபையில் வீரங் காட்ட வேண்டுகிறேன்'' என்றான். அரசனும் சம்மதித்தான்.

மறுநாள் பெருந்திரளாக மக்கள் கூடினர். அரசவை மல்லர்கள் சல்லடங்கட்டி மல்லுக்கு ஆயத்தமானார்கள். வாசவமல்லன் அவைக்கு வந்தான். அரசன் முன் மற்போர் தொடங்கிற்று. வாசவன் அரசவை மல்லர்களைச் சுலபமாக வெற்றி கொண்டான். வாசவன் கர்வித்துத் தோள் கொட்டி ஆரவாரஞ் செய்தான். அரசன் வெற்றி பெற்றவனுக்குப் பரிசளித்து, சில நாட்கள் தங்கியிருக்கச் சொன்னான். கூட்டம் கலைந்தது.

'மடைத்தொழில் புரியும் பலாயனன் மல்தொழிலும் செய்வான்' என்று கங்கு பட்டர் அரசனுக்கு அறிவித்தார். மன்னன் பலாயனனை அழைத்து அவனுடைய சம்மதத்தைப்பெற்று விளம்பரமும் செய்தான்.

அடுத்த நாள் அக்களம் அமர்க்களம் போலாயிற்று. முன்னிலும் பன்மடங்கு மக்கள் திரண்டிருந்தனர். மற்போர் தொடங்கிற்று. உதயகிரியும் அஸ்தகிரியும் பொருவது போலிருந்தது. மல்யுத்த முறைப்படி பொருதனர். வெற்றி தோல்வி காணாமலே இருந்தது. கடும் போராக மாறியது. வாசவன் கொஞ்சம் கொஞ்சமாய் வலியிழந்தான். கடைசியில் மாண்டு போனான். வெற்றி பெற்ற பலாயனன் தோள் தட்டி நின்றான். மன்னன் பலாயனனுக்கு, 'மற்போர் அரசன்' என்ற விருதும் பரிசும் அளித்துப் பாராட்டினான்.

# 3. கீசகன் வதைச் சருக்கம்

விரத சாரணி என்ற பெயர் கொண்டு வண்ண மகளாய்த் தொழில் புரிந்து வாழும் திரௌபதியின் மேல் இச்சை கொண்ட கீசகனையும் அவனது சகோதரர்களையும் வீமன் வதைத்ததைக்கூறும் பகுதியாகும் இது.

## விரத சாரணியைக் கீசகன் காணல்

விராட மன்னனது பட்ட மகிஷியான சுதீட்சணா தேவிக்கு உடன் பிறந்தவர் நூற்றுநான்கு பேர்கள். அவர்களுள் கீசகன் மூத்தவன். இவன் விராட நகர்ச்சேனாதிபதி. இவனுடைய ஆற்றலினாலும் ஆண்மையாலும் விராடனுடைய அரசாட்சி நடந்து கொண்டிருந்தது. விராடன் அறிவாளி; வல்லல், எனினும் கீசகனது செல்வாக்கு மிகுந்திருந்தது.

கீசகன் அழகும் வீரமும் பொருந்தியவன் அயல்நாட்டு மன்னரை வென்று, விராட நாட்டை விரிவுபடுத்தி வந்தான். பாண்டவர்கள் உருமாறி வந்து அரண்மனையில் வேலைக்கு அமர்ந்த போது கீசகன் ஊரில் இல்லை. திக்விஜயம் செய்து கொண்டிருந்தான்.

கீசகன் ஊருக்குத் திரும்பி வந்து, தமக்கையைக் கண்டு வணங்கித் தன் அரண்மனைக்குச் சென்றான். எதிர்பாரா வண்ணமாய் விரத சாரணி மலர் கொய்து கொண்டிருப்பதைக் கண்டான். காதல் கொண்டான். தாதியர் மூலம் அவள் யாரென்று கேட்டறிந்தான். அவள் அருகில் சென்று தன் விருப்பத்தைத் தெரிவித்தான்.

விரதசாரணி சிறிதும் அஞ்சாமல், "பேதாய்! அயலான் மனைவியை இச்சித்தல் மகாபாவம்; தகாத செயல், உன்னையும் உன் குலத்தையும் என்னைக் காப்பவர் அழித்துவிடுவர். நீ கொண்டுள்ள காதலை விட்டுவிடு!" என்று எச்சரித்தாள்.

கீசகன் அவள் கூறியதைக் கேளானாகி, காதல் நோய் தலைக்கேறிடத் தடுமாற்றமடைந்தான். வண்ண மகளைத் துரத்த ஆரம்பித்தான். அவள் அரசியிடம் சரண் புகுந்தாள். தன் தம்பியைக் கண்டித்து அனுப்பினாள் அரசி.

### கீசகன் காதல் நோய்

கீசகன் தன் அரண்மனைக்குச் சென்று வண்ண மகளின் நினைவாகவே இருந்தான். காதல் எல்லை கடந்து பிதற்றி னான். இச்செய்தியைத் தாதியர் மகாராணியிடம் கூறினார் கள். செல்வமும், வாழ்வும், சிறப்பும் மேன்மையும் அவனாலே என்பதும் உண்மை. அவன் அழிந்தால் அன்றே பகைவர்கள் எல்லாவற்றையும் அபகரித்துக் கொள்வார்கள் என்பதும் உண்மை. தற்காலச் சாந்தியாக ஒரு ஏற்பாடு செய்தாள் மகாராணி.

பொன் வட்டிலில் சிற்றுண்டிகளும் பழங்களும் ஆயத்தம் செய்து கொண்டாள். "அம்மா விரதசாரணி! இதைக் கொண்டு போய்த் தம்பியிடம் கொடுத்து விட்டு வந்தால் போதும்" என்று மகாராணி வேண்டினாள்.

வண்ணமகள் முன் எச்சரிக்கையாகக் கூறலுற்றாள். "தாயே! மகாராணி!! உங்கள் ஆதரவை நான் மறக்க முடியாது. கடமையை இதோ செய்கிறேன். வருவது வந்தே தீரும் விதியை யாவர் விலக்கவல்லார்? இதோ போகின்றேன்" என்று கூறிவிட்டு அச்சத்துடன் நடந்து போனாள்.

### கீசகனிடம் சென்றது

வண்ண மகள் சென்ற போது சூரிய உதயமாகிவிட்டது. சூரியனைப் பார்த்து, "சூரிய பகவானே! என்னுடைய

இடரை நீக்குவான் போல வெளிப்பட்டிருக்கின்றாய். உன்னை நான் வணங்குகிறேன். நீ சாட்சியாய் இருந்து என்னைக் காப்பாற்ற வேண்டியது உன் கடமையாகும்!'' என்று துதி செய்தாள். கீசகனது அரண்மனையை நெருங்கினாள்.

வண்ண மகளைக் கண்டதும் கீசகன் எழுந்து ஓடி வந்தான். இவளும் திரும்பி ஓடிப்போய் அரச சபையில் கதறி விழுந்தாள். கீசகனும் அவளைத் தொடர்ந்து போய் அவளைத் தன் கையினால் தீண்ட எண்ணினான். பெருங் காற்று வீசியது. கீசகன் குப்புற விழுந்தான். வெட்கித் தலை குனிந்து தன் இருப்பிடத்திற்குத் திரும்பினான்.

## அவையோர் செயல்

இக்காட்சியைக் கண்டதும் பலாயனன் மிகு கோபங் கொண்டு பக்க நின்ற மரமொன்றைப் பறித்தெறிய முனைந்தான். அப்போது கங்குபட்டர், ''பலாயனா, இது பசு மரம் நன்றாய் எரியாது. வனத்திற்குச் சென்றால் காய்ந்த விறகு கிடைக்கும்'' என்று குறிப்பாய் உணர்த்தினார். விரத சாரணி அரசனிடம் முறையிட்டாள். பின்னர் மகாராணியிடம் சென்றாள். மன்னன், கீசகன் செய்ததைக் கண்டிக்க இயலாதவனாய் தன் இருப்பிடம் சேர்ந்தான். இச்செய்தி அரண்மனை எங்கும் பரவியது.

## சதித் திட்டம்

எல்லாரும் உறங்கிய பின் விரத சாரணி பலாயனன் இருக்குமிடம் சென்றாள். மறுநாள் இரவு கீசகனைக் கொல்லத் திட்டமிட்டனர். மறுநாட்காலை விரத சாரணியைக் கீசகன் பூங்காவிற் கண்டான். அவனிடம் புன்னகையாகப் பேசலுற்றாள். ''இன்றிரவு ஊர் ஒலி அடங்கின பிறகு அரண்மனையை அடுத்த வெண்மண்டபத்திற்கு வாருங்கள்; நினைத்தபடி இருந்து எண்ணம் முடித்துக் கொள்வோம்'' என்றாள். கீசகன் மகிழ்ந்து சென்றான்.

## கீசகன் வதம்

இரவு வந்தது. ஊரொலி அடங்கின பிறகு வீமனும் விரத சாரணியும் வெண்மண்டபத்திற்குச் சென்றார்கள். கீசகன் தன்னை அலங்காரம் செய்து கொண்டு குறித்த இடத்தில் வந்து சேர்ந்தான். வீமன் பெண்ணுருவம் தாங்கி படுத்திருந்தான். கீசகன் காதல் பரவசனாகி, "காதற் கண்ணே', சொன்ன வண்ணம் செய்த சொற் கிளியே! பொன்னே பூவே!" என்று பிதற்றிக் கொண்டு அந்த உருவத்தைக் கட்டியணைத்தான். அந்த உருவம் கீசகனைப் பற்றிப் பாறையில் ஓங்கி அடித்தது.

கீசகன் எழுந்து பார்த்த போது, 'பெண்ணுருவம் அன்று ஆண் உருவம்' என்று தெரிந்து மனம் கலங்காமல் அவனோடு எதிர்த்துப் போர் செய்தான். மலையும் மலையும் போல் மலைந்தார்கள். மோதினார்கள். இருவரும் ஒத்த பலமுடையவர்கள். வெற்றி தோல்வி தோன்றவில்லை எனினும் கீசகன் தளர்ச்சி யடைந்தான்.

பகன், இடிம்பன், ஜராசந்தன், வாசவ மல்லன், கீசகன், துரியோதனன், வீமன் இந்த ஏழு பேரும் சமபல முடையவர்கள். முதல் நால்வரையும் கொன்ற அனுபவம் வீமனுக்கு அப்போது இருந்தது. உடனே பலாயனன் அப்பாதகனைப் புரட்டிப் புரட்டி அடித்துக் குத்தி மோதி உடல் எலும்புகளை நசுக்கி ஒரு பிண்டமாக்கி, விரத சாரணியை அழைத்துக் காட்டினான். பலாயனன் குளத்தில் மூழ்கித் தேகசுத்தி செய்து கொண்டு, "சனி தொலைந்தது; இனிப்போவோம் வா!" என்று அவளை அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

## உபகீசகர் வதம்

கீசகனது தம்பியர் மறுநாட்காலை பாழ்மண்டபத்திற்கு வந்து பார்த்தனர். அண்ணன் பிண்டமாக்கப்பட்டு இருப்ப

பதைக் கண்டு மனம் கொதித்தார்கள். கந்தர்வர்களே இவனைக் கொன்றிருப்பார்கள் என்று சந்தேகித்து மகாராணியிடம் கூறினர். 'இதற்கு இந்த வண்ணமகள் தான் காரணம்' என்று அவளைப்பற்றினர். அவள் வாய் விட்டுக் கதறினாள். பலாயனன் அவர்களைத் துரத்திச் சென்று குண்டத்தில் தள்ளி எரித்தான். இச்செய்தி எங்கும் பரவிற்று. விரத சாரணியைக் கண்டு அனைவரும் பயந்தனர்.

## 4. நிரை மீட்சிச் சருக்கம்

பகைவரால் கவரப்பெற்ற பசுக்களை மீட்டல் என்பது பொருள். பாண்டவர் விராடனது நகரில் அக்ஞாத வாசம் செய்கையில் துரியோதனாதியர் விராடனது ஆநிரைகளைக் கவர்ந்து செல்லப் பாண்டவர் அவர்களை வென்று, பசுக் கூட்டங்களை மீட்டு வந்த செய்தியைக் கூறும் பகுதி இது. புறப்பொருள் இலக்கணப்படி இது வெட்சித்திணைச் செய்தியாகும். பிற்காலப்புலவர்கள் நிரைகவர்தலை வெட்சித் திணையாகவும் நிரை மீட்டலைக் கரந்தைத் திணையாகவும் கொள்கின்றனர்.

அக்ஞாத வாசம் முடிவதற்குள் பாண்டவர்களைக் கண்டு பிடித்து விட்டால் மறுபடியும் வனவாசத்தை மேற்கொள்ளச் செய்யலாம் என்று துரியோதனாதியர் முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். வெளிநாடுகளுக்கு அனுப்பிய ஒற்றர்களும் வெறுங்கையோடு திரும்பி வந்தனர் ஒற்றருள் ஒருவன், ''மச்ச நாடாகிய விராட தேசம் வளம் பொருந்தியிருக்கிறது. பாண்டவர்கள் வைகும் நாடு வள நாடாக இருக்கு மென்று சொல்கிறார்கள். அதன்றியும்

மன்னனது மைத்துனன் கீசகன் அண்மையில் கொல்லப் பட்டுள்ளான்!'' என்றான்.

இதைக் கேட்டதும் கர்ணன், ''விராடநகர் சென்று அந்நாட்டிலுள்ள மாடுகளைக் கவர்வோமாயின் பாண்டவர்கள் அங்கிருப்பின் எப்படியும் வெளிப்பட்டுவருவர்!'' என்று யோசனை கூறினான்.

## தென்திசைப் போர்

உடனே துரியோதனன் பலசாலியான திரிகர்த்தன்க தலைமையில் ஒரு படையை அனுப்பினான். அவர்கள் சென்று விராட நகரின் தென் திசையிலிருந்த ஆநிரைகளைக் கவர்ந்தனர். விராட மன்னன் கோபங்கொண்டு தானும் தனது படைகளை அழைத்துக் கொண்டு விரைந்து சென்றான். பேடி ஒருவன் தவிர மற்ற நால்வரும் மன்ன னுக்குத் துணையாகச் சென்றனர்.

ஆநிரைகளைக் குருசேனை கவர்ந்துள்ளது என்பதை அறிந்து வெம்போர் புரிந்தனர். பகைவரைத் தோல்வியுறச் செய்தான் விராட மன்னன். பகைவர் சேனைகள் புற முதுகிட்டு ஓடின. உடனே திரிகர்த்தன் வெகுண்டெழுந்து விராடனைச் சிறைபிடித்துத் தேரில் கட்ட முனைந்தான். கங்குபட்டர் பலாயனனை ஏவினார். வீமன் குதித்தெழுந் தான். கதையேந்தி, விரைந்து சென்றான். போரில் புகுந்து குரு சேனைகளை மடக்கியடித்து ஆநிரைகளை மீட்டான். திரிகர்த்தனை உயிரோடு பிடித்து வந்து விராடன் முன் நிறுத்தினான். எல்லாரும் நகர் திரும்பி னர். திரிகர்த்தனை விடுதலை செய்து ஒரு தேரில் திருப்பி அனுப்பிவிட்டனர்.

## வடதிசைப் போர்

தனது சேனை தோல்வியுற்றது எனத் தெரிந்த துரி யோதனன் ஒரு பெருஞ்சேனையுடன் புறப்பட்டுச் சென்று,

விராட நகரின் வடதிசையிலுள்ள ஆநிரைகளைக் கவர்ந்தான். இச்செய்தி அரண்மனையை எட்டியது.

மகாராணி மைந்தன் உத்தரனைப் பார்த்து, ''குழந்தாய், தெற்கே உன் தந்தையார் நிரை மீட்கச் சென்றிருக்கின்றார். வடக்கில் குருகுல மன்னர்கள் வந்துள்ளார்கள். என் செய்வது?'' என்று சொல்லிப் பதறினாள்.

உத்தரன் தாயைப் பார்த்து, ''அன்னையே! இதோ புறப்படுகிறேன். குருகுலப் பெருமன்னவராக இருந்தால் என்ன? தேவராக இருந்தாலென்ன? ஒரு நொடியில் வென்று ஆநிரைகளை மீட்டு வருகின்றேன். ஆனால் எனக்குத் தக்கபடியாக ரதம் செலுத்தச் சாரதி வேண்டுமே'' என்றான்.

உடனே வண்ணமகள் பேடியை அழைத்து வந்து, ''இதோ இவன் நன்கு சாரத்தியம் செய்வான்!'' என்றாள். உடனே இருவரும் சம்மதித்தார்கள். மகாராணி உத்தரவு பெற்றுப் பிரகந்நளை நான்கு குதிரைகளைத் தேரிற்பூட்டி ஆயுதங்களை எடுத்து வைத்துத் தேரைச் செலுத்தினான். உத்தரன் தேர் ஏறி வடதிசைப் போருக்குப் புறப்பட்டான்.

தேர் விரைந்து சென்றது. குருகுலச்சேனை ஆரவாரத்துடன் நிற்பதை இளவரசன் கண்டான். அவன் போரையே கண்டறியாதவன். ''சேனைகளைப் பார்த்தால் பயமாய் இருக்கிறது. தேரை ஊருக்கே திருப்பு, என்று கட்டளை விட்டான்.

''பயப்படாதே, க்ஷத்திரிய குமாரர்கள் போருக்குப் பின்வாங்கலாமா? அஞ்சாதே! தைரியமாய் போரிடு'' என்று பிருகந்நளை உத்தரனுக்குப் பல தைரிய வார்த்தைகள் சொன்னான்.

''எனக்குப் பயமாயிருக்கிறது; எனக்கு யுத்தமும் வேண்டா; ஒன்றும் வேண்டா; நாம் திரும்பிப் போவதுதான் எனக்குத் திருப்தி; என்று மீண்டும் சொன்னான். பேடி மேலும் தூண்டினான்.

இவன் விடமாட்டான் போலிருக்கிறது. இனி இங்கிருப்பதில் பயனில்லை என்று உத்தரன் நினைத்துத் திடீரெனத் தேரில் இருந்து குதித்து நகரை நோக்கி ஓடலானான். விஜயன் ஓடிப்போய் அவனைப் பிடித்து வந்து, தேர்த் தட்டின் மேல் கட்டி வைத்தான். தேரைக் காளிகோயில் வன்னிமரத்துக்குச் செலுத்திக் காளியை வணங்கி, முன்பு கட்டி வைத்துள்ள படைக்கலங்களுள் தனக்குத் தேவையானதை எடுத்துக் கொண்டு வந்தான்.

''இந்த ஆயுதங்கள் எல்லாம் யாருடையன?'' என்று உத்தரன் கேட்டான். பாண்டவருள் நடுப்பிறந்தோனாகிய அருச்சுனன் உடையவை; அஞ்ஞாதவாசம் கழிய இன்னும் நான்கு கடிகைகள் உள்ளன. (கடிகை—நாழிகை) அந்த நேரம் வந்ததும் நீயே அர்ச்சுனனைக் காண்பாய். கலங்காதே, நீ தேரைச் செலுத்து. நான் பகைவருடன் போர் புரிகிறேன். வெற்றி நமக்குத்தான் கிடைக்கும்'' என்று பேடி கூறினாள். உத்தரனது கட்டையும் அவிழ்த்து விட்டாள்.

## அருச்சுனன் சுய உருவம் பெறுதல்

பேடி உருவில் இருப்பவன் அருச்சுனன் தான் என்று தெரிந்தவுடனே தேரினைப் போர்முனைக்குத் திருப்பினான் உத்தரன். எதிர்ப்புறத்தில் இருக்கும் துரோணர் முதலியோர் ''போரைக் கண்டு பயந்து ஓடினவன் தேரைச் செலுத்தி வருகிறான் பார்த்தீர்களா? அந்த பேடி உருவம் உண்மை உருவம் அன்று'' என்று பேசிக்கொண்டார்கள்.

தேர் எதிரிகளின் முன் வந்து நின்றது. பேடி வில்லில் அம்புகளைத் தொடுத்து, பாணங்களைப் பிரயோகம் செய்தான். பெரியோர்கள் வியந்தார்கள். இளையோர் வியந்தனர். துஷ்டர் உக்ரம் கொண்டனர்.

''தேர் வருகின்றது, போர் செய்யலாம்'' என்று எண்ணிய கர்ணன், ''இது பேடி உருவம்; இதற்கு நாம்

ஏன் அஞ்சவேண்டும்?'' என்று சொன்னான், துரியோதனன் பசுக் கூட்டங்களை ஓட்டிச் செல்ல முயன்றான். உடனே பேடி அங்குச் சென்று பசுக்கூட்டங்களை மீட்டுக் கோபாலர் வசம் ஒப்புவித்து, ''ஊர் திரும்புங்கள்'' என்று கட்டளையிட்டான்.

அந்த நான்கு கடிகைகளும் கழிந்துவிட்டன. பேடி உருவம் தானாகவே நீங்கியது. அருச்சுனன் சுய உருவுடன் நின்றான். அக்கினி பகவான் கொடுத்த தேர் அனுமக் கொடியுடன் வந்து நின்றது. எதிரி முன் போய் நின்றான். எல்லாரும் அருச்சுனனைக் கண்டு திடுக்கிட்டார்கள்.

அருச்சுனன் துரியோதனனை நோக்கி, ''மன்னர் மன்ன! முதுகுகாட்டி ஓடுவது அழகோ? உங்களைப் போக விட மாட்டேன். உன் துணைவருடன் உன்னையும் உன் சேனையையும் ஒரு கணத்தில் முறியடிக்கிறேன் பார்'' என்று கூறிப் பாணங்களைத் தொடுத்தான். தனித்திருந்த துரியோதனனுக்குத் துணையாகக் கர்ணன் முதலான வீரர்கள் வந்து குழுமினார்கள்.

## கர்ணன் புறமுதுகிட்டு ஓடுதல்

கர்ணனும் அருச்சுனனும் நேருக்கு நேர் போரிடத் தொடங்கினர். கர்ணன் தேர்களை இழந்தான். உடம்பெல்லாம் சல்லடைக்கண்களைப்போல, பாணங்கள் தைத்தன. பயந்து முதுகுகாட்டி ஓட ஆரம்பித்தான். வெட்கித்தலைகுனிந்து மறைந்து போனான்.

## பெரியோர்க்கு வணக்கம்

பார்த்தன் விரைந்து தேரைச் செலுத்தி வந்து, துரோணர், பீஷ்மர் முதலியோர் முன் நிறுத்தி இருவர் பாதங்களிலும் இரண்டு கணைகளை விழச் செய்து அஞ்சலி செலுத்தினான். போர் தொடங்கியது. எதிரிகள் வலி அடங்

கினார்கள். வேகமும் சுழற்சியும் கொண்டு வந்த அருச்சு னனது பாணத்தை எவராலும் தடுத்து நிறுத்த முடிய வில்லை. கணை சென்று துரியோதனனது மகுடத்தைக் கீழே தள்ளியது. மன்னன் மகுடபங்கம் அடைந்தான் என்று எங்கும் கூக்குரல் எழுந்தது.

## காலவரையறை

துரியோதனன் பீஷ்மரை நோக்கி, ''சொல்லிய காலம் முடியும் முன் இவர் தோற்றம் செய்தார். ஆகையால் பின் னும் இவர் காடு புகும் படியாகச் சொல்வீர்!'' என்று கூறினான்.

''பைத்தியக் காரா! போலிக் கணக்கைப் பார்த்துச் சொல்கின்றாயே! பாண்டவர்கள் கணக்கில் தோற்பரா! சந்திர இயக்கத்தினால் காலம் நேற்றே முடிந்து நின்றது. ஒரு நாள் மிச்சம் கொடுத்தே இவர்கள் வெளிப்பட்டு நிற்கிறார்கள்'' என்று இடித்துச் சொன்னார். யாவரும் பாசறை சேர்ந்தனர்.

இங்கு வாசகர்களுக்கு ஒன்று சொல்ல வேண்டும். நம் பாரத நாட்டின் தென் பகுதியில் சௌரமானமும், வட பகுதி யில் சந்திரமானமும் அனுசரிக்கப்படுகின்றன. காலத்தைக் கணக்கிடுவதில் இரண்டு முறைகளை அனுசரிக்கிறார்கள். பஞ்சாங்கம் தயாரிப்பவர்களும் இம்முறைகளைக் கையாளு கிறார்கள்.

சூரியன் ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்குப் பிரவேசிக்கும் கால அளவை ஒரு மாதம் என்று கணக்கிடுவர் இது சௌரமாதம் எனப்படும். இது பெரும் பாலும் முப்பது நாட்கள் கொண்டதாகும். மற்றொரு கால அளவை சந்திர மாதம். அமாவாசை தொடங்கி அடுத்த அமாவாசையில் முடியும். இது பெரும் பாலும் இருபத்தொன்பது நாட்களாக இருக்கும். சந்திரமானப்படி ஓராண்டில் ஒன்று அல்லது

இரண்டு நாட்கள் முன்னதாகவே ஒரு வருஷம் முடிந்து விடும். இந்த முறைப்படி தான் பீஷ்மர் கணக்கிட்டு அக்ஞாத வாசகாலம் நேற்றோடு முடிந்து விட்டது என்று அறுதி யிட்டுக்கூறினார் என்க.

துரியோதனன் பகலில் பாசறையில் தங்கியிருந்து, இரவில் யாரும் அறியாமல் புறப்பட்டு நகரம் போய்ச் சேர்ந் தான். விஜயன் போர்க்கள வெற்றியோடு காளி கோயில் வன்னி மரத்தடியில் சென்று படைக்கலங்களை முன்போல் பத்திரப்படுத்தினான். பேடியுருவம் தாங்கித் தேர்ச் சாரத்தியம் செய்ய ஆரம்பித்தான். உத்தரன் தன் ஆசனத்தில் அமர்ந்தான்.

## விராட நகரில்

தென் திசையில் வெற்றி பெற்ற விராட மன்னன் அரண் மனைக்கு வந்தான். உத்தரன் வட திசையில் சென்றிருக் கிறான் என்று கேள்விப்பட்டதும் வருந்தினான். "குமாரன் வெற்றியுடன் திரும்பி வருகிறான்" என்று ஒற்றர் வந்து கூறினர். மகனை நல்வரவேற்புடன் உபசரிக்க ஏற்பாடு செய்தான். கங்கருடன் பொழுது போக்காகச் சொக்கட் டான் ஆட ஆரம்பித்தான்.

முதல் ஆட்டத்தில் கங்கு பட்டர் வெற்றி பெற்றார். மன்னனுக்குக் கோபம் பெருகிற்று தன் மகன் குருகுல மன்னனைத் தோற்கடித்தான் என்று மன்னன் வீரம் பேசினான். கங்கர், "பேடியினால்தான் வெற்றி கிடைத் தது!" என்று சொன்னார். மன்னன் பெருங்கோபங் கொண்டு பகடைக்காயை வீசி எறிந்தான். அது எதிர் பாராதவிதமாய்க் கங்கர் தலையிற்பட்டு இரத்தம் பெரு கிற்று.

விரதசாரணி விரைந்து வந்து நெற்றி இரத்தம் கீழே விழுமுன் துடைத்துத் துணிகொண்டு கட்டிவிட்டாள். மன்னன் வருந்தினான்.

அச்சமயம் வெற்றி முரசங்கள் முழங்கின. உத்தரன் வெற்றிக் களிப்போடு நகர்வலம் வந்தான். அரண்மனை வாயிலில் குமாரனை மன்னரும் மக்களும் வரவேற்றார்கள். உத்தரன் தேரிலிருந்து இறங்கி, தந்தையை வணங்கினான். நிகழ்ந்தவற்றை விவரமாய்க் கூறினான். தமது அரண்மனையில் ஓராண்டுக் காலமாக மறைந்து வாழ்ந்த பாண்டவர்களை மன்னன் உபசரித்தான். தமது பிழைகளை மன்னிக்குமாறு வேண்டி நின்றான்.

அன்றிரவு பாண்டவரும் பாஞ்சாலியும் தனித்திருந்து ஆலோசித்தனர். ''நேற்றோடு அஞ்ஞாத வாச காலம் கழிந்து ஒருநாளும் அதிகமாயிற்று.'' என்று கூறித் தமது பழைய உருவத்தை எடுத்துக் கொண்டனர்.

# 5. வெளிப்பாட்டுச் சருக்கம்

பாண்டவர் அஞ்ஞாத வாசம் செய்ய வேண்டிய ஓராண்டைக் கழித்து, வெளிப்பட்டதைக் கூறும் சருக்கம் இது. வெளிப்பட்ட பாண்டவர் தமது வெளிப்பாட்டைத் தூதர் மூலம், தம்பால் நேயமுடைய வேந்தர்களுக்குத் தெரிவிப்பதும், உத்தரையை விஜயன் தன் மகனுக்கு மணங்கொள்வதும், கண்ணன் விராட நகரம் வருவதும், விராடன் தனது மூத்த மகனாகிய சிவேதன் என்பவனைத் திரும்பப்பெற்று, மனம் மகிழ்வதும், பின்னர் உபலாவியம் என்ற நகரைப் பாண்டவர் அடைந்து இனிச் செய்ய வேண்டியதைப் பற்றி ஆலோசிப்பதுமாகியவற்றை விஷயமாகக் கொண்டது இப்பகுதி.

'குந்தி மைந்தரும், பாஞ்சாலியும் தம் உருக்கொண்டு விளங்கியிருக்கின்றார்கள்' எனத் தெரிந்துகொண்ட விராட மன்னன் நல்ல சிந்தனையோடும், நிறையாகும் மிகு செல்வ நிதியுடனும் தன் மைந்தனோடு வந்து அவர் மலரடிகளில் வணங்கித் துதித்து நின்றான். தரும புத்திரர் விராட மன்னனை எடுத்து மார்புறத் தழுவி, ''மன்னர் குலத் திலகனே! மச்ச நாடாளும் வேந்தே! உன்னுடைய நட்பு இந்த அக்ஞாத வாச காலத்தில் கிடைத்தது நாங்கள் செய்த பாக்கியமாகும்'' என்று மனமார வாழ்த்தினார்.

மன்னர் மகள் உத்தரையை விஜயன் தன் மகன் அபிமன்யுவுக்கு உரியவள் ஆக்குவதாக வாக்களித்தான். யாவரும் மகிழ்ந்து ஏற்றுக்கொண்டார்கள். பின்னர் பாண்டவர்கள் அரசவைக்கு வந்து ராயசக்காரர்களை வருவித்துத் தமது அக்ஞாத வாசம் ஒழிந்து, தாம் வெளிப்பட்ட செய்தியை மித்திர மன்னர்க்கெல்லாம் எழுதச்செய்து, தக்க தூதரையும் அனுப்பினார்கள்.

சில நாட்களில் மித்திர மன்னர்களும் கண்ணபிரானும் வந்து சேர்ந்தனர். கண்ணபிரானோடு, பலராமர், சாத்தகி சுபத்திரை, அபிமன்யு, இளம் பஞ்சபாண்டவர், சிவேதன் ஆகியோரும் வந்தனர்.

கண்ணபிரான் சிவேதனது வரலாற்றைக் கூறி, விராடனது மனத்துயரைப் போக்கினார். சிவேதன் விராடனின் மூத்த மகன். அவன் ஒரு சமயம் தேவலோகம் சென்றிருந்த போது, வசுக்கள் அவனை மயிலாகும்படி சபித்தனர். அவன் மயில் வடிவில் தந்தையிடம் வந்தான். விஷயம் அறியாத தந்தை அவனைத் துரத்திவிட்டான். அவன் கயிலை சென்று, கடுந்தவம் புரிந்து; சாப விமோசனமும் அரிய ஆயுதங்கள் பலவும் சிவபெருமானிடமிருந்து பெற்றான் என்பது வரலாறு. சிவேதன் தந்தையின் பாதங்களில் விழுந்து வணங்கித் தந்தையோடு இருந்தான்.

கண்ணபிரானைக் கண்ட ஐவரும் எழுந்து வணக்கம் புரிந்து உபசாரம் கூறினார்கள். மித்திர மன்னர்களையும் வரவேற்று உபசரித்தார்கள்.

## அபிமன்யு உத்தரை திருமணம்

மித்திர மன்னர்களும் கண்ணபிரானும் கூடியிருக்கும் போதே தன் மகளுக்குத் திருமணம் செய்து விடவேண்டு மென்று விராட மன்னன் வேண்டினான். தர்மபுத்திரரும் ஒப்புக்கொண்டார். வெகு விமரிசையாக வில்விஜயன் மகன் அபிமன்யுவுக்கும் விராட மன்னன் மகள் உத்தரைக் கும் கல்யாண மகோத்சவம் நடந்தது. மன்னர்கள் பல வரிசைகளை வழங்கினார்கள். வாத்தியங்கள் முழங்க வேத கோஷங்கள் ஒலிக்க, பாவையர் பல்லாண்டு ஒலி சிறக்க, அபிமன்யு உத்தரகுமாரியைப் பாணிக்கிரகணம் செய்து கொண்டான்.

மறுமகிழ்ச்சி வரையில் சம்பந்திகள் கூடிக்குலவி இருந் தார்கள். பிறகு பாண்டவர் ஐவரும் பந்துக்களும் மன்னர் களும் விராட மன்னனிடம் விடைபெற்று உபலாவியம் போய்ச் சேர்ந்தார்கள். மேல் நடக்கவேண்டிய காரியங் களைச் சிந்தித்தார்கள். இதற்கிடையில் விராட நகர்க் காளி கோயில் வன்னி மரத்தில் பாதுகாத்து வைத்திருந்த தங்கள் படைக்கலங்களை எடுத்துக் கொண்டார்கள்.

கௌரவர்களிடமிருந்து நாடு பெற வேண்டிய விஷய மாகச் செய்யவேண்டிய ஏற்பாடுகளைப் பற்றி ஆலோசித் தார்கள்.

# 5. உத்தியோக பருவம்

கடவ நாள் கழித்து வெளிப்பட்ட பாண்டவர், தங்களது தாய பாகத்தைக் கேட்க, அது தரத் துரியோதனன்

மறுக்கவே, அவர்கள் போருக்கான முயற்சியில் ஈடுபட்டதைக் கூறும் பகுதியாகும் இது. இது எட்டு சருக்கங்களைக் கொண்டது. உத்தியோகம்— முயற்சி. □

# 1. உலூகன்தூது சருக்கம்

அக்ஞாத வாசம் கழித்தபின், கண்ணன் முதலானவர்களின் ஆலோசனையின் படி, பாண்டவர் தங்கள் சார்பில் புரோகிதரான உலூகமா முனிவரைத் திருதராஷ்டிரனிடம் தூது அனுப்பியதையும், துரியோதனன் நாடு கொடுக்க மறுத்ததையும் விஷயமாகக் கொண்டது இப் பகுதி.

### உபலாவியத்தில்

கண்ணபிரான், "இதோ நமக்குத் துணைவராகவும் ஆரிய குலத்தினராகவும், பேசுவதில் வல்லவராகவும் இருக்கிற உலூகமா முனிவரைச் சிறப்புடை உங்கள் பெரிய தந்தையிடம் தூதாக அனுப்பித் துரியோதனன் தினை வென்ன என்பதை அறிந்துவரச் செய்யுங்கள். பின்னர் மேல் நிகழவேண்டுவதைக் குறித்துப் பேசுவோம்," என்று கூறினார்.

"ஆமாம் அது சரி! அந்தணர் தூது சென்று வந்த பின்னர் எங்கட்குச் சொல்லியனுப்புங்கள்; நாங்கள் வருகிறோம்; போர் நடக்க வேண்டியிருந்தால் படை திரட்ட வேண்டியிருக்கும்!" என்று வந்த மன்னர்கள் சொல்லிச் சென்றனர். கண்ணனும் பரிவாரத்தோடு புறப்பட்டு விட்டார்.

தருமபுத்திரர் உலூக முனிவரை அழைத்து உபசரித்து உண்மையை அவரிடம் சொல்லி, அஸ்தினாபுரத்திற்குத் தூதாக அனுப்பினார்.

## அஸ்தினாபுரியில்

உலூக முனிவர் அஸ்தினாபுரம் போய்ச்சேர்ந்தார். திருதராஷ்டிரனைச் சந்தித்து, வந்த காரியத்தை அவையில் கூறலுற்றார். ''மன்னர்களே! யான் இங்கு பாண்டவர் விடுத்த தூதனாக வந்திருக்கிறேன். அன்று அவையில் பெரியோர் அறிவித்தபடி பன்னிரண்டாண்டு வனவாசமும் ஓராண்டு அக்ஞாத வாசமும் இருந்து வெளிப்பட்டிருக்கிறார்கள். அன்று நீங்கள் ஒப்புக்கொண்டபடி அவர்களுடைய அரசையும் செல்வத்தையும் அளித்திடுவீர்கள் அல்லீரோ என்பதைத் தெரிந்துவரச் சொன்னார்கள்'' என்று கூறினார்.

இதைக் கேட்ட துரியோதனன், ''ஏன் வீண் பேச்சு அதிகம் வேண்டும்; போரே தொடுப்போம்; ஆண்மையும், தோள் வலியும், படை வலியும். ஒருகை பார்ப்போம்!'' என்றனன். விதுரர், துரோணர், கிருபர் ஆகியோர், ''போர்க்கு எழுவதை விடச்சொன்ன வாய்மைப்படி அவர் தம் நாட்டையும் செல்வத்தையும் மரியாதையோடு கொடுத்தலே நலம்!'' என்றனர்.

பீஷ்மர் திருதராஷ்டிரனைப் பார்த்துப் போர் வேண்டாமென்று அறிவுரை கூறினார். ஆனால் துரியோதனன் உலூகரை நோக்கி, ''ஓய்! அந்தணரே! இப்பன்னிரண்டு ஆண்டுகளும் ஆண்ட நாடு எமக்கே உரியது. காடு அவர்க்கே உரியது; கூடுமாயின் வெற்றி கொள்ளும் முறையில் வெற்றி கொள்ளட்டும்; போய் இதைச் சொல்லும்,'' என்று வெகுண்டு கூறி அனுப்பிவிட்டான்.

உலூகர் திரும்பிவந்து, துரியோதனன் சபையில் நடந்தவற்றைப் பாண்டவர்களிடம் கூறினார். தருமர், ''சுவாமி! தாங்களே துவாரகைக்குச் சென்று இச்செய்தியைக் கண்ணபிரானிடம் சொல்லிவிட்டு வாருங்கள்'' என்று கேட்டுக் கொண்டார். அவரும் அவ்வாறே சென்று கண்ணபிரானிடம் கூறினார். அவர், ''அருச்சுனனைத் துவாரகைக்கு வரச்

சொல்லுங்கள்'' என்றார். வில்விஜயன் துவாரகைக்குப் புறப்பட்டான். ★

# 2. வாசுதேவனைப் படைத்துணை அழைத்த சருக்கம்

வாசுதேவ குமாரனான கண்ணனை, இனி நிகழ இருக்கும் பாரதப் போரில் தமக்குத் துணையாகும்படி, துரியோதனனும் அருச்சுனனும் சென்று அழைத்ததைக் கூறும் பகுதி இது. படைத்துணை என்பது பகைப் படையை அழித்தற்குத் துணை என்று பொருள்படும்.

### துவாரகை

உலூக முனிவர் தூதுவந்து போன பின்பு, துரியோதனன் மந்திரி பிரதானிகளோடு ஆலோசித்து, தமது நேய மன்னரைப் போருக்குத் துணை நிற்கவேண்டுமென்று தூதுவரை அனுப்பிவிட்டுத் துவாரகைக்குத் தானே போய் மாயவனை அழைத்து வருவதாகப் புறப்பட்டான். அவன் துவாரகை வீதிகளில் வந்த போது,

6. ஈண்டு நீ வரினும் எங்கள்
எழிலுடை எழிலி வண்ணன்
பாண்டவர் தங்கட்(கு) அல்லால்
படைத்துணை யாக மாட்டான்
மீண்டுபோ கென்றென் றந்த
வியன்மதிற் குடுமி தோறும்
காண்டகு பதாகை யாடை
கைகளால் தடுப்ப போன்ற,

அந்நகர மாளிகைகள் மீது கட்டப்பட்ட கொடிகள் அசைந்தாடும் தோற்றமானது, ''எங்கள் வாசுதேவன் பாண்டவர்க்குத் துணைவராயிற்றே! நீங்கள் வந்து விரும்பி அழைத்த போதிலும் பாண்டவர்க்குத் துணை செல்வரே ஒழிய நுமக்குத் துணை வருவாரா? மாட்டார். திரும்பிச் செல்லுங்கள்'' என்பது போல் அவனுக்குத் தோன்றியது.

இவன் வருவான் என்பது துவாரகை வாசனுக்குத் தெரியும்; தெரிந்தும் ஒரு மாயம் செய்தார். வாயிற்காப் போரை அழைத்து, ''துரியோதனன் வருவான்; உபசரித்து அமரச் செய்யுங்கள்; என்னை எழுப்பாதீர்கள்'' என்று கட்டளையிட்டுப் பெயர் உறக்கம் கொண்டார். துரியோ தனன் அரண்மனைக்குள் சென்று கிருஷ்ண பரமாத்மா உறங்கும் கட்டிலின் தலைப்பக்கம் போட்டிருந்த ஆசனத் தில் அமர்ந்தான்.

சிறிது நேரம் கழித்து அருச்சுனன் வந்தான்; கட்டிலின் கால் மாட்டில் நின்றான். கண்ணன் படுத்தபடியே கண் விழித்துப் பார்த்தார். ''அருச்சுனா! வருக, வருக'' என்று நலம் விசாரித்தார். ''தங்களைப் பார்த்து வரும்படி தமை யன் அனுப்பினார் வந்தேன்'' என்றான். 'சரி' என்றார். ''அதோ! அண்ணன் வந்திருக்கிறார் பாருங்கள்'' என்று அருச்சுனன் துரியோதனன் வந்திருப்பதை உணர்த்தினான்.

உடனே திரும்பிப் பார்த்து, ''ஓ அப்படியா? வந்த வுடனே என்னை எழுப்பியிருக்கலாமே! எதற்காகக் காத்தி ருக்கவேண்டும்? என்று விநயத்துடன் உபசார வார்த்தை களைக்கூறினார். வந்த காரியத்தையும் வினவினார்.

''போர் தொடங்கப் போகின்றது. மித்திர மன்னராக நீங்கள் எங்கள் படைக்குத் துணையாக நிற்றல் வேண்டும்'' என்றான், ''நீங்கள் இதற்காக நேரில் வரத்தேவை யில்லையே! தூதுவரை அனுப்பியிருக்கலாமே! பாண்டவர் களுக்கு உதவுவதாக முன்பே தர்மபுத்திரர்க்கு வாக்களித்து

விட்டேனே! இப்போதும் அருச்சுனனை முதலில் பார்க்க நேர்ந்தது. இனி என்ன செய்வது?'' என்றார் கண்ண பிரான்.

துரியோதனன் ஏமாற்றமடைந்து, ''அப்படியாயின் போரில் நீங்கள் கையில் படை எடுக்காமல் இருக்கவேண்டு கிறேன்'' என்றான். வாசுதேவன் அருச்சுனனை நோக்கி, ''அருச்சுனா! கையில் ஆயுதம் எடுக்காமல் உங்கட்கு நான் என்ன உதவி செய்ய முடியும்? சொல்'' என்றார்.

15. செருமலி ஆழி அங்கை
செழுஞ்சுடர் நின்றென் தேரில்
பொருபரி தூண்டின் இந்தப்
பூதலத்து அரசர் ஒன்றோ
வெருவரும் இயக்கர் விண்ணோர்
விஞ்சையர் எனினும் என்கை
வரிசிலை குழைய வாங்கி
மணித்தலை துணிப்பன் என்றான்.

''அங்ஙனமாயின் தாங்கள் எனக்குப் போரில் என் தேரைச் செலுத்த வேண்டுகிறேன்.'' என்றான் விஜயன்.

''நல்லது; இதுவே சரி; இருதரத்தாருக்கும் துணை செய்த மாதிரியாயிற்று. என்றாலும் மித்திரர் என்னும் முறை பற்றி யாதவப்படையெல்லாம் உங்கட்குத் துணை யாக வரும். பலராமனிடம் சொல்லி ஏற்பாடு செய்து கொள் ளுங்கள்'' என்று கண்ணபிரான் துரியோதனனுக்கு ஆறுதல் கூறினார்.

துரியோதனன் பலராமனிடம் சென்று நடந்தவற்றைக் கூறி, அவர்களுடைய சம்மதத்தைப் பெற்றுச் சென்றான். அருச்சுனன் பரந்தாமனை உபலாவியத்திற்கு அழைத்துச் சென்றான்.

★

# 3. சஞ்சயன் தூது சருக்கம்

கவல்கணன் என்ற முனிவரது குமாரரான சஞ்சய முனிவர், தனது நெருங்கிய நண்பனான திருதராஷ்டிரனது வேண்டுகோளுக்கு இணங்கி, உபலாவியத்திலிருக்கும் பாண்டவரிடம் தூது சென்ற செய்தியைக் கூறும் பகுதி இது.

(பின்னால் நடைபெற்ற பாரதப்போர் நிகழ்ச்சிகளைத் தனது ஞான திருஷ்டியால் அறிந்து பிறவிக் குருடனாகிய திருதராஷ்டிரனுக்கு நேர்முக வருணனைகளைப் போலக் கூறியவர் இவர்தான்).

துரியோதனன் தான் துவாரகைக்குச் சென்று வந்த செய்திகளைத் தன் தந்தையிடம் கூறினான். திருதராஷ்டிரன் சஞ்சயரை அழைத்து வரச் செய்து, ''முனிவரே! என் மக்களோ பாண்டு மக்கட்கு நாடும் அரசும் கொடுக்க மறுக்கின்றனர். ஆதலின் இனி போர் நிகழ்ந்துதான் ஆகவேண்டும். போரில் வெற்றி தோல்விகளை யார் பக்கமென்று நம்ப முடியவில்லை. இரு திறத்தாரும் போருக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கின்றனர். ஆகையால் நீர் சென்று பாண்டவர்க்கு ஞானோபதேசம் செய்து வனவாசமே உரியதென்று வற்புறுத்திப் போர் நடவாமல் செய்து விட்டு வாரும்!'' என்று கூறி, சஞ்சய முனிவரை உபலாவியத்திற்கு அனுப்பி வைத்தான்.

அதேபோல் சஞ்சய முனிவர் புறப்பட்டு 'மலைகளையும் வனங்களையும் தாண்டி உபலாவியம் போய்ச் சேர்ந்தார். பாண்டவர்கள் அவரை எதிர் கொண்டு அழைத்துச் சென்று

வந்தனை வழிபாடுகளைச் செய்தனர். வந்த காரியம் யாதெனவினவினர்.

''தரும நந்தனா! உங்களிடம் தூதாக வந்துள்ளேன். தற்போது இரு திறத்திலும் போர் மேகங்கள் குமுறிக் கொண்டிருக்கின்றன. பூமியே அழிந்துவிடும் போல் தோன்று கிறது. துரியோதனாதியர்களுக்கு எவ்வளவோ நீதிகளை எடுத்துச் சொல்லியும் பயனில்லை. நீங்கள் சத்திய சந்தர்கள் தர்ம மார்க்கங்களைக் கைக் கொண்டவர்கள். நீங்கள் பொறுத்து விலகிக் கொள்வீராயின் கலகமும் போரும் ஏற்படா. குருகுலம் வாழ்வுறும்; என்றெண்ணி இச்செய்தி களை உங்களிடம் சொல்லுமாறு உங்கள் பெரிய தந்தை என்னை அனுப்பி வைத்தார். என் கருத்தும் இதுவே'' என்றார் சஞ்சய முனிவர்.

''நியாயமான சமாதானங்கள் எவையும் காணோம். நாடு தரமாட்டோம். போர் புரிந்து கொள்ளட்டும் என்பாரா யின் நாங்கள் என்ன செய்வது?'' என்று பாண்டவர்கள் கேட்டனர்.

''சொல்கிறேன், கேளுங்கள்'' என்று சஞ்சய முனிவர் சொல்ல ஆரம்பித்தார்.

''பாண்டவர்களே! நீங்கள் மன்னர்களாகவும், சக்கர வர்த்திகளாகவும் பிறந்து வளர்ந்தவர்களாயினும் முற்றுந் துறந்த முனிவர்களைப் போலவும்யோகியர்களைப்போலவும் வனவாசத்தில் நன்கு பழகிவிட்டீர்கள். வெயில், மழை போன்ற எல்லாக் காலநிலைகளிலும் நீங்கள் பழக்கப்பட்டி ருக்கிறீர்கள். நீங்கள் வனத்திலேயே வாசம் செய்யுங்கள். வனவாசம் மோட்ச சாதனமாகும். இந்தப் பெரும்போர் நின்று, உலகில் சாந்தம் நிலைத்திருக்கும். எங்கிருந்தாலும் நீங்கள் வீரர் வீரர்களே!'' என்று விளக்கமாக முனிவர் கூறினார்.

இளைஞர் நால்வருக்கும் உள்ளம் கொதித்தது. கைகள் பதறின. மீசை துடித்தது. பற்கள் நெரிந்தன. இதைநு

கண்ட தருமபுத்திரர், ''தம்பியர்களே! சினம் கொள்ளா தீர்கள்! எதுவும் விஞ்சிப் போகவில்லை. தூதுவர் மீது கோபப்பட்டு என்ன பயன்? அவர்கள் சொன்னதை இவர் சொல்கிறார்'' என்று அவர்களைச் சாந்தப்படுத்தினார்.

முனிவரே! நீங்கள் இதுவரை கூறியவை யாவும் அறவோர், யோக்யர், ஞானியர் முதலோர்க்குப் பொருந் தும். அல்லது பல காலம் ஆட்சி செய்து வானப்பிரஸ்த நிலையில் இருக்கும் மன்னர்களுக்குப் பொருந்தும். நாங்கள் பால்ய முதல் அரசினால் வஞ்சிக்கப்பட்ட வீரர்கள். நீங்கள் சொன்ன அறவுரை எங்கட்குப் பொருந்தாது. நாங்கள் க்ஷத்ரிய தர்மத்தில் நின்று பகைவர்களை அழித்துச் சுவர்க்கம் ஏற்றுவதுதான் எங்கள் கடமையாகும்!'' என்று தருமநந்தனன் கூறினார்.

வீமன் கூறலுற்றான். ''முனிவரே! இரு குலத்துக்கும் ஒத்தவர் நீர்! எங்களைக் காட்டுக்குப் போகும்படி போதிக்க எங்ஙனம் மனம் துணிந்தீர்? இதுதான் செஞ்சோற்றுக் கடனோ? நேற்று உலூக முனிவரிடம் போர்க்கு உறுதி சொல்லி அனுப்பிவிட்டார்களே! மறுபடியும் எதற்குத் தூது? போரில் வெற்றி யாருடையதென்று பார்ப்போம். போரில் தாயாதிகளாகிய பகைவர்களின் குடல் கிழிந்து பெருகி நிற்கும் செந்நிற ரத்தக் காட்டிலேதான் வாழப் போகிறோம்; போய்ச் சொல்லுங்கள்'' என்று வீராவேசத் துடன் பேசினான்.

அப்போது கண்ணபிரான் வீமனைச் சாந்தப்படுத்தி, முனிவரைப் பார்த்து, ''சஞ்சய முனிவரே! இனி இவர் களுக்கு நாடாளுதலும், அவர்களுக்குப் போரில் மடிந்து விண்ணுலகு ஆளுதலும் தாம் தமமாகும் என்று அவர் களுக்குப் போய்ச் சொல்லுங்கள்'' என்று கூறி விடை கொடுத்தார். அதேபோல் சஞ்சய முனிவர் சென்று திருத ராஷ்டிரனிடம், ''தாம் என்ன செய்ய முடியும்? கிருஷ்ண பரமாத்மா சொன்னபடி தான் நடந்தேறும்!'' என்று கூறினார்.

★

# 4. கிருஷ்ணன் தூது சருக்கம்

பாண்டவர் சார்பில் கண்ணன் துரியோதனாதியரிடம் தூது சென்றதைக் கூறும் பகுதி இது. 264 செய்யுட்களைக் கொண்டது. இக்காவியத்தில் இது சிறந்த பகுதி எனக் கூறுவர். பாடல்கள் கற்பனை நயமும் கவி நயமும் கொண்டவை. சந்த நயத்தோடு கூடியவை.

சஞ்சய முனிவர் தங்களிடம் தூது வந்து செயல் அற்றுத் திரும்பிப் போன பிறகு தரும புத்திரர் பின்வருமாறு யோசிக்கலானார். பகைவர்களைத் தண்டிக்கப் புகுவதற்கு முன் சாம, பேத, தானம் ஆகிய மூன்று உபாயங்களையும் முயன்று, அரசும் நாடும் கிடைக்குமாயின் வீணில் போர் செய்து, நிரபராதிகளான மக்களைக் கொல்ல வேண்டா என்னும் யோசனையினால் கண்ணபிரானை இப்போது கௌரவரிடம் தூதாக அனுப்பி முடிவு தெரிந்து கொள்ளலாம் எனத்தீர்மானித்தார்.

''எம்பெருமானே! உலூக முனிவர், சஞ்சய முனிவர் ஆகிய இரு முனிவர்களின் தூதிலும் போரே குறித்து நிற்கின்றன. போர் நடந்தால் மன்பதைகள் மடிதல் கூடும். அது நிகழா வண்ணம் ஒரு திறத்தார் தணிந்திடுதல் உறுதியன்றோ? அதற்குத் தக்க யோசனை ஒன்று சொல்ல வேண்டுகிறேன்'' என்று தரும புத்திரர் கூறினார்.

பாண்டவர் ஐவரையும் ஒன்று கூட்டி, ''தரும நந்தனா! உங்கள் ஐவருடைய கருத்தையும் நான் தெரிந்து கொள்ள வேண்டும். அதை முதலில் சொல்லுங்கள்'' என்று கண்ணபிரான் கேட்டார்.

தருமராஜன் கூறுகின்றார்: ''கார்வண்ணா! நீங்கள் தூது நடந்தருளி, எங்களது நிலைமை அவர்களுக்குச் சொல்லிச் சமாதானப்படுத்துங்கள். அவன் எங்களுக்குரிய நாடும் அரசும் தரவிட்டால் பின்னர் போர் புரிந்தேனும் கொள்வோம். அப்போது உலகோர் வசை கூற மாட்டார்கள். முதன் முதலில் எங்கள் நாட்டினையும் செல்வத்தையும் எங்கட்குத் திருப்பும்படி வேண்டுங்கள். மறுத்தானாகில் ஐந்து ஊர்களேனும் கேளுங்கள். அவையும் கொடுத்திட மறுத்தானாகில் ஐந்து மனைகள் கேளுங்கள். அவையும் மறுக்கப்படுமாகில் போர் வேண்டி வாருங்கள்'' என்றார் தருமபுத்திரர்.

கடுங்கோபங்கொண்ட பீமன் கூறலுற்றான்: ''முகில் வண்ணா! என் அண்ணன் இன்னும் பணிந்து போவது எனக்கு வருத்தமாகவே இருக்கிறது. அரச சபையில் ஏற்பட்ட அவமானத்தைப் போக்கிக் கொள்ள வேண்டாமா? துரியனையும் அவனைச் சார்ந்தவர்களையும் கொன்று நானே அண்ணனுக்கு முடிசூட்டுகிறேன். இனி யாரும் தூது போக வேண்டாம்'' என்று கூறினான்.

அவனது கோபத்தைத் தணிவித்து, வில்விஜயன் கருத்தைக் கூறுமாறு பணித்தார் பத்மநாபன்.

காண்டீபன் கூறியதாவது:

இதுவரை பொறுத்தது போதும். இன்னும் அறத்தையே கூறிக்கொண்டிருந்தால் மன்னர் அவையில் நாங்கள் கூறிய சபதத்தை முடிக்கவேண்டாமா? தாங்கள் தூதாகப் போனாலும், எங்கள் அண்ணன் கூறியவற்றையெல்லாம் கூறினாலும், அந்தத் துரியன் கேட்கப் போவதில்லை. தேவர்களையும் வெல்லக்கூடிய அஸ்திரங்கள் என்னிடம் உள்ளன. போரிடுவதே தக்கது!'' என்று கூறினான்.

பின்னர் நகுலன் எழுந்து, ''தூது போவதனால் யாதொரு பயனும் ஏற்படப் போவதில்லை. போரிடுவதே தகுதி'' என்றான்.

சகாதேவன் யாதொன்றும் சொல்லாமல் மௌனமாய் இருந்தான். இங்கு வாசகர்களுக்கு ஒன்று சொல்லவேண்டும். இராமாயணத்தில் சத்ருக்கனனும் பாரதத்தில் சகாதேவனும் ஞானிகள். காவியத்தில் அதிகத் தொடர்பில்லாமல் வருவது வரட்டும் என்று அமைதியாய் இருப்பவர்கள் என்ன நடக்கப்போகிறது என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

''சகாதேவா! உன் கருத்து யாது?'' என்று மாயவன் தூண்டினார். சகாதேவன் சொல்வதைக் கேளுங்கள்: ''கண்ணபிரானே! ஆதிமூர்த்தியாகிய உன் கருத்து இன்னதென்று நான் அறிவேன்! அதுதான் உன் மாயை; அவ்வாறுதான் எல்லாம் நடைபெறும். அவ்வாறே செய்யலாம்'' என்றான்.

அவனைத் தனியாய் அழைத்துச் சென்று, ''இந்தப் போர் நடைபெறா வண்ணம் ஓர் உபாயம் கூறு'' என்றார்.

### கலி விருத்தம்

34. நீ பா ரதஅமரில் யாவரையும் நீறாக்கிப்
பூபாரந் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா
கோபாலா போரேறே கோவிந்தா நீயன்றி
மாபா ரதமகற்ற மற்றார்கொல் வல்லாரே.

''என் அப்பனே! நீ பாரதப் போரினை மூட்டி அதை ஒரு காரணமாக வைத்து, பூ பாரத்தைத் தீர்ப்பதற்கு யோசித்திருக்கின்றாய்! நீ அல்லாமல் வேறு யார் இதனைச் செய்ய வல்லவர் இருக்கின்றார்கள்?'' கடைசியாக அவன் கேட்டது என்னவென்றால், ''இந்தப் பாரதப் போரில் எங்கள் ஐவரையும் நின் பார்வையால் காக்கவேண்டும்'' என்று கூறி முடித்தான்.

''அப்பா! அப்படியே நாம் காத்தருள்வோம்; ஆனால் நாம் இருவரும் இங்கிருந்து உரையாடிய இச்செய்தியை யார்க்கும் சொல்லாதே!'' என்று கூறி, பாண்டவர்கள்

இருந்த இடத்திற்கு வந்தார். பின்னர் திரௌபதி பேச லானாள். ''பார்த்தசாரதி! என் கூந்தலை நான் எப்போது முடிப்பது?'' என்று அழுது நின்றாள்.

கண்ணன் அவளுக்குச் சமாதானம் சொல்லிவிட்டுத் தூது செல்லப் புறப்பட்டார். அவருக்கு உதவியாக ஒரு சிறு படையையும் ஆயுதங்களையும் நல்கி வழியனுப்பினார் தருமபுத்திரர்.

## தூது சென்றது

கண்ணன் இரண்டு நாட்கள் காடும் மலையும் கடுஞ் சுரமும் கான்யாறும் கடந்து போய் அஸ்தினாபுரியைக் கண்ணுற்றார். நகருக்குள் நுழைந்தார். ஒரு சோலையில் தங்கியிருந்தார். பீஷ்மர், துரோணர், கிருபர், விதுரர் முதலியோர் கண்ணனை எதிர் கொண்டழைத்து நகரில் பவனி வந்தனர். துரியோதனன் இதில் கலந்து கொள்ளவில்லை. கண்ணபிரான் விதுரர் அரண்மனையில் தங்கினார்.

## கலித்துறை

80. முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததயோ
பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலையோ
சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ எய்தற்கு
என்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடில் என்றான்.

''பரம்பொருளாகிய நீ என் மனையில் வந்து தங்கு வதற்கு ஏற்றது என்று எண்ணி வருவதற்கு இச்சிறுகுடில் என்ன பெரிய தவத்தைச் செய்தது? ஒன்றுமில்லை. ஆதலால் அநாதி காலமாக நீ துயின்றருளிய பழமையான பாற்கடல் என்று மயங்கியோ, ஆதிசேஷ சயனம் என்று மயங்கியோ மகாப்பிரளய காலத்தில் அண்டங்களையெல் லாம் திருவயிற்றில் அடக்கிக் கொண்டு குழந்தை வடிவில் ள்ளி கொண்ட ஆதிசேஷ அம்சமான ஆலிலை என்று

மயங்கியோ மேலோரால் புகழப்படும் நான்கு வகைப்பட்ட வேதம் என்று மயங்கியோ நீ வந்தருளினாய் அறிகிலேன்'' என்று விதுரர் முகமன் கூறினார்.

## விதுரன் மனையில்

விதுரர் மெய்ம்மறந்து கண்ணனைப் புகழ்ந்து மகிழ்வாராயினார். உணவளித்து உபசரித்து, ''வந்த காரணம் யாதோ?'' என்று வினவினார். ''விதுரரே! பாண்டவர் ஐவர் அனுப்பிய தூதுச்செய்தி சொல்லிப் போகவே வந்தேன். எனினும் பெரியோர்களாகிய உங்கள் எல்லோரையும் கலந்து சமாதானத்தைச் செய்து போகலாம் என்பதும் என் நோக்கம். முடிவாகத் துரியோதனன் கருத்து என்ன என்பதையும் தெரிந்து போக வந்தேன்!'' என்று கண்ணபிரான் எடுத்துரைத்தார்.

இரவு கழிந்தது. காலையில் உணவருந்தித் துரியோதனன் அவைக்குச் செல்லத் தயாரானார்.

## அரவக்கொடியோன் அவை

துரியோதனன் தனது அவையை அலங்கரிக்கச் செய்தான். அரியாசனத்தில் மந்திரி பிரதானிகள் தேச மன்னர்களோடு கொலுவீற்றிருந்தான். சபை பெருங்கூட்டமாக இருந்தது ''கண்ணன் வந்தால் எழுந்து நின்று மரியாதை செய்யாதீர்கள்!'' என்று எச்சரிக்கை செய்தான்.

கண்ணபிரான் விதுரரோடு சபைக்கு எழுந்தருளினார். உடனே பீஷ்மர், துரோணர், கிருபர் மற்றுமுள்ள மன்னர்களும் எழுந்து நின்று அவரை வணங்கினார்கள்.

துரியோதனாதியர், கர்ணன், சகுனி இவர்கள் மட்டும் எழுந்திருக்கவில்லை. கண்ணபிரான் தனது ஆசனத்தில் போய் அமர்ந்தார்.

சபை அமைதியாய் இருந்தது. துரியோதனன் கோபத்துடன் பேசலுற்றான். ''நேற்று இந்நகர்க்கு வந்து எனது அரண்மனையில் தங்குவதையொழித்து, விதுரன் இல்லிடைத் தங்கியது ஏன்?'' என்று கேட்டான்.

''நான் சோலையில் வந்து தங்கியிருந்த போது விதுரர் வந்து உபசரித்துத் தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். அதன்றியும் நான் பாண்டவர் சொல்லை உரைத்திட வந்த தூதன். உன் இல்லத்தில் இறங்கி உன் அடிசிலை உண்டு, பின் உன்னை வெறுத்துரைக்க வேண்டுமானால் தர்ம சங்கடமாக இருக்கும்'' என்றார் பரந்தாமன்.

இதைத் துரியோதனன் கேட்டு நகைத்து, ''இருக்கட்டும்; தூது வந்த செய்தியைச் சொல்லும்'' என்றான்.

## கண்ணபிரான் சொல்லுகிறார்

''மாயச்சூதினால் அரசிழந்த பாண்டவர், அன்று பெரியோர் பணித்தது வழுவாமல், வனவாசமும் அக்ஞாத வாசமும் கழித்து வந்திருக்கின்றனர். ஆகையால் அவர்களது உரிமைப் பொருட்களையெல்லாம் கொடுத்தருளி அவர்களுடன் நட்பு கொண்டு வாழ்ந்திடுவாய்; கொடுக்க மறுத்தால் அது அறமும் ஆகாது; ஆண்மையும் ஆகாது; புகழும் பொருந்தாது; பாவமும் பழியும் பயமும் முன்வந்து தோன்றும்,'' என்று சொன்னார்.

## துரியோதனன் கூறுகின்றான்

முன்னரே அப்பஞ்சவர் சூதாடிப் பொருள்களையெல்லாம் தோற்றோடிப் போயினர். இன்றைக்கு நீ சாமர்த்தியமாக வந்து, அவற்றை உபாயத்தினால் கவர்ந்து கொண்டு ஏகலாமென்று வந்திருக்கின்றாய் போலும். அப்பஞ்சவர்க்கு நான் எவ்வகையிலும் எளியன் அல்லன். இன்னும் அவர்

காட்டிற் சென்று திரியட்டும். அந்த ஐவரும் என்னுடன் எதிர்த்துக் கொடும் போர் புரிந்திட்டாலும் நான் எதையும் கொடுக்கமாட்டேன்'' என்று சொன்னான்.

அதன்பின்னர் கண்ணபிரான் கேட்ட கேள்விகளுக்கு, ''ஐந்த ஊரும் தாரேன்; ஐந்து வீடுகளும் தாரேன்!'' என்று சொல்லி விட்டான்.

''அப்படியாயின் குரு க்ஷேத்திரத்தில் வந்து வெஞ்சமர் விளைக்கவாவது உனது கை கொடுத்தருள்வாய்'' என்று கூறி அயல் நின்ற தூணைத் தட்டினார் கண்ணபிரான். துரியோதனன் பரந்தாமனையும் பாண்டவரையும் இகழ் வாகப் பேசினான். கண்ணபிரான் நகைத்து, ''இது போதும்; இவன் கருத்தறிந்தோம், இனி இங்கு வேலை யில்லை'' என்று சபையை விட்டு ஏகினார். விதுரன் மனைக்குப் போய்ச் சேர்ந்தார்.

பிறகு அரவக் கொடியோன், கிருஷ்ணன் தங்க இடம் கொடுத்த விதுரரைக் கடிந்துரைத்தான். இழிவாகப் பேசி னான். விதுரன் கோபித்து, ''அடே பேதாய்! இனி சமரில் நின்று வெம்கணை தொடுத்திடமாட்டேன்'' என்று சொல் லித் தன் கை வில்லினை ஒடித் தெறிந்தார். உடனே வெகுண்டு அவையைவிட்டு தமதில்லம் ஏகினார். 'சிறந்த வில்லாளியை இழந்து விட்டாயே' என்று துரியோதனனைப் பீஷ்மர் கடிந்துரைத்தார்.

விதுரர் ஒடிந்த வில்லோடு வீடு சென்றார். கண்ணன் பார்த்து, ''விதுரரே! சபையில் என்ன நடந்தது? ஏன் வில்லை ஒடித்து விட்டீர்கள்?'' என்றுவினயமாகக் கேட்டார்.

''துரியோதனன் தங்களைத் தகாத சொற்களால் இழித்துரைத்தான். அதனால் அவனுக்கு உதவக் கூடா தென்னும் நோக்கத்துடன் எனது சிலையை நான் ஒடித்து விட்டேன்!'' என்று விதுரர் பதிலளித்தார்.

## கண்ணனும் குந்தியும்

விதுரரைச் சாந்தப்படுத்தி விட்டு, கண்ணபிரான் குந்தி தேவியின் அரண்மனைக்குச் சென்றார். குந்திதேவியார் பரந்தாமனை வரவேற்று உபசரித்தார். தம் மக்களைப் பற்றி விசாரித்தார். வந்த காரியம் யாதென வினவினார். ''பாண்டவர்கள் வனவாசமும் அக்ஞாத வாசமும் முடித்து வந்துள்ளார்கள். அவர்களுக்குரிய தாய பாகத்தைத் துரியோதனன் கொடுக்க மறுக்கிறான். அதனால் முடிவு தெரிந்து வருமாறு பாண்டவர்கள் என்னை அவனிடம் தூதாக அனுப்பியுள்ளார்கள்'' என்று தான் வந்த காரியத்தை விவரித்தார். ''துரியோதனன் ஒரே பிடிவாத மாக இருக்கிறான். இன்னும் சில நாட்களில் குருக்ஷேத்திர பூமியில் போர் நடக்கும்!'' என்று வரப்போவதையும் குறிப்பால் உணர்த்தினார்.

இவைகளைக் கேட்டுக் குந்தி தேவியார் வருந்தினார். ''பாண்டவர்கள் வெற்றி பெறுவது உங்கள் கையில் தான் இருக்கிறது. இதுபற்றிக் கூறுகிறேன் கேளுங்கள்'' என்று கண்ணன் கூற ஆரம்பித்தார்.

''நீங்கள் கன்னிப் பருவத்தில் பெற்றுக் கங்கையில் விட்ட குழந்தைதான் கர்ணன். கர்ணனிடம் சென்று நீங்கள் அவனுக்குப் பெற்ற தாய் என்பதை மெய்ப்பித்து, 'தம்பியர் ஐவருடன் கூடி வாழ்ந்து முடிசூட்டிக் கொள்ளலாம்' என்று அழையுங்கள். அவன் வருவதற்குப் பிரியப்படான். ஆனால் அந்த நாகாஸ்திரத்தை இரண்டாம் முறை எய்யாதபடி உறுதி கேட்டாயினும் வாருங்கள்'' என்று கண்ணபிரான் சொன்னார்.

## சதித்திட்டம்

மறுநாட் காலை துரியோதனன் ஆலோசனை செய்ய லானான். கண்ணபிரானைச் சபைக்கு வருமாறு தூதுவரை

அனுப்பினான். கண்ணனும் அவ்வாறே சபைக்கு வந்து சேர்ந்தார்.

துரியோதனன் எழுந்து வந்து உபசரித்து, ''இந்த ஆசனத்தில் அமருங்கள்'' என்றான். கண்ணன் விஸ்வரூபம் எடுத்து அவ்வாசனத்தில் அமர்ந்தார். ஆசனம் நெறு நெறென்றது. அவருடைய முடி அண்ட முகட்டை எட்டியது. பாதங்கள் பாதாளத்தைத் தொட்டன. கைகள் எல்லாம் ஆயுதங்கள் பலவற்றுடன் திக்கனைத்தும் செறிந்து நின்றன. தேவரும் பிறரும் நடுங்கித் துதித்தனர். பன்னத்திலிருந்த மல்லரும் மறவரும் அப்பேருருவத்தில் நகக்கண்டு போயினர். எல்லாரும் கைகுவித்து நின்றனர். சிலர் பயந்தனர். சிலர் வியந்தனர். சிலர் துதித்தனர்.

துரியோதனன் அஞ்சவும் இல்லை. ஆசனத்திலிருந்து பெயரவும் இல்லை. கண்ணன் அவனைப் பார்த்து, ''துஷ்டனே! துர்மதியால் என்னைக் கொல்ல நினைத் தனையே! முடிந்ததா? நீதான் குலத்தோடு அழியப் போகிறாய்'' என்று கூறி முன்னைய உருவோடு சபையை விட்டகன்றார்.

## இந்திரன் வருகை

தேவகி மைந்தன் இந்திரனை நினைத்தார். அவனும் அங்கு வந்து சேர்ந்தான். இருவரும் நலம் விசாரித்துக் கொண்டனர். ''தேவர் தலைவ! உன் மைந்தன் அருச்சுன னுக்குப் பகையாக நாகாஸ்திரம் கர்ணனிடம் இருக்கிறது. நீ ஒரு பிராமணன் உருக்கொண்டு போய், கர்ணனைக் கண்டு, அவனுடன் தோன்றிய கவச குண்டலங்களைக் கவர்ந்து கொண்டு வருவாயாக'' என்றார் கண்ணன். அவனும் அவ்வாறே செய்வதாகச் சொல்லிச் சென்றான். கர்ணனிடம் சென்று குண்டலங்களைத்தானமாய் பெற்றுச் சென்றான்.

## குந்தி தேவி செய்தி உரைத்தல்

கிருஷ்ண பரமாத்மா கேட்டுக் கொண்டபடி குந்தி தேவி கர்ணனுடைய மாளிகைக்குச் சென்றார். அம்மையாரை அரச மரியாதையுடன் வரவேற்றான் கர்ணன். ஆசன மளித்து அமரச் செய்தான். 'வந்த காரியம் யாதென' வினவினான். ''அப்பா கர்ணா! நான் உன்னைப் பெற்ற தாயாவேன்!'' என்றுகூறி அவன் பிறப்பின் ரகசியத்தை அதற்கு ஆதாரமாகக் கூறினாள்.

''தாயே! தங்களைப் போல் பலர் வந்து இவ்வாறு கூறினர். நான் அளித்த ஆடையை அணிந்து மாய்ந்து போயினர். அந்தப் பரிசோதனையில் தாங்கள் வெற்றி பெற்றால் நான் நம்பமுடியும்! என்று கூறி முன்பு குழந்தை யோடு சுற்றி வைத்திருந்த சேலையைக் கொண்டு வந்து தந்தான். அது, தான், முன்பு உடுத்தியிருந்த சேலை யாதலின் யாதொரு அச்சமும் இன்றி, அதை வாங்கி உடுத்தியாதொரு ஊறுபாடும் இன்றித்தாய்மை அன்போடு அமர்ந்திருந்தாள் குந்திதேவி.

உடனே கர்ணன் தாயின் பாதங்களில் விழுந்து வணங்கி, ''தேர்ப்பாகன் மகன் என்ற அபவாதம் இன்றோடு நீங்கியது. தாங்கள் என்னிடம் என்ன உதவி நாடி வந்தீர் கள்? சொல்லுங்கள்'' என்று வேண்டினான்.

### எழுசீர் ஆசிரிய விருத்தம்

253 வருகஎன் மதலாய் இளைஞர் ஐவருநின்
மலரடி அன்பினால் வணங்கி
உரிமையான் மனமொத்து ஏவலே புரிய
ஒருதனி செய்யகோ லோச்சி
அரசெலரம் வந்துன் கடைத்தலை வணங்க
ஆண்மையும் செல்வமும் விளங்கக்
குருகுலா திபர்க்கும் குரிசிலாய் வாழ்வு
கூர்வதே கடனெனக் குறித்தாள்.

பண்டவர் பக்கம் வந்து சேர்தலே நலம்பயக்கும் என் பதை ஆசிரியர் குந்தி தேவியின் கூற்றாகக் கூறியிருந்த மையைக் காண்மின்.

அதற்குக் கர்ணன் விடையாகக் கூறும் பாடல் அதைவிட நயமாக இருத்தலை நோக்குங்கள்.

254 பெற்றநீர் மகவுஅன்பு இலாமையோ அன்றிப்
பெரும்பழி நாணியோ விடுத்தீர்
அற்றைநாள் தொடங்கி என்னையின் றளவும்
ஆருயிர்த் துணையெனக் கருதி
கொற்றமா மகுடம் புனைந்துஅரசு அளித்துக்
கூடவுண்டு உரிய தம்பியரும்
சுற்றமா னவரும் என்னடி வணங்கத்
தோற்றமும் ஏற்றமும் அளித்தான்.

''என்னைப் பெற்றநீர் அன்பு இல்லாமையாலோ, பழிக்கு அஞ்சியோ கைவிட்டீர். அன்று முதல் இன்று வரை என்னைத் துரியோதனன் ஆருயிர்த் துணைவனாகக் கருதி, முடிசூட்டி, அங்கநாட்டு அரசாட்சியும் அளித்து, உடனி ருந்து உண்டு, தம்பியரும் சுற்றத்தாரும், என்னை வணங்கு மாறு செய்து எனக்குப் புகழையும் உயர்வையும் தந்தான்.''

''பல பேசிப் பயன் என்ன? பேரோ விளையப் போகிறது. தாங்கள் என்னிடம் கோருவது யாது? எதையும் மறையாமல் சொல்லுங்கள்'' என்று வேண்டினான்.

''பார்த்தன் உன்னோடு பொருதால் அவனோடு பகை யுடைய நாகாஸ்திரத்தை விடுத்த பிறகும் அவன் பிழைத் திருந்தால் மறுபடியும் அக்கணையை ஏவி அவனைக் கொல்லற்க!''

''இரண்டாவதாக, உனக்குத் தம்பியராய் அமைந்த மற்ற நால்வரையும் எதிர்த்து அவர்களைக் கொல்லற்க'' என்ற இரண்டு வரங்களையும் வேண்டி நின்றாள்.

"ஒரு முறை விடுத்த கணையை மறுபடியும் தொடுப்பது மன்னவர்க்கு ஆண்மையன்று. ஆகவே நாகக்கணையை இரண்டாம் முறை தொடுக்க மாட்டேன். மற்ற நால்வரும் என்னால் கொல்லப்படார்" என்று கர்ணன் மறுமொழி கூறினான்.

தாயினைக் கரங்குவித்து வணங்கி; "தாயே! தாங்கள் எனக்குத் தரவேண்டிய வரங்கள் இரண்டு உள்ளன. அடியேன் பார்த்தனால் உயிர் ஒழிந்த போது அரசர்கள் எல்லோரும் அறியும்படி உமது மகன் நான் என்ற உண்மையைத் தெரிவிப்பீராக! போர் முடியும் வரையில் உமக்கு நான் மகன் என்ற உண்மையை ஐவரும் அறியாதபடி நீர் காக்கக் கடவீர். அவ்வாறன்றி அவர் சிறிது அறியின் நாடு முழுவதையும் அவர்கள் எனக்கே அளிப்பர். நான் அதைத் துரியோதனனுக்கே அளித்து விடுவேன்" என்று கர்ணன் வேண்டினான்.

அதற்குக் குந்தி தேவியார் சம்மதித்து, அவன் வேண்டிய இருவரங்களையும் அளித்தாள். கண்ணீர் கலங்கக் கர்ணனிடம் விடை பெற்றுச் சென்றாள். கண்ணபிரானிடம் தான் சென்று வந்த செய்தியைச் சொன்னாள்.

கண்ணபிரான் அஸ்தினாபுரியில் தான் நினைத்தது எல்லாம் நிறைவேறியது என்று மகிழ்ந்து, தேரேறிப் பாண்டவர் இருக்கும் உபலாவியம் நகரை வந்தடைந்தார்.

# 5. படையெழுச்சிச் சருக்கம்

கண்ணன் தூது சென்று மீண்ட பின் பாண்டவர், துரியோதனாதியர் ஆகிய இரு திரத்தாரது சேனைகள் திரண்டெழுந்து நின்ற செய்தியைக் கூறும் பகுதி இது.

கண்ணன் வந்ததும் பாண்டவர்கள் அஸ்தினாபுரத்தில் நிகழ்ந்தவற்றைக் கேட்டறிந்தார்கள். போரிடுவதே முடிவு என்ற செதியைக் கேட்டவுடன் தமக்கு வேண்டிய உபகரணங்களையும் உணவுப் பொருட்களையும் சேகரிக்கலானார்கள். நட்பினர்களுக்கு ஓலை போக்கினார்கள். தேவையான பொருட்கள் வந்து குவிந்து கொண்டிருந்தன. தேச நாட்டினர் தத்தம் படைகளுடன் வந்துசேர்வார் ஆயினர். எங்கும் போர் முழக்கமாகவே இருந்தது.

துருபத மன்னனும் அவன் புத்திரரும் வந்தார்கள். விராட மன்னனும் அவன் மக்களும் வந்தார்கள். சேர, சோழ, பாண்டியராகிய மூவேந்தரும் வந்து சேர்ந்தனர். கேகயர், கடோத்கஜன், அபிமன்னன், அரவான், திரௌபதியின் மக்கள் ஐவர், ஆகியோர் வந்தனர். இவ்வாறு பாண்டவர் பக்கம்வந்துசேர்ந்த சேனைகள் ஏழு அக்ரோணி, ஓர் அக்ரோணி என்பது தற்கால யுத்தமுறைப்படி ஒரு பெட்டாலியன் என்ற அளவுக்குச் சற்று ஏறக்குறைய இருக்கும்.

ஒரு குழுவில் ரத, கஜ, துரக, பதாதி என்ற நால்வகையும் அடங்கும். தேச மன்னர்களுக்கு வேண்டிய வசதிகளைப் பாண்டவர் செய்து கொடுத்தனர். அவர்கள் மனம் மகிழுமாறு தருமன் உபசார வார்த்தைகள் கூறி வரவேற்றார். பெரியோர்களுக்கு வணக்கம் கூறினார். இளையோர் செய்யும் மரியாதைகளை ஏற்றுக்கொண்டார். ''தெய்வ பலத்தையும் தர்ம பலத்தையும் முன்னிட்டுப் போர் புரியப் போகிறோம். வெற்றி நமக்கே கிடைக்கும்!'' என்று தருமன் எல்லோரையும் உற்சாகப்படுத்தினார். சுவேதனைச் சேனாதிபதியாக்கினார். சுவேதன் (சிவேதன்) விராடனது மூத்த மகன் என்பதை முன்னர் கூறினோம்.

துரியோதனன் தனக்குச் சாதகமாக உள்ள மன்னர்களுக்கு ஓலை போக்கினான். அவர்களும் சதுரங்க சேனைகளோடு வந்து சேர்ந்தனர். கௌரவர்கள் பக்கம் பதினோரு

அக்ரோணி சேனைகள் திரண்டன. நகுல சகாதேவர்களுக்குத் தாய் மாமனும் மத்தர நாட்டு அரசனுமான சல்லியன் பாண்டவர் பக்கம் துணையாக இருக்கத்தன் சேனையுடன் வந்து கொண்டிருந்தான். துரியோதனன் வஞ்சகமாக அவர்கள் வரும் வழியில் தங்குவதற்காகத் தண்ணீர்ப்பந்தலும் உணவு விடுதியும் அமைத்திருந்தான். அவைகள் பாண்டவர்களால் அமைக்கப்பட்டவை என்று நம்பி, சல்லியனும் அவனது சேனைகளும் அங்கு உணவருந்தி ஓய்வு கொண்டனர். பின்னர்தான் உண்மை தெரிந்தது. 'உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்கக் கூடாது' என்ற கொள்கையின்படி சல்லியன் துரியோதனன் சேனையில் சேர்ந்து பணியாற்றினான். கர்ணனுக்குச் சாரதியாகவும் சேவை செய்தான்.

பாரதநாட்டு மன்னர்கள் எல்லோரும் போரில் பங்கு கொண்டனர். பதினெட்டு அக்ரோணி சேனையும் பதினெட்டு நாள் போரிட ஆயுத்தமானார்கள்.

ஃ

# 6. முகூர்த்தங் கேள்விச் சருக்கம்

துரியோதனன் போரில் வெற்றியை நாடிக் களபலி கொடுத்தற்குரிய நாளைக் குறித்துத் தருமாறு பாண்டவரில் இளையோனான சகாதேவனைக் கேட்க, சோதிட சாஸ்திர வல்லுனனான அவனும் முகூர்த்தங் குறித்துத் தந்ததைப் பற்றிய பகுதியாகும் இது.

துரியோதனன் போரில் வெற்றியை நாடி, 'களபலிக்கு உரியவன் யாவன்? அப்பலி கொடுத்தற்குரிய முகூர்த்தம்

யாது?' என்று பீஷ்மரைப் பணிந்து கேட்டான். அவர், ''நல்ல முகூர்த்தம் குறிக்க வல்லவன் சகாதேவனே! அவனை அணுகிக் கேளுங்கள்'' என்றார்.

'அரவான் நம் படைகளை எல்லாம் ஒரு பகற்பொழுதில் கொல்வதற்கு இருக்கிறான். நீ அவனை வேண்டிக்கொண்டால் பாரபட்சமில்லாமல் களபலிக்கு ஒத்துக் கொள்வான். அவனைக் களபலி கொடுத்தால் பாண்டவரை வென்று, அரசையும் செல்வ வாழ்வையும் பெறலாம்' என்று பீஷ்மர் மேலும் கூறினார்.

உடனே துரியோதனன் தேரேறிச் சகாதேவனிடம் சென்றான். அவன் வந்த காரியத்தைக் கேட்டறிந்து 'மார்கழி மாதம் அமாவாசை தினத்தில் இரவில் களபலி கொடுத்தால் வெற்றி உண்டாகும்' என்று கூறினான். சகாதேவன் நேர்மையானவன். அரவான் எல்லா இலட்சணங்களும் பொருந்தியவன் ஆகவே இவர்கள் இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அதன் பின்னர் துரியோதனன் அருச்சுனன் மகனும் படம் பொருந்திய தலையை உடையவனுமான அரவானிடம் சென்றான். அவனும் பெரிய தந்தையைக் கண்டு மகிழ்ந்து, ''வந்த காரியம் யாது?'' என்று வினவினான். துரியோதனன், ''நாங்கள் வெற்றி பெற வருகின்ற அமாவாசையன்று நீ எங்களுக்குக் களபலியாக உதவ வேண்டும்'' என்றான். ''அங்ஙனமே உதவுகிறேன்'' என்று அரவானும் வாக்களித்தான். துரியோதனன் மகிழ்ந்து அஸ்தினாபுரம் போய்ச் சேர்ந்தான்.

□

# 7. களபலி யூட்டு சருக்கம்

*நிகழ்வதற்கு இருக்கும் போரில் பாண்டவர் வெற்றி பெறும் பொருட்டுக் களபலி கொடுத்தலைப் பற்றிக் கூறும் பகுதியாகும் இது.*

அருச்சுனன் மகன் அரவான் தன்னைப் பலியிடும்படி, பகைவர்க்கு வாக்குக் கொடுத்து விட்டான் என்பது அறிந்து கண்ணன், 'அமாவாசைக்கு முன் தினமாகிய சதுர்த்தசி யாகிய இன்றே அமாவாசை வரட்டும்' என்று முனிவர் களுக்குச் சொன்னார். அவர்களும் அமாவாசைக்குரிய சடங்குகளைச் செய்தனர். சதுர்த்தசி அமாவாசையாக மாறியதாலே்கண்ணபிரான் நடந்தவற்றையெல்லாம் தரும னுக்குச் சொல்லி, "இன்று கௌரவர்களுக்கு முன்னே நாம் களபலி கொடுத்துவிட வேண்டும். இல்லையேல் போர்க்களஞ் சென்று அவர்களை வெல்ல முடியாது. முப்பத்திரண்டு இலட்சணங்களும் பொருந்தியவர் (கண்ண பிரான், அருச்சுனன், அரவான்) மூவரே யாவர். ஆகை யினால் என்னைப் பலியிடுங்கள்" என்றார்.

கண்ணன் கூறியதைக் கேட்ட தருமனும் தம்பிமாரும் நடுநடுங்கி அவரது பாதங்களில் விழுந்து, "தங்களைப் பலி கொடுத்து, அதன் பயனாக வரும் வெற்றியும் வாழ்வும் எங்களுக்கு வேண்டாம், இனி நாங்கள் சாதலே அமையும்" என்றனர்.

"துரியோதனன் என்னை வேண்டிக் கேட்டபோது பலிக்கு உடன்பட்டேன். அமாவாசை வந்த பின்பும் அவன் என்னை அழைக்க வராமையால் இப்போது உங்களுக்குப்

பலியாக உடன்படுகிறேன். பலி இடுங்கள்'' என்றான் அரவான்.

''என்னைப் பலியிட்டாலும் போர் முடியும் வரை நான் உயிரோடிருக்க அருள் புரிய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான். பாண்டவர் அன்றிரவே பகைவர் அறியாத படி குருநாடு சென்று காளிக்குப் பலியிடச் சித்தராயினர். அரவான் காளியின் முன் முறைப்படி தானே தன் உறுப்பு களை அறுத்து பலி கொடுத்தான். துன்பம் சிறிதும் இல்லாமல் மலர்ந்த முகத்தோடு நின்றான். அதன் பின்னர் பாண்டவர் யானை முதலியவற்றை யாமள நூலின்படி பலி கொடுத்து, இனி நடக்க இருக்கும் போரில் வெற்றியையும் பிரார்த்தித்து உபலாவியம் திரும்பினார்கள்.

★

# 8. அணி வகுப்புச் சருக்கம்

பாண்டவரும் துரியோதனாதியரும் தங்கள் தங்கள் சேனைகளை அணி வகுத்ததைக் கூறும் பகுதி இது.

மறுநாள் வாசுதேவன் மன்னர்கள் நெருங்கியுள்ள சபையில் புகுந்து, சுவேதனை நோக்கி, ''இன்றைய தினமே அதிரதர், மகாரதர், சமரதர், ஆகியவர் எல்லா ரோடும் வெற்றிச் சின்னமான வஞ்சி மாலையணிந்து, குருக்ஷேத்திர பூமிக்குச் செல்லுக!'' என்று பணித்தார்.

சேனைத் தலைவனான சுவேதன் கண்ணன் கட்டளைப் படி அணி வகுத்தான். பலராமர் இப்போரை விரும்பாமல் தீர்த்த யாத்திரையை மேற்கொண்டார். அவரோடு விதுர

கும் சேர்ந்து கொண்டார். தருமனுக்குப் போர்த்துணையாக வந்த அரசர்கள் கொடி, குடை, யானை, குதிரை, காலாட்படை ஆகியவற்றோடும் வந்து நெருங்கினர். நால்வகைப்படைகளின் சிறப்புக்களை ஆசிரியர் வர்ணிக்கும் பாங்கு பாராட்டுதற்குரியது.

போருக்குச் சித்தமாய் அணி வகுத்து நின்ற பாண்டவ சேனையின் தோற்றத்தை ஒரு புருஷ ரூபமாகப் புலவர் வருணிக்கின்றார். கண்ணன் உயிர்; தருமன் மார்பு; சேனாதிபதியாகிய சுவேதன் முகம்; வீமனும் விசயனும் இரு தோள்கள். நகுல சகாதேவர்கள் இரண்டு கால்கள், மற்ற மன்னர்கள் அவயவங்கள்.

## கௌரவர்

பாண்டவர் சேனை மேற்கண்டவாறு அணிவகுத்து, குருக்ஷேத்திர பூமியில் வந்து நின்றது. அமாவாசை திதியைச் சதுர்த்தசிக்கு மாற்றி அரவானைப் பலி கொடுத்த செய்தி துரியோதனனுக்கு எட்டியது. துரியோதனன் பீஷ்மரை நோக்கி, "தமக்குப் பயந்தே எதிரிகள் திதியை மாற்றிக் களபலியும் கொடுத்து விட்டார்கள். நமக்கு அவர்கள் சமமாகார். இனிப் போருக்கு ஆயத்தமாகச் சேனைகளை அணிவகுத்து ஆவன செய்யுங்கள்!" என்றான்.

பீஷ்மரும் அவ்வாறே அதிரதர்கள், மகாரதர்கள், சமரதர்கள்—இவர்களை நியமித்தார். கர்ணன் கோபங்கொண்டு பீஷ்மரை அவமதித்துப் பேசினான். வாக்குவாதம் முற்றியது. துரியோதனன் சமாதானம் செய்தான். 'பீஷ்மர் போரில் மாளும்வரை நான் படை தொடேன்!" என்று கர்ணன் சபதம் செய்தான்.

நால்வகைச் சேனைகளுடன் பீஷ்மர் தலைமையில் துரியோதனன் புறப்பட்டான். சப்த மேகங்களும் முழங்குவது போல் பெரிய முரசங்கள் ஒலி செய்தன. மன்னர்கள் பலர்

அணிவகுத்து உடன் சென்றனர். துரியோதனன் படை பலத்தையும் ஆசிரியர் அழகாக வருணித்துள்ளார். துரியோதனன் அரவக்கொடி வானுர ஓங்கிப் பறந்தது.

போர்க்களத்திடை இருதிறப்படைகளும் இருபுறங் களிலும் நிற்பதைக்கண்ட அமரர் முதலியோர்உலகம் என்ன வாகி முடியுமோ எனக் கண்கலங்கி நின்றார்கள்.

# 6. பீஷ்ம பருவம்

பீஷ்ம பருவம் பத்து சருக்கங்களைக் கொண்டது. பீஷ்மர் சேனாதிபதியாக இருந்து நடத்திய முதல் பத்து நாட்களுக்கு உரிய போர் நிகழ்ச்சிகளைக் குறிக்கும் பகுதி யாகும் இது.

## முதற் போர்ச் சருக்கம்

குரு க்ஷேத்திரத்தில் பாரதப் போர் பதினெட்டு நாட்கள் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியை வில்லி பாரதம் பீஷ்ம பருவம், துரோண பருவம், கர்ண பருவம், சல்லிய பருவம், சௌப்திக பருவம் என்னும் ஐந்து பகுதிகளாகப் பிரித்துக் கூறுகிறது. கௌரவ சேனையின் சேனாதிபதிகளாக ஒன்று முதல் 10 நாட்கள் வரை பீஷ்மரும், பதினோராம் நாள் முதல் பதினைந்தாம் நாள்வரை துரோணரும், பதினாறு பதினேழாம் நாட்களில் கர்ணனும், பதினெட்டாம் நாள் சல்லியனும் இருந்தனர். அதனால் அவர்கள் பெயராலேயே பருவங்கள் பெயரிடப்பட்டுள்ளன.

வில்லி பாரதத்தில் போர் நிகழ்ச்சிகளைப் பற்றி 1650 பாடல்கள் உள்ளன. யுத்த களத்தின் நேர் முக வர்ணனை போலவே அப்பாடல்கள் அமைந்துள்ளன. சுவை குன்றாம லும் முக்கிய நிகழ்ச்சிகளை விட்டு விடாமலும் இந்நூலில் சுருக்கமாகக் கூறியுள்ளேன்.

முற்கால யுத்த முறைகளுக்கும் இக்கால யுத்த முறை களுக்கும் வேறுபாடுகள் பல உள்ளன. அக்காலத்தில் நேச நாடுகளும் எதிரி நாடுகளும் நேருக்கு நேர் நின்று தர்ம யுத்தம் செய்தார்கள். இக்காலத்தில் தரையிலும், கடலிலும் ஆகாயத்திலும் வரைமுறையில்லாமல் எதிரிகள் தாக்கப் படுகிறார்கள். இது இக்காலப் போர் முறை, ஒவ்வொரு நாளும் பாரதப் போர் சூரியன் உதயமான பிறகு தொடங்கி, அஸ்தமனத்திற்குள் முடிந்து விடுகிறது. இரவில் இரு சாராரும் தங்கள் தங்கள் பாசறையில் அமர்ந்து அன்று நடந்த போரில் மாண்டவர்கள், காயம் பட்டவர்கள் யார் யார் என்று அறிந்து மறுநாள் போருக்கு வேண்டிய ஆயத் தங்களைச் செய்தனர்.

டில்லிக்கு வடக்கே இருபத்தைந்து கிலோ மீட்டர் தொலைவில் குருக்ஷேத்திரம் உள்ளது. அது பத்து யோசனை சுற்றளவுள்ள பெரிய மைதானம். போர் நிகழ்ச்சிகளை சஞ்சய முனிவர் தன் ஞான திருஷ்டியால் அறிந்து திருத ராஷ்டிரனுக்குக் கூறிக் கொண்டு வருவதாக ஆசிரியர் கூறுகிறார். குரு க்ஷேத்திரம் இப்போது ஒரு புண்ணிய பூமியாகப் போற்றப்படுகிறது.

## கீதோபதேசம்

இரு திறத்தார் சேனைகளும் கடல்போல் இரு பக்கங் களிலும் திரண்டனர். பாண்டவர் சேனை ஏழு அக்ரோணி. கௌரவர் சேனை பதினோரு அக்ரோணி. கண்ணபிரான் பார்த்தனுக்குச் சாரதியானார். அருச்சுனன் யுத்த சன்னத்

தனாகத் தேரில் ஏறினான். போர்க்கள நடுவில் தேர் வந்து நின்றது.

இரு பக்கங்களையும் நோக்கினான். போரில் சேனைகள் யாவும் மடிந்து போவது போன்ற காட்சி அவன் கண் முன் தோன்றியது. பாட்டன், குரு, நண்பர், உறவினர் யாவரும் மாய்வது போன்ற தோற்றத்தைக் கண்டு நடுங்கினான். மனம் குழம்பியது. கை கால்கள் தளர்ந்தன. காண்டீபம் அவனை அறியாமலே தேர்த்தட்டில் விழுந்தது. ''கண்ணா! நான் போர் புரிய மாட்டேன். இத்துணைப் பெரியோர்களையும் கொன்று அடையப்போகும் சுகம் யாது? பெரும் பழிக்கு நான் ஆளாக விரும்பவில்லை. அரசாள்வதை விட வனம் செல்வதே மேல்!'' என்று உட்கார்ந்துவிட்டான்.

தனஞ்சயன் மனம் தளர்ந்து புலம்புவதைக் கண்ட கண்ணபிரான் தேற்றிக் கூறுவாராயினர். ''அர்ச்சுனா! உனக்கு இந்த எண்ணம் ஏன் தோன்றியது?' நீ க்ஷத்திரியன் துஷ்டநிக்கிரகமும் சிஷ்ட பரிபாலனமும் க்ஷத்திரிய தர்மம். உயிர்கள் அழிவதைப்பற்றி உனக்கு என்ன கவலை? உயிர்களை நீ ஆக்கவும் முடியாது. அழிக்கவும் முடியாது. இன்று உன்னால் அவை அழியாமற்போனாலும் என்றாவது ஒரு நாள் அழியத்தான் போகின்றன.

தோன்றுவதும் மறைவதும் உலகியற்கை. நீ அதற்கு ஒரு கருவியே தவிரவேறில்லை. உடல்தான் அழியுமே தவிர உயிர் அழியாதது. ஒரு பெரும் சக்தியின் காரியமாக உயிர்கள் தோன்றுகின்றன. மறைகின்றன. அதற்கு நாம் எல்லாம் கருவியாக இருக்கின்றோம். நம்மில் மாயை என்று ஒரு சக்தி தோன்றுகின்றது. அது இயற்கை ஞானத்தை மறைத்துவிடுகிறது. இத்தொழிலை நாம் மூன்று பிறவிகளில் செய்து வருகிறோம்.

ஒரு பிறப்பில் நானும் நாராயணனுமாக இருந்தோம். மற்றொரு பிறவியில் இலட்சுமணனும் இராமனுமாக இருந்

தோம். இப்பிறப்பில் நீயும் நானுமாக இருக்கின்றோம். ஒவ்வொரு பிறவியிலும் இறைவன் இட்டகட்டளைப்படி நம் தர்மத்தை ஆற்றி வருகிறோம்.

எதிரியினிடமும் சாந்தம் காட்டுவது ஞானியின் தர்மம். எதிரியை அழித்துக் குடிமக்களைக் காப்பாற்றுவது க்ஷத்திரிய தர்மம். நீ உன் கடமையைச் செய்யத் தவறினால் அழியாப் பழிக்கு ஆளாவாய். இது ஞானமா? அஞ்ஞானமா? யோசித்துப்பார்.'' என்று ஞானோபதேசம் செய்தார். இதுவே கீதை எனப்படும் பெரு நூல். பதினெட்டு அத்தியாயங்களைக்கொண்டது. எல்லாராலும் வேதம் போல வைத்துப் போற்றப்படுகிறது. இதன் விரிவைப்பின்னால் வரும் ''பகவத் கீதை'' என்ற தலைப்பில் காண்க.

அருச்சுனன் மனந்தெளிந்து, உண்மை அறிந்து, கடமையைச்செய்ய முற்பட்டான். கண்ணனை வணங்கினான். துதித்துப் போற்றினான். வில்லைக் கையிலேந்தினான். தேர் பீஷ்மர் முன் போய் நின்றது. அவரிடம் ஆசிபெற்றுத் துரோணரிடம் சென்றார்கள். அவரும் ஆசீர்வதித்து விடை கொடுத்தனுப்பினார்.

இருதிறத்துப் படைகளும் போர் புரிய ஆரம்பித்தன. வெற்றிச் சங்குகளும் போர் முரசங்களும் முழங்கின. யானைகளும் தேர்களும் குதிரைகளும் அழிந்து விழுந்தன. ஆகாயத்தில் கழுகு முதலிய பறவைகள் வட்டமிட்டன. பேய்கள் கூத்தாடின. வீமன் அருச்சுனன் இருவரும் எதிரிகளைத் தாக்கினர். மற்றொரு புறம் பீஷ்மர் சுவேதனோடு மலைந்தார். முதல் நாள் போரில் விராட மன்னனது இரண்டு புதல்வர்கள் மாண்டனர். பீஷ்மர் பாண்டவர் சேனாதிபதியாகிய சுவேதனை வஞ்சனையாகக் கொன்றார். சேனாதிபதி மாண்டான் என்பதனால் பாண்டவர் பக்கம் கலக்கம் அதிகமாயிற்று. விராட மன்னனுக்கு ஆறுதல் கூறினர். முதல் நாளிலேயே அதர்ம யுத்தம் ஆரம்பித்துவிட்டது.

## இரண்டாம் போர்ச் சருக்கம்

இரண்டாம் நாள் போர் தொடங்கியது. துருபதன் மகனாகிய திருஷ்டத்துய்மன் சேனாதிபதியாகப் பதவி யேற்றான். அவன் யாக அக்கினியில் பிறந்தவன். வில்லா சிரியராகிய துரோணரைக் கொல்வதற்காகவே உதித்தவன் ஆகையால் இயற்கையில் பொருந்திய போர்க்குறிகளை யுடையவன். போர்க்களத்தில் சோனை மாரி போலக் கணைகளைத் தூவிக் கொண்டேயிருக்கும் தனுர்வித்தை பயின்றவன் ஆதலின், இவனே கடைசி வரையில் நின்று சேனையை நடத்துவான் என்று தீர்மானித்தார்கள். இவன் திரௌபதியின் சகோதரன். திருஷ்டத்துய்மன் துரோண ரிடம் போர் மலைந்தான். இருவரும் வெற்றி தோல்வி யின்றிக் கடுமையாகப் போரிட்டனர். கலிங்க மன்னன் பெரும் யானைப் படையுடன் வந்து வீமனுடன் போரிட் டான். வீமன் அவனையும் அவன் மக்களையும் கொன் றான். வீமனும், அபிமன்யுவும் கௌரவப்படையில் பெரு நஷ்டத்தை உண்டாக்கினர். சூரியன் அஸ்தமனமாயிற்று. அவரவர்கள் பாசறைக்குச் சென்றனர்.

## மூன்றாம் போர்ச் சருக்கம்

நேற்று அடைந்த தோல்வியை இன்று பெறும் வெற்றி யால் மறைக்க வேண்டுமென்று கௌரவ வீரர்கள் மிக்க ஊக்கத்துடன் களம் குறுகினார்கள். பீஷ்மர் இன்று சேனை களைக் கருட வியூகமாக வகுத்து நிரம்பக் காட்டினார். திருஷ்டத்துய்மன் பாண்டவ சேனைகளை அர்த்த சந்திர வியூகமாக வகுத்துக் கொண்டான்.

பீஷ்மரும் துரோணரும் அருச்சுனனைச் சூழ்ந்து கொண் டார்கள். துரியோதனனும் தம்பியரும் வீமனைச் சூழ்ந்து கொண்டார்கள். கோபமும் ஊக்கமும் உறுதியும் கொண்டு இருசாராரும் சாடினர். கடோத்கஜன் துணைக்கு வந்து

எதிரிப்படை சிதைந்து ஓடுமாறு மலைந்தான். துரியோதனன் தேர் பெருஞ்சேதமுற்றது. அவனும் கீழே விழுந்தான். பீஷ்மர் அவனைத் தன் தேரில் ஏற்றிச் சென்றார்.

பீஷ்மர் கடுங்கோபங்கொண்டு அம்பு மாரி பொழிந்தார். அருச்சுனன் தடுத்து நின்றான் என்றாலும் கண்ணன் மார்பில் ஓர் அம்பு தைத்தது. கண்ணன் தேரை விட்டு இறங்கிக் கையில் சக்கரமேந்தி பீஷ்மரை நோக்கி ஓடினார்.

### சந்த விருத்தம்

வான்நர கிற்புகு தாமல் எனக்குயர்
    வானுலகைத் தருவான்
நீ நினை வுற்றது போன பிறப்பிலென்
    நீடுதவப் பயனே
யானும் இனிப்பிற வாமல் அளித்தருள்
    ஈக எனப் பிறவா
ஞான மனத்தொடு நாகுழ றப்பல
    நாடியுரைத் தனனே.

பீஷ்மர் அறிவு தோன்றிக் கோபம் நீங்கி, இவருடைய கோபத்தைத் தணிக்காவிடில் நாம் அழிவது நிச்சயம் என்று உணர்ந்து தேர் தட்டிலிருந்து இறங்கிக் கண்ணனைப் பலவாறு துதித்தார்.

கண்ணன் பீஷ்மரை நோக்கி, ''நீர் சுவேதனை அதர்மமாய் கொன்றீர். இனி தர்மப்போர் செய்ய வேண்டும்'' என்று கண்டித்தார். அதனோடு அன்றைய போர் முடிந்தது. இரவி மேலைக் கடலில் மறைந்தான்.

### நான்காம் போர்ச் சருக்கம்

முந்தின நாளைப் போலவே இரு சாராரும் அணி வகுத்து நின்றனர். துரியோதனனும் தம்பியரும் வீமனை

வனைத்துத் தாக்கினர். சகுனியும் சல்லியனும் உதவிக்கு வந்தனர். பாண்டவர் பக்கம் இருந்து நகுலனும் அபிமன்யுவும் துணைக்கு வந்தனர். கடும்போர் நடந்தது. பகதத்தனும் கடோற்கசனும் மற்றொரு பக்கம் போரிட்டனர். கடோற்கசன் செய்யும் போரைக் கண்டு தேவர்களும் அதிசயித்தனர். இரவு வந்தது. போர் நின்றது. துரியோதனன் தம்பியர் ஐவரை இழந்தான். பீஷ்மர் ஆறுதல் கூறினார். காந்தாரி கலங்கி அழுதாள்.

**குறிப்பு:-**

அபிமன்யு அருச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் பிறந்தவன் பாரத வீரர்களுள் தலை சிறந்தவன். உத்தரையின் கேள்வன். பாரதப் போரின்போது அவன் பதினாறு வயது இளங்காளை காண்டீபனைப் போன்ற கட்டழகும் வில்லாற்றலும் வாய்க்கப்பெற்றவன். கௌரவ சேனையில் பெருஞ்சேதத்தை விளைவித்தவன். பதின்மூன்றாம் நாட்போரில் பகைவர்களால் வஞ்சனையாகக் கொல்லப்பட்டான்.

## ஐந்தாம் போர்ச் சருக்கம்

ஐந்தாம் நாட்காலை மேகக் கூட்டங்கள் போல் படைகள் திரண்டன. தாரைகள், சங்குகள், சின்னங்கள், எக்காளங்கள், முரசங்கள் ஆகியவை முழங்கின. வாளும் வேலும் பிரகாசித்தன. அம்புமாரி பொழிந்தது. ரத்த வெள்ளம் பெருகியது. விஜயனும் பீஷ்மரும் போரில் இறங்கினர். பின்னர் அசுவத்தாமனும் அருச்சுனனும் அமரில் ஈடுபட்டனர். துச்சாதனனும் சகுனி சல்லியர்களும் பின் தொடர்ந்தனர். வீமன் உக்கிரமாகப் போரிட்டான். அவனுக்குச் சமமாகப் போரிட முடியாமல் புறங்காட்டி ஓடினர். துரியோதனன் மனம் தளர்ந்தான். கதிரவன் மேலைத் திக்கில் ஒளிந்தான். அவரவர் பாசறைக்குச் சென்றனர்.

குறிப்பு:—

சல்லியன் மத்திர தேசாதிபதி. சிறந்த போர்வீரன். நகுல சகாதேவர்களின் தாய் மாமன். பாண்டவர்களுக்கு உதவுவதற்காகப் பெருஞ்சேனையுடன் வந்து கொண்டிருந்த போது ஏமாந்து துரியோதனன் பக்கத்தில் சேர நேர்ந்தது என்பதை முன்னர்க் கூறினோம். துரியோதனன் வற்புறுத்தியதால் விருப்பமில்லாமல் கர்ணனுக்குச் சாரதியாகவும் பணியாற்றினான். பதினெட்டாம் நாட்போரில் தர்மனால் கொல்லப்பட்டான்.

## ஆறாம் போர்ச் சருக்கம்

ஆறாம் நாட் காலை திருஷ்டத்துய்மன் தன் சேனையை மகரவியூகமாக அணி வகுத்தான். கௌரவ சேனை கிரவுஞ்ச வியூகமாக அணி வகுத்து நின்றது. துரோணர் வீமன் மீது அம்புப்போர் தொடுத்தார். சேனைகள் வீமனைச் சூழ்ந்து கொண்டன. வீமன் சேனைகளை விரட்டியடித்தான். நெருப்புப்பொறி பறந்தது. துரியோதனனும் தம்பியரும் தாக்கு தலை எதிர்த்து நிற்க மாட்டாமல் திரும்பி ஓடினர். அபிமன்யுவும் விகர்ணனும் மற்றோர் புறம் போரிட்டனர். துணைக்கு வந்தவர்களைத் துரத்தியடித்தான். மாலை பொழுதாயிற்று. போரை நிறுத்திவிட்டு அனைவரும் பாசறைக்குச் சென்றனர். அபிமன்யுவை அனைவரும் பாராட்டினர்.

## ஏழாம் போர்ச் சருக்கம்

ஏழாம் நாட் காலை அமர்க்களம் பெருமுழக்கத்துடன் காட்சியளித்தது. பாண்டவர் சேனை சர்ப்ப வியூகத்திலும் கௌரவர் சேனை சகட வியூகத்திலும் அணிவகுத்து நின்றன. கடோத்கஜன் வீரத்துடன் போரைத்துவக்கினான். வீமன் தன்னை எதிர்த்த சகுனியும் சல்லியனும் தோற்றோடு மாறு செய்தான். மற்றொரு புறம் விஜயனும் பீஷ்மரும்

அம்புப்போர் செய்தனர். சம பலமானவர்கள் ஆகையால் வெற்றி தோல்வி ஏற்படவில்லை. துணை மன்னரில் பலர் மாண்டொழிந்தனர். யானைகள் மடிந்தன. குதிரைகள் பல காயமுற்றன. தேர்கள் சீரழிந்தன. சூரியன் மறைந்தது அன்றைய போர் அதோடு நின்றது.

## எட்டாம் போர்ச் சருக்கம்

இரு பக்கத்துப் படைகளும் போர்க்களத்தில் திரண்டன. தர்மபுத்திரர் போர்க்களத்திற்கு வந்தார். பீஷ்மர் தன் சேனையைத் தூசி வியூகமாக அணிவகுத்தார். திருஷ்டத்துய்மன் பாண்டவ சேனையைச் சகட வியூகத்தில் நிறுத்தினான். துரியோதனன் வீமனையே குறிக்கோளாகக் கொண்டு நோக்கினான். கோபங்கொண்ட வீமன் வீரத்துடன் போரிட்டான். துரியோதனனது தம்பியர் எண்மர் அன்று மடிந்தனர். துரியோதனன் பீஷ்மரிடம் முறையிட்டான்; புலம்பினான்.

''வருந்தாதே!'' என்று பீஷ்மர் ஆறுதல் கூறினார். ''பாண்டவர் பக்கம் தருமம் துணை செய்கிறது. நீ அதர்மத்துக்கே பாடுபடுகிறாய். கவலைப் படாதே; தைரியமாய் இரு'' என்று கூறித்தேர் ஏறினார்.

கடோத்கஜன் மாயப்போர் புரிந்தான். கள பலியாகத் தன் அவயங்களை அறுத்துக் கொடுத்த அரவான் கண்ணன் அருளிய வரபலத்தால் ஒருபுறம் கௌரவப்படைகளை மோதி அழித்துக் கொண்டிருந்தான். அலம்பசன் என்னும் அரக்கன் சமயம் பார்த்து ஓடிவந்து அரவானை வாளோச்சி இரு துண்டாக்கினான். அருச்சுனன் பெருந்துயருற்றான்.

செய்தி கேட்டு அபிமன்யு ஓடிவந்தான். பகைவர் பலரைக் கொன்று குவித்தான். வீமன், துரியோதனன்

தம்பிமார் எழுவரைத் தரையில் தேய்த்தான். துரியோதனன் தலை குனிந்து சென்றான். சூரியன் மறைந்தான்.

குறிப்பு:— அரவான் அருச்சுனனுக்கும் உலூபிக்கும் பிறந்தவன். 32 லட்சணங்களும் பொருந்தியவன். அதனால் தான் போரில் வெற்றியுண்டாகப் பாண்டவர்கள் காளிக்கு இவனைக் களபலி செய்தார்கள் என்று முன்பு கூறினோம்.

## ஒன்பதாம் போர்ச் சருக்கம்

துச்சாதனன், சகுனி, கர்ணன் இவர்களை அழைத்துத் துரியோதனன் ஆலோசனை செய்தான். ''தம்பிமார் ஒவ்வொருவராக மடிகின்றனர். எதிரிகள் பலத்தோடுபோரிடு கின்றனர். இனி என்ன செய்வோம்?'' என்று கேட்டான். கர்ணன் ஆறுதல் கூறினான்.

பீஷ்மர், பகதத்தன், அலம்பசன், துரியோதனன் இவர்களை முன்னால் நிறுத்திச் சேனைகளைச் சர்வதோ பத்திர வியூகமாக அணிவகுத்துப் பெரும் போர் குறித்து நின்றார். அரவானை அலம்பசன் கொன்றதனால் வீமனும் அருச்சுனனும் கோபங் கொண்டு அமர்க்களத்திற்கு வந்தனர்.

திருஷ்டத்துய்மன் சேனையை யசல வியூகமாக அமைத்தான். போர் ஆரம்பமாயிற்று. வீமனும் அலம்பசனும் மலைந்து பொருதார்கள். அலம்பசன் வாளேந்திக் கர்ஜித்தான். வீமனும் வாளேந்திப் போரிட்டான். கத்தியும் கேடயமும் கொண்டு இருவரும் கடும் போர் புரிந்தனர். பின்னர் மற்போர் விற்போர் ஆகியவற்றைச் செய்தனர். அச்சமயம் அபிமன்யு ஒரு வட்ட வேலை எறிந்து அலம்பசனைக் கொன்றான்.

பீஷ்மர் வெகுண்டெழுந்து விராட மன்னன் தம்பியாகிய சதானிகனைக் கொன்று வீழ்த்தினார். இரவு வந்தது. போரை நிறுத்திச் சேனைகள் ஓய்வு பெறச் சென்றன.

## பத்தாம் போர்ச் சருக்கம்

பத்தாம் நாட் போர் முக்கியத்துவம் வாய்ந்தது. கௌர வர்களின் முதல் சேனாதிபதியும் பிதாமகருமான பீஷ்மர் அருச்சுனன் அம்பால் அடிபட்டு, அம்புப் படுக்கையிலிருந்து நல்லுபதேசம் செய்த நாளாகும். இரு திறத்துச் சேனை களும் காலையில் வழக்கம் போல போர்க்களம் புகுந்தன. முதல் வரிசையில் மன்னர்கள் அணிவகுத்து நின்றனர். பீஷ்மர் முந்தின நாளைப் போலவே அணி வகுத்து நின்றார்.

கண்ணபிரான் காண்டீபனைப் பார்த்து, "இன்று பீஷ்மரை வீழ்த்த வேண்டிய நாள். இதனை மறந்து விடாதே!" என்று நினைவுறுத்தினார். பீஷ்மர் ஆரம்பத்தி லேயே வீரப் போர் புரிந்தார். எதிர்த்து வந்தவரை விரட்டி யடித்தார். பலரும் அதிசயித்து நின்றனர்.

அருச்சுனன் தேர் பீஷ்மர் முன் வந்து நின்றது. இதை யறிந்த துரியோதனன், பீஷ்மருக்குத் துணையாகப் பல வீரர்களை அனுப்பினான். அவர்கள் அருச்சுனனை வளைத் துக் கொண்டனர். கண்ணபிரான் மிகச் சாமர்த்தியமாகத் தேரைச் செலுத்தினார். அருச்சுனன் நாலாதிசைகளிலும் திரும்பிப் போர் புரிந்தான்.

இச்சமயத்தில் வீமன் பகைவர் சேனையின் நடுவில் புகுந்து நொறுக்க ஆரம்பித்தான். தேர்களை எடுத்தெறிந் தான். யானைகளை வீழ்த்தினான். குதிரைகளைச் சாடி னான். பகைவர் சேனைகளைச் சிதறடித்தான். வீமனுக்கு எதிர் நிற்க முடியாமல் படைகள் ஓடத்தலைப்பட்டன.

பீஷ்மர் தனது முழு பலமும் காட்டிப் போரிட்டார். கண்ணன் காண்டீபனை உற்சாகப்படுத்தினார். சிகண்டியை அழைத்துப் பீஷ்மர் கண்ணெதிரில் நிறுத்தினார். சிகண்டி யின் தலையைக் கண்டவுடனே பீஷ்மர் அம்பை என்னும் பெண்ணின் பகை மீளவும் வந்து விட்ட தென்று குனிந்து

நகைத்துத் தமது ஆயுதத்தைத் துறந்தார். தேர்மீது வெறும் கையுடன் நின்று விட்டார்.

31. காதிவெங் கொடும்பகழி ஏவுதிண் சிகண்டிதலை
காணலும் குனிந்து நகையா
ஆதிஅம்பை இன்றுபகை மீளவந்த தென்றுதனது
ஆயுதம் துறந்து விரைதேர்
மீதுகங்கை மைந்தன்ஒரு தான்வெறுங்கை
நின்றளவில்
மேல்நடந்து சென்று பொருதுச்
சாதனன் சரங்கள்பல தூவினன் பரிந்தெதிரி
சாபமும் துணிந்து விழவே.

ஆண் பெண்ணுருக் கொண்டால் பேடியென்றும், பெண், ஆண் உருக்கொண்டால் சிகண்டி என்றும் கூறுவர். அம்பை என்பவள் பீஷ்மர் மீது பகை கொண்டு, அவரைக் கொல்வதற்காகவே தவம் இயற்றிச் சிகண்டியானாள் என்று முன்பே கூறியுள்ளோம். பெண்ணின் மீது அம்பு எய்வது ஆண்மையாகாது என்ற காரணத்தால் பீஷ்மர் சிகண்டியைக் கண்டதும் வில்லைக் கீழே போட்டு விட்டார்.

இந்தச் சமயம் பார்த்து அருச்சுனன் கணை தொடுத்து எதிரியின் வில்லைத் துணித்தான். பீஷ்மர் பரந்தாமனைப் பார்த்த வண்ணமே அவன் நாமங்களை நவின்றார். நெஞ்சழிந்தது. நாக்குழன்றது. அம்புகள் அவர் உடலைத் துளைத்தன. தேர்த்தட்டில் விழுந்து விட்டார்.

இச்செய்தி எங்கும் பரவியது. கண்ணனும் காண்டீபனும் அவர் அருகில் சென்றனர். கண்ணீர் விட்டனர். இரு திறத்துப் படையினரும் வந்து கூடினர். பீஷ்மர் தாம் வீழ்ந்த காலம் தட்சணாயனம் ஆதலின் உத்தராயனம் வந்த பிறகே தனது உயிர் பிரிய வேண்டும் என்ற ஒரு கருத்தினால் அதுவரை உயிர்போகாமல் தடுத்து நிறுத்தினார். அழுத வீரர்களை நோக்கி, ''அஞ்சாதீர்கள், பழையவினையை

ஒவ்வொருவரும் அனுபவிக்கத்தான் வேண்டும். இந்த அம்புப் படுக்கையிலேயே இருந்து உத்தராயணம் வந்த பிறகு என் உயிரை விடுவேன். துரியோதனா! கர்ணன் வில்லில் வல்லவன், போருக்குச் சிறந்தவன். நாளையிலிருந்து அவனைப் போரிடச் செய்வாய்'' என்று சொன்னார்.

பாரதப் போர் மார்கழியில் நடந்தது. தை மாதம் பிறந்ததும் தனது உயிர் போவது நல்லது என்று கருதிய பீஷ்மர் அதுவரை அம்புப்படுக்கையில் உயிரோடு இருந்தார். சூரியன் அஸ்தமித்தான். போரை நிறுத்திவிட்டு இரு திறத்தாரும் பாசறை சேர்ந்தனர்.

# 7. துரோண பருவம்

துரோணர் ஐந்து நாள் சேனாதிபதியாக இருந்தார். பதினொன்றாம் நாள் போரிலிருந்து பதினைந்தாம் நாள் போர்வரை நடந்த நிகழ்ச்சிகளைக் கூறும் பகுதி இது.

## பதினொன்றாம் போர்ச் சருக்கம்

துரியோதனன், 'பனைக் கொடியுடைய பாட்டனாருக்குப் பிறகு மறைக் கொடியுடைய மாதவன் சேனாதிபதியாகட்டும்' என்று சொல்லித் துரோணரை அணுகி, ''ஆசாரியரே! நாளை முதல் தாங்களே சேனாதிபதியாய் இருந்து போரை நடத்த வேண்டும்!'' என்று பத்தாம் நாள் இரவு கேட்டுக் கொண்டான்.

பதினொன்றாம் நாள் காலை துரோணர் சேனாதிபதியானார். சேனைகள் திரண்டு நின்றன. துரியோதனன்

பரிவாரங்களுடன் போர் முனைக்கு வந்தான். துரோணர் தமது சேனையைச் சகட வியூகமாக வகுத்தார். பாண்டவர் சேனையைத் திருஷ்டத்துய்மன் கிரவுஞ்ச வியூகமாக வகுத்தான். போர் மூண்டது. மாரி போல் கணைகள் பொழிந்தன.

சகாதேவனும் சகுனியும் ஒருபுறம் போரிட்டனர். சகுனி தோல்வியுற்றுப் புறங்காட்டி ஓடினான். மற்றொரு புறத்தில் துரியோதனனும் வீமனும் போரிட்டனர். துரியோதனன் அடிபட்டுத் தளர்ச்சியுற்றான். மன்னர்கள் துணைக்கு வந்தனர். வீமன் அவர்களைத் துரத்தியடித்தான்.

துரியோதனன் மகன் இலக்கண குமாரனும் அபிமன்யுவும் ஒரு பக்கம் சண்டை செய்தனர். இலக்கண குமாரனை அபிமன்யு சிறைபடுத்தித் தேர்மீது ஏற்றிக் கொண்டு சென்றான். அதனைப் பார்த்திருந்த சிந்து தேசாதிபதி சயத்திரதன் அபிமன்யுவைத் தடுத்து அமர் செய்தான். கர்ணன் முதலிய அதிரதர்கள் வந்து சூழ்ந்து கொண்டனர். அபிமன்யு அனைவரையும் எதிர்த்து நின்று போரிட்டான். இதற்கிடையில் இலக்கண குமாரன் தப்பி ஓடி விட்டான். அன்று பகற்பொழுது அதோடு கழிந்தது.

அன்றிரவு பாசறையில் துரியோதனன் சபை கூட்டினான். ''ஆச்சாரியரே! மன்னர்களே!! இன்று என் மகனை அபிமன்யு சிறைப்பிடித்துச் சென்றது பெரிய அவமானமாகும். இதற்குப் பரிகாரமாக நாளைப் போரில் தருமபுத்திரனை உயிருடன் சிறைப்பிடித்துக் கொண்டு வர வேண்டும்'' என்றான். துரோணர் கூறுவாராயினார், ''துரியோதனா! தருமனை சிறைப்பிடித்தல் என்பது மிகவும் கடினம். ஆனால் நாளையதினம் வீமனையும் விசயனையும் அப்புறப்படுத்தித் தருமன் தனியாக இருக்கக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினால் தருமனைச் சிறைப்பிடிக்கஇயலும்!' என்றார். அவ்வாறே உதவி செய்வதாக மன்னர்கள் வாக்களித்தனர். சபை கலைந்தது. அரவக் கொடியோன் உறங்கச் சென்றான்.

## பன்னிரண்டாம் போர்ச் சருக்கம்

ஒற்றரால் இச்செய்தி தர்மபுத்திரனுக்கு எட்டியது. அவர் கண்ணபிரானோடு கலந்து ஆலோசித்தார். போர் வழக்கம் போல் காலையில் ஆரம்பமாயிற்று. கண்ணபிரான், வீமனும் விஜயனும் தருமனை விட்டுப் பிரியாதிருக்கத் தக்க ஏற்பாடு களைச் செய்தார். கௌரவ சேனை மகரவியூகமாக அணி வகுக்கப்பட்டது. திரிகர்த்தன் விசயனை அறைகூவிப் போருக்கு அழைத்தான். தமையனுக்குத் தக்க பாதுகாவலை அமைத்துவிட்டு, விசயன் திரிகர்த்தனோடு போரிட ஆரம்பித் தான். கடும்போர் நடந்தது. துரோணர் துணை மன்னர் களோடு தருமனை நாடிவந்தார். சேனாதிபதியாகிய திருஷ் டத்துய்மன் பல மன்னர்களை மடிவித்தான்.

துரோணர் கடுங்கோபங்கொண்டு திருஷ்டத்துய்மனின் சேனைகளை விலக்கிக் கொண்டு தருமனை நோக்கிச் சென் றார்; தடுத்து நின்ற துருபதன் வில்லறும்படி செய்தார்; நகுல சகாதேவர்களும் உடைந்து போனார்கள். தருமராசனுக்கு எதிரில் வந்து நின்றார். தருமனும் போர் செய்யத் தொடங் கினார். இருவரும் உக்கிரமாகப் போரிட்டனர். சதுரங்க சேனைகளும் பட்டுவீழ்ந்தன.

துரோணர் மயங்குமாறு தருமர் பல அம்புகளை விடுத் தார். தேரின் கொடி அறுந்தது. சாரதி சாய்ந்தான். துரோணர் கலங்கினார். பின்னடைந்து விலகினார். புறமுதுகு காட்டி ஓடினார். என்றாலும் மறுபடியும் வேறோர் தேரில் ஏறித் தருமனை நாடி வந்தார். விராடன் திருஷ்டத் துய்மன், குந்திபோஜன் முதலியோர் துரோணரை எதிர்த்து நின்றார்கள். துரோணருக்கு உதவியாகக் கர்ணனும் சகுனி யும் கலிங்கமன்னனும் வந்தார்கள்.

மறுமுறையும் துரோணர் தோல்வியே கண்டார். துரியோதனன் கடுங்கோபங்கொண்டான். அவனே தருமனை

நோக்கி வந்தான். அபிமன்யு தடுத்து நிறுத்தினான். துரியோதனன் தோற்றுஓடினான்.

அசுரகுலபதி பகதத்தன் தருமனை நாடி வந்தான். வீமன் தடுத்து நிறுத்தினான். உதவிக்கு விஜயனும் வந்து சேர்ந்தான். விஜயன் அக்கினி அஸ்திரத்தை ஏவினான். அசுரன் பிணமானான். அவன் ஏறி வந்த யானையும் மாண்டது. மூன்றாம் முறையும் கௌரவர் முயன்றனர். சகுனி பெரும் படையுடன் வந்தான். தருமன் விடுத்த அம்பு களுக்கு ஆற்றாது தோற்றோடினான். பெருந்தலைவர்களும் வந்து, திரும்பிப்போயினர் சூரியன் மறைந்தது. அன்றைய போர் அத்தோடு முடிந்தது.

அன்றிரவு நடந்த பாசறைப் பேச்சில் துரியோதனன் துரோணரை இகழ்ந்துரைத்தான். கர்ணனும் கேலி செய்தான். துரோணருக்குக் கோபம் மிகுந்தது. ''தருமரை உங்களால் சிறைப்பிடிக்க முடியாது'' என்று தீர்மானமாகக் கூறினார். வேறு வழியின்றி அரவக்கொடியோன் உறங்கச் சென்றான்.

## பதின்மூன்றாம் போர்ச் சருக்கம்

பதின்மூன்றாம் நாள் போர் மிக முக்கியமானது. அபிமன்யு வஞ்சனையாகக் கொல்லப்படுதல், விஜயன் வஞ்சினங்கூறுதல், கடோற்கசன் தூது செல்லுதல் முதலியன இப்பகுதியில் இடம் பெறுகின்றன.

அரவக்கொடியோன் ஆணையின்படி மன்னவர் பலரும் மாவீரன் விஜயனைத் தாக்க முற்பட்டனர். துரோணரும் முனைந்தார். பாண்டவர் தமது சேனையை மகரவியூகமாக அமைத்தனர். போர் ஆரம்பமாயிற்று. கிரீடி போர்க் களத்தைச் செங்களமாக்கினான். துரோணர் வீரத்துடன் போரிட்டார். திருஷ்டத்துய்மன் துரோணருக்கு ஆற்றா னாகிப் பின் அடைந்தான். தருமர் அவனுக்கு ஆறுதல் கூறி ஊக்கப்படுத்தினார்.

அபிமன்யுவைப் பார்த்து, ''குழந்தாய்! எதிரிகள் சக்கர வியூகம் அமைத்துள்ளனர். மிகுபக்குவமாகச் சென்று திரும்ப வேண்டும்'' என்று தருமர் உபாயங் கூறினார். அவ்வாறே வீர அபிமன்யுவும் போருக்குப் புறப்பட்டான். ஒற்றைத் தேருடன் புகுந்தான். முன் நிற்பவர்களை எதிர்த்தான். துரோணர் தடுத்து நின்றார். பாணங்களைப் பொழிந்தான் இளைஞன்... துரோணர் எதிர் நிற்க முடியாமல் பின்னடைந் தார். அத்தடையைக் கடந்து உள்நுழைந்தான். அஸ்வத் தாமன் எதிர்த்து நின்றான். வீரம் பேசினான். கடுங்கணை களை விடுத்தான். அபிமன்யு அசுவத்தாமனையும் புறங் கண்டு அடுத்த கட்டத்திற்குச் சென்றான்.

மூன்றாம் ஆரையில் நிற்பவன் கர்ணன், தற்புகழ் பேசி னான். அவனையும் கடந்து சென்றான் வீரஅபிமன்யு. அடுத்த ஆரையில் கிருபர் இருந்தார். அவரையும் கடந்து சென்று, எதிர்த்தவர்களைத் தோற்று ஓடச்செய்தான். சக்கர வியூகத்தின் மத்தியில் தன்னந்தனியனாய் அபிமன்யு அகப்பட்டுக் கொண்டதை வீமன் கண்டான். மைந்தனுக்கு உதவியாகச் செல்ல முற்பட்டான். வீமனை முன்னேறவொட் டாமல் பல தேசத்து மன்னர்கள் தடுத்து நின்றனர். வீமன் இவர்களுடன் போர் புரிந்து கொண்டே முன்னேறினான். மேலும் மேலும் சேனைகள் வந்து கொண்டேயிருந்தன. ஓய்வு இல்லாமல் யுத்தம் நடந்து கொண்டேயிருந்தது.

அபிமன்யுவும் வீமனும் ஒன்று சேரவிடாமல் தடுப்பதற் காகத் துரியோதனன் ஒரு வஞ்சகச்செயலைச்செய்ய முனைத் தான். சிந்துதேசாதிபதியை அழைத்து, ''சிவபக்தியில் சிறந்த வீமனுக்குத் தடையாகக் கொன்றை மாலையை நடுவே கிடக்கும்படி செய். அபிமன்யுவை நெருங்கமுடியாமல் வீமன் மயங்கி நிற்பான். அச்சமயம் பெருங்கதை கொண்டு சிறுவனைத் தாக்கிக் கொல்ல வேண்டும்!'' என்றான். சிந்து தேசாதிபதி அவ்வாறே கொன்றை மாலையைக் குறுக்கே போட்டான். சிவபெருமான் அணியும் கொன்றைமாலை

குறுக்கிட்டமையால் அதைத் தாண்டிச் செல்ல முடியாமல் இருவரும் தவித்தனர். துரியோதனன் மகன் இலக்கண குமாரன் அபிமன்யுவுடன் போர் புரிந்து மாண்டான். செய்தி கேட்டு அரவக்கொடியோன் கண்ணீர் சொரிந்தான்; கதறினான்.

மன்னர் பலர் அபிமன்யுவைச் சூழ்ந்து கொண்டனர். அதர்மப் போர் ஆரம்பமாயிற்று. சிந்து தேசாதிபதி சயத்திரதன் பரமசிவன் கொடுத்த கதையை வீசி எறிந்தான். அந்தச்சிவதண்டம் சிறுவனைத் தகர்த்தது. அபிமன்யு கீழே விழுந்துவிட்டான். உயிர் போய் விட்டது.

அபிமன்யு மாண்டு விழுந்தானாயினும் அவனது பெயரும்,வீரமும்,புகழும் மாண்டு போகவில்லை.' அபிமன்யு அதர்ம யுத்தத்தால் அடிபட்டான்' என்று தருமர் அறிந்து மூர்ச்சையானார். பின்னர் மூர்ச்சை தெளிந்தார். வாய்விட்டு அழுதார். பகற்பொழுது கழிந்தது. தென் திசையிலிருந்து பார்த்தன் பாசறைக்கு வந்து சேர்ந்தான். செய்தி அறிந்து, ''என் செய்வேன் மகனே!'' என்று அழுதான். மூர்ச்சையுற்ற விஜயனைக் கண்ணன் தேற்றினார்.

''நாளை சூரியன் அஸ்தமனத்திற்குள் அபிமன்யுவைக் கொன்ற சிந்து தேசாதிபதியைக் கொன்றிடுவேன்,அவ்வாறு கொல்லேனாயின் அக்கினியில் வீழ்ந்து மாள்வேன்!'' என்று விஜயன் சூளுரைத்தான்.

நால்வரையும் சமாதானப்படுத்திவிட்டுக் கருட வாகனத்தில் அன்றிரவே கண்ணபிரானும் காண்டீபனும் கயிலைக்குச் சென்றனர். கண்ணுதற் பெருங்கடவுளைக் கண்டு வழிபட்டனர். சிவபெருமான் அருச்சுனனைப் பார்த்து, ''நீ சயித்திரதனைத் தெறும் பொருட்டு எப்போது நினைப்பாயோ அப்போது இவை வரும்'' என்று வில்லும், அம்பும்,தூணியும் கொடுத்து அவற்றிற்குரிய மறைகளும் உபதேசித்தார். பிறகு கருடன் மீதேறி இருவரும் பாசறையின் சமீபம் வந்த போது விடியற்காலமாய் இருந்தது.

கண்ணபிரானும் காண்டீபனும் கயிலையை நாடிப் புறப்பட்ட பிறகு தருமபுத்திரன் தம்பியருடன் கலந்து பேசி, கடோற்கசனை அழைத்து, ''மகனே! நீ பகைவர் பாசறைக்குச் சென்று, இங்குற்ற செய்தியை அவரிடம் சொல்லிவா!'' என்றார்.

கடோற்கசன் நகைத்து, ''வஞ்சம் படக்கொன்ற மாபாவியிடம் உண்மையைச் சொல்ல வேண்டுமா? இது அறனும் அன்று அழகுமன்று'' என்றான். ''நாம் நெறி தவறாமல் நடக்க வேண்டியது நமது கடமையாகும். நாளை உலகம் நம்மைப் பழிக்காதவாறு நீ இப்போதே போய்ச் சொல்லிவா!'' என்று தருமன் கூறி அனுப்பினார்.

## கடோற்கசன் தூது

பெரிய தந்தை கூறியவற்றைச் சிரமேற்கொண்டு கடோற்கசன் பகைவரது பாசறைக்குச் சென்றான். உரத்த குரலிற் கூறலானான். அரவக் கொடி அரசே! மற்றும் இங்குள்ள மன்னர்களே! கேளுங்கள். நான் வீமன் மகன் கடோற்கசன். பாண்டவர் தூதுவனாக இங்கு வந்துள்ளேன். தருமபுத்திரர் சொல்லியனுப்பிய செய்தி இதுவாகும். கேளுங்கள்:—

''தன்மகன் அபிமன்யுவின் முடியைத் துணித்துத் தள்ளிய சயத்திரதனை நாளை அமரில் சூரியன் மறைவதற்குள் கொல்வேன்; அது தப்பினால் அக்கினியிற் பாய்வேன் என்று விசயன் கூறிவிட்டுக் கயிலாயம் சென்றுள்ளான் என்னும் இச்செய்தியை நீங்கள் அறியுமாறு தருமபுத்திரன் உங்களுக்கு எச்சரிக்கையாகச் சொல்லியனுப்பினார். ஏனென்றால் வஞ்சனையால் அமரிற் கொல்வது பாதகமென்று அஞ்சினார். நாளை நிச்சயமாக உன் மைத்துனன் இறந்தான் என்று கொள்ளக்கடவாய்'' என்று கடோற்கசன் கூறினான். (குறிப்பு: சிந்து தேசாதிபதி சயத்திரதன் துரியோதனனின் மைத்துனன்.)

துரியோதனன் வெகுண்டு, "சபைக்கு ஏற்றவாறு மரியாதையோடு பேசத் தெரியாத, அரக்கி மகனுடன் ஒன்றும் பேச வேண்டாம்" என்று அங்கிருந்த மன்னர்களிடம் கூறினான். அதற்குக் கடோற்கஜன் கூறிய விடையைப் பாருங்கள்.

"அரசே! நாங்கள் அரக்கர்கள் தாம்; என்றாலும் நாங்கள் வஞ்சனை எண்ணங் கொள்ள மாட்டோம்; போர் முனையில் வஞ்சகம் செய்யமாட்டோம்; உடன் பிறந்தவர்களுக்கு விஷங்கொடுக்க மாட்டோம். நீரில் கழுவை நட்டு வைத்துக் கொல்ல நினைக்க மாட்டோம். நீரில் அழுத்திக் கொல்ல முற்படோம். உடன் பிறந்தவர்களை ஓர் ஊரிலும் தங்கவிடாமல் அலற அடிக்க மாட்டோம். சொன்ன சொல்லையும் தப்ப மாட்டோம். .

"உடன் பிறந்தவர்களை அரக்கு மாளிகையில் வைத்துக் கொளுத்தமாட்டோம். ஒருவர் செய்த நன்றியை மறக்க மாட்டோம். பிறர்க்குத் தீங்கு நினைக்க மாட்டோம். பொறாமை கொள்ள மாட்டோம். உடம்பில் பயமும் அருளும் இல்லாமல் பொய்ச் சூது ஆடமாட்டோம். அண்ணன் மனைவியைச் சபையில் கொண்டு வந்து துகிலுரிய மாட்டோம். வனவாசம் செய்யச் சொல்லி, கொல்ல நினைக்க மாட்டோம். போர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடமாட்டோம். இவையெல்லாம் மன்னர் மன்னனாகிய தங்களுக்கே பொருந்துவனவாகும்!" என்று கடோத்கஜன் துரியோதனனைப் பார்த்து இடித்துரைத்தான்.

இவைகளைக் கூறிவிட்டு, கடோத்கஜன் தங்கள் பாசறைக்குத் திரும்பினான். துரியோதனன் துரோணரை நோக்கி, "சேனைகளை நன்கு வகுத்து, நாளை முப்பது நாழிகையும் நன்கு காத்திடவல்லீரானால் சயத்திரதனும் பிழைப்பான்; விஜயனும் அக்கினியில் விழுந்து படுவான்; நமதே வெற்றி." என்று வேண்டி நின்றான்.

கயிலைக்குச் சென்றவர்களும் கடோத்கஜனும் பொழுது விடியுமுன்னர் பாசறைக்கு வந்து சேர்ந்தனர். தாங்கள் பெற்று வந்த வெற்றிகளைக் கூறினார்கள். பொழுது விடிந்தது.

## பதினான்காம் போர்ச் சருக்கம்

இன்றைய போரும் முக்கியமானதுதான். எங்ஙன மெனில் அருச்சுனன் வெற்றியைக் குறித்து இரு சாராரும் எதிர்பார்த்தனர். கண்ணன் தன் கைச் சக்கரத்தால் கதிர வனை மறைத்தார். தனஞ்சயன் சிந்து தேசாதிபதியை வீழ்த்திய சிறப்புடையது.

காலையில் பேரிகைகள் முழங்கின. போர்க்களம் நிரம்பி யது. இன்றைய முடிவு எப்படியாகுமோ என்று அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். துரோணர் சயத்திர தனை வெகு தொலைவில் ஒரு பாதுகாவலான இடத்தில் இருக்கச் செய்து அவனைச் சுற்றித் தக்க காவல் அமைத் தார். சயத்திரதன் இருந்த இடத்தை நோக்கித் தனஞ் சயனது தேர் விரைந்தது. வழியில் எதிர்த்து நின்ற படை களை விலக்கிக் கொண்டே சென்றான்.

துரோணர் அளித்த இந்திர கவசத்தை அணிந்து துரியோதனன் சளைக்காமல் போரிட்டான். அருச்சுனனது அம்புகள் முனை மழுங்கி கீழே விழுந்தன. அதன் பின்னர் கண்ணன் கொடுத்த வேலாயுதத்தைப் பார்த்தன் ஏவினான். அது சென்று துரியோதனன் அணிந்திருந்த கவசத்தை மாத்திரம் அழித்தது. அதன் பின்னர் வந்தவர் அனைவரும் பின் வாங்கி ஓடினர்.

தருமபுத்திரர் விஜயனுக்கு உதவியாகச் சாத்தகி, வீமன் ஆகிய இருவரையும் ஒருவர் பின் ஒருவராக அனுப்பிவைத் தார். அவர்கள் தாம் சென்ற வழிகளில் எதிர்த்தோரை அழித்துக் கொண்டே சென்றனர். பற்குணன் இருந்த இடம்

போய்ச் சேர்ந்தனர். அஸ்தமனம் வரையில் இவர்களை எதிர்த்துக் கொண்டேயிருந்தால் பார்த்திபன் சபதம் பொய்த் துப்போகும் என்று கருதிய துரியோதனன் மேலும் மேலும் படைகளை அனுப்பிக் கொண்டேயிருந்தான். சயித்திரதனை நிலவரையில் ஒளித்து வைத்திருந்தனர்.

164 பாராழி அவலமறப் பாண்டவர்தம்
இடர்தீரப் பார்த்தன் வாழப்
பேராழி அணை துயிலும் பெருமிதமும்
உடன்மறந்து பிறந்த மாயோன்
ஓராழி எழுபரித்தேர் உடையானை
மாயையினால் ஒழிக்கத் தன்கைக்
கூராழி பணித்தலும்அக் களம்போலச்
சிவந்தன்அக் குடபால் எங்கும்.

கபடமும் வஞ்சமும் கொண்டுள்ளாரை அவற்றைக் கொண்டு வெல்லுதலே வழக்காறாகும். ஆதலால் கண்ணன் ஒரு மாயம் செய்தார். பூபாரம் தீரவும்,பாண்டவர்தம் துயரம் நீங்கவும், பார்த்தன் வாழவும் அவதரித்த கண்ணபிரான் சூரியனை மாயையினால் மறைக்க எண்ணினார். தனது சக்கரப் படையை ஏவினார். அது சென்று சூரியனை மறைத்தது. மேற்குத்திசை போர்க்களம் போல் சிவந்தது. சூரியன் அஸ்தமனமாகிவிட்டது என்று அனைவரும் முடிவு செய்தனர்.

போர் நின்றது. சயத்திரதன் பகற்பொழுது கழிந்து விட்டது என்று எண்ணிப் பெருமகிழ்ச்சியுடன் வெளிப் பட்டான். பெருங்கூட்டத்துடன் கோலாகலமாய்க் காண்டீ பன் இருக்குமிடம் வந்து சேர்ந்தான். இதுதான் தக்க சமயம் என்று கருதி அருச்சுனன் சரம் ஒன்றை ஏவி, சயத்திரதன் தலையைக் கொய்து, அதைச் செலுத்திக் கொண்டே போய் சமந்த பஞ்சகம் என்னும் மடுவில் தவம் செய்து கொண் டிருந்த அவன் தந்தையின் கையில் விழச்செய்தான். அவனும் மாண்டான்.

சூரியன் அஸ்தமித்துவிட்டான். விஜயன் தீக்குளிப்பான் என்று கௌரவர் மகிழ்ந்திருந்த நேரத்தில் சக்கரம் விலகிக் கண்ணபிரானிடம் வந்து சேர்ந்தது. சூரியன் வெளிப் பட்டான். இன்னும் ஒரு பனைப் பொழுது இருந்தது. யாவரும் பிரமித்து நின்றனர். துரியோதனன் திகைத்து நின்றான். ஏமாற்றமடைந்தான். ''பாண்டவரைக் கொல் லாமல் விடுவதில்லை'' என்று பொங்கி எழுந்தான். மறுபடி யும் போர் ஆரம்பமாயிற்று.

இரவிலும் போர் தொடர்ந்தது. அலாயுதன் என்னும் அரக்கன் துரியோதனன் பக்கம் போரிட்டான். அவன் வீமனு டன் போர் புரிந்தான். கடோற்கசன் தந்தைக்கு உதவியாக வந்து சேர்ந்தான். இருபெரும் அரக்கரும் போர் புரிந்தனர். துரியோதனன் ஏவலின்பேரில் கர்ணன் இரவுப் பொழுதில் அதர்மயுத்தத்தில் ஈடுபட்டு இந்திரன் கொடுத்த வேலா யுதத்தைக் கடோற்கஜன் மீது ஏவினான். அது கடோற்கஜன் மார்பைத் துளைத்துக் கொண்டு இந்திரனிடம் போய்ச் சேர்ந்தது. கடோற்கஜன் மாண்டான். பாண்டவர் கண்ணீர் விட்டுக் கலங்கினர்.

துரோணர் சென்று துருபதனைக் கொன்று விட்டார். உடனே திருஷ்டத்துய்மன், ''நீ இன்று என் பிதாவைக் கொன்றுவிட்டாய். நாளைய தினம் உன்னைக் கொன்று வீழ்த்துகிறேன் பார்'' என்று வஞ்சினம் கூறினான். இரு பக்கத்துச்சேனைகளும் பாசறைக்குச் சென்றன.

## பதினைந்தாம் போர்ச் சருக்கம்

காலையில் வழக்கம்போல் போர் தொடங்கியது. பாண்ட வர்கள் இன்று மும்முரமாய்ப் போரிட்டனர். துரோணர் கடும் போர் புரிந்தார். அதுசமயம் சொர்க்க லோக முனிவர்கள் துரோணர் முன் தோன்றினர். ''துரோணரே! தேவஞான மும் தபோபலமும் யோக நிலையும் பெற்ற தாங்கள் போரில் ஈடுபடுவதால் யாது பயன்?'' என்றனர். ஞான முதிர்ச்சி

பெற்றவராய்ப் போர் மேல் இருந்த ஊக்கம் குறைந்தது. தேக விடுதலையைக் கருதித் துரோணர் வாளா நின்று விட்டார்.

கண்ணபிரான் தருமனிடம் சென்று, ''வீமன் மாளவ மன்னனுடைய பட்டத்து யானையாகிய அசுவத்தாமாவைக் கொன்று விட்டான் என்று துரோணாச்சாரியார் காதில்விழும் படி உரக்கச் சொல்ல வேண்டும்'' என்று வற்புறுத்தினார்.

''தனது மகன் பெயரைக் காதில் கேட்டவுடன் துரோணாச்சாரியீார் தமது கையில் வில் அம்பு எடாமல் நின்று விடுவார். நீர் இதனை இப்போது செய்து, அவருக்குத் தேக விடுதலை நரவேண்டும்'' என்று விளக்கினார் கண்ணன்.

தருமபுத்திரர் இதைச் செய்வதற்கு மனம் பொருந்தாமல், ''கண்ணபிரானே இந்தப் பொய்யைக் கூறிப் போரில் வெற்றி பெற விரும்பவில்லை'' என்று மறுத்தார். ''துரோணருக்கு விடுதலை தருவதாகிய சிறந்த நன்மை இதில் அடங்கியிருக்கிறது. அதனால் தவறு ஒன்றும் இல்லை'' ஏ்ன்று பல நியாயங்களைக் கண்ணபிரான் தருமனுக்குக் கூறினார்.

தருமபுத்திரன் செய்வதாக ஒப்புக்கொண்டார். அவ்வாறே சொன்னார் 'அஸ்வத்தாமா ஹதா குஞ்சரகா'' என்பது வாக்கியம். இத்தொடரின் பிற்பகுதியைச் சொல்லும் போது கண்ணபிரான் சங்கநாதம் செய்தார். 'அஸ்வத்தாமா ஹதா' என்ற தொடர்தான் துரோணர் காதில் விழுந்தது. தன் மகன் அஸ்வத்தாமன் இறந்து விட்டான் என்று துரோணர் புத்திர சோகத்தால் மூர்ச்சையானார். தருமபுத்திரர் சொன்ன சொல்லைக் கேட்டவுடனே துரோணர் கையிலெடுத்த வில்லையும் அம்பையும் கீழே போட்டு இறந்தவர்போல் பிரமித்து நின்றார். இந்தச் சமயம் பார்த்து திருஷ்டத்துய்மன் எய்த பாணம் துரோணர் உயிரைக் கவர்ந்தது. துரோணர் சாய்ந்து விட்டார்.

இச்செய்தி எங்கும் பரவியது. அசுவத்தாமன் ஓடிவந்து அழுதான் அரற்றினான். திருஷ்டத்துய்மனைக் கொல்வேன் என்று போருக்கு எழுந்தான். அந்தச் சமயத்தில் வேத வியாசர் அவன்முன் தோன்றி அவனுக்கு உபதேசம் செய் தார். அஸ்வத்தாமன் கோபம் தணிந்தான். அஸ்தமன மாயிற்று.

போர் நிகழ்ச்சிகளைச் சஞ்சயமுனிவர் திருதராஷ்டி ரனுக்கு நேர்முக வருணனைப் போலவே சொல்லிக்கொண்டு வந்ததாகப் பாரதம் கூறுகின்றது. ''நாளை முதல் கர்ணன் தலைமையில் போர் நடைபெறும்'' என்று துரியோதனன் அறிவித்துச் சென்றான்.

★

# 8. கர்ண பருவம்

பாரதப்போர் பதினெட்டு நாட்கள் நடைபெற்றது. பீஷ்மர் பத்து நாட்களும், துரோணர் ஐந்து நாட்களும் போரை நடத்தினர். பதினாறு, பதினேழு ஆகிய இரண்டு நாட்களும் கர்ணன் தலைமையில் நடைபெற்றன.

## பதினாறாம் போர்ச் சருக்கம்

கர்ணன் தனது சேனையை மகர வியூகமாக அணிவகுத் தான். துரியோதனன் சேனையைச் சுற்றிப் பார்த்தான். திருஷ்டத்துய்மன் தனது சேனையைச் சக்ரவியூகமாக அணி வகுத்தான். வீமன் யானை மேலேறிப் போர் முகத்தில் வந்து நின்றான்.

கௌரவர் பக்கத்தைச் சேர்ந்த காசி மன்னன் தனது யானையின் மீதேறிப் போருக்கு எழுந்தான். வீமனும் காசி மன்னனும் பொறாது நின்றனர். தாக்கலும் மோதலும்,வலம் இடது திரிதலும் ஆகிய போர்ச் செயல்களில் ஈடுபட்டனர். விற்போர்கள், வேற்போர்கள் தொடர்ந்தன. பின்னர் கதைப் போர் நடந்தது. இறுதியில் காசி மன்னன் மாண்டான். சேனைகள் முறிந்தோடிப் போயின.

மற்றொரு புறத்தில் நகுலனும் கர்ணனும் போர் புரிந்தனர். குந்திதேவிக்குக் கொடுத்த வாக்குறுதியின்படி நகுலனைத் துன்புறுத்தாமல் கர்ணன் காண்டீபன் இருக்குமிடம் ஏகினான். இருவரும் போர் மலைந்தனர். கர்ணன் களைத்துப் பின்வாங்கினான்.

சல்லியனும் சாத்தகியும் போரிட்டனர். அலகைகள் நின்று கூத்தாடின. போர்க்களம் ரத்தக் களரியாயிற்று. ஆகாயத்தில் பருந்துகளும் கழுகுகளும் வட்டமிட்டன. அருச்சுனன் சித்திர சேனனையும் சஞ்சத்தகரையும் கண்ணபிரான் புத்திரர்களான நாராயண கோபாலர்களையும் வானுலகு ஏற்றினான்.

குறிப்பு:—

கண்ணன் பாண்டவர் பக்கமும் பலராமனும் யாதவ சேனைகளும் கௌரவர் பக்கமும் சேர்ந்து போரிட்டனர். ஆகவே அருச்சுனன் யாதவ சேனைகளைத் தாக்க நேர்ந்தது.

துரியோதனன் கோபங்கொண்டு ஓடிவந்தான். அவனைத் தருமபுத்திரர் தடுத்து நிறுத்தினார். இருவரும் போரிட்டனர். பெருஞ்சேதம் விளைந்தது. துரியோதனன் தோற்றோடினான். அஸ்தமிக்கும் நேரமாயிற்று. அவரவர் பாசறைக்குச் சென்றனர்.

## பதினேழாம் போர்ச் சருக்கம்

இரு பக்கத்துப் படைகளும் காலையில் போர்க் களத்தில் கூடின. திருஷ்டத்துய்மன் பாண்டவர் படையை அணி வகுத்து நின்றான். கர்ணன் தன் தேரைச் செலுத்தச் சல்லியன் வேண்டும் என்று துரியோதனனை வேண்டினான். இதைக் கேட்ட சல்லியன் கடுங்கோபங்கொண்டான். சல்லியன் அதைக் கௌரவக் குறைவாகக் கருதினான். அவன் மத்திர தேசாதிபதி. துரியோதனன் வற்புறுத்தலின் பேரில் கடைசியில் ஒப்புக்கொண்டான். எனினும் சரியாக ஒத்துழைக்கவில்லை. கடைசி நேரத்தில் கர்ணன் நிர்க்கதியாய் விடப்பட்டான்.

துரியோதனன் சல்லியனை அழைத்து வந்து கர்ணன் முன் நிறுத்தி இருவருக்கும் நேசமும் உறவும் காட்டி நின்றான். கர்ணன் மகிழ்ந்து சல்லியனைத் தழுவிக் கொண்டான். சல்லியன் நான்கு குதிரைகளைத் தேர்ந்தெடுத்து ரதத்தில் பூட்டினான். கர்ணன் தேரில் ஏறி அமர்ந்தான். தனது சேனையை அணிவகுத்தான். போரை ஆரம்பிப்பதற்கு முன் அந்தணர்க்கும் அறவோர்க்கும் தான தருமங்களைச் செய்தான்.

கர்ணன், ''சல்லிய நண்பரே! நான் நாகாஸ்திரமும் இந்திரவேலும் பெற்றுள்ளேன். கண்ணனுக்குச் சமமாக உன்னைச் சாரதியாகவும் பெற்றுள்ளேன்!'' என்று தன்னைத்தானே புகழ்ந்து கொண்டான். சல்லியனுக்கு இந்தத் தற்புகழ்ச்சி பிடிக்கவில்லை. எனினும் சல்லியன் துரியோதனனுக்காகத் தன் வேலையைச் செய்யலானான்.

இரு பக்கத்துச் சேனைகளும் போரில் ஈடுபட்டன. இரு திறத்திலும் சேதம் அதிகரித்தது. அச்சமயம் பார்த்துக் கர்ணன் திருஷ்டத்துய்மனை எதிர்த்தான். வெற்றி தோல்வி இல்லாமல் மலைந்தனர்.

கண்ணபிரான் விரைவாக அங்குத் தேரைச் செலுத்தி வந்தார். கர்ணனும் விசயனும் எதிரெதிரே முனைந்து நின்ற

னர். அம்பு மழை பொழிந்தது. மற்றொரு புறத்தில் துச்சாத னனும் அவன் தம்பியர் ஒன்பதின்மருமதம் படைகள் சூழ வந்து வீமனை எதிர்த்து நின்றார்கள். கடும் போர் நடந்தது. வீமன் வெறி கொண்டு அவர்கள் எல்லோரையும் கொன்று தீர்த்தான். கொக்கரித்தான், கூத்தாடினான்.

அன்றைய போரில் கர்ணன் மகன் விஷசேனனும் விஜய னால் கொல்லப்பட்டான். இச்செய்தியைக் கேட்டுக் கர்ணன் வருந்தினான். சல்லியன் ஆறுதல் கூறினான். துரியோதன னும் அங்கு வந்து உற்சாகப் படுத்தினான். கர்ணன் மனந் தேறி, ''என் மகன் தலையை என் எதிரே துணித்தவன் தலையை இன்றைய போரில் துணிக்கிறேன் பார்!'' என்று கூறிச் சீறியெழுந்தான். அருச்சுனனும் கர்ணனும் போர் முனையில் எதிர்த்து நின்றார்கள்.

இரு திறப்படைகளும் நெருங்கி மலைந்தன. கண்ண பிரான் அருச்சுனனைப் பார்த்து, ''நண்பா! இதென்ன? முனைந்து போர் செய்யாமல் சித்திரம் போல் அசையாமல் இருக்கின்றாய்?'' என்று கேட்டார். காண்டீபன், ''கண்ணா! அந்தச் சரக்கூட்டில் அடைந்து கிடக்கும் வீரன், என் கண் களுக்குக் கர்ணனாகத் தோன்றவில்லை. தருமன் போல் தோன்றுகிறான். இனிமேல் நான் அவனுடன் போர் செய்ய விரும்பவில்லை!'' என்றான்.

கண்ணன் அவனது மயக்கத்தைத் தெளிவிப்பதற்காகத் தருமன் இருக்குமிடத்திற்குத் தேரை ஓட்டிச் சென்று தருமனைக் காட்டினார். திரும்பவும் கர்ணன் இருக்குமிடம் வந்து சேர்ந்தனர். கர்ணனும் விசயனும் போரில் ஈடுபட்ட னர். அக்கினிதேவன் கொடுத்த வில்லையேந்தி அக்கினி அஸ்திரத்தைத் தனஞ்சயன் ஏவினான். கர்ணன் விட்ட வர்ணாஸ்திரம் அதை அவித்தது.இருவரும் பல தேவ அஸ்தி ரங்களைக் கொண்டு சண்டை செய்தனர்.

இருவருக்கும் சமப்போர் நடந்தது. கோபங்கொண்ட கர்ணன் நாகாஸ்திரத்தைக் கையில் எடுத்து பரிமள சந்தனம்

கமழும் தூபமும் தீபமும் கொடுத்துப் பூசை செய்து, வில்லில் தொடுத்து விசயனது கழுத்தைக் குறிவைத்து விடுத்தான்.

''மார்பில் குறிவைத்து விடுக'' என்று சல்லியன் சொல்லிய யோசனையைக் கர்ணன் ஏற்றுக் கொள்ளவில்லை.

நாகாஸ்திரம் வருவதைக் கண்ணபிரான் கண்டார். தேரைப் பன்னிரண்டு விரற்கடை அளவுக்குப் பூமியில் அழுத்திவிட்டார். விசயன் தலையைக் குறித்து வந்த நாகாஸ்திரம் தலைமேற்படாமல் கிரீடத்தின் மேற்பட்டுக் கிரீடத்தைத் தள்ளிவிட்டுச் சென்றது.

திரும்பி வந்த நாகாஸ்திரம் கர்ணனை நோக்கி இன்னொரு முறை விடும்படி வேண்டி நின்றது. கர்ணன் குந்திதேவிக்கு அளித்த வாக்கின்படி மறுபடி ஏவ முடியாது என்று மறுத்துவிட்டான். விஜயன் அம்பால் அந்நாகம் உயிர் துறந்தது.

நாகாஸ்திரம் தவறிப்போய் விஜயன் உயிர் தப்பி விட்டான் என்ற செய்தி பரவியது. கௌரவப்படைகள் கலைந்து ஓடின. சல்லியன் கர்ணனை வெறுத்துக் கூறித் தேரினின்றும் இறங்கினான். ''என் பேச்சைக் கேளாமல் அகம்பாவத்தால் கெட்டழிந்தாய். இனி நான் தேர் ஓட்ட முடியாது!'' என்று கூறிச் சென்றான்.

கர்ணன் வேறோர் தேரில் ஏறிக்கொண்டு போர் செய்யத்தொடங்கினான். உடம்பெல்லாம் அம்புகள் தைத்தன. தேர்மிசை சாய்ந்து விழுந்தான். எனினும் அவனுயிரை அவன் செய்துள்ள தர்மங்கள் காத்து நின்றன.

போரை நிறுத்திவிட்டுக் கண்ணன் வேதியர் உருக் கொண்டு கர்ணனிடம் சென்றார். அவன் செய்த புண்ணிய மனைத்தையும் தானமாகப் பெற்றார். அவன் மகிழுமாறு தன் சுய உருவைக் காட்டி அருளினார்.

''திருமாலே! போர்க்களத்தில் என் உயிரனைய நண்பன் துரியோதனனுக்காகத் தருமன் முதலிய என் தம்பிமாரோடு

போர் செய்து செஞ்சோற்றுக்கடன் கழித்தேன். தேவேந்திர னுக்குக் கவசகுண்டலங்களைக் கொடுத்தேன். யான் செய்த புண்ணியம் அனைத்தையும் உனக்கே கொடுத்தேன். வேறு கதியில்லாத யான் தவப்பயனால் வியக்கத்தக்க பெரு வாழ்வு அடைந்தேன்.

''ஆகாய கங்கை தோன்றின உனது திருவடிகளை வணங்கப் பெற்றேன். உமது திருவுளத்தால் மதிக்கப் பெற்றேன். உமது திருத்துழாய் மாலை, சந்தனம் முதலியன அணிந்த மார்பும் தோளும் என்னைத் தழுவிப் பொருந்தப் பெற்றேன். அருச்சுனன் அம்பால் வலிமையிழந்து விழுந்த பின்பும் நல்லறிவோடு உன் திருப்பெயரைச் சொல்லும் பேறு பெற்றேன். எனவே உலகில் பிறந்தவர்களில் பெருந்தவத்தி னால் பெறுதற்கரிய பேறுகள் எல்லாம் யான் பெற்று விட்டேன்'' என்று கர்ணன் நாராயணனைப் போர்க்களத் தில் காணப்பெற்று அகம் மகிழ்ந்தவனாய்ப் போற்றிக் கூறினான்.

## கர்ண மோட்சம்

கண்ணன் கர்ணனை நோக்கி, ''உன்னைப் பற்றிய பாசங்கள் எல்லாம் நீங்கிப் போயின. இனி உனக்குப் பிறப் பில்லை. உனது மனம் பற்றிய மூர்த்தியை இனித் தியானித் துக்கொண்டிருப்பாய்'' என்று கூறி மறைந்தார். பின்னர் கண்ணன் தன் சுய உருவோடு அருச்சுனன் தேர்மீது ஏறி னார். கர்ணன் மீது அஞ்சரீகமென்னும் கணையைத் தொடுத்து அவன் ஆவியைக் கவருமாறு ஆணையிட்டார்.

விஜயனும் அப்பாணத்தை எடுத்து வில்லில் தொடுத்துக் கர்ணனது உயிரினை லட்சியம் வைத்து ஏவினான். சூரியன் மேலைத் திசையில் விழுவதற்கு முன்பே அவன் உயிர் நீக்கப் பட்டது. கர்ணனும் தான் கடைசிக் காலத்திற்கண்ட கார் மேகக் கண்ணன் உருவையே தன் மனத்திற்குரிய காட்சி யாகக்கொண்டு, இதயத்தில் இருத்தி, இரு கண்களையும்

மூடி ''ஓம் நமோ நாராயணாய!'' என்று கூறி மலர்ந்த திருமுகத்தோடு மோட்ச மடைந்தான்.

குந்திதேவி வந்து சேர்ந்தாள். அலறி அழுதாள். கர்ணன் உடல்மீது விழுந்து அரற்றினாள். ''என் அருமை மகனே! என் ஆருயிரே! நான் என் செய்வேன்?'' என்று புலம்பினாள்.

துரியோதனன் துயருற்றான். பாண்டவர்கள் உண்மை அறிந்து புலம்பினர். தாயை நிந்தித்தனர். சூரியன் மறைந்தான். எல்லாம் கண்ணன் செய்த மாயை என்று பாண்டவர் ஒருவாறு ஆறுதல் பெற்றனர்.

பாண்டவரும் திரௌபதியும் கண்ணனைப் பார்த்துமனம் நொந்து பேசலுற்றனர். ''மாயக்கள்வ, மாமாயா! இப்பழிக்கெல்லாம் நீயே காரணம்; இவ்வுண்மையை நீ முன்னம் அறிந்திருந்தும் நாங்கள் அறியாமல் எங்கள் தாய்க்குச் சொல்லியிருந்தும் எங்கட்குச் சொல்லாமல் இருந்திட்டாயே! இதற்கு முன்னம் அறிந்திருந்தோமாயின் இந்தப் பிரமாணம் (விதி) விளைந்திருக்க ஏதுவில்லையே! வஞ்சனையால் எங்களைக் கொண்டே எங்கள் மூத்தவனைக் கொல்லத் துணிந்திட்டாயே! இதுவே உன் தந்திரமாகப் போயிற்று. முன்னும் பல கதைகள் இப்படிச் செய்தாய்! இப்போது யாமறிய இங்ஙனம் செய்திட்டாய்!''

268 ஆடகனைப் புதல்வனைக் கொண்(டு) அழிப்பித்தாய்
இலங்கை நகர்க்(கு) அரசை அன்று
வீடணனைப் பகையாக்கிக் கிளையுடனே
வீழ்வித்தாய் வேலை சூழ்ந்த
நாடறியப் புகுந்தெமக்கு நாயகமாம்
கன்னனையும் நரன்கை அம்பால்
ஈடழியப் பொருவித்தாய் இமையோர்கள்
வல்லவிர(கு) யார்வல் லாரே.

கன்னன்—கர்ணன்; விரகு—தந்திரம்; ஆடகன்—இரணியன்; நரன்—அருச்சுனன்; ஆடகம்—பொன்;

முன்யுகத்தில் இரணியனை அவன் புதல்வன் பிரகலா தனைக் கொண்டே அழிவித்தாய். அடுத்த யுகத்தில் இலங்கை நகர்க்கு அரசனாம் இராவணனை அவன் தம்பி விபீஷணனைத் துணைகொண்டே அழித்திட்டாய். இந்த யுகத்தில் இந்நாடறிய எங்கட்கு நாயகமாகிய கர்ணவள்ளல் பெருமானை அவன் தம்பிகளில் ஒருவனான இந்நரனைக் கொண்டே அழிவித்தாய். இவை எல்லாம் தேவர் செய்த உபாயத்தாலே தீர்ந்த தாயிற்று. எல்லாம் வல்ல சூத்திர ராகிய நீங்கள் இங்ஙனம் செய்யப் புகுந்தால் உங்களால் ஆட்டப்பட்டு ஆடும் பதுமைகள் ஆகிய நாங்கள் என்ன செய்ய முடியும்? எங்களையும் எப்படியும் புரந்திடுவது உன் கடனே!' என்று பாதத்தில் விழுந்து வணங்கினார்கள்.

# 9. சல்லிய பருவம்

சல்லியன் சேனாதிபதியாக இருந்து நடத்திய போர் பற்றிய பகுதியிது.

### பதினெட்டாம் போர்ச் சருக்கம்

இதுவே பாரதப் போரின் இறுதி நாள் போர். துரியோ தனனும் மற்றுமுள்ள தம்பியரும் மடிந்த நாள். சகுனி சல்லி யரும் மடியும் நாள். கிருபர், கிருபவர்மா, அசுவத்தாமா ஆகிய மூவரே எஞ்சி நின்றனர். கர்ணன் இறந்தமைக்குத்

துரியோதனன் மிகவும் வருந்தினான். பதினெட்டாம் நாட் போருக்குச் சல்லியனைச் சேனாதிபதியாக்கினான்.

வழக்கம்போல் காலையில் போர் தொடங்கியது. திருஷ் டத்துய்மன் எஞ்சியிருந்த படைகளை அணிவகுத்தான். பாண்டவர்கள் உற்சாகமின்றி இருந்தனர். கண்ணபிரான் உற்சாகப்படுத்தினார். சல்லியன் கௌரவ சேனையை அஸ்திரவியூகமாக அணிவகுத்தான். தருமனுக்கும் சல்லிய னுக்கும் போர் மூண்டது. வீமன் துணைக்கு வந்தான். சல்லி யன் இறங்கிவந்து வீமனது நெற்றியில் தோமரம் கொண்டு அடித்தான். வீமன் சிறிது தளர்ந்தான்.

வேறொரு புறத்தில் விசயனும் அஸ்வத்தாமனும் மலைந்தனர். அஸ்வத்தாமன் ஆண்மை அழிந்துபோயி னான். புறமுதுகு காட்டி ஓடினான். சல்லியன் கடும்போர் செய்வதைக் கண்ட வீமன் கைக்கதையால் ஓங்கிஅடித்தான். சல்லியன் மயங்கி விழுந்தான். துரியோதனன் ஓடிவந்தான். வீமன் அவனையும் சாடினான். சல்லியன் புதுவலி கொண்டு தர்மனிடம் வந்தான். தர்மன் சல்லியனை நோக்கி மந்திர சக்தி வாய்ந்த அம்பைத் தொடுத்தார். அது சல்லியன் மார்பில் பாய்ந்தது. சல்லியன் மாண்டான். கௌரவர் படை கள் புறமுதுகிட்டு ஓடின.

துரியோதனன் சகுனியுடன் ஓடிவந்தான். பன்னிரு தம்பிமார்கள் அடுத்தடுத்து வீமன் கையால் ஆவி துறந்தார் கள். சகுனி துரியோதனனுக்கு ஆறுதல் கூறினான். சகாதேவன் சகுனியின் மார்பைக் குறிவைத்து வேலை வீசினான். இருதயம் பிளந்து வீழ்ந்தான் சகுனி. மாயச் சூதாடிய மாமன் சகுனி மாய்ந்தது குறித்துத் துரி யோதனன் மிகவும் வருந்தினான். திசை காணாது துக்கித் தான்.

துரியோதனன் கடைசியாக ஓர் ஆலோசனை செய் தான். இறந்தவர்களை எழுப்பக்கூடிய ஓர் அரிய மந்திரம் ஞாபகத்திற்கு வந்தது. ஒரு தடாகத்தை அடைந்து நீராடிக்

கடுந்தவம் செய்ய ஆரம்பித்தான். அசுவத்தாமன் துரியோதனனைத் தேடிக் கொண்டு தடாகத்துக்கு வந்தான். ''எனக்கு அதிகாரம் கொடுத்தால் பாண்டவர்களை அழித்து இன்றே உன்னை மன்னன் ஆக்குகிறேன். பிறகு வேண்டுமானால் இறந்தவர்களை எழுப்பலாம்'' என்று வேண்டினான்.

துரியோதனன் தவத்தில் ஈடுபட்டிருந்தமையால் இச்சொற்கள் அவன் செவியில் ஏறவில்லை. கிருபர், கிருபவர்மன், அசுவத்தாமன் மூவரும் அங்கிருந்து அகன்றனர்.

பாண்டவரும் கண்ணபிரானும் துரியோதனனைத் தேடிக் கொண்டு குளக்கரைக்கு வந்தனர். தவம் முடிவதற்குள் தம் காரியத்தை முடித்துவிட வேண்டுமென்று கண்ணன் யோசனை கூறினார். பீமன் கூறிய வசை மொழி கேட்டுத் துரியோதனன் குளத்திலிருந்து வெளியே வந்தான்.

அப்போது தீர்த்த யாத்திரைக்குச் சென்றிருந்த பலராமரும் விதுரரும் அங்கு வந்து சேர்ந்தனர். சமந்த பஞ்சகம் என்னும் இடத்தில் வீமனும் துரியோதனனும் போரிடத் தொடங்கினார்கள். இருவரும் மோதினர். மலைந்தனர். தாக்கினர். வீமன் கைத்தண்டினால் துரியனுடைய தொடையில் ஓங்கி அடித்தான். துரியன் கதறி வீழ்ந்தான். வானவர் பூமழை பொழிந்தனர். சூரியன் மேலைக் கடலில் மூழ்கினான். பாண்டவர் தம் பாசறைக்குச் சென்றனர்.

அசுவத்தாமனால் ஏதாவது தீங்கு வருமென்று அஞ்சிய கண்ணபிரான் பாண்டவரை அழைத்துக் கொண்டு அன்றிரவு ஒரு கானகத்தில் தங்கியிருந்தார். அசுவத்தாமன் துரியோதனன் விழுந்து கிடந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான். ''துரியோதனா! எல்லாம் முடிந்து விட்டது. இது வினையின் பயன். என்ன செய்யலாம்? என்றாலும் உன் மனவலியால் உயிர் போகாமல் வைத்திரு. வீமன் முதலியோரது முடித்தலைகள் பூமியில் உருண்டு விழும்படியாக

என் வாளை வீசி உன் மனம் சாந்தியடையுமாறு விடிவதற்குள் செய்து வருகிறேன். நீ துயரப்படாதே!'' என்று கூறி அவனது அனுமதி பெற்று மூவரும் அங்கிருந்து சென்றனர். அன்றிரவே பாண்டவரது பாசறைக்குச் சென்றனர்.

''அந்திம காலத்தில் அசுவத்தாமாவுக்குப் பட்டம் கட்டியதுபோல'' என்று உலகத்தார் கூறும் பழமொழியின் விளக்கம் அன்றிரவு நடந்த நிகழ்ச்சியைக் குறித்ததேயாம்.

ஃ

# 10. சௌப்திக பருவம்

(சௌப்திக என்றால் உறங்குபவர்களைக் கொல்லுதல் என்பது பொருள்.)

அசுவத்தாமன், கிருபர், கிருபவர்மன் ஆகிய மூவரும் பதினெட்டாம் நாள் இரவு பாண்டவர் பாசறைக்குச் சென்றனர். அங்குக் காவலாக இருந்த பெரும் பூதம் அவர்களைப் பயமுறுத்தி விரட்டியடித்தது. சற்றுநேரம் கழித்து மறுபடியும் பாசறைக்குச் சென்றனர். அசுவத்தாமன் இப்போது கொண்டு சென்ற சிவபெருமானது ஆயுதத்தைக்கண்டு அப்புறம் விலகி நின்றது. பாசறையினுள் சென்றனர். எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தனர்.

பழி பாவங்களுக்கு அஞ்சாமல் அசுவத்தாமன் திருஷ்டத்துய்மனும் உப பஞ்ச பாண்டவர்களும் உறங்கிக் கொண்டிருந்தபோது அவர்களது தலைகளைத் துணித்து விட்டான். உபபஞ்ச பாண்டவர் என்போர் திரௌபதியின் மக்கள்.

வெட்டிய தலைகளைத் தூக்கிக் கொண்டு போய் அசுவத்தாமன் துரியோதனனிடம் காட்டினான். தலைகளைக்

கண்ணுற்ற துரியோதனன் திடுக்கிட்டு, ‘‘பேதாய்! குலத்தைக்கெடுத்த மாபாவியே! என்ன காரியம் செய்தாய்? படுகொலை அழகாமோ? பாண்டவர் என நினைத்து உப பாண்டவர்களின் தலைகளை அரிந்துவிட்டாயே! குருகுலம் வளர்வதற்கே இல்லாமல் கெடுத்துவிட்டாயே!’’ என்று கடிந்துரைத்தான். மூவரும் அங்கிருந்து அகன்றனர்.

துரியோதனன் இருந்த இடத்திற்குச் சஞ்சய முனிவர் வந்தார். தந்தைக்கு ஆறுதல் கூறுமாறு அவரைக் கேட்டுக் கொண்டான். அவன் உடலில் இருந்து உயிர் பிரிந்தது. சூட்சும சரீரத்துடன் பொன் உலகம் போய்ச் சேர்ந்தான். சஞ்சயன் அஸ்தினாபுரம் சென்று திருதராஷ்டிரனுக்கும் காந்தாரிக்கும் ஆறுதல் கூறினார்.

மறுநாட் காலை பாண்டவரும் கிருஷ்ண பரமாத்மாவும் பாசறைக்குத் திரும்பி வந்தனர். நடந்த செய்தியைக் கேட்டு ஆற்றொணாத்துயர் உற்றனர். பாண்டவர்களுக்கும் திரௌபதிக்கும் கண்ணபிரான் ஆறுதல் கூறினார். பாண்டவர்கள் உலூகமுனிவரைக் கொண்டு கர்ணனுக்கும் மற்றுமுள்ள உறவின் முறையாருக்கும் இறுதிக்கடன்களைச் செய்தனர். அஸ்தினாபுரத்திற்குச் சென்று திருதராஷ்டிரனை வணங்கினார்கள்.

ஒரு நல்ல நாளில் பெரியோர்கள் ஆசி கூற, மங்கள வாத்தியங்கள் முழங்க, வேதங்கள் பல்லாண்டு கூறத் தர்ம புத்திரர் முடிசூட்டிக் கொண்டார். அம்புப் படுக்கையில் இருக்கும் பீஷ்மரை வணங்கினார். அவர் பல நீதி மார்க்கங்களையும் தர்மசாஸ்திரங்களையும் உரைத்தார். விதுரரை வணங்கி அவரது ஆசீர்வாதத்தைப் பெற்றனர்.

திருதராஷ்டிரன், காந்தாரி, விதுரர் மூவரும் வானப்பிரஸ்தத்தை மேற்கொண்டனர். பாண்டவர்கள் அரசுரிமையை ஏற்றுக்கொண்டனர். தருமபுத்திரர் குருகுல மன்னனாக இருந்து இவ்வுலகை நன்கு பரிபாலித்துக் கொண்டிருந்தார்.

பலராமன், கண்ணபிரான், சாத்தகி மூவரும் துவார கைக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

ஃ

## அநுபந்தம்

**தத்துவக் கோட்பாடுகள்**

# 1. பகவத் கீதை

**அறிமுகம்**

இச்சொல்லுக்குத் 'தெய்வப்பாடல்' என்பது பொருள். போர்முனையில் கண்ணபிரான், அருச்சுனனுக்கு, வைதிக தர்மத்தை உபதேச வாயிலாகக் கூறியதே இந்நூல். பசு போன்றது உபநிடதம். கன்றைப் போன்றவன் அருச்சுனன். கண்ணன் அவனுக்காகக் கறந்து தந்தபாலமுதம் போன்றது கீதை. அதாவது உபநிடதத்தின் சாரமே கீதை என்பது. இந்துக்கள் பலரும் தத்துவக் கோட்பாட்டை விளக்குவதில் சிறிது வேறுபட்டு நின்றாலும் கீதையைப் பிரமாணமாக ஏற்றுக் கொள்கிறார்கள். விஷ்ணு பரத்துவத்தை வற்புறுத்தும் வைஷ்ணவர்களே யன்றி சைவர்களும் ஏற்றுக் கொள்கிறார்கள்.

சைவர்கள், கிருஷ்ணனைச் சிவோகம் பாவனையில் திளைத்து நின்ற சிவஞானியாகக் கொண்டு, சிவஞானியின் உரையாகக் கீதையை ஏற்றுக் கொள்கின்றனர். பல்வேறு தத்துவக் கோட்பாடுகளையும் உள்ளடக்கி நிற்கும் கீதை யினை அடிப்படையாகக் கொண்டு ஞானியர்கள் பலர், தெய்வ நெறியைப் பக்தியோகம், கருமயோகம், ஞான யோகம், பிரபக்தி யோகம் என்றெல்லாம் விளக்கினர். கீதையின் அடிப்படைச் செய்தி 'சரணாகதி' என்றே கூறலாம்.

## கீதையின் தோற்றம்

பாரதப் போர் ஆரம்பித்து விட்டது. கௌரவர் சேனைக்குப் பீஷ்மர் சேனாதிபதியானார். யுத்தம் துவங்குவதற்கு முன் இரு பக்கத்து வீரர்களும் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டார்கள். பீஷ்மர், ''வீரர்களே! இதோ உங்களுக்கு எதிரில் சுவர்க்க வாயில் திறந்திருக்கிறது. மனக்கவலையின்றி மகிழ்ச்சியுடன் போர் புரிந்து, புகழும் மேன்மையும் அடையுங்கள். வீட்டில் வியாதியினால் மரணம் அடைதல் க்ஷத்திரியனுக்குத் தகாது. ஆயுதத்துக்கு இரையாவதே க்ஷத்திரிய தர்மம் என்று கூறினார். இவ்வாறு சேனாதிபதி பீஷ்மரால் தூண்டப்பட்ட அரசர்கள் பேரிகை முழக்கம் செய்து கொண்டு ''கௌரவர்களுக்கு வெற்றியும் புகழும் உண்டாக்கித் தருவோம்'' என்று யுத்தத்தைத் துவக்கினார்கள்.

அணிவகுக்கப்பட்ட கௌரவ சேனையைப் பார்த்து, தருமபுத்திரர் அருச்சுனனுக்குக் கட்டளையிட்டார். ''பகைவர்கள் சேனை பதினோரு அக்ரோணி'' நமது சேனை ஏழு அக்ரோணிதான். நம் படை குறைவாக இருப்பதால் குவித்துப் போர் புரிய வேண்டும். ஊசிமுக வியூகமாக நம்முடைய படையை அணிவகுப்பாயாக'' என்று கூறினார்.

இவ்வாறு இருபக்கங்களிலும் சேனைகள் அணிவகுக்கப் பட்டன. அருச்சுனனுக்கு மனக்கலக்கம் உண்டாயிற்று. கையிலிருந்து காண்டீபம் நழுவிற்று. அதைத் தீர்க்க, கிருஷ்ணன் உபதேசம் செய்தார். அதுவே பகவத் கீதை. பகவத் கீதையாகிய உபதேச மொழி உலகத்தில் பிறந்தவர்கள் அனைவர்க்கும் உய்யும் வழி காட்டுகிறது. சாஸ்திரமாகப் பெரியோர்களால் கருதப்படுகிறது. பகவத்கீதை பாரதத்தின் முடிமணி போன்றது.

நாம் நம் கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும். செய்து முடித்துவிட்டு, அதன் பயனை ஆண்டவனுக்குச் சமர்ப்பித்துவிட வேண்டும். இதைத் தான் கண்ணன் உபதேசித்தார்.

## விளக்கம்

பகவத் கீதை பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்டது. திருதராஷ்டிரனுக்குக் கண்பார்வை இல்லாததால் அவன் போர்க்களத்திற்குச் செல்லாமல் அரண்மனை நிலா முற்றத்தில் அமர்ந்து கொண்டு தன் அமைச்சனாகிய சஞ்சயனைப் பார்த்துப் போர்க்கள நிகழ்ச்சிகளைக் கூறுமாறு ஏவினான். சஞ்சய முனிவர் தனது ஞான திருஷ்டியினால் குருக்ஷேத்திரத்தில் நடைபெறும் போரை நேரில் காண்பது போல, சொல்லிக் கொண்டு வந்தார். பகவத் கீதை இப்படித்தான் ஆரம்பமாகிறது.

பகவத் கீதையின் ஒவ்வொரு அத்தியாயத்தைப் பற்றியும் முக்கியமான செய்திகள் கீழே தரப்பட்டுள்ளன.

### அத்தியாயம் 1

போரின் ஆரம்பத்தில் அருச்சுனனுக்கும் பகவானுக்கும் நிகழ்ந்த விவாதம் முதல் அத்தியாயமாகும். இரு தரப்பு வேந்தர்களும் வீரர்களும் அணிவகுத்து நிற்கிறார்கள். கண்ணன் தேரைக் கொண்டு போய் படை நடுவே நிறுத்தினார். எதிரே பீஷ்மர், துரோணர், கௌரவ வீரர்கள் அணிவகுத்து நிற்பதைப் பார்த்தன் கண்ணுற்றான். இருபுறமும் கவனித்தான். உற்றார் உறவினர் நண்பர் அனைவரும் போருக்கு ஆயத்தமாய் உள்ளனர். அருச்சுனனுக்கு உடல் வியர்த்தது. கண்ணனைப் பார்த்து, 'கண்ணா! நான் வெற்றியை விரும்பவில்லை. எனக்கு அரச போகமும் வேண்டாம்; ஆனந்தமும் வேண்டாம், இங்கு குருமார்கள், தந்தையர், மக்கள், பாட்டன், மாமன்மார், பேரர், மைத்துனர், சம்பந்திகள் அனைவரும் உள்ளனர்.

''நான் மடிந்தாலும் பாதகமில்லை. இவர்களை நான் கொல்லமாட்டேன். இந்தப் போரில் நான் பங்கு கொள்ளப் போவதில்லை. இந்தப் பழி பாவத்தில் நான் இறங்க

மாட்டேன். அரச போகத்திற்கு ஆசைப் பட்டால் பெரும் பாவத்திற்கு அல்லவா ஆளாக வேண்டும்?'' என்றான்.

இவ்வாறு சஞ்சயமுனிவர் திருதராஷ்டிரனுக்கு கூறிக் கொண்டே வந்து 'போர் முகத்தில் அருச்சுனன் வில்லை ஒரு புறம் எறிந்தான். துயர்கொண்ட நெஞ்சினனாய் தேர்த் தட்டின் மீது அமர்ந்தான்' என்று முதல் அத்தியாயத்தை முடித்தார். இவர்தான் முன்பு பாண்டவர்களிடம் தூது சென்றவர்.

**அத்தியாயம் 2**

கண்ணீர் பெருக்கி, கவலை நிறைந்தவனாய் கலங்கி நிற்கும் அருச்சுனனை நோக்கிக் கண்ணன் கூறுகின்றார்:

''அருச்சுனா! நீ க்ஷத்திரியன். இது உனக்குப் பொருந்தாது. வீரசுவர்க்கம் உனக்குக் கிடைக்காது. பலரும் இகழ்வார்கள். மனம் தளராதே; எழுந்து நில்.''

அருச்சுனன், ''கண்ணா பீஷ்மரையும் துரோணரையும் நான் எப்படிக் கொல்வேன்! நான் சிறியவன்; உலகம் தெரியாதவன். என் அறிவு மயங்குகிறது. நான் உன்சீடன்; நான் உன்னைச் சரணடைந்தேன்'' என்றான்.

தேர்த்தட்டில் அமர்ந்த காண்டீபனைப் பார்த்து, கண்ணன் கூறுகின்றார். ''பார்த்தா! உன் செய்கை நல்லதல்ல; உன் கலக்கம் யாது? அதற்குக் காரணம் என்ன? பகைவரின் உயிரைப்பற்றி வருந்துகிறாயா? எதைப் பற்றிய தாக இருந்தாலும் இரண்டும் தவறுடையனவே.,

''ஆன்மா என்பது அழிவில்லாதது. அதைக் கத்தியால் வெட்ட முடியாது. நெருப்பால் சுடமுடியாது. உடல் அழியக் கூடியது. நாம் அழிக்காவிட்டாலும் அது ஒரு நாள் அழிந்தே தீரும். உயிர் என்பது ஆன்மா. அது ஓர் உடலைத் துறந்து, வேறோர் உடலில் புகுந்து அழிவில்லாதிருக்கும். பல பிறவிகளை எடுக்கும். இயற்கையின் விதியை உணர்ந்து அதற்

கேற்ப நடந்துகொள். இதுதான் நம் கடமை. இறைவன் கட்டளையும் இதுதான். எனவே உன் பணியைத் தொடங்கு. ஆத்மஞானம் அதன் மூலம் உண்டாகும். மேல் நிலை பெறு வாய். நற்கதி அடைவாய். இவைகளைத் தவிர வேறு வழி களை நினைத்தால் இவ்வுலகில் நீ வெற்றிபெற முடியாது. இவ்வாறு இரண்டாம் அத்தியாயம் கூறுகிறது.

**அத்தியாயம் 3**

மூன்றாம் அத்தியாயம் கர்மயோகம் பற்றியது. தொழி லின் மேன்மையைப் பற்றியும் தூய்மையைப் பற்றியும் உரைப்பது. இவ்வுலகில் பிறந்தோர் அனைவரும் ஏதாவது ஒரு தொழிலைச் செய்தால் தான் முன்னேற முடியும். எந்தத் தொழிலைச் செய்தாலும் ஐம்புலன்களும் தொழிலில் ஈடு படும். ஐம்புலன்களை அடக்கி அறிவைத் திருத்தி ஞானம் அடைந்த துறவியாக இருந்தாலும் கருமம் செய்யக் கடமைப் பட்டவன். ஞானம் தான் அவனுடைய குறிக்கோள் என்ப தால் படித்தவரும் பாமரரும் அவனை நம்பி அவன் வழி சென்று ஞானத்தைப் பெறமுடியும். முடிவில் அவர்களும் அழிய வேண்டியவர்கள் தாம். தொழில் செய்யத் தெரியாத வர் நலிவுறுவர். ஞானியும் கர்மத்தில் ஈடுபட்டால் இவ்வுலகில் நலம்பெறலாம். கண்ணன் காட்டியவழி 'கர்மயோகந்தான்.'

''நீ எதைச் செய்கிறாயோ அதை எனக்குக் கீர்ணிக்கை யாக்கிவிடு. அது உன்னுடையது என்பதை மறந்துவிடு. மனக்குழப்பமில்லாமல் போர் செய்.''

''புலன்களும் மனமும் உணவும் தான் ஆசை தங்கும் இடம். இந்த மூன்றும் ஆசையால் அறிவை மயங்க வைக்கின் றன. ஆகையால் நீ புலன்களைக் கட்டுப்படுத்து. அதன் மூலம் ஆசையை வென்று விடலாம்.'' இவ்வாறு மூன்றாம் அத்தியாயம் கூறுகின்றது.

## அத்தியாயம் 4

''பாரதச் செல்வனே! எந்தெந்த காலங்களில் தர்மம் அழிந்து, அதர்மம் மேலோங்குகிறதோ, அப்போது நான் தோன்றுகிறேன். என் பிறப்பும் செயலும் தெய்வீகமானவை. இதை உணர்ந்தவன் என்னோடு ஐக்கியமாகிவிடுகிறான். அவனுக்கு மறுபிறப்பு இல்லை. பொருளைக்கொண்டு செய்யப்படும் வேள்வியைவிட ஞான வேள்வியே மேலானது. கர்மம் ஞானத்தில் முடிகிறது. இப்போது உனக்கு ஏற்பட்டிருக்கும் மயக்கத்திற்கு அஞ்ஞானம் என்று பெயர். அதன் காரணமாகச் சந்தேகம் பிறந்துள்ளது. இந்தச் சந்தேகத்தை ஞானத்தால் வென்று யோகநிலை பெறு. எழுந்து நில். உன்னை ஏமாற்றி போரில் ஈடுபடுத்துகிறேன் என்று எண்ணாதே.

''இந்தக் கர்மயோகத்தை இதற்கு முன் மனு முதலானவர்களுக்கும் உபதேசித்தேன். இது வழி வழியாக வந்தது. காலக்கிரமத்தில் இந்த யோகத்தை உலகம் இழந்துவிட்டது. இன்று உனக்குச் சொல்லுகிறேன். நீ என் பக்தன்; தோழன் இஃதோர் உயர்ந்த தத்துவம்'' என்று கண்ணன் நான்காவது அத்தியாயத்தில் கூறுகிறார்.

## அத்தியாயம் 5

''கிருஷ்ணா! கர்மயோகம், ஞானயோகம் என்று அவைகளின் பெருமையைக் கூறுகிறாய். எனக்குக் குழப்பமாக இருக்கிறது. இவற்றுள் எது சரியானது என்று விவரமாய்ச் சொல்'' என்றான் அருச்சுனன்.

உடலால் செயல் செய்தல் கர்மயோகம், உள்ளத்தால் செயல்படுதல் துறவு யோகம், திடமான மனமுடையவர் துறவு காண்பர். அத்தகைய மனவலிமை இல்லாதவர். செய்கை செய்வர். வாழ்வில் இரு பக்கங்கள் உண்டு. ஒன்று செயல்; மற்றொன்று துறவு. கடமை என்று எதைச் செய்தா

லும் வாழ்வில் கடவுள் நிலை கிட்டும் என்பது கண்ணன் காட்டிய வழி.

முதலில் செயல் செய்யவேண்டும். அதன் மூலம் ஆத்மாவைச் சுத்தப்படுத்த வேண்டும். அதன் வழியே மனத்தையும் தேகத்தில்உள்ள மற்ற புலன்களையும் வெற்றி கொள்ள வேண்டும்.

எவனொருவன் உடம்பு நன்றாக இருக்கும்போதே இந்தப் பிறவியிலேயே, காமக்குரோதங்களை வெற்றி கொள்கிறானோ அவன்தான் யோகி. அவன்தான் நிம்மதியடைந்த மனிதன்.

''வேள்விகளையும் தவங்களையும் அனுபவிப்பவன நானே. ஏழ் உலகிற்கும் இறைவன் நானே. பஞ்ச பூதங்களும் நானே, இவைகளை அறிந்தவன் நிம்மதியடைகிறான்'' என்று ஐந்தாம் அத்தியாயம் கூறுகிறது.

**அத்தியாயம் 6**

பரந்தாமன் கூறுகின்றார்; 'யோகி என்பவன் ஆசையை விட்டவன். சொத்துக்களைத் துறந்தவன்; மனவெறியை அடக்கியவன். தனிமையில் இன்பம் காண்பவன். ஆத்மாவைத் தெய்வத் தன்மை பெறுமாறு செய்தவன். இந்தத் தியானயோகத்தில் நிலைத்தவன் எல்லா உயிர்களிலும் தன்னைக் காண்பான்; தனக்குள் எல்லா உயிர்களையும் காண்பான், பட்ட மரமும் பச்சை மரமும் அவனுக்கு ஒன்றே, அருச்சுனா! சுகமோ துக்கமோ எது வந்தாலும் தன்னைப் போலவே பிறஉயிரையும் எண்ணும் யோகி உத்தமனாகிறான்'.

''என்னையே நம்பு; என்னையே நெருங்கு; என்னையே சார்ந்து இரு; என்னையே தொழு; சிறந்தவனாவாய்; இது என்னுடைய முடிவு''.

இவ்வாறு ஆறாம் அத்தியாயம் கூறுகிறது.

**அத்தியாயம் 7**

பகவான் சொல்கின்றார்: சாத்விகம், ராஜசம், தாமசம் என்று குணங்கள் மூன்று வகைப்படும். நான் அழிவற்றவன்; இணையில்லாதவன்; நான் பரமாத்மா; எனக்கு ஆதி அந்தம் இல்லை. முக்காலங்களையும் நான் அறிவேன். விருப்பு வெறுப்புக்களால் உயிர்கள் பிறக்கும்போதே மயங்கி விடுகின்றன. கடைசிக் காலத்திலாவது என்னை அறிவார்களானால் அவர்களே அறிஞர்கள்.

மண், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய அனைத்தும் நானே. சகல ஜீவராசிகளுக்கும் நான்தான் ஆதி காரணன். எனவே விஜயனே! என்னைச் சரணடை. என்னைத் தஞ்சமாய் மயக்கமில்லாமல் நீ மனத்தைச்செலுத்து. நான் சொல்வதைக்கேள்; நற்கதி பெறுவாய்.

இவ்வாறு ஏழாம் அத்தியாயம் கூறுகிறது.

**அத்தியாயம் 8**

கிருஷ்ணன் கூறுகின்றார்: ''குந்தியின் மகனே! மரண காலத்தில் எதை எதை நினைத்துக் கொண்டு ஒருவன் உயிரை விடுகிறானோ அவன் அதே நிலையை அடைகிறான் நினைவே பலனாகிறது.

ஆகவே அம்பு எய்யும்போது என்னை நினை. உன் மனமும் அறிவும் என்னிடம் இருக்கட்டும். வெற்றி பெறுவாய். பகல், வளர்பிறை, உத்தராயனம் இவற்றில் மடிகிறவர்களுக்கு மறுபிறவி இல்லை. இரவு, தேய்பிறை, தட்சிணாயனம் ஆகியவற்றில் இறப்பவர்கள் மீண்டும் பிறக்கிறார்கள்.

தனஞ்சயனே! மனம் வேறு விஷயங்களில் செல்லக் கூடாது. பரம் பொருளைச் சிந்திப்பதே கொள்கையாக இருக்கவேண்டும். இந்தப் பழக்கத்தை மேற்கொண்டால் பரம்பொருளை அடையலாம்.

இதுவரை நான் சொன்னதையெல்லாம் அறிந்து கொண்டவன் வேதங்களைக் கற்றறிந்தவன் ஆகிறான். அதன் காரணமாகப் பரம்பொருளை அடைந்து விடுகிறான்.

இவ்வாறு எட்டாம் அத்தியாயம் கூறுகிறது.

**அத்தியாயம் 9**

பகவான் சொல்கிறார்: ''தனஞ்சய! ஊழிக் காலத்தில் காடுகள், மலைகள், உயிரினங்கள் அனைத்தும் அழிந்து என்னோடு கலந்துவிடுகின்றன. நான் மறுபடியும் படைப்புத் தொழிலை ஆரம்பிக்கும்போது அவற்றை மறுபடியும் உற்பத்தி செய்கிறேன்.

''நீ செய்வதை சாப்பிடுவதை, படைப்பதை, தானம் செய்வதை, தவஞ்செய்வதை—எதைச் செய்தாலும் அதை எனக்கு அர்ப்பணம் செய்.

குறிப்பு:— வைணவர்கள் எதைச் செய்தாலும், ''கிருஷ்ணார்ப்பணம்'' என்று சொல்லிவிட்டுச் செய்வதைக் காணலாம்.

''உனக்கு நான் சொல்வது என்னவென்றால் உன்னை எனக்குக் காணிக்கையாக்கு. உன் மனத்தில் என்னைத் தியானம் செய். என்னை அடைய முயற்சி செய். தன்னை மறந்தால் என் தாள்களை அடைவாய்''.

இவ்வாறு ஒன்பதாம் அத்தியாயம் கூறுகிறது.

**அத்தியாயம் 10**

கண்ணன் கூறுகிறார்: ''நீ என் அன்புக்கு உரியவன். உன் நன்மையை நாடி இதைச் சொல்கிறேன். கவனமாய்க் கேள்.

''நான் பிறப்பு அற்றவன்; ஆதியும் அந்தமும் இல்லாதவன்; உலகத்தின் நாயகன்; காரியங்கள் பலவாயினும் அவற்றின் காரணங்கள் நானே.

''என்னுடைய குணாதிசயங்களைக் கூறுகிறேன்; கேள். உயிர்களின் தொடக்கமும், வளர்ச்சியும், முடிவும் நானே.

''காசியமுனிவருக்கு அத்திதேவியிடம் பிறந்த பன்னிரண்டு பிள்ளைகளில் குணத்தில் சிறந்தவனான விஷ்ணு நானே. கிரகங்களில் நான் கதிரவன்; காற்றுக்களில் மரீசி. வேதங்களில் நான் சாமம். தேவர்களில் நான் இந்திரன் மலைகளில் நான் இமயம்.

''மரங்களில் நான் அரசு; புரவிகளில் உச்சைச் சிரவம்; யானைகளில் ஐராவதம்; பசுக்களில் காமதேனு; அரக்கர்களில் பிரகலாதன்; விலங்குகளில் நான் சிங்கம்; பறவைகளில் கருடன்; ஆறுகளில் கங்கை; எழுத்துக்களில் நான் அகரம்; மாதங்களில் நான் மார்கழி; பருவங்களில் இளவேனில்; உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களிலும் நான் மறைந்து நிற்கின்றேன்''.

இவ்வாறு பத்தாம் அத்தியாயம் கூறுகிறது.

**அத்தியாயம் 1`** **விஸ்வரூப தரிசனம்**

இப்போது பகவான் எடுத்த விஸ்வரூபத்தைப் பற்றி அரண்மனையில் திருதராஷ்டிரனிடம் அமைச்சர் சஞ்சயன் கூறுகின்றார்:

பாரதத் தலைவனே! இவ்வாறு கண்ணன் கூறிக் கொண்டே வந்து அருச்சுனனுக்குத் தன்னுடைய விஸ்வரூபத்தைக் காட்டினான். அருச்சுனன் இந்தப் பேருருவைக் கண்டு அதிசயித்து, மெய்சிலிர்த்து தலையால் வணங்கினான்.

சற்று நேரத்திற்கெல்லாம் பேருரு மறைந்தது. கண்ணன் முன்போல் கிருஷ்ண வடிவத்தோடு அருச்சுனனுக்கு கூறுகின்றார்.

''பார்த்தனே! நான் பூமி பாரம் தீர்க்க வந்துள்ளேன். இதோ இந்தப் போர்க்களத்துள் நிற்கும் எதிரிகள் நீ போர் செய்தாலும் செய்யாவிட்டாலும் அழியத்தான்போகிறார்கள். ஆகவே எழுந்து நில்; எதிரிகளை வென்று புகழ்பெறு. இந்த அரச பதவியை அனுபவி. இந்த எதிரிகளை நான் முன்பே கொன்றுவிட்டேன் இப்போது என் வெளிச் செயலுக்கு நீ ஒரு கருவி. அவ்வளவு தான்.

''போர்த் தொடு வெற்றி பெறு.''

இவ்வாறு பதினொன்றாம் அத்தியாயம் கூறுகிறது.

**அத்தியாயம் 12**

விஜயன் கேட்கிறான்: ''கண்ணா! இதுவரை நீ சொல்லி வந்ததைக் கேட்டேன். எனக்கு ஒரு சந்தேகம். பக்தி செய்தால்தான் உன்னை அடைய முடியுமா? அல்லது உலகத்தில் அழியாதிருக்கும் இயற்கையை வணங்கினால் இன்பம் பெற முடியுமா?''

கண்ணன் கூறுகின்றார்: ''இரு தரப்பாரும் என்னை அடையமுடியும். எனினும் முதலில் கூறியது எளியவழி. பின்னது சற்றுச் சிரமமானது. மற்றொன்றும் சொல்கின்றேன். கேள்; படித்தும், கேட்டும், பணிந்தும், பழகியும், பயிற்சிமுறையில் பக்தியைத் தொடங்கி, விரைவில் என்னை அடைய விரும்புக''.

''அதுவும் இயலாதாயின் கர்மயோகக் கடமைகள் செய். பலனில் மட்டும் பற்று வைக்காதே, ஞானம், தியானம், தியாகம் இவைகள் அடுத்தபடிகள்.''

''உயிர்களிடத்தில் அன்பு கொள். நான் என்ற அகந்தை கொள்ளாதே. இன்பம், துன்பம் இரண்டையும் சமமாக ஏற்றுக்கொள்.

இதுதான் அறநெறி. அக்கறையோடு அறிந்து கொள். தெளிந்து வணங்குவோரை நான் வாழ வைப்பேன்.''

இவ்வாறு பன்னிரண்டாம் அத்தியாயம் கூறுகிறது.

**அத்தியாயம் 13**

ஜனார்த்தனன் கூறுகின்றார்: ''பார்த்தனே! இயற்கை, ஆன்மா, உடல், உயிர், அறிவு, அறியப்படும் பொருள், இவற்றைப் பற்றிக் கூறுகின்றேன் கேள்: க்ஷேத்திரம்—உடல்; க்ஷேத்ரக்ஞன்—உயிர்; உயிர், தான் தங்கியிருக்கும் உடலைத் தன் இருப்பிடமாகக் கருதுகிறது. எல்லா உடல்களிலும் தங்கியிருக்கும் உயிர் நானே. உடலையும் உயிரையும் பற்றி அறியும் அறிவுக்கு ஞானம் என்று பெயர். அந்த ஞானத்தை உபதேசிக்கிறேன் கேள்.

''உயிர் அருவாய், சேதனமாய் நிலை பேறுடையது. உடல் உருவாய், அசேதனமாய், அழியும் தன்மையது. தாமரை இலைத் தண்ணீர்போல் பற்றற்று இருத்தல் வேண்டும். மகன், மனைவி, வீடு என்று ஒட்டிக்கொள்ளாமல் தனித்திருத்தல் வேண்டும். வரவைக்கண்டு மகிழாமலும் போவதைக்கண்டு கலங்காமலும் சமநிலையில் இருத்தல் வேண்டும்.

இயற்கை தான் அனைத்தையும் செய்கிறது. ஆத்மா அதற்குக் காரணம் அல்ல; என்று கண்டு கொண்டவன் பேரறிஞன். பரமாத்மா ஆரம்பமும் முடிவும் இல்லாதது. தனக்கென்று சொந்த குணங்கள் இல்லாதது. எனவே அழிவுற்றது. உடலுக்குள் இந்தப் பரமாத்மா இருந்தாலும் சாட்சி மாத்திரமாய்த்தான் இருக்கிறது.

பஞ்ச பூதங்களில் மண், நீர், தீ மூன்றும் உருவ நிலை. அதாவது கண்ணுக்குத் தெரிவது. காற்று அருவ நிலை; அதாவது கண்ணுக்குத் தெரியாதது. ஆகாயம் உருவ அருவம்—அதாவது நீல நிறமாய் தெரியும். போகப் போக அங்கே ஒன்றும் இராது. அதுபோலவே உடலில் பரமாத்மா தங்கியிருந்த போதிலும் எதையும் செய்வதில்லை. பற்று

வைப்பதும் இல்லை. உடல் உயிர் இவற்றிற்கு இடையிலுள்ள வேறுபாட்டை அறிந்தவன் பரமகதியை அடைவான்.''

இவ்வாறு பதின்மூன்றாம் அத்தியாயம் கூறுகிறது.

**அத்தியாயம் 4**

அச்சுதன் கூறுகிறார்: வில்விஜய! சத்துவம், ராஜசம், தாமசம் இந்த மூன்று குணங்களும் இயற்கையிலிருந்து தோன்றியவை.

சத்துவகுணம் உத்தமமானது. தெய்வாம்சம் பொருந்தியது. இது இன்பத்திலும் ஞானத்திலும் ஈடுபடுத்தி ஆத்மாவை நல்வழிப்படுத்துகிறது.

இராஜச குணம் மத்திமமானது; மனித இயல்புக்கு உரியது. ஆசையிலும் பற்றுதலிலும் ஈடுபடுத்தி ஆத்மாவைத் தொழிலில் நாட்டங் கொள்ளச் செய்கிறது.

தாமச குணம் அதமமானது. அரக்ககுணம் என்றே சொல்லலாம். அறியாமையும் மூடத்தனமும் கொண்டது. ஆத்மாவை மயங்க வைத்து தவறு, அலட்சியம், சோம்பேறித்தனம், துக்கம், தூக்கம் இவற்றில் ஆழ்த்துகிறது.

சுருங்கக்கூறின் சத்துவம் இன்பத்தையும், இராஜசம் தொழிலையும், தாமசம் தவறுகளையும் உருவாக்குகின்றன.

நெருஞ்சிக்காய் மூன்று முட்களையுடையது. ஒரு முள் மேற்புறம் நீட்டி நிற்கும்போது மற்ற இரண்டு முட்களும் தரையில் ஊன்றிக் கொண்டிருக்கும். இந்த முக்குணங்களும் அவ்வாறு தான் செயல்படுகின்றன. ஒரு குணம் மேலோங்கி நிற்கும்போது மற்ற இரண்டும் அடங்கியிருக்கும்.

புலன்களின் வழியே அறிவு பிரகாசிக்கும் போது சத்துவ குணம் செயல்படுகிறது என்பது பொருள்.

பேராசை, பரபரப்பு, துடிதுடிப்பு இவைகளை ரஜோ குணம் செயல்படும்போது காணலாம்.

மந்த புத்தி, இருண்ட சூழ்நிலை, செயலற்ற நிலை, சோம்பேறித்தனம், மயக்கம் இவைகள் காணப்பட்டால் அப்போது தாமசகுணம் மேலோங்கியுள்ளது என்று தெரிந்து கொள்ளலாம்.

அதேபோல் மரண மடையும்போது எந்த குணம் மேலோங்கி நிற்கிறதோ அதற்கேற்றவாறு ஆத்மா அந்தந்த உலகத்தை அடைகிறது.

சத்துவ குணம் மேல் நோக்கிச் செல்லும்; ரஜோ குணம் திரிசங்கு சுவர்க்கம் போல் நடுவிலேயே நிற்கும்; தமோகுணம் கீழ் நோக்கிப் பாதாளத்திற்குச் செல்லும்.

எல்லாச் செயல்களையும் குணங்களே இயக்குகின்றன. குணங்களின் தன்மையை அறிந்தவர்கள் தெய்வீக நிலையை அடைகிறார்கள். ஒருவன் முறை பிறழாத பக்தி யோகத்தினால் குணங்களைக் கடக்க முடியும். அவன் தெய்வ நிலை பெறுகிறான்.

இவ்வாறு பதினான்காம் அத்தியாயம் கூறுகிறது.

**அத்தியாயம் 15**

புருஷோத்தமன் கூறுகின்றார்: ''அருச்சுனா! வாழ்க்கை ஒரு மரம்; பரமனே அதன் வேர்; பிரமனே அதன் கிளைகள்; வேதமே அதன் இலைகள்; ஐம்புலன்களே அதன் துளிகள்.

பரமாத்மா அழிவற்றவனாகவும் ஈஸ்வரனாகவும் இருப்பதால் அவன் மூவுலகங்களையும் காப்பாற்றுகிறான். அந்தப் பரமாத்மா நானே! அதனால் உலகமும் வேதமும் என்னைப் 'புருஷோத்தமன்' என்று அழைக்கின்றன. இந்த ரகசியத்தை உனக்குச் சொன்னேன். நீ அறிவாளி. செய்ய வேண்டிய காரியத்தை ஒழுங்காகச் செய்.

இவ்வாறு பதினைந்தாம் அத்தியாயம் கூறுகிறது.

**அத்தியாயம் 16**

கண்ணன் சொல்கின்றார்: ''காண்டீப! தேவர் என்று தனியாக எவரும் இல்லை. தெளிவாக நீ தெரிந்து கொள்ள வேண்டுமானால் யார் என் சொல்லைக் கேட்கிறார்களோ அவர்களே தேவர்கள். தீய வழியிற் செல்வோர் அசுரர். நான் அருளியது வேதம். அதைக் காவலாகக் கொள்க.

கண்ணனாகிய நான் கூறும் இந்தத் தர்மத்தை மறந்தோர் நாத்திகர். நால்வகையாகிய ஆசையில் வீழ்ந்து ஆத்திர சுகம் கண்டோர் அரக்கர்.

தெய்வ குணங்கள் திருவருள் சேர்க்கும். அசுர குணங்கள் அவனது விலங்கு, நீ கவலையை விடு. இவ்வுலகில் தேவ குணங்களை நீ பெற்றிருக்கிறாய். நீ செயலில் இறங்கு, வெற்றி பெறுவாய்.

இவ்வாறு பதினாறாம் அத்தியாயம் கூறுகிறது.

**அத்தியாயம் 17**

மதுசூதனன் சொல்கின்றார்; ''பாண்டு மைந்த உணவு வகைகள் மூன்று; யாகங்கள் மூன்று; தானங்கள் மூன்று, சாத்துவிக உணவு ஆயுளை வளர்ப்பது; மனவலிமை உடல் வலிமை தருவது; நோய் தராதது; சுகத்தை வளர்ப்பது. குழம்பு, ரசம், நெய் கலந்தது.

இராஜச உணவு கசப்பு, புளிப்பு, உப்பு மிகுந்தது. உலர்ந்தது. அதிகச் சூடானது. காரம் மிகுந்தது. பசி எடுக்காமல் செய்வது. குடல் எரிச்சலை உண்டு பண்ணுவது.

தாமச உணவு வேகாதது; பழையது; குழம்பில்லாமல் வற்றிப்போவது; துர் நாற்றம் வீசுவது; முன்பு சாப்பிட்டு மிகுந்தது. அசுத்தமானது.

எந்த வித லாபத்தையும் கருதாமல், சாத்திரம் காட்டும் வழியில், கடமை உணர்வோடு செய்யும் யாதும் சாத்மிகம்.

பலன் கருதியோ, ஊரார் மதிப்பை எதிர் பார்த்தோ செய்யப் படும் யாகம் ராஜசம். சாத்திர நெறி தவறி, அன்ன தானம் செய்யாமல், மந்திரங்களை உச்சரிக்காமல், தட்சணை வைக்காமல் அக்கறையோ நம்பிக்கையோ இல்லாமல் செய்யப்படும் யாகம் தாமசம்.

இதே போல் உடல், வாக்கு, மனம் இவைகளால் செய்யப்படும் தவமும் மூன்று வகைப்படும். பெரியோர்களை வணங்குதல், நீராடல், நேர்மையைக் கடைப்பிடித்தல், பிரமசரியத்தைக் கொள்ளுதல் ஆகியவை காயத்தால்—உடலால்—செய்யப்படும் தவம். இன்சொல் கூறுதல், உண்மை பேசுதல், நல்லதைக் கூறுதல், வேதம் ஓதுதல் ஆகியவை வாக்கினால் செய்யப்படும் தவம். தெளிந்த உள்ளம், சாதுவாக இருத்தல், மவுனமாய் இருத்தல், மனத்தைக் கட்டுப்படுத்துதல், ஆத்மாவை நினைத்தல்—இவை மனத்தால் செய்யப்படும் தவம்.

தானம், கேள்வி, தவம் என்னும் மூன்றும் 'ஓம்' என்று சொன்ன பிறகு தொடங்கப்படுகின்றன. பலனை விரும்பாதவர்கள் இந்த மூன்றையும் செய்யும் போது 'தத்' என்று சொன்ன பிறகு தொடங்குகிறார்கள். 'தத்' என்ற சொல்லுக்கு இருப்பது, நல்லது என்று இரு பொருள்கள் உண்டு. மங்கள காரியங்களில் 'தத்' என்ற சொல்லே உபயோகிக்கப் படுகிறது. நம்பிக்கை இல்லாமல் செய்யப்படும் யாகமும் தானமும் தவமும் பயனற்றவை.''

இவ்வாறு பதினேழாம் அத்தியாயம் கூறுகிறது.

**அத்தியாயம் 18**

வாசுதேவன் சொல்லுகிறார்: ''நால்வகை வருணங்களைக் கூறுகிறேன் கேள்: அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்று கூறப்படும் நான்கு பிரிவுகளும் தொழில் பற்றி எழுந்தனவாகும்.

மனத்தை அடக்கி, புலன்களை வென்று, தவம், ஞானம், அனுபவம், ஆத்திக உணர்வுகள் இவைகளைக் கொண்டு இயங்குவதுதான் அந்தணர் கருமங்கள்.

ஆண்மை, வீரம், அறப்போர் புரிதல், புகழில் விருப்பம், புறம்காட்டாமை, ஆளும் சக்தி, ஆதிக்கத் திறமை ஆகிய இவையே அரசர்க்குரிய தத்துவமாகும்.

பயிர்த்தொழில் செய்தல், வாணிபம் புரிதல் முதலியன வணிகர் கடமையாகும்.

சாத்திரம், பயிர்த் தொழில் முதலியவற்றைக் காப்பாற்றும் அறப்போர் வீரரே வேளாளர்.

அவரவர் கடமைகளில் தவறாது ஒழுகி வந்தால் என் அருளைப் பெறுவார்கள்.

பொன்னைப் பெட்டியில் பூட்டி வைப்பது போல என்னிடம் மனத்தை எடுத்துவை. தலைவனிடம் தலைவி போல என்பக்தனாய் இங்கு என்னை வணங்கு; நீ என்னை அடைவது சத்தியம்.

என்னுயிர்த் தோழனே! இதுவரை நாம் இருவரும் நிகழ்த்திய உரையாடல்களை யார் படித்தாலும் கேட்டாலும் என்னை வணங்கியதாகவே ஏற்றுக்கொள்வேன். கீதையைக் கேட்டவர்கள் பாபத்தினின்றும் விடுபடுவார்கள். அமர நிலை அடைவார்கள் இது உறுதி''

பார்த்தன் கூறுகிறான்; ''அச்சுதா! உன் அருள் மொழி கேட்டேன். ஐயம் தெளிந்தது. அச்சம் தவிர்ந்தது. நன்னிலை பெற்றேன். உன் சொல்லைச் சிரமேற் கொண்டு இதோ காண்டீபத்தைக் கையில் எடுத்தேன்.

இதை அரண்மனை நிலாமுற்றத்தில் சஞ்சயன் திருதராஷ்டிர மன்னனுக்குக் கூறுகின்றார்:

''இவ்வாறு கிருஷ்ண பரமாத்மாவுக்கும் பார்த்தனுக்கும் இடையே நடந்த அற்புதமான வார்த்தைகளைக் கேட்

டேன். பரம ரகசியமான இந்த யோகத்தை வேதவியாசரின் அருளால் கேட்டேன். அகமகிழ்ந்தேன். கண்ணன் உபதேசித்த இந்தக் கீதையை எண்ணி எண்ணித் திளைக்கின்றேன். மீண்டும் மகிழ்கிறேன்.

கண்ணனும் காண்டீபமும் இருக்கும் இடத்தில் திருமகள் இருப்பாள்; வெற்றியிருக்கும். நீதியும் நியாயமும் நிலைத்திருக்கும் என்பது என் முடிவு'' இவ்வாறு சஞ்சயன் கூறிமுடித்தார்.

பதினெட்டாம் அத்தியாயம் இவ்வாறு கூறுகிறது.

குறிப்பு

**பாரதத்தில் காணப்படும் எண் பொருத்தங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | வியாச பாரதத்தில் பருவங்களின் எண் | 18 |
| 2. | பகவத்கீதையில் அத்தியாயங்கள் எண் | 18 |
| 3. | பாரதப் போர் நடைபெற்ற நாட்களின் எண் | 18 |
| 4. | பாரதப் போரில் போரிட்ட சேனைகளின் எண் (அக்ரோணி) | 18 |

□

# 2. பீஷ்மர் உபதேசம்

தருமபுத்திரன் வெற்றி பெற்றான் என்றாலும் மனம் துன்ப நிலையிலேயே இருந்தது. திரௌபதி சிறந்த பட்டாடைகளை அணிந்து அரண்மனையில் உலாவ வேண்டுமென்றும் நமது ராஜ்யம் என்ற செருக்குடன் இந்த மண்ணை நாம் ஆளவேண்டும் என்றும் ஆசையுற்றாள்; அதனால்

கோடிக் கணக்கான தாய்மார்கள், தம் புதல்வர்களை இழந்தனர் என்று எண்ணமிட்டான் தருமபுத்திரன். ஆறுதலைத் தேடி அவன் பீஷ்மரிடம் சென்றான். பீஷ்மர் தம் வாழ்வு முழுவதிலும் கண்ட பேருண்மையைத் தருமபுத்திரனுக்குக் கூறலானார்:

''தருமநந்தனா! எவனும் நோயாளியாக விரும்புவதில்லை. ஆனால் நோய் அவனிடம் வரும் போது கசப்பான மருந்தைத் தவிர வேறு சிகிச்சை ஏது? இனிய உணவினால் நோய் தீர்ந்து விடாது. போரிடுவது புண்ணியமா? கொடும் பாவமா? என்று நீ உள்ளத்துள் கலங்குவது வீண். இன்ன செயல் புண்ணியம் இன்ன செயல் பாவம் என்று சொல்லத் தக்க சான்று எதுவும் கிடையாது. இதைத்தான் பகவான் அன்று சொன்னான். எந்த நோக்கத்துடன் மனிதன் செயலாற்றுகிறான் என்பது தான் முக்கியம்.''

''வாழ்க்கைப் போரில் நாம் செயலில் இருந்து-செயலின் பயனிலிருந்து—எவ்வளவு தொலைவு விலகியிருக்கிறோம். என்னும் எண்ணம் தான் முக்கியம். உன் உடையை ஒருவன் பறிக்கும்போது நீ, தியாகத்திலும் தவத்திலும் மூழ்கியிருப்பது பாவம். உன் மேல் ஓங்குகிற கையை வெட்டுவதுதான் புண்ணியம்.''

## தனி மனிதனின் அறம்

''தவமும் கருணையும் பொறுமையும் தனி மனிதனுக்கு அறம்; பணிவும் தியாகமும் அவனுக்கு அழகு. ஆனால் மனித சமூகத்துக்கே பொதுவான ஒரு புதிர்—ஓர் இடுக்கண் வரும் போது நாம் தவத்தையும் தியாகத்தையும் மறக்க வேண்டும்.

## மனம் பறிபோனது

. தரும நந்தனா! அன்றைக்கு உன் மனைவியின் மானம் பறிபோனபோது—பாண்டவர்களுக்குத் துணையாக நின்ற ஒரு பெரும் சமூகம் இழிவுற்ற போது—அதற்கு மாற்று ஏதும் செய்யாமல் நீ உன் சொந்த நல்லறம் என்ற சூழலில் சிக்கி,

பேடியைப் போல அதைப்பார்த்திருந்தாயே, அது புண்ணி யமோ? அல்லது பீமனுடைய கண்ணில் நெருப்புப் போன்ற வெஞ்சினம் அப்போது பொங்கியதே, அது புண்ணியமா?

நான் மட்டும் கொலையை விரும்புகிறேனா யுதிஷ்டிரா? உலகில் கருணையும் அன்பும் அகிம்சையும் பரவி, மாந்தர் சகோதரர்களாக வாழவேண்டும் என்றுதான் ஆசைப்படு கிறேன். சினத்தின் எரிச்சல் எப்படித் தணியும்? போரை எப்படி இல்லாமற் செய்ய முடியும்? என்றுதான் சிந்திக்கி றேன்.

### அமைதிக் கனவு

ஆனால், உலகம் பாதி வழிதான் வந்திருக்கிறது. அமைதிக்கனவு வானத்தில் வெகு தொலைவில் மினு மினுக் கிறது. இதற்குக் காரணம், இங்கு இருப்பவன் ஒரு யுதிஷ்டி ரன்தான். துரியோதனர்களோ பலர். அமைதி என்னும் பசுங்கொடியை வளர்க்க வல்ல சத்து, சாரம் இங்கே ஏது?

பாவி என்பவன் மனிதனிடமிருந்து அவனுக்குரிய நியாய மான பொருளைப் பறிப்பவனா? அல்லது நீதியை ஆராய்ந்து அதற்குத் தடையாக இருக்கும் பொருளின் தலையைச் சீவுகிறவனா?

யுதிஷ்டிரா! அமைதியிலே அன்பு வைப்பதனால் மனிதன் மனிதனுடன் பழகலாம். ஆனால் தீயவழியில் செல்லும் அசுரனை— பேய்ப் பாம்பை—அமைதிக் கொள்கை தடுத்து நிறுத்தாது. மனிதனின் மேலான தன்மையைப் பேய்ப்பாம்பு அறியாது. பணிவைப் 'பேய்க் கொள்ளியின் போக்கு' என்று தான் அது எண்ணும்!

### போர்க் காரணங்கள்

மகாபாரதம் இரண்டு வீட்டுக்காரர்களுக்கு மட்டுமே ஏற்பட்ட போர் அல்ல. எண்ணற்ற பேர்களின் பொறாமை யும் பழிவாங்கும் எண்ணமும் உள்ளே குமைந்து புகைந்து குபுக்கென்று சுவாலையாகக் கிளர்ந்து போராக மூண்டது தான் மகாபாரதம். அது குருகுலத்தாரின் போராட்டம்

மட்டும் அல்ல. உள்ளுக்குள் குமுங்கியிருந்த பாரதநாடு முழுவதுமே படாரென்று வெடித்த துர்விபத்து அப்பனே அது!

கர்ணன் அருச்சுனனை மாய்க்கத் தருணம் பார்த்திருந்தான். துருபதன் துரோணரைப் பழிவாங்கக் காத்திருந்தான். சகுனி தந்தையின் கடனைத் தீர்க்க விரும்பினான். கண்ணனுடைய சீர்திருத்தங்களை விரும்பாத அரசர்களும், உன் இராசசூய பெருவேள்வியில் நீ அவனுக்கு முதல் மரியாதை கொடுத்ததைப் பொறாத பூபதிகளும், சிசுபாலனுடைய கொலையைத் தாங்காத மன்னர்களும் துரியோதனனுடன் சேர்ந்தார்கள்.

குந்திபுத்திரா! மன்னர்கள் நிறைந்த பேரவையில் ஒரு பெண்ணின் மானம் பறிபோனபோது இத்தனை பேரும் களித்தார்கள். மனிதனிடம் நம்பிக்கையை இழந்து ஏமாற்றமடைந்து, அந்தப் பெண் என்றைக்கு ஒரு தேவனை உதவிக்கு அழைத்தாளோ, அன்றைக்கே இந்த நாட்டில் மனிதனது புகழ்க்கொடி வேருடன் அறுந்து, தரையில் வீழ்ந்தது.

### வீர தருமம்

தருமராஜனே! உனக்கு ஓர் உபதேசம் செய்துவிட்டுப் போகிறேன். வீரனுடைய தருமம் எது? கொதிக்கும் தீயில் அச்சமின்றிப் பாய்வது வீரதருமம். கூர்தீட்டிய கத்தியின் மேல் வேகமாக நடப்பது வீரதருமம். நிமிர்ந்த மார்புடன் அம்புகளைத் தாங்குவது வீரதருமம். முல்லைச் சிரிப்புடன் கடுமையான விஷத்தைக் குடிப்பது வீரதருமம். உள்ளங்கையில் நெருப்பை மூட்டி, தலையை அவியாகச் சொரிந்து உலகிற்கு ஒப்பற்ற தியாகத்தைப் புகட்டுவது வீரதருமம். எப்போதும் ஒளியுடன் திகழ்ந்து எரிக்கும் ஆற்றலை அடக்கி, எவனுடைய ஸ்பரிசத்தையும் தாங்கிக்கொள்ளாமல் வீறு பெற்று விளங்குவது மனிதனுடைய மிகப்பெரிய தருமம்.''

## ஒப்பற்ற பரிசு

பீஷ்மரின் எதிரில் யுதிஷ்டிரன் கண்ணீர் வடித்து நின்றான். போர்க்களத்தில் மாந்தர், விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இரையானதையும் நாடு செல்வம் இழந்ததையும், பூமி வளம் இழந்ததையும் நினைந்து நினைந்து அவன் கலங்கினான். தளதளத்துச் செழிப்பாக இருந்த நிலமென்னும் நல்லாளின் இளமேனி வறண்ட எலும்புக் கூடாக மாறியதை அவன் கண்டான். வறண்ட ஓர் எலும்புக்கூடு—இதுதான் மகாபாரதம் தந்த ஒப்பற்ற பரிசு.

கண்ணீரின் இடையே புதிய வழியைக் கண்டான் யுதிஷ்டிரன். குருக்ஷேத்திரத்துப் புழுதியில் மனிதனுடைய வரலாறு முடிந்து விடவில்லை. போரினால் வெட்டுண்ட இந்தப் பண்பாட்டுக் கிளையில் அமைதி என்னும் அமுதக் கனியை விளைவிக்க அவன் ஆசை கொண்டான். பீஷ்மர் அவனுக்கு ஊக்கத்தை ஊட்டினார்.

## மாசற்ற செல்வம்

அவர் சொன்னார்: ''யுதிஷ்டிரா! உழைப்புத்தான் மனிதனுடைய மாசற்ற செல்வம். மக்கள் உழைத்து நிறைய சம்பாதிக்க வேண்டும். வறுமையின்றி அச்சமின்றி வாழ வேண்டும். விரும்பிய நல்லின்பத்தைப் பெறவேண்டும்.

விளக்கு அணைவதுபோல ஒளி இழப்பது வாழ்வுக்குப் பெருமையல்ல. நல்லறத்தை ஒளிரச் செய்து, உலகின் இருளை நீக்குவதுதான் வாழ்வுக்குப் பெருமை.''

## நல்வாக்கு

பீஷ்மர் கடைசியாக யுதிஷ்டிரனுக்குச் சொல்லும் நல்வாக்கு இது. ''தருமராஜனே! செத்தவர்களுக்கு வாழ்வில் உரிமை இருப்பதில்லை. உயிருள்ளவர்களே உலகின் சுமையைத் தாங்க வேண்டும். என்றைக்கு மனிதனுடைய உடலை மனம் ஆளுகிறதோ, இன்ப வாழ்வில் தியாகம் முதன்மை பெறுகிறதோ, பொன்னும் மண்ணும் லட்சியமாக

இல்லாமல் வெறுங் கருவியாகின்றனவோ, அன்றைக்கு மனிதன் மனிதத்தன்மையை அறிவான். அன்றைக்குந்தான் மனிதனுடைய பெரும்பாக்கியம் உதயமாகும். அன்றைக்குத் தான் மனிதனுடைய வெற்றிச்சங்குஇனிமையாகஒலிக்கும்.''

வாழ்வின் இலக்கணத்தைப் பீஷ்மர் இவ்வாறு கூறி முடித்தார். தருமபுத்திரன் மனந்தெளிந்து வணங்கிச் சென்றான்.

°°

# 3. இதிகாசங்கள்

இராமாயணமும் மகாபாரதமும் இதிகாசங்கள் எனப் படும். வேதாந்த தத்துவங்களை நேராக அறிந்து கொள்ளும் திறமை வாய்க்கப் பெற்றவர் மேலோர். பல பிறவிகளில் பண்பாடு அடைந்தவர்களுக்கே அப்பேராற்றல் வாய்க்கிறது. அன்னவர்களின் எண்ணிக்கையோ மிகக்குறைவு. பின்பு சாமான்யமான பண்பாடு அமைந்துள்ள பொது மக்களுக்கு இடையிலும் வேதாந்த வாழ்க்கைத் தத்துவங்கள் பரவுவது முற்றிலும் அவசியம். ஆதலால் அச்சீரிய செயல் அவதார மூர்த்திகள் வாயிலாக நிகழ்கிறது. அவதார புருஷர்களை அறிந்து கொள்ளும் அளவு ஆத்ம தத்துவம் அறிந்து கொள் ளப்படுகிறது. அப்பெருமக்களின் செயல்கள் அறிந்து கொள் ளப்படும் அளவு அறநெறிகள் அறிந்து கொள்ளப்படு கின்றன.

பிறந்தது முதல் சரீரத்தை விட்டுப் பிரியும் வரையில் அவதார புருஷர்கள் புரிகின்ற செயல்கள் எல்லாம் தர்ம சாஸ்திரத்திற்கு விளக்கங்கள் ஆகின்றன. ஸ்ரீஇராமனும், ஸ்ரீகிருஷ்ணனும் சீரிய அவதார மூர்த்திகள் ஆகிறார்கள்.

முந்தியவனது வாழ்க்கையை நடுநாயகமாகக் கொண்டது இராமாயனம் என்னும் இதிகாசம். பிந்தியவனது வாழ்க் கையை நடுநாயகமாகக் கொண்டது மகாபாரதம் என்னும் இதிகாசம். மேலும், ஓர் அவதார மூர்த்தியின்வாழ்க்கையைச் சரியாக எடுத்து விளக்குவதற்கு அதே காலத்தில் ஒரு மகரிஷி யும் தெய்வாதீனமாக வந்து அமைகிறார். இராமாயணத்தை ஆதிகாவியமாக இயற்றியவர் வால்மீகி மகரிஷி. மகாபார தத்தை அமைத்தவர் வியாச மகரிஷி.

ஸ்ரீராமன் பரமாத்ம தத்துவம்; சீதா பிராட்டி பரமாத்ம னுக்குரிய ஜீவாத்ம தத்துவம். இலங்கை வேந்தனாகிய இராவணன் ரஜோ குணம் நிறைந்த மனோதத்துவத்தின் அவதாரம். ஞானேந்திரியம் ஐந்து. கர்மேந்திரியம் ஐந்து. ஆகிய இவற்றைப் பத்துத்தலைகளாகக் கொண்டுள்ளது மனது. அந்தப் பொல்லாத மனது என்னும் அரக்கன் ஜீவாத் மன் என்னும் சீதையைச் சிறைப்பிடித்து வைத்துத்தனக்கு உரியதாக்க முயலுகிறான். ஜீவாத்மனோ பரமாத்மனிடம் போய்ச் சேர வேண்டுமென்று அருள் தாகம் எடுத்து அழுகிறது.

ஆஞ்சநேயன் என்னும் அனுமன் குரு தத்துவம். ஜீவாத் மனைப் பரமாத்மனோடு சேர்த்து வைக்கிறேன் என்று ஆஞ்சனேயன் என்னும் குரு வந்து ஆறுதல் சொல்லுகிறான். பின்பு இராமன் என்னும் ஈசனுடைய அருளுக்கும் இராவ ணன் என்னும் மனதினுடைய மருளுக்கும் இடையில் போராட்டம் வருகிறது. இராவண சம்ஹாரம் என்னும் மனோ நாசம் நிகழ்கிறது. சீதை என்னும் ஜீவாத்மன் இராமன் என்னும் பரமாத்மனோடு சேர்கிறது. ஆத்ம சாதகன் ஒவ்வொருவனுடைய வாழ்விலும் இங்ஙனம் இராமாயணம் நிகழ்ந்தாக வேண்டும். மற்ற பாத்திரங்கள் வாழ்வில்உள்ள வெவ்வேறு கூறுபாடுகளை விளக்குகின்றன.

மகாபாரதமும் மனிதனுடைய வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குகிறது. மனிதனது பிரபஞ்ச வாழ்வே ஒரு போராட் டம். மனிதனுடைய உடல் குருக்ஷேத்திர பூமி. மனிதனிடத்

துள்ள நல்லியல்புகள் பாண்டவர் போன்று மிகச் சில. கெட்ட இயல்புகளோ கௌரவர்கள் போன்று பல. இரண்டு வித இயல்புகளும் மனிதனிடத்தே தோன்றியவையாதலால் அவைகள் தாயாதிகள். ஸ்ரீகிருஷ்ணன் என்னும் பரமாத்மா எல்லார் உள்ளத்திலும் சாரதியாய் வீற்றிருக்கிறார். அவர் ஆயுதம் எடுத்துப்போர் புரிவதில்லை. ஆனால் அவருடைய அருள் நல்லார்க்கே உரியதாகிறது. தர்மத்துக்கும் அதர்மத் துக்கும் இடையில் உள்ள போராட்டத்தில் தர்மம் இறுதியில் வெல்லுகிறது. மனிதன் தர்மவானாய் இருந்து அதர்மத்தை வென்ற பிறகு பரமனை அடைய வேண்டும்.

வாழ்க்கையின் சிக்கலான பிரச்சனைகள் எல்லாம் இவ் விரண்டு இதிகாசங்களின் வாயிலாக விளக்கம் பெறுகின்றன.

அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்.

—**வில்லிபாரதம்**

**அநுபந்தம்**

**கிளைக்கதைகள்**

# 1. அஷ்ட வக்கிரன்

பாண்டவர்கள் வனவாச காலத்தில் உத்தாலகருடைய ஆசிரமம் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அந்த இடத்தின் மகிமையைப் பற்றி லோமசர் தருமபுத்திரனுக்குச் சொல்லத் தொடங்கினார்.

வேதாந்தம் உபதேசித்த பெரியோர்களுள் உத்தாலகர் ஒருவர். அவருக்குக் ககோளர் என்ற சீடர் ஒருவர் இருந்தார். ககோளர் மிகுந்த நியமமும் பக்தியும் கொண்டவர். ஆனால் அவருக்குக் கல்வி கற்கும் திறமையில்லை. அதனால் அவரை மற்ற சீடர்கள் பரிகசித்தனர். எனினும் உத்தாலகர் அதைப் பொருட்படுத்தாமல் தன் மகள் சுஜாதையை அவருக்கு மணமுடித்து வைத்தார்.

ககோளருக்கும் சுஜாதைக்கும் ஒரு மகன் பிறந்தான். பெற்றோருடைய குணநலன்கள் சந்ததியாருக்குப் பொருந்தியிருக்கும் என்று கூறுவர். உத்தாலகருடைய பேரனான இந்தக் குழந்தை தாய் வயிற்றில் இருக்கும்போதே வேதத்தைக் கற்றுக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

## பெயர்ப் பொருத்தம்

ககோளர் தப்பும் தவறுமாக அத்தியயனம் செய்வதை வயிற்றுக்குள்ளிருந்த குழந்தை கேட்டுப் பிழைகளைப் பொறுக்க மாட்டாமல் கருவிலேயே எட்டுக்கோணல் அடைந்து விட்டது. அந்தக் கோணல்களுடன் பிறந்ததால் குழந்தைக்கு அஷ்டவக்கிரன் என்று பெயர் உண்டாயிற்று.

## கல்வி மேம்பாடு

அஷ்டவக்கிரன் இளவயதிலேயே சிறந்த வித்துவானாக விளங்கினான். பன்னிரண்டு வயதுக்குள் சகல சாஸ்திரங்களையும் ஓதி உணர்ந்தான். மிதிலையில் ஜனகன் ஒரு பெரிய யாகம் செய்யப் போவதாகக் கேள்விப்பட்டான். வித்துவான்கள் பலர் அந்த யாகத்துக்குப் புறப்பட்டுச் சென்றனர். அஷ்டவக்கிரன் தன் தமக்கை மகனான சுவேதகேதுவை அழைத்துக் கொண்டு மிதிலைக்குப் புறப்பட்டான்.

மிதிலை நகரத்தில் யாகசாலைக்கு அரசனும் பரிவாரங்களும் போய்க்கொண்டிருந்தனர். ''அரசனுக்கு வழி விட்டுச் செல்லுங்கள்'' என்று ஏவலர்கள் கூறிக்கொண்டே முன்னால் சென்றனர். அஷ்டவக்கிரனையும் விலகச் சொன்னார்கள்.

''சேவகர்களே! குருடனுக்கும் அங்க ஈனர்களுக்கும், பெண்களுக்கும், சுமை தூக்கிக் கொண்டு செல்பவர்களுக்கும் அரசன் விலகி வழிவிடவேண்டும். வேதம் ஓதும் அந்தணனையும் விலகிச் செல்லும்படி அரசன் சொல்லலாகாது. இவ்வாறு சாஸ்திரம் கூறுகிறது'' என்றான் அஷ்டவக்கிரன்.

அந்தணச் சிறுவனுடைய கம்பீர பேச்சை அரசன் கேட்டான்; பிரமித்து நின்றான். ''அவன் சொல்வது சரி'' என்று பரிவாரத்திற்கு ஆணையிட்டு வழிவிட்டுச் சென்றான்.

யாகசாலையில் அஷ்டவக்கிரனும் சுவேத கேதுவும் நுழைந்தனர். ''இந்த இடத்தில் சிறுவர்கள் பிரவேசிக்கக் கூடாது. வேத அத்தியயனம் செய்பவர்களே யாகசாலைக்குள் போகலாம்'' என்று வாயில் காப்போர் தடுத்தனர்.

''நாங்கள் சிறுவர்கள் அல்லர்; விரதங்காத்து வேதம் ஓதியவர்கள். வயதையும் வெளித் தோற்றத்தையும் பார்த்து, ஒருவனைச் சிறியவன் என்று நிச்சயிக்கக்கூடாது'' என்றான் அஷ்டவக்கிரன். என்றாலும் வாயிற்காப்போர் அவனை உள்ளே விடவில்லை.

''துவார பாலகனே! நான் அரசனுடைய முக்கிய வித்துவானாகிய வந்திப் பண்டிதனைப் பார்க்க வந்திருக்கிறேன். ஜனகமகாராஜாவிடம் என் விருப்பத்தைத் தெரிவிப்பாயாக'' என்றான் அஷ்டவக்கிரன்.

## ஜனகர் வருகை

இவர்கள் உரையாடிக் கொண்டிருந்தபோது ஜனகர் அங்கு வந்து சேர்ந்தார். தான் முன்பு பார்த்த சிறுவன் தான் இவன் என்று ஜனகர் அறிந்தார். அவர் சகல சாஸ்திர சம்பன்னர், இராஜரிஷி என்றும் கூறுவர். ''என்னுடைய வித்துவான் வந்தி பல பெரிய வித்துவான்களை இதற்கு முன் வாதத்தில் தோற்கடித்து அவர்களைக் கடலில் வீழ்த்தியுள்ளான். சிறுவனாகிய நீ இந்தக் காரியத்தில் ஈடுபடாதே'' என்று அரசர் புத்திமதி கூறினார்.

''உம்முடைய வித்துவான் வந்தி, என்னைப்போல் வேதாந்தப் பயிற்சி பெற்றவர்களுடன் வாதிக்கவில்லை. பண்டிதர்கள் ஆகாதவர்களைத் தோற்கடித்து அகம்பாவம் கொண்டிருக்கிறார். என் தகப்பனாரை இவர் வென்று அவரை நீரில் மூழ்கடித்து விட்டதாக என் தாயாரிடம் கேட்டறிந்தேன். அதற்காகவே என் கடமையைச் செய்ய வந்திருக்கிறேன். அவரை நான் வெல்லப் போகிறேன். அழைத்து வாருங்கள்'' என்றான் அஷ்டவக்கிரன்.

**வாதப் போர்**

அஷ்டவக்கிரன் வந்தியுடன் வாதம் நடத்தினான். கேள்விகள் கேட்கப்பட்டு, ஒருவர் கேள்விக்கு மற்றவர் பதில் சொன்னார்கள். மிதிலா நகரத்துத் தலைமைப் பண்டிதனான வந்தி தோல்வியடைந்தான். அஷ்டவக்கிரன் வெற்றி பெற்றான் என்று சபையில் உள்ளோர் ஒப்புக்கொண்டனர். வந்தி தலை குனிந்தான். பந்தயப்படி கடலில் அமிழ்த்தப் பட்டான். ககோளருடைய ஆத்மா மகிழ்ச்சியடைந்தது.

அதன் பின்னர் ஜனக மகாராஜனுக்கு அஷ்டவக்கிரன் பல உபதேசங்களைச் செய்தான். அது பகவத்கீதையைப் போல வடமொழியில் சிறந்த உபதேச நூலாகப் போற்றப் படுகிறது. தகப்பனைப்போல மகன் இருக்க வேண்டியதில்லை. தேகபலம் இல்லாத தகப்பனுக்குத் தேகபலம் படைத்த மகனும், கல்வி கற்பதற்கு வேண்டிய திறமையைப் படைத்திராத ஒருவனுக்குப் பண்டித குமாரனும் உண்டாவதுண்டு. வடிவத்தையும் வயதையும் பார்த்து மனிதனுடைய பெருமையை நிர்ணயிப்பது தவறு. வெளித் தோற்றம் ஏமாற்றத்தைத்தான் தரும்.

வடமொழி கற்றோர் அஷ்டவக்கிரனது உபதேச மொழிகளைப் படித்துப் பயன் பெறுவார்களாக. பாண்டவர்கள் இவ்வரலாற்றைக்கேட்டு ஆறுதல் பெற்றனர்.

# 2. உதங்கர்

பாண்டவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு கிருஷ்ணன் துவாரகைக்குப் போகும் வழியில் உதங்கர் என்ற பிராமண சிரேஷ்டரைச் சந்தித்தார். அவரைக் கண்டதுமே தேரை நிறுத்தி, இறங்கி நமஸ்காரம் செய்து பூசித்தார். அவரும் கண்ணனுக்கு மரியாதை செய்துவிட்டு, ''மாதவ! பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் சகோதரர்களுக்குள் இருக்க வேண்டிய அன்பு சரியாக இருந்து வருகிறதா? எல்லாரும் சவுக்கியமாய் இருக்கிறார்களா? என்று கேட்டார்.

துறவு வாழ்க்கையிலிருந்த பிராமணருக்கு உலக நிகழ்ச்சிகள் ஒன்றுமே எட்டவில்லை. யுத்தம் நடந்ததே அவருக்குத் தெரியாது. அவருடைய கேள்வியைக் கேட்டுக் கண்ணன் ஒரு நிமிஷம் திகைத்தார். என்ன சொல்லுவதென்று தோன்றாமல் நின்றார். பிறகு ''ஐயா! கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் கோரமான யுத்தம் நடந்துவிட்டது. சமாதானம் செய்ய நான் எவ்வளவோ முயன்றேன். அவர்கள் கேட்கவில்லை. யுத்தத்தில் அனைவரும் மாண்டார்கள். விதியை யாரும் மீறமுடியாது'' என்று சொல்லி நடந்த வரலாற்றையெல்லாம் சொன்னார்.

இதைக் கேட்டதும் உதங்கர் கடுங்கோபங் கொண்டார். கண்கள் சிவந்து, மாதவனைப் பார்த்துச் சொன்னார்: ''வாசுதேவா! நீ பக்கத்தில் இருந்தும் இவ்வாறு ஆயிற்றா? அவர்களைக் காப்பாற்ற முடியவில்லையா? நீ கபடமாக வேலை செய்து, அவர்கள் அழிந்துபோக விட்டுவிட்டாயா? நான் உனக்குச் சாபம் தரப்போகிறேன்'' என்றார்.

வாசுதேவன் புன்னகை புரிந்து, ''சாந்தம்! சாந்தம்! தவசியான நீர் உம்முடைய தவத்தின் பயனைக் கோபத்தில் இழந்துவிடாதீர். முதலில் நான் சொல்லுவதைக் கேளும். பிறகு வேண்டுமானால் சாபம் இடலாம்'' என்று சமாதானப் படுத்தினார்.

கண்ணன் உதங்கருக்கு ஞானக்கண் கொடுத்துத் தன் விசுவரூபத்தைக் காட்டினார். ''உலகத்தைக் காப்பதற்காக வும் தருமத்தை நிலை நிறுத்துவதற்காகவும் பல அவதாரங் களை நான் எடுத்து வருகிறேன். நான் எந்த அவதாரத்தை எடுக்கிறேனோ அந்த அவதாரத்தின் இயல்பை அனுசரிக் கிறேன். தேவசாதியில் பிறக்கும்போது தேவனைப்போல் எல்லாவற்றையும் செய்வேன். யட்சனாகவோ, ராட்ச சனாகவோ பிறந்தாலும் அவ்வாறு அந்த அவதாரத்துக்கு இசைந்தவாறே காரியத்தை முடிப்பேன். அவிவேகிகளான கௌரவர்களைக் கெஞ்சினேன். அவர்கள் அகங்காரத்தால் மதிமயங்கி என்னுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள வில்லை. பயமுறுத்திப் பார்த்தேன். அதற்கும் அவர்கள் இணங்கவில்லை. கோபங்கொண்டு என் விசுவரூபத்தை அவர்களுக்குக் காட்டினேன். அதுவும் வீணாயிற்று. அவர் கள் அதருமத்தைச் செய்வதிலேயே பிடிவாதமாக இருந்தார் கள். யுத்தத்தில் பிரவேசித்து உயிர்நீத்தார்கள். பிராமண சிரேஷ்டரே! என் மேல் உமக்குக் கோபத்துக்குக் காரணம் இல்லை'' என்றார்.

உதங்கர் சாந்தம் அடைந்தார். அதைக்கண்டு கண்ணன் திருப்தியடைந்து, ''உமக்கு ஒரு வரம் தர விரும்புகிறேன். எதையேனும் கேளும்'' என்றார்.

''அச்சுதா! உன்னை நான் பார்த்ததும் உன் விசுவ ரூபத்தைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றதும் போதாதா! எனக்கு வேறொரு வரமும் வேண்டாம்'' என்று உதங்கர் சொன்னார்.

ஆனால் கண்ணன் மறுபடியும் வற்புறுத்தவே பாலை வனத்தில் திரிபவரும் ஆசையற்றவருமான உதங்கர் ''பிரபுவே! அவசியம் எனக்கு ஏதேனும் கொடுக்க நீர் விரும்பினால் நான் எவ்விடத்தில் எப்போதேனும் தாகத்துக்குத் தண்ணீர் வேண்டினால் அது கிடைக்குமாறு வரம் தருவீராக'' என்றார். ''இவ்வளவுதானா''என்று கண்ணன் சிரித்து, ''அப்படியே ஆகட்டும்'' என்று சொல்லிவிட்டுந் துவாரகை சென்றார்.

பிறகு, ஒருநாள் உதங்கர் தாகம் மிகுந்து தண்ணீருக்காகக் காட்டில் இங்கும் அங்கும் அலைந்து நீர் கிடைக்காமல் அச்சுதனை நினைத்தார். உடனே ஒரு புலையன் தோன்றினான். அவன் உடம்புக்குப் போதிய ஆடையில்லை. உடுத்தியிருந்த கந்தல் துணியும் அழுக்குப் படிந்து அவலட்சணமாக இருந்தது. கூட நான்கு, ஐந்து வேட்டை நாய்கள், கையில் வில், தோளில் ஒரு பை, அந்தத் தோல் பையில் குடிதண்ணீர்.

புலையன் நகைத்துக் கொண்டு உதங்கரைப் பார்த்து. ''தாகத்தால் வருந்துகிறீர் போலும்! உம்மைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. ஜலம் பெற்றுக்கொள்ளும்'' என்று தோற்பையின் மூங்கிற்குழாயை நீட்டினான். புலையனையும் . அவன் குடிதண்ணீர்ப் பையையும் நாய்களையும் பார்த்து உதங்கர் மிக்க அருவருப்படைந்து, ''வேண்டாம்'' என்றார்.

கண்ணனை மனத்தில் எண்ணி, ''இதுவா உன் வரம்'' என்று நொந்து கொண்டார். புலையன் ஜலத்தைப் பெற்றுக் கொள்ளும்படி தோற்பையைக் காட்டி உதங்கரைப் பலமுறை வற்புறுத்தினான். அவர் கோபம் வரவர அதிகரித்து மறுத்து விட்டார். அதன் மேல் புலையன் நாய்களுடன் மறைந்தான்.


புலையன் இவ்வாறு மறைந்து போனதைக்கண்டு உதங்கர் யோசிக்கலானார். ''இது யார்? இது புலைய

னல்ல. பரீட்சையாகவே இருக்க வேண்டும். பிழைசெய்தேன் என்னுடைய ஞானம் என்ன பயன் தந்தது? புலையன் கொடுக்க வந்த ஜலத்தை நான் ஏன் மறுத்தேன்!'' என்று வருந்தினார்.

கொஞ்ச நேரம் கழித்துச் சங்கும் சக்கரமும் ஏந்திக் கொண்டு பகவான் மாதவன் உதங்கர் முன் வந்து நின்றார். ''புருஷோத்தமா! நீஎன்னைஇவ்வாறுபரீட்சைசெய்யலாமா? புலையனுடைய தோற்பையிலுள்ள அசுத்த ஜலத்தையா பிராமணராகிய எனக்குக் கொடுக்கச் செய்வது? இது தருமமா?'' என்று உதங்கர் வருத்தத்துடன் பகவானைக் கேட்டார்.

ஜனார்த்தனன் சிரித்து, ''ஓய் உதங்கரே! உமக்காக நான் இந்திரனிடம் சொல்லி அமிர்தத்தை எடுத்துப் போகச் சொன்னேன். அவன் மானுடனுக்குச் சாகா மருந்து கொடுக்க இயலாது, வேறு ஏதேனும் செய்யலாமே!'' என்றான். நான் அவனை வற்புறுத்தியதன்பேரில் அவன் ஒப்புக்கொண்டு, ''சரி அப்படியே செய்கிறேன்; ஜலரூபமாக அமிர்த பானத்தை எடுத்துச் சென்று உதங்கருக்குத் தருவேன். ஆனால் நான் சண்டாளவேஷத்தில் போவேன். ஒப்புக் கொண்டால் சரி'' என்றான். ''நீர் ஞானி ஆயிற்றே. புலையனுடைய வேஷத்தைக் கண்டு வெறுக்க மாட்டீர் என்று நான் நம்பி அவ்வாறே செய்யச் சொன்னேன். நீர் இவ்விதம் நடந்துகொண்டதால் நான் தோற்றேன்'' என்றார். அமிர்தத்தை இழந்த உதங்கர் வெட்கத்தில் ஆழ்ந்தார்.

சுபம்



"மகாபாரத மாண்புகள்" என்னும் இந்நூலின் ஆசிரியர் திரு. வித்துவான் M. நாராயண வேலுப்பிள்ளை ஓர் ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியர். 83 வயது நிரம்பியவர். இவர் இதுவரை 130 நூல்கள் எழுதியுள்ளார். இவர் தற்போது காஞ்சிபுரத்தில் வாழ்ந்து வருகிறார்.

தெய்வீக மணங்கமழும் இவரது நூல்கள் இவரது புகழுக்குச் சான்றாகும். புராணம், இதிகாசம், இலக்கியம் சம்பந்தமாக இவர் எழுதியுள்ள நூல்கள் உடனுக்குடன் விற்பனையாகி மறுபதிப்புக்களும் வெளிவந்துள்ளன.

இமயம் முதல் இலங்கை வரை இவர் சுற்றிப் பார்த்து, பிரயாண நூல்களும் எழுதியுள்ளார். நாட்டு நடப்பு பற்றியும் அரசியல் தலைவர்கள் பற்றியும் சிறுகதைகளும் எழுதியுள்ளார்.

தமிழ்மொழிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் இவர் செய்துள்ள சேவை பாராட்டுதற்குரியது.

சென்னை-114
27.7.94

என். பாலகிருஷ்ணன்
ராஜேஸ்வரி புத்தக நிலையம்.